உ

கணபதி துணை

புறநானூறு மூலம்

மகாமகோபாத்தியாய தாக்ஷிணாத்யகலாநிதி

டாக்டர் உ. வே. சாமிநாதையரால்

சென்னை, லா ஜர்னல் அச்சுக்கூடத்திற் பதிப்பிக்கப் பெற்றது.

[முதற் பதிப்பு]

யுவஹூ தைமீ

Copyright Registered] 1936 [விலை ரூ. 1—8—0

இப்புத்தகத்தில் அடங்கியவை.

			பக்கம்.
1.	முகவுரை	..	iii
2.	பாடினோர் பெயர்கள்	..	v
3.	பாடப்பட்டோர் பெயர்கள்	..	vii
4.	**புறநானூறு மூலம்**	..	க-உகஅ
5.	முற்றுமில்லாத பாட்டுக்கள்	..	உகக
6.	முதலில்லாத பாட்டுக்கள்	..	,,
7.	இடையிற் சில பகுதிகள் இல்லாத பாட்டுக்கள்		,,
8.	பிற்பகுதி யில்லாப் பாட்டுக்கள்	..	,,
9.	பாட்டு முதற்குறிப்பகராதி	..	உகக-உஉச
10.	அரும்பத அகராதி	..	உஉரு-உசுஉ
11.	திணைகளும் துறைகளும்	..	உசுந
12.	பிழையுந் திருத்தமும்	..	உசுச

முகவுரை

பண்டைக்காலத்தே வழங்கிவந்த தமிழ்நூற்றொகுதிகளுள் ஒன்றாகிய எட்டுத்தொகையில் எட்டாவதாகச்சொல்லப்படுவது புறநானூறென்பது. நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல், கலித்தொகை, அகநானூறு என்பன ஏனைய ஏழுமாம். அகம் புறம் என்னும் பொருள்கள் இரண்டனுள் புறத்தால் தொகுக்கப்பெற்றது புறநானூறு. புறமாவது ஒத்த அன்புடையவராகிய தலைவன் தலைவியராலே யன்றி எல்லாராலும் அநுபவித்து உணரப்பட்டு இஃது இவ்வா றிருந்ததெனப் பிறருக்குக் கூறப்படும் பொருள். அதில் அறனும் பொருளும் அடங்கும். அறனும் பொருளும் பற்றிப் புறத்தே நிகழும் ஒழுக்கத்தைப் புறமென்றது ஆகுபெயர்.

மேற்கூறிய புறத்தின் பகுதியாகிய வெட்சி, கரந்தை, வஞ்சி, காஞ்சி, நொச்சி, உழிஞை, தும்பை, வாகை, பாடாண், பொதுவியல், கைக்கிளை, பெருந்திணை என்னும் திணைகளுக் குரிய துறைப்பொருள் அமைந்த 400 பாக்களை உடைமையின், இந்நூல் புறநானூறு என்று பெயர்பெற்றது. திணை - ஒழுக்கம். துறை - மக்களும் விலங்குகள் முதலியனவும் சென்று நீருண் ணும் துறைபோலப் பலவகைப்பட்ட பொருளும் ஒருவகைப் பட்டு இயங்குதற்குரிய வழி. இதுபற்றியே புறமென்றும் இதனை வழங்குதலுண்டு. இது புறம், புறப்பாட்டு, புறம்பு நானூறு என்றும் சொல்லப்படும். இந்நூல் பொருளாலும் அளவாலும் தொகுக்கப்பட்டது.

இது கடவுள் வாழ்த்துச்செய்யுள் முதலிய 400 அகவற்பாக்களையுடையது. அவற்றுள் கடவுள் வாழ்த்து, பாரதம்பாடிய பெருந்தேவனாராலும் ஏனையவை முரஞ்சியூர் முடிநாகராயர் முதல் கோவூர்கிழார் இறுதியாக வுள்ள புலவர் பலராலும் இயற்றப்பட்டுள்ளன. இந்நூலைத் தொகுத்தோரும் தொகுப்பித்தோரும் இன்னாரென்று விளங்கவில்லை.

எனக்குக்கிடைத்த ஏட்டுச் சுவடிகளுள் ஒன்றிலேனும் இந்நூலின் ௨௬௭, ௨௬௮-ஆம் பாடல்களும், ௩௨௮, ௩௭௦ -

இவற்றின் முதலும், சிலபாட்டுக்களின் இடைப்பகுதிகளும், ௨௪௪, ௩௫௫, ௩௬௧ - இவற்றின் பிற்பகுதிகளும் கிடைக்கவில்லை. ௨௪௪, ௨௫௬, ௨௫௭, ௨௬௩, ௨௬௭, ௨௬௮, ௨௯௭, ௩௦௭, ௩௨௩, ௩௨௭, ௩௨௮, ௩௩௩, ௩௩௯, ௩௪௦, ௩௫௫, ௩௬௧-ஆம் பாட்டுக்களை இயற்றினவர்கள் பெயர் காணப்படவில்லை. இந்நூலுக்கு முதல் ௨௬௬ பாடல்களுக்கு மட்டும் பழையவுரை யொன்று உண்டு. அந்த உரையும், உரையில்லாத பாடல்களுக்கு நூதனமாக எழுதிய குறிப்புரை, அரும்பத வகராதி முதலியனவும் அடங்கிய புத்தகத்தின் மூன்றும் பதிப்பு இப்பொழுது தனியே வெளிவந்திருக்கிறது.

முற்காலத்தே இருந்து விளங்கிய தமிழ்மன்னர்கள், வள்ளல்கள், உபகாரிகள், புலவர்கள் முதலியவர்களுடைய வரலாற்றையும் அக்காலத்து நாகரிகம் முதலியவற்றையும் நன்கு தெரிந்து கொள்வதற்கு இந்நூல் கருவியாக உள்ளது. இதன் செய்யுட்களைப் பாடினோரும் அவற்றாற் பாடப்பட்டோரும் ஒரு காலத்தாரல்லர்; ஒரு குலத்தாரல்லர்; ஒரு சாதியாரல்லர்; ஓரிடத்தாருமல்லர். இவர்களில் அந்தணர் சிலர்; அரசர் பலர்; வணிகர் பலர்; வேளாளர் பலர்; பெண்பாலாரும் உளர். தமிழ் நாட்டின் வரலாறு குறித்துச் செய்யப்படும் பலவகையான ஆராய்ச்சிக்கு இது துணைசெய்து கொண்டுவருகின்றது. இதன் பாலுள்ள பாட்டுக்கள் தமிழ்நயம் உணர்வார் நெஞ்சத்தில் மறவாமற் பதித்தற்குரியன.

இந்நூலின் அருமையை யறிந்த அன்பர்கள் பலர் இதன் மூலமட்டும் அடங்கிய பதிப்பொன்று வெளிவரின் நலமாகு மென்று விரும்பியபடியால் பாடினோர், பாடப்பட்டோர்களுடைய பெயரகராதிகள் அரும்பத அகராதி முதலியவற்றுடன் இந்தப் பதிப்பு வெளிவரலாயிற்று. அரும்பத அகராதியில், இந்நூலின் பழைய உரையிற் கண்டவாறு சொற்களுக்குப் பொருள் எழுதப்பட்டுள்ளது.

இந்நூலைப் பற்றிய வேறுபல செய்திகளை மூலமும் உரையும் உள்ள பதிப்பின் முகவுரை முதலியவற்றால் அறியலாகும்.

தியாகராஜ விலாசம், திருவேட்டீசுவரன்பேட்டை, 12-2-36.	இங்ஙனம் **வே. சாமிநாதையர்.**

பாடினோர் பெயர்கள்

அடைநெடுங்கல்வியார், அண்டர்மகன் குறுவழுதி, அரிசில்கிழார், அள்ளூர் நன்முல்லையார், ஆடுதுறை மாசாத்தனார், ஆலங்குடிவங்கனார், ஆலத்தூர்கிழார், ஆலியார், ஆவூர் கிழார், ஆவூர் மூலங்கிழார், இடைக்காடனார், இடைக்குன்றூர் கிழார், இரும்பிடர்த்தலையார், உலோச்சனார், உறையூர் இளம் பொன்வாணிகனார், உறையூர் ஏணிச்சேரிமுடமோசியார், உறையூர் மருத்துவன்தாமோதரனார், உறையூர்முதுகண்ணன் சாத்தனார், உறையூர்முதுகூத்தனார், ஊன்பொதி பசுங்குடையார், எருக்காட்டூர்த் தாயங்கண்ணனார், எருமை வெளியனார், ஐயாதிச்சிறு வெண்டேரையார், ஐயூர்முடவனார், ஐயூர்மூலங் கிழார், ஒக்கூர்மாசாத்தனார், ஒக்கூர்மாசாத்தியார், ஒருசிறைப் பெரியனார், ஒரூஉத்தனார், ஒல்லையூர்தந்த பூதபாண்டியன், ஓரம் போகியார், ஓரேருழவர், ஔவையார், கடலுண்மாய்ந்த இளம் பெருவழுதி, கண்ணகனார், கணியன் பூங்குன்றன், கபிலர், கயமனார், கருங்குழலாதனார், கருவூர்க்கதப்பிள்ளை, கருவூர்க்கதப் பிள்ளை சாத்தனார், கருவூர்ப்பெருஞ்சதுக்கத்துப் பூதனார், கல்லாடனார், கழாத்தலையார், கழைதின்யானையார், கள்ளில் ஆத்திரையனார், காக்கைபாடினியார்நச்செள்ளையார், காரிகிழார், காவட்டனார், காவற்பெண்டு, காவிரிப்பூம்பட்டினத்துக்காரிக் கண்ணனார், குட்டுவன்கீரன், குடபுலவியனார், குடவாயிற் கீரத்தனார், குண்டுகட்பாலியாதன், குளம்பாதாயனார், குறமகள் இளவெயினி, குறுங்கோழியூர்கிழார், குன்றூர் கிழார்மகனார், கூகைக்கோழியார், கூடலூர்கிழார், கோடை பாடிய பெரும்பூதனார், கோதமனார், கோப்பெருஞ்சோழன், கோவூர்கிழார், கோனாட்டு எறிச்சிலூர்மாடலன் மதுரைக் குமரனார், சங்கவருணரென்னும் நாகரியர், சாத்தந்தையார், சிறுவெண்டேரையார், சேரமான்கணைக்காலிரும்பொறை, சேரமான் கோட்டம்பலத்துத்துஞ்சிய மாக்கோதை, சோணாட்டு முகையலூர்ச் சிறுகருந்தும்பியார், சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன், சோழன் நல்லுருத்திரன், சோழன் நலங்கிள்ளி, தண்காற்பூட்கொல்லனார், தாமப்பல் கண்ணனார், தாயங்கண்ணனார், தாயங்கண்ணியார், திருத்தாமனார், தும்பி

சொகினனார், துறையூர் ஓடைகிழார், தொடித்தலைவிழுத் தண்டினார், தொண்டைமான் இளந்திரையன், நரிவெரூஉத் தலையார், நல்லிறையனார், நன்னாகனார், நெட்டிமையார், நெடுங்கழுத்துப்பரணர், நெடும்பல்லியத்தனார், நொச்சிநியமங் கிழார், பக்குடுக்கைநன்கணியார், பரணர், பாண்டரங்கண்ண னார், பாண்டியன் அறிவுடைநம்பி, பாண்டியன் ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன், பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன், பாரதம்பாடிய பெருந்தேவனார், பாரிமகளிர், பாலைபாடிய பெருங்கடுங்கோ, பிசிராந்தையார், பிரமனார், புல்லாற்றூர் எயிற்றியனார், புறத்திணைநன்னாக னார், பூங்கணுத்திரையார், பூதபாண்டியன் தேவிபெருங்கோப் பெண்டு, பெருங்குன்றூர்கிழார், பெருங்கோழிநாய்கன்மகள் நக்கண்ணையார், பெருஞ்சித்திரனார், பெருந்தலைச்சாத்தனார், பெரும்பதுமனார், பேய்மகள் இளவெயினி, பேரெயின்முறு வலார், போத்தியார், பொய்கையார், பொருந்திலிளங்கீரனார், பொன்முடியார், மதுரைஅளக்கர் ஞாழலார் மகனார் மள்ளனார், மதுரைஅறுவைவாணிகன்இளவேட்டனார், மதுரை இளங்கண் ணிக்கௌசிகனார், மதுரை ஓலைக்கடைக்கண்ணம் புகுந்தா ராயத்தனார், மதுரைக்கணக்காயனார், மதுரைக்கணக்காயனார் மகனார் நக்கீரனார், மதுரைக்கள்ளிற்கடையத்தன் வெண்ணாகனார், மதுரைக்கூலவாணிகன்சீத்தலைச்சாத்தனார், மதுரைத்தமிழக் கூத்தனார், மதுரைநக்கீரர், மதுரைப்படைமங்கமன்னியார், மதுரைப்பூதனிளநாகனார், மதுரைப் பேராலவாயார், மதுரை மருதனிளநாகனார், மதுரைவேளாசான், மருதனிளநாகனார், மாங்குடிகிழார், மாதிமாதிரத்தனார், மார்க்கண்டேயனார், மாற்பித்தியார், மாறோகத்துநப்பசலையார், முரஞ்சியூர்முடிநாக ராயர், மோசிகீரனார், மோசிசாத்தனார், வடமநெடுந்தத்தனார், வடமவண்ணக்கன் தாமோதரனார், வடமவண்ணக்கன் பெருஞ் சாத்தனார், வடமவண்ணக்கன் பேரிசாத்தனார், வடமோதங் கிழார், வன்பரணர், வான்மீகியார், விரிச்சியூர்நன்னாகனார். விரியூர்நக்கனார், வீரைவெளியனார், வெண்ணிக்குயத்தியார், வெள்ளெருக்கிலையார், வெள்ளைக்குடிநாகனார், வெள்ளைமாளர், வெறிபாடிய காமக்கண்ணியார், வேம்பற்றூர்க் குமரனார்.

பாடப்பட்டோர் பெயர்கள்

அகுதை, அதியமான்தகடூர் பொருது வீழ்ந்த எழினி, அதியமான் நெடுமானஞ்சி, அதியமான் நெடுமானஞ்சி மகன் பொகுட்டெழினி, அந்துவஞ்சாத்தன், அந்துவன்கீரன், அம்பர் கிழானருவந்தை, அவியன், ஆதனழிசி, ஆதனுங்கன், ஆந்தை, ஆமூர்மல்லன், ஆய், இயக்கன், இருங்கோவேள், இளங் கண்டீரக்கோ, இளங்குமணன், இளந்தத்தன், இளவிச்சிக்கோ, இளவெளிமான், ஈர்ந்தூர்கிழான்தோயன்மாறன், எயினன், எவ்வி, எழினி, ஏறைக்கோன், ஏனாதிதிருக்கிள்ளி, ஒல்லையூர் கிழான்மகன் பெருஞ்சாத்தன், ஓய்மான் நல்லியக்கோடன், ஓய்மான் வில்லியாதன், கடியநெடுவேட்டுவன், கண்டீரக்கோப் பெருநள்ளி, கண்ணகி, கந்தன், கபிலர், கரிகால்வளவன், கரும் பனூர்கிழான், காரியாற்றுத்துஞ்சிய நெடுங்கிள்ளி, கானப்பே ரெயில்கடந்த உக்கிரப்பெருவழுதி, குமணன், குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன், கோண்கானங்கிழான், கோச்சேரமான் யானைக்கட்சேய்மாந்தரஞ் சேரலிரும்பொறை, கோப்பெருஞ் சோழன், சிறுகுடிகிழான்பண்ணன், சேரமான் அந்துவஞ்சேர லிரும்பொறை, சேரமான் கடலோட்டிய வேல்கெழு குட்டுவன், சேரமான் கடுங்கோவாழியாதன், சேரமான்கருவூரேறிய ஒள் வாட்கோப்பெருஞ்சேரலிரும்பொறை, சேரமான் குட்டுவன் கோதை, சேரமான் குடக்கோச்சேரலிரும்பொறை, சேரமான் குடக்கோநெடுஞ்சேரலாதன், சேரமான் கோக்கோதைமார்பன், சேரமான் சிக்கற்பள்ளித் துஞ்சியசெல்வக்கடுங்கோவாழியாதன், சேரமான் செல்வக்கடுங்கோவாழியாதன், சேரமான்தகடூரெறிந்த பெருஞ்சேரலிரும்பொறை, சேரமான் பாமுளூரெறிந்தநெய் தலங்கானலிளஞ்சேட்சென்னி, சேரமான் பாலைபாடிய பெருங் கடுங்கோ, சேரமான் பெருஞ்சேரலாதன், சேரமான்பெருஞ் சோற்று உதியஞ்சேரலாதன், சேரமான் மாந்தரஞ்சேரலிரும் பொறை, சேரமான் மாரிவெண்கோ, சேரமான்யானைக்கட்சேய் மாந்தரஞ் சேரலிரும்பொறை, சேரமான் வஞ்சன், சோணாட்டுப் பூஞ்சாற்றூர்ப்பார்ப்பான் கௌணியன் விண்ணந்தாயன், சோழ நாட்டுப் பிடவூர்கிழான்மகன் பெருஞ்சாத்தன், சோழன் இராச சூயம் வேட்டபெருநற்கிள்ளி, சோழன் இலவந்திகைப்பள்ளித் துஞ்சிய நலங்கிள்ளிசேட்சென்னி, சோழன் உருவப்பஃறேரி

ளஞ்சேட்சென்னி, சோழன்கரிகாற்பெருவளத்தான், சோழன் குராப்பள்ளித் துஞ்சிய பெருந்திருமாவளவன், சோழன்குளமுற்றத்துத் துஞ்சியகிள்ளிவளவன், சோழன்செங்கணான், சோழன் செருப்பாழியெறிந்த இளஞ்சேட்சென்னி, சோழன்நலங்கிள்ளி, சோழன் நலங்கிள்ளி தம்பிமாவளத்தான், சோழன் நெய்தலங்கானலிளஞ்சேட்சென்னி, சோழன்போர்வைக்கோப் பெருநற்கிள்ளி, சோழன் முடித்தலைக்கோப் பெருநற்கிள்ளி, சோழன் வேற்பஃறடக்கைப் பெருநற்கிள்ளி, சோழியவேனாதி திருக்குட்டுவன், தந்துமாறன், தருமபுத்திரன், தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன், தழும்பன், தாமான் தோன்றிக்கோன், தித்தன், தேர்வண்மலையன், தொண்டைமான், நம்பிநெடுஞ்செழியன், நள்ளி, நன்னன், நாஞ்சில்வள்ளுவன், நாலைகிழவன் நாகன், நெடுங்கிள்ளி, நெடுமானஞ்சி, நெடுவேளாதன், பரதவர், பழையன், பாண்டியன் அறிவுடை நம்பி, பாண்டியன் இலவந்திகைப்பள்ளித்துஞ்சிய நன்மாறன், பாண்டியன் கருங்கை ஒள்வாட்பெரும்பெயர்வழுதி, பாண்டியன் கானப்பேர்தந்த உக்கிரப் பெருவழுதி, பாண்டியன் கீரஞ்சாத்தன், பாண்டியன் கூடகாரத்துத் துஞ்சிய மாறன்வழுதி, பாண்டியன் சித்திரமாடத்துத் துஞ்சிய நன்மாறன், பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன், பாண்டியன் நெடுஞ்செழியன், பாண்டியன் பல்யாகசாலைமுதுகுடுமிப் பெருவழுதி, பாண்டியன் வெள்ளியம்பலத்துத் துஞ்சிய பெருவழுதி, பாரி, பாரிமகளிர், பிசிராந்தையார், பிட்டங்கொற்றன், புல்லி, பூதபாண்டியன் தேவிபெருங்கோப்பெண்டு, பேகன், பொகுட்டெழினி, பொறையாற்று கிழான், மல்லிகிழான் காரியாதி, மலையமான் சோழியவேனாதி திருக்கண்ணன், மலையமான் திருமுடிக்காரி, மலையமான்மக்கள், மாங்குடிமருதனார், மாவளத்தான், மூக்காவனாட்டு ஆமூர்மல்லன், முதியன், மூவன், மூவேந்தர், யானைக்கட்சேய்மாந்தரஞ்சேரலிரும்பொறை, வடிம்பலம்பநின்ற பாண்டியன், வல்லார் கிழான்பண்ணன், வல்வில் ஓரி, வாட்டாற்றெழினியாதன், விச்சிக்கோன், வெளிமான், வேங்கைமார்பன், வேள்எவ்வி, வேள்பாரி, வையாவிக்கோப் பெரும்பேகன்.

உ

கணபதி துணை

எட்டுத்தொகையுள்

எட்டாவதாகிய

புறநானூறு

மூலம்.

(க) கண்ணி கார்நறுங் கொன்றை காமர்
வண்ண மார்பிற் றாருங் கொன்றை
ஊர்தி வால்வெள் ளேறே சிறந்த
சீர்கெழு கொடியு மவ்வே றென்ப
கறைமிட றணியலு மணிந்தன் றக்கறை
மறைநவி லந்தணர் நுவலவும் படுமே
பெண்ணுரு வொருதிற னாகின் றவ்வுருத்
தன்னு ளடக்கிக் கரக்கினுங் கரக்கும்
பிறைநுதல் வண்ண மாகின் றப்பிறை
பதினெண் கணனு மேத்தவும் படுமே
எல்லா வுயிர்க்கு மேம மாகிய
நீரற வறியாக் கரகத்துத்
தாழ்சடைப் பொலிந்த வருந்தவத் தோற்கே.

கடவுள் வாழ்த்து.

பாரதம்பாடிய பெருந்தேவனார் பாடியது.

(௨) மண்டிணிந்த நிலனும்
நிலனேந்திய விசும்பும்
விசும்புதைவரு வளியும்
வளித்தலைஇய தீயும்
தீமுரணிய நீரு மென்றாங்
கைம்பெரும் பூதத் தியற்கை போலப்
போற்றார்ப் பொறுத்தலுஞ் சூழ்ச்சிய தகலமும்
வலியுந் தெறலு மளியு முடையோய்
நின்கடற் பிறந்த ஞாயிறு பெயர்த்துநின்
வெண்டலைப் புணரிக் குட கடற் குளிக்கும்
யாணர் வைப்பி னன்னாட்டுப் பொருந
வான வரம்பனை நீயோ பெரும
அலங்குளைப் புரவி யைவரொடு சினைஇ
நிலந்தலைக் கொண்ட பொலம்பூந் தும்பை
ஈரைம் பதின்மரும் பொருதுகளத் தொழியப்
பெருஞ்சோற்று மிகுபதம் வரையாது கொடுத்தோய்
பாஅல்புளிப்பினும் பகலிருளினும்
நாஅல்வேத நெறிதிரியினும்
திரியாச் சுற்றமொடு முழுதுசேண் விளங்கி
நடுக்கின்றி [1]நிலியரோ வத்தை யடுக்கத்துச்
சிறுதலை நவ்விப் பெருங்கண் மாப்பிணை
அந்தி யந்தண ரருங்கட னிறுக்கும்
முத்தீ விளக்கிற் றுஞ்சும்
பொற்கோட் டிமயமும் பொதியமும் போன்றே.

திணை - பாடாண்டிணை; துறை - செவியறிவுறூஉ; வாழ்த்தியலு மாம்.

சேரமான்பெருஞ்சோற்றுதியஞ்சேரலாதனை முரஞ்சியூர் முடிநாகராயர் பாடியது. (௨)

(௩) உவவுமதி யுருவி னோங்கல் வெண்குடை
நிலவுக்கடல் வரைப்பின் மண்ணக நிழற்ற
ஏம முரச மிழுமென முழங்க
நேமி யுய்த்த நேஎ நெஞ்சிற்

பி - ம். [1]நிலையரோ.

றவிரா வீகைக் கவுரியர் மருக
செயிர்தீர் கற்பிற் சேயிழை கணவ
[1]பொன்னோடைப் புகரணி நுதற்
றுன்னருந்திறற் கமழ்கடாஅத்
தெயிறுபடை யாக வெயிற்கத விடாஅக்
கயிறுபிணிக் கொண்ட கவிழ்மணி மருங்கிற்
பெருங்கை யானை யிரும்பிடர்த் தலையிருந்து
மருந்தில் கூற்றத் தருந்தொழில் [2]சாயாக்
கருங்கை யொள்வாட் பெரும்பெயர் வழுதி
நிலம்பெயரினு நின்சொற்பெயரல்
பொலங்கழற்காற் புலர்சாந்தின்
விலங்ககன்ற வியன்மார்ப
ஊரில்ல வுயவரிய
நீரில்ல நீளிடைய
பார்வ லிருக்கைக் கவிகண் ணோக்கிற்
செந்தொடை பிழையா வன்க ணாடவர்
அம்புவிட வீழ்ந்தோர் வம்பப் பதுக்கைத்
திருந்துசிறை வளைவாய்ப் பருந்திருந் துயவும்
உன்ன மரத்த துன்னருங் கவலை
நின்னசை வேட்கையி னிரவலர் [3]வருவரது
முன்ன முகத்தி னுணர்ந்தவர்
இன்மை தீர்த்தல் வன்மை யானே.

திணையும் துறையும் அவை.

பாண்டியன் கருங்கையொள்வாட் பெரும்பெயர்வழுதியை இரும்பிடர்த்தலையார் பாடியது. (௩)

(௪) வாள், வலந்தர மறுப்பட்டன
செவ்வானத்து வனப்புப்போன்றன
தாள், களங்கொளக் கழல்பறைந்தன
கொல்லேற்றின் மருப்புப்போன்றன
தோல், துளைத்தம்பிற் றுளைதோன்றுவ
நிலைக்கொராஅ விலக்கம்போன்றன

பி - ம். [1]பொன்னினோடை. [2]சாவாக். [3]வருவதை.

மாவே, எறிபதத்தா னிடங்காட்டக்
கறுழ்பொருத செவ்வாயான்
எருத்துவவ்விய புலிபோன்றன
[1]களிறே, கதவெறியாச் சிவந்துராஅய்
நுதிமழுங்கிய வெண்கோட்டான்
உயிருண்ணுங் கூற்றுப்போன்றன
நீயே, அலங்குளைப் பரீஇயிவுளிப்
பொலந்தேர்மிசைப் [2]பொலிவுதோன்றி
மாக்கட னிவந்தெழுதரும்
செஞ்ஞாயிற்றுக் கவினைமாதோ
அனையை யாகன் மாறே
தாயி றூவாக் குழவி போல
ஓவாது கூஉநின் னுடற்றியோர் நாடே.

திணை - வஞ்சி ; துறை - கொற்றவள்ளை.

சோழன் உருவப்பஃறேரிளஞ்சேட்சென்னியைப் பரணர் பாடியது.

(ரு) எருமை யன்ன கருங்கல் லிடைதோ
றானிற் பரக்கும் யானைய முன்பிற்
கானக நாடனை நீயோ பெரும
நீயோ ராகலி னின்னொன்று மொழிவல்
அருளு மன்பு நீக்கி நீங்கா
நிரயங் கொள்பவரொ டொன்றாது காவல்
குழவி கொள்பவரி னோம்புமதி
அளிதோ தானேயது பெறலருங் குரைத்தே.

திணை - பாடாண்டிணை; துறை - செவியறிவுறூஉ; பொருண்மொழிக் காஞ்சியுமாம்.

சேரமான் கருவூரேறிய ஒள்வாட்கோப்பெருஞ்சேரலிரும்பொறையைக் கண்டஞான்று நின் உடம்பு பெறுவாயாகென அவனைச் சென்று கண்டு தம்முடம்பு பெற்றுநின்ற நரிவெரூஉத்தலையார் பாடியது. (ரு)

(சா) வடாஅது பனிபடு நெடுவரை வடக்கும்
தெனாஅது உருகெழு குமரியின் றெற்கும்
குணாஅது கரைபொரு தொடுகடற் குணக்கும்

பி - ம். [1]களிறு. [2]பொலிவொடு தோன்றி.

குடாஅது தொன்றுமுதிர் பௌவத்தின் குடக்கும்
கீழது, முப்புண ரடுக்கிய முறைமுதற் கட்டின்
நீர்நிலை நிவப்பின் கீழு மேல
தானிலை யுலகத் தானு மானா
துருவும் புகழு மாகி விரிசீர்த்
[1]தெரிகோன் ஞமன்ன் போல வொருதிறம்
[2]பற்ற லியரோ நிற்றிறஞ் சிறக்க
செய்வினைக் கெதிர்ந்த தெவ்வர் தேஎத்துக்
கடற்படை குளிப்ப மண்டி [3]யடர்புகர்ச்
சிறுகண் யானை செவ்விதி [4]னேவிப்
பாசவற் படப்பை யாரெயில் பலதந்
தவ்வெயிற் கொண்ட செய்வுறு நன்கலம்
பரிசின் மாக்கட்கு வரிசையி னல்கிப்
[5]பணியிய ரத்தைநின் குடையே முனிவர்
முக்கட் செல்வர் நகர்வலஞ் செயற்கே
இறைஞ்சுக பெருமநின் சென்னி சிறந்த
நான்மறை [6]முனிவ ரேந்துகை யெதிரே
வாடுக [7]விறைவநின் கண்ணி யொன்னார்
நாடுசுடு கமழ்புகை யெறித்த லானே
[8]செலிய ரத்தைநின் வெகுளி வாலிழை
மங்கையர் துனித்த வாண்முகத் தெதிரே
ஆங்க, வென்றி யெல்லாம் வென்றகத் தடக்கிய
தண்டா வீகைத் தகைமாண் குடுமி
தண்கதிர் மதியம் போலவுந் தெறுசுடர்
ஒண்கதிர் ஞாயிறு போலவும்
[9]மன்னிய பெருமநீ நிலமிசை யானே.

திணையும் துறையும் அவை; துறை வாழ்த்தியலுமாம்.

பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதியைக் காரிகிழார் பாடியது. (சு)

பி - ம். [1]தெரிகோற்சமன். [2]பற்றிலியரோ. [3]யடர்ப்புகர்ச். [4]னேஎய்ப். [5]பணீஇயாத்தை. [6]முதல்வர். [7]வியவுணின். [8]சொலிகவத்தை. [9]மன்னுக.

(௭) களிறு கடைஇய தாட்
கழலுரீஇய திருந்தடிக்
[1]கணைபொருது கவிவண் கையாற்
கண்ணொளிர்வரூஉங் கவின்சாபத்து
மாமறுத்த மலர்மார்பிற்
றோல்பெயரிய வெறுழ்முன்பின்
எல்லையு மிரவு [2]மெண்ணாய் பகைவர்
ஊர்சுடு விளக்கத் தழுவிளிக் கம்பலைக்
கொள்ளை மேவலை யாகலி னல்ல
இல்லவா குபவா லியறேர் வளவ
தண்புனல் பரந்த பூசன் மண்மறுத்து
மீனிற் செறுக்கும் யாணர்ப்
பயன்றிகழ் வைப்பிற்பிற ரகன்றலை நாடே.

திணை - வஞ்சி; துறை - கொற்றவள்ளை; மழபுலவஞ்சியுமாம்.
சோழன் கரிகாற்பெருவளத்தானைக் கருங்குழலாதனார் பாடியது. (௭)

(௮) வையங் காவலர் வழிமொழிந் தொழுகப்
போகம் வேண்டிப் பொதுச்சொற் பொறாஅ
திடஞ்சிறி தென்னு மூக்கந் துரப்ப
ஒடுங்கா வுள்ளத் தோம்பா வீகைக்
கடந்தடு தானைச் சேர லாதனை
யாங்கன மொத்தியோ வீங்குசெலன் மண்டிலம்
பொழுதென வரைதி புறக்கொடுத் திறத்தி
மாறி வருதி மலைமறைந் தொளித்தி
அகலிரு விசும்பி னானும்
பகல்விளங் குதியாற் பல்கதிர் விரித்தே.

திணை - பாடாண்டிணை; துறை - இயன்மொழி; பூவைநிலையுமாம்.
சேரமான் கடுங்கோவாழியாதனைக் கபிலர் பாடியது. (௮)

(௯) ஆவு மானியற் பார்ப்பன மாக்களும்
பெண்டிரும் பிணியுடை யீரும் பேணித்

பி - ம். [1]கணைக்கால் பொருத. [2]மெண்ணாய்.

தென்புல வாழ்நர்க் கருங்கட னிறுக்கும்
பொன்போற் புதல்வர்ப் பெறாஅ தீரும்
எம்மம்பு கடிவிடுது நும்மரண் சேர்மினென
அறத்தாறு நுவலும் பூட்கை மறத்திற்
கொல்களிற்று மீமிசைக் கொடிவிசும்பு நிழற்றும்
எங்கோ வாழிய குடுமி தங்கோச்
செந்நீர்ப் பசும்பொன் வயிரியர்க் கீத்த
முந்நீர் விழவி னெடியோன்
நன்னீர்ப் பஃறுளி மணலினும் பலவே.

திணையும் துறையும் அவை.

பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதியை நெட்டிமையார் பாடியது. (௯)

(௧0) வழிபடு வோரை வல்லறி தீயே
பிறர்பழி கூறுவோர் மொழிதே றலையே
நீமெய் கண்ட தீமை காணின்
ஒப்ப நாடி யத்தக வொறுத்தி
வந்தடி பொருந்தி முந்தை நிற்பிற்
றண்டமுந் தணிதிநீ பண்டையிற் பெரிதே
அமிழ்தட் டானாக் கமழ்குய் யடிசில்
வருநர்க்கு வரையா வசையில் வாழ்க்கை
மகளிர் மலைத்த லல்லது மள்ளர்
மலைத்தல் போகிய சிலைத்தார் மார்ப
செய்திரங் காவினைச் சேண்விளங் கும்புகழ்
நெய்தலங் கான னெடியோய்
எய்தவந் தனம்யா மேத்துகம் பலவே.

திணையும் துறையும் அவை.

சோழன் [1]நெய்தலங்கானல் இளஞ்சேட்சென்னியை ஊன்பொதி பசுங்குடையார் பாடியது. (௧0)

(௧௧) அரிமயிர்த் திரண்முன்கை
வாலிழை மடமங்கையர்

பி - ம். [1]நெய்தலங்காலை.

வரிமணற் புனைபாவைக்குக்
குலவுச்சினைப் பூக்கொய்து
தண்பொருநைப் புனல்பாயும்
விண்பொருபுகழ் விறல்வஞ்சிப்
பாடல்சான்ற விறல்வேந்தனும்மே
வெப்புடைய வரண்கடந்து
துப்புறுவர் புறம்பெற்றிசினே
புறம்பெற்ற வயவேந்தன்
மறம்பாடிய பாடினியும்மே
ஏருடைய விழுக்கழஞ்சிற்
சீருடைய விழைபெற்றிசினே
இழைபெற்ற பாடினிக்குக்
குரல்புணர்சீர்க் கொளைவல்பாண் மகனும்மே
எனவாங்கு
ஒள்ளழல் புரிந்த தாமரை
வெள்ளி நாராற் பூப்பெற் றிசினே.

திணை - பாடாண்டிணை; துறை - பரிசில்கடாநிலை.

சேரமான் பாலைபாடியபெருங்கடுங்கோவைப் [1]பேய்மகள் இளவெயினி பாடியது. (கக)

(கஉ) பாணர் தாமரை மலையவும் புலவர்
பூநுதல் யானையொடு புனைதேர் பண்ணவும்
அறனோ மற்றிது விறன்மாண் குடுமி
இன்னா வாகப் பிறர்மண்கொண்
டினிய செய்திநின் னார்வலர் முகத்தே.

திணை - அது; துறை - இயன்மொழி.

பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப்பெருவழுதியை நெட்டிமையார் பாடியது. (கஉ)

(கங) இவனியா ரென்குவை யாயி னிவனே
புலிநிறக் கவசம் பூம்பொறி சிதைய
எய்கணை கிழித்த பகட்டெழின் மார்பின்

பி - ம். [1]பேய்மகள் இளவினி.

மறலி யன்ன களிற்றுமிசை யோனே
களிறே, முந்நீர் வழங்கு நாவாய் போலவும்
பன்மீ னாப்பட் டிங்கள் போலவும்
சுறவினத் தன்ன வாளோர் மொய்ப்ப
மரீஇயோ ரறியாது மைந்துபட் டன்றே
நோயில னாகிப் பெயர்கதி லம்ம
பழன மஞ்ஞை யுகுத்த பீலி
கழனி யுழவர் சூட்டொடு தொகுக்கும்
கொழுமீன் விளைந்த கள்ளின்
விழுநீர் வேலி நாடுகிழ வோனே.

திணை - பாடாண்டிணை; துறை - வாழ்த்தியல்.

சோழன்முடித்தலைக்கோப்பெருநற்கிள்ளி கருவூரிடஞ்செல்வானைக் கண்டு சேரமானந்துவஞ்சேரலிரும்பொறையொடு வேண்மாடத்து மேலிருந்து உறையூர் ஏணிச்சேரி முடமோசியார் பாடியது. (கரு)

(கச) கடுங்கண்ண கொல்களிற்றாற்
காப்புடைய வெழுமுருக்கிப்
பொன்னியற் புனைதோட்டியான்
முன்புதுரந்து சமந்தாங்கவும்
பாருடைத்த குண்டகழி
நீரழுவ நிவப்புக்குறித்து
நிமிர்பரிய மாதாங்கவும்
ஆவஞ் சேர்ந்த புறத்தை தேர்மிசைச்
[1]சாவ நோன்ஞாண் வடுக்கொள வழங்கவும்
பரிசிலர்க் கருங்கல நல்கவுங் குரிசில்
வலிய வாகுநின் றாடோய் தடக்கை
புலவுநாற் றத்த பைந்தடி
பூநாற் றத்த புகைகொளீஇ யூன்றுவை
கறிசோ றுண்டு வருந்துதொழி லல்லது
பிறிதுதொழி லறியா வாகலி னன்றும்
மெல்லிய பெரும தாமே நல்லவர்க்
காரணங் காகிய மார்பிற் பொருநர்க்

பி - ம். [1]சாப.

இருநிலத் தன்ன நோன்மைச்
செருமிகு சேஎய்நிற் பாடுநர் கையே.

திணை - அது; துறை - இயன்மொழி.

சேரமான் செல்வக்கடுங்கோவாழியாதன் கபிலர் கைப்பற்றி, 'மெல்லியவாமால் நுங்கை' எனக் கபிலர் பாடியது. (கச)

(கரு) கடுந்தேர் குழித்த ஞெள்ள லாங்கண்
[1]வெள்வாய்க் கழுதைப் புல்லினம் பூட்டிப்
பாழ்செய் தனையவர் நனந்தலை நல்லெயில்
புள்ளின மிமிழும் புகழ்சால் விளைவயல்
வெள்ளுளைக் கலிமான் கவிகுளம் புகளத்
தேர்வழங் கினைநின் றெவ்வர் தேஎத்துத்
துளங்கியலாற் பணையெருத்திற்
பாவடியாற் செறனோக்கின்
ஒளிறுமருப்பிற் களிறவர
காப்புடைய கயம்படியினை
அன்ன சீற்றத் தனையை யாகலின்
விளங்குபொன் னெறிந்த நலங்கிளர் பலகையொடு
நிழல்படு நெடுவே லேந்தி யொன்னார்
ஒண்படைக் கடுந்தார் முன்புதலைக் கொண்மார்
நசைதர வந்தோர் நசைபிறக் கொழிய
வசைபட வாழ்ந்தோர் பலர்கொல் புரையில்
நற்பனுவ னால்வேதத்
தருஞ்சீர்த்திப் பெருங்கண்ணுறை
நெய்ம்மலி யாவுதி பொங்கப் பன்மாண்
வீயாச் சிறப்பின் வேள்வி முற்றி
யூப நட்ட வியன்களம் பலகொல்
யாபல கொல்லோ பெரும வாருற்று
விசிபிணிக் கொண்ட மண்கணை முழவிற்
பாடினி பாடும் வஞ்சிக்கு
நாடல் சான்ற மைந்தினோய் நினக்கே.

திணையுந் துறையும் அவை.

பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப்பெருவழுதியை நெட்டிமையார் பாடியது. (கரு)

பி - ம். [1]பேழ்வாய்.

(கசு) வினைமாட்சிய விரைபுரவியொடு
மழையுருவின தோல்பரப்பி
முனைமுருங்கத தலைச்சென்றவர்
விளைவயல் கவர்பூட்டி
மனைமரம் விறகாகக்
கடிதுறைநீர்க் களிறு படீஇ
எல்லுப்பட விட்ட சுடுதீ விளக்கம்
செல்சுடர் ஞாயிற்றுச் செக்கரிற் றோன்றப்
புலங்கெட விறுக்கும் வரம்பி றானைத்
துணைவேண்டாச் செருவென்றிப்
புலவுவாட் புலர்சாந்தின்
முருகற் சீற்றத் துருகெழு குருசில்
மயங்குவள்ளை மலராம்பற்
பனிப்பகன்றைக கனிப்பாகற்
கரும்பல்லது காடறியாப்
பெருந்தண்பணை பாழாக
ஏம நன்னா டொள்ளெரி யூட்டினை
நாம நல்லமர் செய்ய
ஓராங்கு மலைந்தன பெருமநின் களிறே.

திணை - வஞ்சி; துறை - மழபுலவஞ்சி.

சோழன் இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளியைப் பாண்டரங் கண்ணனார் பாடியது. (கசு)

(கஎ) தென்குமரி வடபெருங்கல்
குணகுடகட லாவெல்லை
குன்றுமலை காடுநா
டொன்றுபட்டு வழிமொழியக்
கொடிதுகடிந்து கோறிருத்திப்
படுவதுண்டு பகலாற்றி
இனிதுருண்ட சுடர்நேமி
முழுதாண்டோர் வழிகாவல
குலையிறைஞ்சிய [1]கோட்டாழை
அகல்வயன் மலைவேலி
நிலவுமணல் வியன்கானற்

பி - ம். [1]காய்த்தாழை.

றெண்கழிமிசைச் சுடர்ப்பூவிற்
றண்டொண்டியோ ரடுபொருந
மாப்பயம்பின் பொறைபோற்று
நீடுகுழி யகப்பட்ட
பீடுடைய வெறுழ்முன்பிற்
கோடுமுற்றிய கொல்களிறு
நிலைகலங்கக் குழிகொன்று
கிளைபுகலத் தலைக்கூடியாங்கு
நீபட்ட வருமுன்பிற்
பெருந்தளர்ச்சி பலருவப்பப்
பிறிதுசென்று மலர்தாயத்துப்
பலர்நாப்பண் மீக்கூறலின்
உண்டாகிய வுயர்மண்ணும்
சென்றுபட்ட விழுக்கலனும்
பெறல்கூடு மிவனெஞ் சுறப்பெறி னெனவும்
ஏந்துகொடி யிறைப்புரிசை
வீங்குசிறை வியலருப்பம்
இழந்துவைகுது மினிநாமிவன்
உடன்றுநோக்கினன் பெரிதெனவும்
வேற்றரசு பணிதொடங்குநின்
ஆற்றலொடு புகழேத்திக்
காண்கு வந்திசிற் பெரும வீண்டிய
மழையென மருளும் பஃறோன் மலையெனத்
தேனிறை கொள்ளு மிரும்பல் யானை
உடலுந ருட்க வீங்கிக் கடலென
வானீர்க் கூக்குந் தானை யானாது
கடுவொடுங் கெயிற்ற வரவுத்தலை பணிப்ப
இடியென முழங்கு முரசின்
வரையா வீகைக் குடவர் கோவே.

திணை - வாகை; துறை - அரசவாகை; இயன்மொழியுமாம்.

பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனாற் பிணியிருந்த யானைக்கட்சேய் மாந்தரஞ்சேரலிரும்பொறை வலிதிற் போய்க் கட்டிலெய்தினானைக் [1]குறுங்கோழியூர்கிழார் பாடியது. (கஎ)

பி - ம். [1]குறுங்கோளியூர்.

(கஅ) முழங்கு முந்நீர் முழுவதும் வளைஇப்
பரந்துபட்ட வியன்ஞாலம்
தாளிற் றந்து தம்புகழ் நிறீஇ
ஒருதா மாகிய வுரவோ ரும்பல்
ஒன்றுபத் தடுக்கிய கோடிகடை யிரீஇய
பெருமைத் தாகநின் னாயு டானே
நீர்த்தாழ்ந்த குறுங்காஞ்சிப்
பூக்கதூஉ மின்வாளை
நுண்ணாரற் பருவராற்
[1]குரூஉக்கெடிற்ற குண்டகழி
வானுட்கும் வடிநீண்மதில்
மல்லன்மூதூர் வயவேந்தே
செல்லு முலகத்துச் செல்வம் வேண்டினும்
ஞாலங் காவலர் தோள்வலி முருக்கி
ஒருநீ யாகல் வேண்டினுஞ் சிறந்த
நல்லிசை நிறுத்தல் வேண்டினு மற்றதன்
தகுதி கேளினி மிகுதி யாள
நீரின் றமையா யாக்கைக் கெல்லாம்
உண்டி கொடுத்தோ ருயிர்கொடுத் தோரே
உண்டி முதற்றே யுணவின் பிண்டம்
உணவெனப் படுவது நிலத்தொடு நீரே
நீரு நிலனும் புணரி யோரீண்
டுடம்பு முயிரும் படைத்திசி னோரே
வித்திவா னோக்கும் புன்புலங் கண்ணகன்
வைப்பிற் றாயினு நண்ணி யாளும்
இறைவன் றாட்குத வாதே யதனால்
அடுபோர்ச் செழிய விகழாது வல்லே
நிலனெளி மருங்கி னீர்நிலை பெருகத்
தட்டோ ரம்ம விவட்டட் டோரே
தள்ளா தோரிவட் டள்ளா தோரே.

திணை - பொதுவியல்; துறை - [2]முதுமொழிக்காஞ்சி.

பாண்டியன் நெடுஞ்செழியனைக் குடபுலவியனார் பாடியது. (கஅ)

பி - ம். [1]குரூஉக் கெடிற்றுக்குண்டகழி. [2]பொருண்மொழிக்காஞ்சி.

(௧௯) இமிழ்கடல் வளைஇய வீண்டகன் கிடக்கைத்
தமிழ்தலை மயங்கிய தலையாலங் கானத்து
மன்னுயிர்ப் பன்மையுங் கூற்றத் தொருமையும்
நின்னொடு தூக்கிய வென்வேற் செழிய
இரும்புலி வேட்டுவன் பொறியறிந்து மாட்டிய
பெருங்கல் லடாரும் போன்மென விரும்பி
முயங்கினே னல்லனோ யானே மயங்கிக்
குன்றத் திறுத்த குரீஇயினம் போல
அம்புசென் றிறுத்த வரும்புண் யானைத்
தூம்புடைத் தடக்கை வாயொடு துமிந்து
நாஞ்சி லொப்ப நிலமிசைப் புரள
எறிந்துகளம் படுத்த வேந்துவாள் வலத்தர்
எந்தையொடு கிடந்தோரெம் புன்றலைப் புதல்வர்
இன்ன விறலு முளகொ னமக்கென
மூதிற் பெண்டிர் கசிந்தழ நாணிக்
கூற்றுக்கண் ணோடிய வெருவரு பறந்தலை
எழுவர் நல்வலங் கடந்தோய்நின்
[1]கழூஉவிளங் காரங் கவைஇய மார்பே.

திணை - வாகை; துறை - அரசவாகை.

அவனை அவர் பாடியது. (௧௯.)

(௨௦) இருமுந்நீர்க் குட்டமும்
வியன்ஞாலத் தகலமும்
வளிவழங்கு திசையும்
வறிதுநிலைஇய காயமும், என்றாங்
கவையளந் தறியினு மளத்தற் கரியை
அறிவு மீரமும் பெருங்க ணோட்டமும்
சோறுபடுக்குந் தீயோடு
செஞ்ஞாயிற்றுத் தெறலல்லது
பிறிதுதெற லறியார்நின் னிழல்வாழ் வோரே
திருவி லல்லது கொலைவில் லறியார்
நாஞ்சி லல்லது படையு மறியார்

பி - ம். [1]கழுவிளங்.

திறனறி வயவரொடு தெவ்வர் தேயவப்
பிறர்மண் ணுண்ணுஞ் செம்மனின் னாட்டு
வயவுறு மகளிர் வேட்டுணி னல்லது
பகைவ ருண்ணா வருமண் ணினையே
அம்புதுஞ்சுங் கடியரணால்
அறந்துஞ்சுஞ் செங்கோலையே
புதுப்புள் வரினும் பழம்புட் போகினும்
விதுப்புற வறியா வேமக் காப்பினை
அனையை யாகன் மாறே
மன்னுயி ரெல்லா நின்னஞ் சும்மே.

திணையும் துறையும் அவை.

சேரமான் யானைக்கட்சேய் மாந்தரஞ்சேரலிரும்பொறையைக் குறுங்கோழியூர்கிழார் பாடியது. (௨௦)

(௨௧) புலவரை யிறந்த புகழ்சா லோன்றல்
நிலவரை யிறந்த குண்டுகண் ணகழி
வான்றோய் வன்ன புரிசை விசும்பின்
மீன்பூத் தன்ன வுருவ ஞாயிற்
கதிர்நுழை கல்லா மரம்பயில் கடிமிளை
அருங்குறும் புடுத்த கானப் பேரெயில்
கருங்கைக் கொல்லன் செந்தீ மாட்டிய
இரும்பு ணீரினு மீட்டற் கரிதென
வேங்கை மார்ப னிரங்க வைகலும்
ஆடுகொளக் குழைந்த தும்பைப் புலவர்
பாடுதுறை முற்றிய கொற்ற வேந்தே
இகழுந ரிசையொடு மாயப்
புகழொடு விளங்கிப் பூக்கநின் வேலே

திணையும் துறையும் அவை.

கானப்பேரெயில் கடந்த உக்கிரப்பெருவழுதியை ஐயூர் மூலங்கிழார் பாடியது. (௨௧)

(௨௨) தூங்குகையா னோங்குநடைய
உறழ்மணியா னுயர்மருப்பின
பிறைநுதலாற் செறனோக்கின
பாவடியாற் பணையெருத்தின

தேன்சிதைந்த வரைபோல
மிஞிறார்க்குங் கமழ்கடாத்
தயறுசோரு மிருஞ்சென்னிய
மைந்துமலிந்த மழகளிறு
கந்துசேர்பு நிலைஇவழங்கப்
பாஅனின்று கதிர்சோரும்
வானுறையும் மதிபோலும்
மாலைவெண் குடைநிழலான்
வாண்மருங்கிலோர் காப்புறங்க
அலங்குசெந்நெற் கதிர்வேய்ந்த
ஆய்கரும்பின் கொடிக்கூரை
சாறுகொண்ட களம்போல
வேறுவேறு பொலிவுதோன்றக்
குற்றானா வுலக்கையாற்
கலிச்சும்மை வியலாங்கட்
பொலந்தோட்டுப் பைந்தும்பை
மிசையலங் குளைய பனைப்போழ் செரீஇச்
சினமாந்தர் வெறிக்குரவை
ஓத நீரிற் பெயர்பு பொங்க
வாய்காவாது பரந்துபட்ட
வியன்பாசறைக் காப்பாள
வேந்துதந்த பணிதிறையாற்
சேர்ந்தவர் [1]கடும்பார்த்தும்
ஓங்குகொல்லியோ ரடுபொருந
வேழ நோக்கின் விறல்வெஞ்சேஎய்
வாழிய பெருமநின் வரம்பில் படைப்பே
நிற்பாடிய வலங்குசெந்நாப்
பிறரிசை நுவலாமை
ஓம்பா தீயு மாற்ற லெங்கோ
மாந்தரஞ் சேர லிரும்பொறை யோம்பிய நாடே
புத்தே ளுலகத் தற்றெனக் கேட்டுவந்
தினிது கண்டிசிற் பெரும முனிவிலை

பி - ம். 1கடும்பருத்தும்.

வேறுபுலத் திறுக்குந் தானையொடு
சோறுபட நடத்திநீ துஞ்சாய் மாறே.

திணையும் துறையும் அவை; துறை - இயன்மொழியுமாம்.

சேரமான் யானைக்கட்சேஎய் மாந்தரஞ்சேரலிரும்பொறையைக் குறுங்கோழியூர்கிழார் பாடியது. (உஉ)

(உங) வெளிறி ணோன்காழ்ப் பணைநிலை முனைஇக்
களிறுபடிந் துண்டெனக் கலங்கிய துறையும்
கார்நறுங் கடம்பின் பாசிலைத் தெரியற்
சூர்நவை முருகன் சுற்றத் தன்னநின்
கூர்நல் லம்பிற் கொடுவிற் கூளியர்
கொள்வது கொண்டு கொள்ளா மிச்சில்
கொள்பத மொழிய வீசிய புலனும்
வடிநவி னவியம் பாய்தலி னூர்தொறும்
கடிமரந் துளங்கிய காவு நெடுநகர்
வினைபுனை நல்லில் வெவ்வெரி நைப்பக்
கனையெரி யுரறிய மருங்கு நோக்கி
நண்ணார் நாண நாடொறுந் தலைச்சென்
றின்னு மின்னபல செய்குவன் யாவரும்
துன்னல் போகிய துணிவி னோனென
ஞால நெளிய வீண்டிய வியன்படை
ஆலங் கானத் தமர்கடந் தட்ட
கால முன்பநிற் கண்டனென் வருவல்
அறுமருப் பெழிற்கலை புலிப்பாற் பட்டெனச்
சிறுமறி தழீஇய தெறிநடை மடப்பிணை
பூளை நீடிய வெருவரு பறந்தலை
வேளை வெண்பூக் கறிக்கும்
ஆளி லத்த மாகிய காடே.

திணையும் துறையும் அவை; துறை - நல்லிசைவஞ்சியுமாம்.

பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனைக் கல்லாடனார் பாடியது. (உங)

(உச) நெல்லரியு மிருந்தொழுவர்
செஞ்ஞாயிற்று வெயின்முனையிற்
றெண்கடற்றிரை மிசைப்பாயுந்து

திண்டிமில் வன்பரதவர்
வெப்புடைய மட்டுண்டு
தண்குரவைச் சீர்தூங்குந்து
[1]தூவற் கலித்த தேம்பாய் புன்னை
மெல்லிணர்க் கண்ணி மிலைந்த மைந்தர்
எல்வளை மகளிர் தலைக்கை [2]தருஉந்து
வண்டுபட மலர்ந்த தண்ணறுங் கானல்
முண்டகக் கோதை யொண்டொடி மகளிர்
இரும்பனையின் குரும்பைநீரும்
பூங்கரும்பின் றீஞ்சாறும்
ஓங்குமணற் குவவுத்தாழைத்
தீநீரோ டுடன்விராஅய்
முந்நீ ருண்டு முந்நீர்ப் [3]பாயும்
தாங்கா வுறையு ணல்லூர் கெழீஇய
ஓம்பா வீகை மாவே ளெவ்வி
புனலம் புதவின் மிழலையொடு கழனிக்
கயலார் நாரை [4]போர்விற் சேக்கும்
பொன்னணி யானைத் தொன்முதிர் வேளிர்
குப்பை நெல்லின் முத்தூறு தந்த
கொற்ற நீள்குடைக் கொடித்தேர்ச் செழிய
நின்று நிலைஇயர்நின் னாண்மீ னில்லாது
படாஅச் செலியர்நின் பகைவர் மீனே
நின்னொடு, தொன்று மூத்த வுயிரினு முயிரொடு
நின்று மூத்த யாக்கை யன்னநின்
ஆடுகுடி மூத்த விழுத்திணைச் சிறந்த
வாளின் வாழ்நர் தாள்வலம் வாழ்த்த
இரவன் மாக்க ளீகை நுவல
ஒண்டொடி மகளிர் பொலங்கலத் தேந்திய
தண்கமழ் தேறன் மடுப்ப மகிழ்சிறந்
தாங்கினி தொழுகுமதி பெரும வாங்கது
வல்லுநர் வாழ்ந்தோ ரென்ப தொல்லிசை

பி - ம். [1]திவலையிற் கலித்த. [2]தழூஉந்து. [3]பாயுந்து. [4]போரிற்.

மலர்தலை யுலகத்துத் தோன்றிப்
பலர்செலச் செல்லாது நின்றுவிளிந் தோரே.

திணை - பொதுவியல்; துறை - பொருண்மொழிக்காஞ்சி.
அவனை [1]மாங்குடிகிழார் பாடியது. (உச)

(உரு) மீன்றிகழ் விசும்பிற் பாயிரு ளகல
ஈண்டுசெலன் மரபிற் றன்னியல் வழாஅ
துரவுச்சினந் திருகிய வுருகெழு ஞாயிறு
நிலவுத்திகழ் மதியமொடு நிலஞ்சேர்ந் தாஅங்
குடலருந் துப்பி னொன்றுமொழி வேந்தரை
அணங்கரும் பறந்தலை யுணங்கப் பண்ணி
பிணியுறு முரசங் கொண்ட காலை
நிலைதிரி பெறியத் திண்மடை கலங்கிச்
சிதைதலுய்ந் தன்றோ நின்வேல் செழிய
முலைபொலி யாக முருப்ப நூறி
மெய்ம்மறந்து பட்ட வரையாப் பூசல்
ஒண்ணுதன் மகளிர் கைம்மை கூர
அவிரறல் கடுக்கு மம்மென்
குவையிருங் கூந்தல் கொய்தல் கண்டே.

திணை - வாகை; துறை - அரசவாகை.
அவனைக் கல்லாடனார் பாடியது. (உரு)

(உசு) நளிகட லிருங்குட்டத்து
வளிபுடைத்த கலம்போலக்
களிறுசென்று களனகற்றவும்
களனகற்றிய வியலாங்கண்
ஒளிறிலைய வெஃகேந்தி
அரைசுபட வமருழக்கி
உரைசெல முரசுவெளவி
முடித்தலை யடுப்பாகப்
புனற்குருதி யுலைக்கொளீஇத்
தொடித்தோட் டுடுப்பிற் றுழந்த வல்சியின்

பி - ம். [1]மாங்குடி மருதனார்.

அடுகளம் வேட்ட வடுபோர்ச் செழிய
ஆன்ற கேள்வி யடங்கிய கொள்கை
நான்மறை முதல்வர் சுற்ற மாக
மன்ன ரேவல் செய்ய மன்னிய
வேள்வி முற்றிய வாய்வாள் வேந்தே
நோற்றோர் மன்றநின் பகைவர் நின்னொடு
மாற்றா ரென்னும் பெயர்பெற்
றாற்றா ராயினு மாண்டுவாழ் வோரே.

திணையும் துறையும் அவை.
அவனை மாங்குடிகிழார் பாடியது. (உசு)

(உஎ) சேற்றுவளர் தாமரை பயந்த வொண்கேழ்
நூற்றித ழலரி னிரைகண் டன்ன
வேற்றுமை யில்லா [1]விழுத்திணைப் பிறந்து
வீற்றிருந் தோரை யெண்ணுங் காலை
உரையும் பாட்டு முடையோர் சிலரே
மரையிலை [2]போல மாய்ந்திசி னோர் பலரே
புலவர் [3]பாடும் புகழுடையோர் விசும்பின்
வலவ னேவா வான வூர்தி
எய்துப வென்பதஞ் செய்வினை முடித்தெனக்
கேட்ப லெந்தை சேட்சென்னி நலங்கிள்ளி
தேய்த லுண்மையும் பெருக லுண்மையும்
மாய்த லுண்மையும் பிறத்த லுண்மையும்
அறியா தோரையு மறியக் காட்டித்
திங்கட் புத்தே டிரிதரு முலகத்து
வல்லா ராயினும் வல்லுந ராயினும்
வருந்தி வந்தோர் மருங்கு நோக்கி
[4]அருள வல்லை யாகுமதி யருளிலர்
கொடாமை வல்ல ராகுக
கெடாத துப்பினின் பகையெதிர்ந் தோரே.

திணை - பொதுவியல் ; துறை - முதுமொழிக்காஞ்சி.
சோழன் நலங்கிள்ளியை உறையூர் முதுகண்ணன்சாத்தனார் பாடியது. (உஎ)

பி - ம். [1]விழுக்குடிப். [2]போன்மாய்ந்திசினோர். [3]பாடுபுகழ். [4]அருளி.

(உஅ) சிறப்பில் சிதடு முறுப்பில் பிண்டமும்
கூனுங் குறளு மூமுஞ் செவிடும்
மாவு மருளு முளப்பட வாழ்நர்க்
கெண்பே ரெச்ச மென்றிவை யெல்லாம்
பேதைமை யல்ல தூதிய மில்லென
முன்னு மறிந்தோர் கூறின ரின்னும்
அதன்றிற மத்தையா னுரைக்க வந்தது
வட்ட வரிய செம்பொறிச் சேவல்
ஏனல் காப்போ ருணர்த்திய கூஉம்
கானத் தோர்நின் றெவ்வர் நீயே
புறஞ்சிறை மாக்கட் கறங்குறித் தகத்தோர்
புய்த்தெறி கரும்பின் விடுகழை தாமரைப்
பூம்போது சிதைய வீழ்ந்தெனக் கூத்தர்
ஆடுகளங் கடுக்கு மகநாட் டையே
அதனால், அறனும் பொருளு மின்பமு மூன்றும்
ஆற்றும் பெருமநின் செல்வம்
ஆற்றா மைந்நிற் போற்றா மையே.

திணையும் துறையும் அவை.
அவனை அவர் பாடியது. (உஅ)

(உகூ) அழல்புரிந்த வடர்தாமரை
ஐதடர்ந்த நூற்பெய்து
புனைவினைப் பொலிந்த [1]பொலநறுந் தெரியல்
பாறுமயி ரிருந்தலை பொலியச் சூடிப்
பாண்முற் றுகநின் னாண்மகி ழிருக்கை
பாண்முற் றொழிந்த பின்றை மகளிர்
தோண்முற் றுகநின் சாந்துபுல ரகலம், ஆங்க
முனிவின் முற்றத் தினிதுமுர சியம்பக்
கொடியோர்த் தெறுதலுஞ் செவ்வியோர்க் களித்தலும்
ஒடியா முறையின் மடிவிலை யாகி
நல்லத னலனுந் தீயதன் றீமையும்
இல்லை யென்போர்க் கினனா கிலியர்

பி - ம். [1]பொலனறுந்.

நெல்விளை கழனிப் படுபுள் ளோப்புநர்
ஒழிமடல் விறகிற் கழிமீன் சுட்டு
வெங்கட் டொலைச்சியு மமையார் தெங்கின்
இளநீ ருதிர்க்கும் வளமிகு நன்னாடு
பெற்றன ருவக்குநின் படைகொண் மாக்கள்
பற்றா மாக்களிற் பரிவுமுந் துறுத்துக்
கூவை துற்ற நாற்காற் பந்தர்ச்
சிறுமனை வாழ்க்கையி னொரீஇ வருநர்க்
குதவி யாற்றும் நண்பிற் பண்புடை
ஊழிற் றாகநின் செய்கை விழவிற்
கோடியர் நீர்மை போல முறைமுறை
ஆடுநர் கழியுமிவ் வுலகத்துக் கூடிய
நகைப்புற னாகநின் சுற்றம்
இசைப்புற னாகநீ யோம்பிய பொருளே.

திணையும் துறையும் அவை.
அவனை அவர் பாடியது. (௨௯)

(௩௦) செஞ்ஞா யிற்றுச் செலவுமஞ் ஞாயிற்றுப்
பரிப்பும் பரிப்புச் சூழ்ந்தமண் டிலமும்
வளிதிரிதரு திசையும்
வறிது நிலைஇய காயமு மென்றிவை
சென்றளந் தறிந்தோர் போல வென்றும்
இனைத்தென் போரு முளரே யனைத்தும்
அறிவறி வாகாச் செறிவினை யாகிக்
களிறுகவு ளடுத்த வெறிகற் போல
ஒளித்த துப்பினை யாதலின் வெளிப்பட
யாங்கனம் பாடுவர் புலவர் கூம்பொடு
[1]மீப்பாய் களையாது மிசைப்பரந் தோண்டாது
புகாஅர்ப் புகுந்த பெருங்கலந் தகாஅர்
இடைப்புலப் பெருவழிச் சொரியும்
கடற்பஃ றாரத்த நாடுகிழ வோயே.

திணை - பாடாண்டிணை; துறை - இயன்மொழி.
அவனை அவர் பாடியது. (௩௦)

பி - ம். [1]மிசைப்பாய்.

(௩௧) சிறப்புடை மரபிற் பொருளு மின்பமும்
அறத்து வழிப்படூஉந் தோற்றம் போல
இருகுடை பின்பட வோங்கிய வொருகுடை
உருகெழு மதியி னிவந்துசேண் விளங்க
நல்லிசை வேட்டம் வேண்டி வெல்போர்ப்
பாசறை யல்லது நீயொல் லாயே
நுதிமுக மழுங்க மண்டி யொன்னார்
கடிமதில் பாயுநின் களிறடங் கலவே
போரெனிற் புகலும் புனைகழன் மறவர்
காடிடைக் கிடந்த நாடுநனி சேய
செல்வே மல்லே மென்னார் கல்லென்
விழவுடை யாங்கண் வேற்றுப்புலத் திறுத்துக்
குணகடல் பின்ன தாகக் குடகடல்
வெண்டலைப் புணரிநின் மான்குளம் பலைப்ப
வலமுறை வருதலு முண்டென் றலமந்து
[1]நெஞ்சுநடுங் கவலம் பாயத்
துஞ்சாக் கண்ண வடபுலத் தரசே.

திணை - வாகை; துறை - அரசவாகை; மழபுலவஞ்சியுமாம்.
அவனைக் கோவூர்கிழார் பாடியது. (௩௧)

(௩௨) கடும்பி னடுகல நிறையாக நெடுங்கொடிப்
பூவா வஞ்சியுந் தருகுவ னொன்றோ
வண்ண நீவிய வணங்கிறைப் பணைத்தோள்
ஒண்ணுதல் விறலியர் பூவிலை பெறுகென
மாட மதுரையுந் தருகுவ னெல்லாம்
பாடுகம் வம்மினோ பரிசின் மாக்கள்
தொன்னிலக் கிழமை சுட்டி னன்மதி
வேட்கோச் சிறாஅர் தேர்க்கால் வைத்த
பசுமட் குரூஉத்திரள் போலவவன்
கொண்ட குடுமித்தித் தண்பணை நாடே.

திணை - பாடாண்டிணை; துறை - இயன்மொழி.
அவனை அவர் பாடியது. (௩௨)

பி - ம். 1 நெஞ்சநடுங்கியவலம், நடுங்கவவலம்.

(௩௩) கானுறை வாழ்க்கைக் கதநாய் வேட்டுவன்
மான்றசை சொரிந்த வட்டியு மாய்மகள்
தயிர்கொடு வந்த தசும்பு நிறைய
ஏரின் வாழ்நர் பேரி லரிவையர்
குளக்கீழ் விளைந்த களக்கொள் வெண்ணெல்
முகந்தனர் கொடுப்ப வுகந்தனர் பெயரும்
தென்னம் பொருப்ப னன்னாட் டுள்ளும்
ஏழெயிற் கதவ மெறிந்துகைக் கொண்டுநின்
பேழ்வா யுழுவை பொறிக்கு மாற்றலை
பாடுநர் வஞ்சி பாடப் படையோர்
தாதெரு மறுகிற் பாசறை [1]பொலியப்
புலராப் பச்சிலை யிடையிடுபு தொடுத்த
மலரா மாலைப் பந்துகண் டன்ன
ஊன்சோற் றமலை பாண்கடும் பருத்தும்
செம்மற் றம்மநின் வெம்முனை யிருக்கை
வல்லோன் றைஇய வரிவனப் புற்ற
அல்லிப் பாவை யாடுவனப் பேய்ப்பக்
காம விருவ ரல்லது யாமத்துத்
தனிமகன் வழங்காப் பனிமலர்க் காவின்
ஒதுக்கின் றிணிமணற் புதுப்பூம் பள்ளி
வாயின் மாடந்தொறு மைவிடை வீழ்ப்ப
நீயாங்குக் கொண்ட விழவினும் பலவே.

திணை - வாகை; துறை - அரச வாகை.
அவனை அவர் பாடியது. (௩௩)

(௩௪) ஆன்முலை யறுத்த வறனி லோர்க்கும்
மாணிழை மகளிர் கருச்சிதைத் தோர்க்கும்
பார்ப்பார்த் தப்பிய கொடுமை யோர்க்கும்
வழுவாய் மருங்கிற் கழுவாயு [2]முளவென
நிலம்புடை பெயர்வ தாயினு மொருவன்
செய்தி கொன்றோர்க் குய்தி யில்லென
[3]அறம்பா டிற்றே யாயிழை கணவ
காலை யந்தியு மாலை யந்தியும்

பி - ம். [1]மலிய. [2]முளவே. [3]அறம்பாடின்றே.

புறவுக் கருவன்ன புன்புல வரகின்
பாற்பெய் புன்கந் தேனொடு மயக்கிக்
குறுமுயற் கொழுஞ்சூடு கிழித்த வொக்கலொ
டிரத்தி நீடிய வகன்றலை மன்றத்துக்
கரப்பி லுள்ளமொடு வேண்டுமொழி பயிற்றி
அமலைக் கொழுஞ்சோ றார்ந்த பாணர்க்
ககலாச் செல்வ முழுவதுஞ் செய்தோன்
எங்கோன் வளவன் வாழ்க வென்றுநின்
பீடுகெழு நோன்றாள் பாடே னாயிற்
[1]படுபறி யலனே பல்கதிர்ச் செல்வன்
யானோ தஞ்சம் பெருமவிவ் வுலகத்துச்
சான்றோர் செய்த நன்றுண் டாயின்
இமயத் தீண்டி யின்குரல் பயிற்றிக்
கொண்டன் மாமழை பொழிந்த
நுண்பஃ றுளியினும் வாழிய பலவே.

திணை - பாடாண்டிணை; துறை - இயன்மொழி.

சோழன் குளமுற்றத்துத்துஞ்சிய கிள்ளிவளவனை ஆலத்தூர்கிழார் பாடியது. (௩௪)

(௩௫) நளியிரு முந்நீ ரேணி யாக
வளியிடை வழங்கா வானஞ் சூடிய
மண்டிணி கிடக்கைத் தண்டமிழ்க் கிழவர்
முரசுமுழங்கு தானை மூவ ருள்ளும்
அரசெனப் படுவது நினதே பெரும
அலங்குகதிர்க் கனலி நால்வயிற் றோன்றினும்
இலங்குகதிர் வெள்ளி தென்புலம் படரினும்
அந்தண் காவிரி வந்துகவர் பூட்டத்
தோடுகொள் வேலின் றோற்றம் போல
[2]ஆடுகட் கரும்பின் வெண்பூ நுடங்கும்
நாடெனப் படுவது நினதே யத்தை, ஆங்க
நாடுகெழு செல்வத்துப் பீடுகெழு வேந்தே
நினவ கூறுவ லெனவ கேண்மதி

பி - ம். [1]பாடுபரி. [2]ஆடுகழைக்கரும்பு.

அறம்புரிந் தன்ன செங்கோ னாட்டத்து
முறைவேண்டு பொழுதிற் பதனெளி யோரீண்
டுறைவேண்டு பொழுதிற் பெயல்பெற் றோரே
ஞாயிறு சுமந்த கோடுதிரள் கொண்மூ
மாக விசும்பி னடுவுநின் றாங்குக்
கண்பொர விளங்குநின் விண்பொரு வியன்குடை
வெயின்மறைக் கொண்டன்றோ வன்றே வருந்திய
குடிமறைப் பதுவே கூர்வேல் வளவ
வெளிற்றுப்பனந் துணியின் வீற்றுவீற்றுக் கிடப்பக்
களிற்றுக்கணம் பொருத கண்ணகன் பறந்தலை
வருபடை தாங்கிப் பெயர்புறத் தார்த்துப்
பொருபடை தரூஉங் கொற்றமு முழுபடை
ஊன்றுசான் மருங்கி னீன்றதன் பயனே
மாரி பொய்ப்பினும் வாரி குன்றினும்
[1]இயற்கை யல்லன செயற்கையிற் றோன்றினும்
காவலர்ப் பழிக்குமிக் கண்ணகன் ஞாலம்
அதுநற் கறிந்தனை யாயி னீயும்
நொதுமலாளர் [2]பொதுமொழி கொள்ளாது
பகடுபுறந் தருநர் பார மோம்பிக்
குடிபுறந் தருகுவை யாயினின்
அடிபுறந் தருகுவ ரடங்கா தோரே.

திணை - அது; துறை - செவியறிவுறூஉ.

அவனை வெள்ளைக்குடி நாகனார் பாடிப் பழஞ்செய்க்கடன் வீடு கொண்டது. (௩௫)

(௩௬) அடுநை யாயினும் விடுநை யாயினும்
நீயளந் தறிதிநின் புரைமை வார்கோற்
செறியரிச் சிலம்பிற் குறுந்தொடி மகளிர்
பொலஞ்செய் கழங்கிற் றெற்றி யாடும்
தண்ணான் பொருநை வெண்மணல் சிதையக்
கருங்கைக் கொல்ல னரஞ்செ யவ்வாய்
நெடுங்கை நவியம் பாய்தலி னிலையழிந்து
வீகமழ் நெடுஞ்சினை புலம்பக் காவுதொறும்

பி - ம். [1]இயற்கையல்லது. [2]பொய்ம்மொழி.

கடிமரந் தடியு மோசை தன்னூர்
நெடுமதில் வரைப்பிற் கடிமனை யியம்ப
ஆங்கினி திருந்த வேந்தனொ டீங்குநின்
சிலைத்தார் முரசங் கறங்க
மலைத்தனை யென்பது நாணுத்தக வுடைத்தே.

திணை - வஞ்சி; துறை - துணைவஞ்சி.
அவன் கருவூர் முற்றியிருந்தானை ஆலத்தூர்கிழார் பாடியது. (௩௬)

(௩௭) நஞ்சுடை வாலெயிற் றைந்தலை சுமந்த
வேக வெந்திற னாகம் புக்கென
விசும்புதீப் பிறப்பத் திருகிப் பசுங்கொடிப்
பெருமலை விடரகத் துருமெறிந் தாங்குப்
புள்ளுறு புன்கண் டீர்த்த வெள்வேற்
சினங்கெழு தானைச் செம்பியன் மருக
கராஅங் கலித்த குண்டுகண் ணகழி
இடங்கருங் குட்டத் துடன்றொக் கோடி
யாமங் கொள்பவர் சுடர்நிழற் கதூஉம்
கடுமுரண் முதலைய நெடுநீ ரிலஞ்சிச்
செம்புறழ் புரிசைச் செம்மன் மூதூர்
வம்பணி யானை வேந்தகத் துண்மையின்
நல்ல வென்னாது சிதைத்தல்
வல்லையா னெடுந்தகை செருவத் தானே.

[1]திணை - வாகை; துறை - அரசவாகை; முதல்வஞ்சியுமாம்.
அவனை [2]மாறோக்கத்து நப்பசலையார் பாடியது. (௩௭)

(௩௮) வரைபுரையு மழகளிற்றின்மிசை
வான்றுடைக்கும் வகையபோல
விரவுருவின கொடிநுடங்கும்
வியன்றானை விறல்வேந்தே
நீ, உடன்றுநோக்கும்வா யெரிதவழ
நீ, நயந்துநோக்கும்வாய் பொன்பூப்பச்
செஞ்ஞாயிற்று நிலவுவேண்டினும்
வெண்டிங்களுள் வெயில்வேண்டினும்

பி - ம். [1]திணை - உழிஞை; துறை - குற்றுழிஞை. [2]மாறோகத்து.

வேண்டியது விளைக்கு மாற்றலை யாகலின்
நின்னிழற் பிறந்து நின்னிழல் வளர்ந்த
எம்மள வெவனோ மற்றே யின்னிலைப்
பொலம்பூங் காவி னன்னாட் டோரும்
செய்வினை மருங்கி னெய்த லல்லதை
உடையோ ரீதலு மில்லோ ரிரத்தலும்
கடவ தன்மையிற் கையற வுடைத்தென
ஆண்டுச்செய் நுகர்ச்சி யீண்டுங் கூடலின்
நின்னா டுள்ளுவர் பரிசிலர்
ஒன்னார் தேஎத்து நின்னுடைத் தெனவே.

திணை - பாடாண்டிணை; துறை - இயன்மொழி.
அவன் 'எம்முள்ளீர் எந்நாட்டீர் ?' என்றற்கு ஆவூர்மூலங்கிழார் பாடியது. (௩௮)

(௩௯) புறவி னல்லல் சொல்லிய கறையடி
யானை வான்மருப் பெறிந்த வெண்கடைக்
கோனிறை துலாஅம் புக்கோன் மருக
ஈதனின் புகழு மன்றே சார்தல்
ஒன்னா ருட்குந் துன்னருங் கடுந்திறற்
றூங்கெயி லெறிந்தநின் னூங்கணோர் நினைப்பின்
அடுதனின் புகழு மன்றே கெடுவின்று
மறங்கெழு சோழ ருறந்தை யவையத்
தறநின்று நிலையிற் றாகலி னதனால்
முறைமைநின் புகழு மன்றே மறமிக்
கெழுசமங் கடந்த வெழுவுறழ் திணிதோட்
கண்ணார் கண்ணிக் கலிமான் வளவ
யாங்கன மொழிகோ யானே யோங்கிய
வரையளந் தறியாப் பொன்படு நெடுங்கோட்
டிமயஞ் சூட்டிய வேம விற்பொறி
மாண்வினை நெடுந்தேர் வானவன் றொலைய
வாடா வஞ்சி வாட்டுநின்
பீடுகெழு நோன்றாள் பாடுங் காலே.

திணையும் துறையும் அவை.
அவனை மாறோக்கத்து நப்பசலையார் பாடியது. (௩௯)

(௪0) நீயே, பிற [1]ரோம்புறு மறமன்னெயில்
ஓம்பாது கடந்தட்டவர்
முடிபுனைந்த பசும்பொன்னின்
அடிபொலியக் கழறைஇய
வல்லாளனை வயவேந்தே
யாமேநின், இகழ்பாடுவோ [2]ரெருத்தடங்கப்
புகழ்பாடுவோர் பொலிவுதோன்ற
இன்று கண்டாங்குக் காண்குவ மென்றும்
இன்சொலெண் பதத்தை யாகுமதி பெரும
ஒருபிடி படியுஞ் சீறிடம்
எழுகளிறு புரக்கு நாடுகிழ வோயே.

திணை - அது; துறை - செவியறிவுறூஉ.
அவனை ஆவூர் மூலங்கிழார் பாடியது. (௪0)

(௪௧) காலனுங் காலம் பார்க்கும் பாராது
வேலீண்டு தானை விழுமியோர் தொலைய
வேண்டிடத் தடூஉம் வெல்போர் வேந்தே
திசையிரு நான்கு [3]முற்க முற்கவும்
பெருமரத், திலையி னெடுங்கோடு வற்றல் பற்றவும்
வெங்கதிர்க் கனலி துற்றவும் பிறவும்
அஞ்சுவரத் தகுந புள்ளுக்குர லியம்பவும்
எயிறுநிலத்து வீழவு மெண்ணெ யாடவும்
களிறுமேல் கொள்ளவுங் காழக நீப்பவும்
வெள்ளி நோன்படை கட்டிலொடு கவிழவும்
கனவி னரியன காணு நனவிற்
செருச்செய் முன்பநின் வருதிற னோக்கி
மையல் கொண்ட வேமமி லிருக்கையர்
புதல்வர் பூங்கண் முத்தி மனையோட்
கெவ்வங் கரக்கும் பைதன் மாக்களொடு
பெருங்கலக் குற்றன்றாற் றானே காற்றோ
டெரிநிகழ்ந் தன்ன செலவிற்
செருமிகு வளவநிற் சினைஇயோர் நாடே.

திணை - வஞ்சி; துறை - கொற்றவள்ளை.
அவனைக் கோவூர்கிழார் பாடியது. (௪௧)

பி - ம். [1]ரோம்புற்றமன். [2]ரெருத்தமடங்க. [3]முற்கவும்.

(௪௨) ஆனா வீகை யடுபோ ரண்ணனின்
யானையு மலையிற் றோன்றும் பெருமநின்
தானையுங் [1]கடலென முழங்குங் கூர்நுனை
வேலு [2]மின்னின் விளங்கு முலகத்
தரைசுதலை பணிக்கு மாற்றலை யாதலிற்
புரைதீர்ந் தன்றது புதுவதோ வன்றே
தண்புனற் பூச லல்லது நொந்து
களைக வாழி வளவ வென்றுநின்
முனைதரு பூசல் கனவினு மறியாது
புலிபுறங் காக்குங் குருளை போல
மெலிவில் செங்கோ னீபுறங் காப்பப்
பெருவிறல் யாணர்த் தாகி யரிநர்
கீழ்மடைக் கொண்ட வாளையு முழவர்
படைமிளிர்ந் திட்ட யாமையு மறைநர்
கரும்பிற் கொண்ட தேனும் பெருந்துறை
நீர்தரு மகளிர் குற்ற குவளையும்
வன்புலக் கேளிர்க்கு [3]வருவிருந் தயரும்
மென்புல வைப்பி னன்னாட்டுப் பொருந
மலையி னிழிந்து மாக்கட னோக்கி
நிலவரை யிழிதரும் பல்யாறு போலப்
புலவ ரெல்லா நின்னோக் கினரே
நீயே, மருந்தில் கணிச்சி வருந்த வட்டித்துக்
கூற்றுவெகுண் டன்ன முன்பொடு
மாற்றிரு வேந்தர் மண்ணோக் கினையே.

திணை - வாகை; துறை - அரசவாகை.

அவனை அவர் பாடியது. (௪௨)

(௪௩) நிலமிசை வாழ்ந ரலமர றீரத்
தெறுகதிர்க் கனலி வெம்மை தாங்கிக்
காலுண வாகச் சுடரொடு கொட்கும்
அவிர்சடை முனிவரு மருளக் கொடுஞ்சிறைக்

பி - ம். 1 கடலி னொலிக்கும் வைந்நுதி. 2 மின்போ லவிர்வரு ஞாலத்து. 3 வருவிருந்தமரும்.

கூருகிர்ப் [1]பருந்தி னேறுகுறித் தொரீஇத்
தன்னகம் புக்க குறுநடைப் புறவின்
[2]தபுதி யஞ்சிச் சீரை புக்க
வரையா வீகை யுரவோன் மருக
நேரார்க் கடந்த முரண்மிகு திருவிற்
றேர்வண் கிள்ளி தம்பி வார்கோற்
[3]கொடுமர மறவர் பெரும கடுமான்
கைவண் டோன்ற லைய முடையேன்
ஆர்புனை தெரியனின் முன்னோ ரெல்லாம்
பார்ப்பார் நோவன [4]செய்யலர் மற்றிது
நீர்த்தோ நினக்கென வெறுப்பக் கூறி
நின்யான் பிழைத்தது நோவா யென்னினும்
நீபிழைத் தாய்போ னனிநா ணினையே
தம்மைப் பிழைத்தோர்ப் பொறுக்குஞ் செம்மல்
இக்குடிப் பிறந்தோர்க் கெண்மை காணுமெனக்
காண்டகு மொய்ம்ப காட்டினை யாகலின்
யானே பிழைத்தனென் சிறக்கநின் னாயுள்
மிக்கு [5]வரு மின்னீர்க் காவிரி
எக்க ரிட்ட மணலினும் பலவே.

திணையும் துறையும் அவை.

சோழன் நலங்கிள்ளிதம்பி மாவளத்தானும் தாமப்பல்கண்ணனும் வட்டுப்பொருவுழிக் கைகரப்ப வெகுண்டு வட்டுக்கொண்டெறிந்தானைச் சோழன்மகனல்லையென நாணியிருந்தானைத் தாமப்பல்கண்ணனார் பாடியது. (௪௩)

(௪௪) இரும்பிடித் தொழுதியொடு பெருங்கயம் படியா
நெல்லுடைக் கவளமொடு [6]நெய்ம்மிதி பெறாஅ
திருந்தரை நோன்வெளில் வருந்த [7]வொற்றி
நிலமிசைப் புரளுங் கைய வெய்துயிர்த்
தலமரல் யானை யுருமென முழங்கவும்
பாலில் குழவி யலறவு மகளிர்

பி - ம். [1] பருந்தி னெறி. [2] தபுதிகண் டஞ்சி. [3] கொடுவின் மறவர். [4] செய்யார். [5] வருநீர்க். [6] நெய்மிகுதி. [7] வெற்றி.

பூவில் வறுந்தலை முடிப்பவு நீரில்
வினைபுனை நல்லி லினைகூஉக் கேட்பவும்
இன்னா தம்ம [1]வீங்கினி திருத்தல்
துன்னருந் துப்பின் வயமான் றோன்றல்
அறவை [2]யாயி னினதெனத் திறத்தல்
மறவை யாயிற் போரொடு திறத்தல்
அறவையு மறவையு மல்லை [3]யாகத்
திறவா தடைத்த திண்ணிலைக் கதவின்
நீண்மதி லொருசிறை யொடுங்குதல்
நாணுத்தக [4]வுடைத்திது காணுங் காலே.

திணையும் துறையும் அவை.

அவன் ஆவூர்முற்றியிருந்த காலத்து அடைத்திருந்த நெடுங்கிள்ளியைக் கோவூர்கிழார் பாடியது. (௪௪)

(௪௫) இரும்பனை வெண்டோடு [5]மலைந்தோ னல்லன்
கருஞ்சினை வேம்பின் றெரியலோ னல்லன்
நின்ன கண்ணியு மார்மிடைந் தன்றே, நின்னொடு
பொருவோன் கண்ணியு மார்மிடைந் தன்றே
ஒருவீர் தோற்பினுந் தோற்பதுங் குடியே
இருவீர் வேற லியற்கையு மன்றே, அதனாற்
குடிப்பொரு ளன்றுநுஞ் [6]செய்தி கொடித்தேர்
நும்மோ ரன்ன வேந்தர்க்கு
மெய்ம்மலி யுவகை செய்யுமிவ் விகலே.

திணை - வஞ்சி; துறை - துணைவஞ்சி.

சோழன் நலங்கிள்ளி உறையூர்முற்றியிருந்தானையும் அடைத்திருந்த நெடுங்கிள்ளியையும் கோவூர்கிழார் பாடியது. (௪௫)

(௪௬) நீயே, புறவி னல்ல லன்றியும் [7]பிறவும்
இடுக்கண் பலவும் விடுத்தோன் மருகனை
இவரே, புலனுழு துண்மார் புன்க ணஞ்சித்
தமதுபகுத் துண்ணுந் தண்ணிழல் வாழ்நர்

பி - ம். [1]வீண்டினிதிருத்தல். [2]யாயினிற்றெனத்திறவைதன். [3]யாகித். [4]வுடைத்தது. [5]மிலைத்தோனுமல்லன். [6]செய்கை. [7]பிறவும் பலவும்.

களிறுகண் டழூஉ மழாஅன் மறந்த
புன்றலைச் சிறாஅர் [1]மன்றுமருண்டு நோக்கி
விருந்திற் புன்கணோ வுடையர்
கேட்டனை யாயினீ வேட்டது செய்ம்மே.

திணையும் [2]துறையும் அவை.

சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் மலயமான் மக்களை யானைக்கிடுவுழிக் கோவூர்கிழார் பாடி உய்யக்கொண்டது. (சசு)

(சஎ) வள்ளியோர்ப் படர்ந்து புள்ளிற் போகி
நெடிய வென்னாது சுரம்பல கடந்து
வடியா நாவின் வல்லாங்குப் பாடிப்
பெற்றது மகிழ்ந்து சுற்ற மருத்தி
ஓம்பா துண்டு கூம்பாது வீசி
வரிசைக்கு வருந்துமிப் பரிசில் வாழ்க்கை
பிறர்க்குத் [3]தீதறிந் தன்றோ வின்றே, திறப்பட
நண்ணார் நாண வண்ணாந் தேகி
ஆங்கினி தொழுகி னல்ல [4]தோங்குபுகழ்
மண்ணாள் செல்வ [5]மெய்திய
நும்மோ ரன்ன செம்மலு முடைத்தே.

திணையும் துறையும் அவை.

சோழன் நலங்கிள்ளியுழைநின்று உறையூர்புகுந்த [6]இளந்தத்தனென்னும் புலவனைக் காரியாற்றுத்துஞ்சிய நெடுங்கிள்ளி ஒற்றுவந்தானென்று [7]கொல்லப்புக்குழிக் கோவூர்கிழார் பாடி உய்யக்கொண்டது.()

(சஅ) கோதை மார்பிற் கோதை யானும்
கோதையைப் புணர்ந்தோர் கோதை யானும்
மாக்கழி மலர்ந்த நெய்த லானும்
கண்ணா றும்மே கானலந் தொண்டி
அஃதெம் மூரே யவனெம் மிறைவன்
அன்னோற் படர்தி யாயி னீயும்

பி - ம். [1]மன்றமருண்டு. [2]துறை இயன்மொழி. [3]தீங்கறிந் தன்றோ. [4]தோங்கிய [5]மெய்தின. [6]இளந்தத்தனைக். [7]கொலைபுகுவழிக்.

[1]எம்மு முள்ளுமோ முதுவா யிரவல
அமர்மேம் படூஉங் காலைநின்
புகழ்மேம் படுநனைக் கண்டன மெனவே.

திணை - பாடாண்டிணை; துறை - புலவராற்றுப்படை.
சேரமான் கோக்கோதைமார்பனைப் பொய்கையார் பாடியது. (சஅ)

(சகூ) நாட னென்கோ வூர னென்கோ
பாடிமிழ் பனிக்கடற் சேர்ப்ப னென்கோ
யாங்கன மொழிகோ வோங்குவாட் கோதையைப்
புனவர் தட்டை புடைப்பி [2]னயல
திறங்குகதி ரலமரு கழனியும்
பிறங்குநீர்ச் சேர்ப்பினும் புள்ளொருங் கெழுமே.

திணையும் துறையும் அவை; துறை - இயன்மொழியுமாம்.
அவனை அவர் பாடியது. (சகூ)

(ரு0) மாசற விசித்த வார்புறு [3]வள்பின்
மைபடு மருங்குல் பொலிய மஞ்ஞை
ஒலிநெடும் பீலி யொண்பொறி மணித்தார்
பொலங்குழை யுழிஞையொடு பொலியச் சூட்டிக்
குருதி வேட்கை யுருகெழு முரசம்
மண்ணி வாரா வளவை யெண்ணெய்
நுரைமுகந் தன்ன மென்பூஞ் சேக்கை
அறியா தேறிய வென்னைத் தெறுவர
இருபாற் படுக்குநின் வாள்வா யொழித்ததை
அதூஉஞ் சாலுநற் றமிழ்முழு தறிதல்
அதனொடு மமையா தணுக வந்துநின்
மதனுடை முழவுத்தோ ளோச்சித் தண்ணென
வீசி யோயே வியலிடங் கமழ
இவணிசை யுடையோர்க் கல்ல தவணது
துயர்நிலை யுலகத் துறையு ளின்மை

பி - ம். [1]எம்மையு முள்ளுமோ. [2]னயலி னிரங்கு.
[3]வளப்பின், வள்ளின்.

விளங்கக் கேட்ட மாறுகொல்
வலம்படு குருசினீ யீங்கிது செயலே.

திணை - அது; துறை - இயன்மொழி.

சேரமான் தகடூரெறிந்த பெருஞ்சேரலிரும்பொறை முரசுகட்டில் அறியாதேறிய [1]மோசிகீரனைத் தவறுசெய்யாது அவன் துயிலெழுந் துணையும் கவரிகொண்டு வீசியானைமோசிகீரனார் பாடியது. (ருo)

(ருக) நீர்மிகிற் சிறையு மில்லை தீமிகின்
மன்னுயிர் நிழற்று நிழலு மில்லை
வளிமிகின் வலியு மில்லை யொளிமிக்
கவற்றோ ரன்ன சினப்போர் வழுதி
[2]தண்டமிழ் பொதுவெனப் பொறாஅன்போ ரெதிர்ந்து
கொண்டி வேண்டுவ னாயிற் கொள்கெனக்
கொடுத்த மன்னர் நடுக்கற் றனரே
அளியரோ வளியரவ னளியிழந் தோரே
நுண்பல சிதலை யரிதுமுயன் றெடுத்த
செம்புற் றீயல் போல
வொருபகல் வாழ்க்கைக் [3]குலமரு வோரே.

திணை - வாகை; துறை - அரசவாகை.

பாண்டியன் கூடகாரத்துத் துஞ்சிய மாறன்வழுதியை [4]ஐயூர் முடவனார் பாடியது. (ருக)

(ருஉ) அணங்குடை நெடுங்கோட் டளையக முனைஇ
முணங்குநிமிர் வயமான் முழுவலி யொருத்தல்
[5]ஊனசை யுள்ளந் துரப்ப விரைகுறித்துத்
தான்வேண்டு மருங்கின் வேட்டெழுந் தாங்கு
வடபுல மன்னர் வாட வடல்குறித்
தின்னா வெம்போ ரியறேர் வழுதி
இதுநீ கண்ணிய தாயி னிருநிலத்
தியார்கொ லளியர் தாமே யூர்தொறும்
மீன்சுடு புகையின் புலவுநாறு நெடுங்கொடி

பி - ம் [1]மோசுகீரனார். [2]தண்டமிழ்ப். [3]கலம்வருவோரே.
[4]ஐயூர் கிழார். [5]ஊன்மிசையுள்ளந்.

வயலுழை மருதின் வாங்குசினை வலக்கும்
பெருநல் யாணரி னொரீஇ யினியே
[1]கலிகெழு கடவுள் கந்தங் கைவிடப்
பலிகண் மாறிய பாழ்படு பொதியில்
நரைமூ தாளர் நாயிடக் குழிந்த
வல்லி னல்லக நிறையப் பல்பொறிக்
கான வாரண மீனும்
காடாகி விளியு நாடுடை யோரே.

திணையும் துறையும் அவை.

அவனை [2]மருதனிளநாகனுர் பாடியது. (௫௨)

(௫௩) முதிர்வா ரிப்பி முத்த வார்மணற்
கதிர்விடு மணியிற் கண்பொரு மாடத்
திலங்குவளை மகளிர் தெற்றி யாடும்
விளங்குசீர் விளங்கில் விழுமங் கொன்ற
களங்கொள் யானைக் கடுமான் பொறைய
விரிப்பி னகலுந் தொகுப்பி னெஞ்சும்
மம்மர் நெஞ்சத் [3]தெம்மனோர்க் கொருதலை
கைம்முற் றலநின் புகழே யென்றும்
ஒளியோர் பிறந்தவிம் மலர்தலை யுலகத்து
வாழே மென்றலு மரிதே தாழாது
செறுத்த செய்யுட் செய்செந் நாவின்
வெறுத்த கேள்வி விளங்குபுகழ்க் கபிலன்
இன்றுள னாயி னன்றும னென்றநின்
ஆடுகொள் வரிசைக் [4]கொப்பப்
பாடுவன் மன்னாற் பகைவரைக் கடப்பே.

திணையும் துறையும் அவை.

சேரன் மாந்தரஞ்சேரலிரும்பொறையைப் பொருந்திலிளங்கீரனுர் பாடியது. (௫௩)

(௫௪) எங்கோ னிருந்த கம்பலை மூதூர்
உடையோர் போல விடையின்று குறுகிச்

பி - ம். [1]கலிகெழு மூதூர்க்கந்து. [2]மருதினிளநாகனுர்.
[3]தெமக்கோ வொருநினை. [4]கேற்பப்.

செம்ம ணாளவை யண்ணாந்து [1]புகுதல்
எம்மன வாழ்க்கை யிரவலர்க் கெளிதே
இரவலர்க் கெண்மை யல்லது புரவெதிர்ந்து
வான நாண வரையாது சென்றோர்க்
கானா தீயுங் கவிகை வண்மைக்
கடுமான் கோதை துப்பெதிர்ந் தெழுந்த
நெடுமொழி மன்னர் நினைக்குங் காலைப்
பாசிலைத் தொடுத்த வுவலைக் கண்ணி
[2]மாசு ணுடுக்கை மடிவா யிடையன்
சிறுதலை யாயமொடு குறுகல் செல்லாப்
புலிதுஞ்சு வியன்புலத் தற்றே
வலிதுஞ்சு தடக்கை யவனுடை நாடே.

திணையும் துறையும் அவை.

சேரமான் குட்டுவன் கோதையைக் கோனாட்டு எறிச்சிலூர் மாடலன் மதுரைக்குமரன் பாடியது. (ருச)

(ருரு) ஓங்குமலைப் பெருவிற் பாம்பு [3]ஞாண் கொளீஇ
ஒருகணை கொண்டு மூவெயி லுடற்றிப்
பெருவிற லமரர்க்கு வென்றி தந்த
கறைமிடற் றண்ணல் காமர் சென்னிப்
பிறைநுதல் விளங்கு மொருகண் போல
வேந்துமேம் பட்ட பூந்தார் மாற
கடுஞ்சினத்த கொல்களிறுங் கதழ்பரிய கலிமாவும்
நெடுங்கொடிய நிமிர்தேரு நெஞ்சுடைய புகன்மறவரும்
நான்குடன் மாண்ட தாயினு மாண்ட [[4]என
அறநெறி முதற்றே யரசின் கொற்றம்
அதனால், நமரெனக் கோல்கோடாது
பிறரெனக் குணங்கொல்லாது
ஞாயிற் றன்ன [5]வெந்திற லாண்மையும்
திங்க ளன்ன தண்பெருஞ் சாயலும்
வானத் தன்ன வண்மையு மூன்றும்

பி - ம். [1]புகுதற் கெம்மன. [2]மாசூ ணுடுக்கை. [3]நாண். [4]எனும். [5]வெந்தெற.

[1]உடையை யாகி யில்லோர் கையற
[2]நீநீடு வாழிய நெடுந்தகை தாழ்நீர்
வெண்டலைப் புணரி யலைக்குஞ் செந்தில்
நெடுவே ணிலைஇய காமர் வியன்றுறைக்
கடுவளி தொகுப்ப வீண்டிய
வடுவா ழெக்கர் மணலினும் பலவே.

திணை - பாடாண்டிணை; துறை - செவியறிவுறூஉ.

பாண்டியன் இலவந்திகைப்பள்ளித்துஞ்சிய நன்மாறனை மதுரை மருதனிளநாகனார் பாடியது. (௫௫)

(௫௬) ஏற்றுவல னுயரிய வெரிமரு ளவிர்சடை
மாற்றருங் கணிச்சி மணிமிடற் றோனும்
கடல்வளர் புரிவளை புரையு மேனி
அடல்வெந் நாஞ்சிற் பனைக்கொடி யோனும்
[3]மண்ணுறு திருமணி புரையு மேனி
விண்ணுயர் புட்கொடி விறல்வெய் யோனும்
மணிமயி லுயரிய மாறா வென்றிப்
பிணிமுக வூர்தி யொண்செய் யோனுமென
ஞாலங் காக்குங் கால முன்பிற்
றோலா நல்லிசை நால்வ ருள்ளும்
கூற்றொத் தீயே மாற்றருஞ் சீற்றம்
வலியொத் தீயே வாலி யோனைப்
புகழொத் தீயே யிகழுந ரடுநனை
முருகொத் தீயே முன்னியது முடித்தலின்
ஆங்காங் கவரவ ரொத்தலின் யாங்கும்
அரியவு முளவோ நினக்கே யதனால்
இரவலர்க் கருங்கல மருகா தீயா
யவனர், நன்கலந் தந்த தண்கமழ் தேறல்
பொன்செய் புனைகலத் தேந்தி நாளும்
ஒண்டொடி மகளிர் மடுப்ப மகிழ்சிறந்
தாங்கினி தொழுகுமதி யோங்குவாண் மாற

பி - ம். [1]உடையா யாதலி னில்லோர். [2]நீடுவை யொழிய.
[3]மண்ணணிய.

அங்கண் விசும்பி னிரு ளகற்றும்
வெங்கதிர்ச் செல்வன் போலவுங் குடதிசைத்
தண்கதிர் மதியம் போலவும்
நின்று நிலைஇய ருலகமோ டுடனே.

திணை - அது; துறை - பூவைநிலை.
அவனை [1]மதுரைக்கணக்காயனார்மகனார் நக்கீரனார் பாடியது. (ருசு)

(ருஎ) வல்லா ராயினும் வல்லுந ராயினும்
புகழ்த லுற்றோர்க்கு மாயோ னன்ன
உரைசால் சிறப்பிற் புகழ்சான் மாற
நின்னொன்று கூறுவ துடையே னென்னெனின்
நீயே, பிறர்நாடு கொள்ளுங் காலை யவர்நாட்
டிறங்குகதிர்க் கழனிநின் னிளையருங் கவர்க
நனந்தலைப் பேரூ ரெரியு நைக்க
மின்னுநிமிர்ந் தன்னநின் னொளிறிலங்கு நெடுவேல்
ஒன்னார்ச் செகுப்பினுஞ் செகுக்க வென்னதூஉம்
கடிமரந் தடிதலோம்புநின்
நெடுநல் [2]யானைக் கந்தாற் றாவே.

திணை - வஞ்சி; துறை - துணைவஞ்சி.
அவனைக் காவிரிப்பூம்பட்டினத்துக் காரிக்கண்ணனார் பாடியது. ()

(ருஅ) நீயே, தண்புனற் காவிரிக் கிழவனை யிவனே
முழுமுத றொலைந்த கோளி யாலத்துக்
கொழுநிழ னெடுஞ்சினை வீழ்பொறுத் தாங்குத்
தொல்லோர் மாய்ந்தெனத் துளங்கல் செல்லாது
நல்லிசை முதுகுடி நடுக்கறத் தழீஇ
இளைய தாயினுங் கிளையரா வெறியும்
அருநரை யுருமிற் பொருநரைப் பொறாஅச்
செருமாண் பஞ்சவ ரேறே நீயே
அறந்துஞ் சுறந்தைப் பொருநனை யிவனே
நெல்லு நீரு மெல்லார்க்கு [3]மெளியவென
வரைய சாந்தமுந் திரைய முத்தமும்
இமிழ்குரன் முரச மூன்றுட னாளும்
தமிழ்கெழு கூடற் றண்கோல் வேந்தே

பி - ம். [1]அவர் பாடியது. [2]யானைக் குக்கந்து. [3]மெளியவரைய.

பானிற வுருவிற் பனைக்கொடி யோனும்
நீனிற வுருவி னேமி யோனுமென்
றிருபெருந் தெய்வமு முடனின் றாஅங்
குருகெழு தோற்றமொ டுட்குவர விளங்கி
இன்னீ ராகலி னினியவு முளவோ
இன்னுங் கேண்மினும் மிசைவா ழியவே
ஒருவீ ரொருவீர்க் காற்றுதி ரிருவீரும்
உடனிலை திரியீ ராயி னிமிழ்திரைப்
பௌவ முடுத்தவிப் பயங்கெழு மாநிலம்
கையகப் படுவது பொய்யா காதே
அதனால், நல்ல போலவு நயவ போலவும்
தொல்லோர் சென்ற நெறிய போலவும்
காத னெஞ்சினு மிடைபுகற் கலமரும்
ஏதின் மாக்கள் பொதுமொழி கொள்ளா
தின்றே போல்கநும் புணர்ச்சி வென்றுவென்
றடுகளத் துயர்கநும் வேலே கொடுவரிக்
கோண்மாக் குயின்ற சேண்விளங்கு தொடுபொறி
நெடுநீர்க் கெண்டையொடு பொறித்த
குடுமிய வாகபிறர் குன்றுகெழு நாடே.

திணை - பாடாண்டிணை; துறை - உடனிலை.

சோழன் குராப்பள்ளித்துஞ்சிய பெருந்திருமாவளவனும் பாண்டியன் வெள்ளியம்பலத்துத்துஞ்சிய பெருவழுதியும் ஒருங்கிருந்தாரைக் காவிரிப் பூம்பட்டினத்துக் காரிக்கண்ணனார் பாடியது. (௫அ)

(௫௯) ஆரந் தாழ்ந்த [1]வணிகிளர் மார்பிற்
றாடோய் தடக்கைத் தகைமாண் வழுதி
வல்லை மன்ற நீநயந் தளித்தல்
தேற்றாய் பெரும பொய்யே யென்றும்
காய்சினந் தவிராது கடலூர் பெழுதரும்
ஞாயி றனையைநின் பகைவர்க்குத்
திங்க ளனையை யெம்ம னோர்க்கே.

திணை - அது; துறை - பூவைநிலை.

பாண்டியன் சித்திரமாடத்துத்துஞ்சிய நன்மாறனை மதுரைக் கூலவாணிகன் சீத்தலைச்சாத்தனார் பாடியது. (௫௯)

பி - ம். [1]வம்பகட்டு மார்பிற்.

(சூ௦) முந்நீர் நாப்பட் டிமிழ்சுடர் போலச்
[1]செம்மீ னிமைக்கு மாக விசும்பின்
உச்சி நின்ற வுவவுமதி கண்டு
கட்சி மஞ்ஞையிற் சுரமுதல் சேர்ந்த
சில்வளை விறலியும் யானும் வல்விரைந்து
தொழுதன மல்லமோ பலவே கானற்
கழியுப்பு முகந்து கன்னாடு மடுக்கும்
ஆரைச் சாகாட் டாழ்ச்சி போக்கும்
உரனுடை நோன்பகட் டன்ன வெங்கோன்
வலனிரங்கு முரசின் வாய்வாள் வளவன்
வெயின்மறைக் கொண்ட வுருகெழு சிறப்பின்
மாலை வெண்குடை [2]யொக்குமா லெனவே.

திணை - அது; துறை - குடைமங்கலம்.

சோழன் குராப்பள்ளித் துஞ்சிய பெருந்திருமாவளவனை உறையூர் மருத்துவன்தாமோதரனார் பாடியது. (சூ௦)

(சூக) கொண்டைக் கூழைத் தண்டழைக் கடைசியர்
சிறுமா ணெய்த லாம்பலொடு கட்கும்
மலங்குமிளிர் செறுவிற் றளம்புதடிந் திட்ட
பழன வாளைப் பரூஉக்கட் டுணியல்
புதுநெல் வெண்சோற்றுக் கண்ணுறை யாக
விலாப்புடை மருங்கு விசிப்ப மாந்தி
நீடுகதிர்க் கழனிச் சூடுதடு மாறும்
வன்கை வினைஞர் புன்றலைச் சிறாஅர்
தெங்குபடு வியன்பழ [3]முனையிற் றந்தையர்
குறைக்க ணெடும்போ ரேறி விசைத்தெழுந்து
செழுங்கோட் பெண்ணைப் பழந்தொட முயலும்
வைகல் யாணர் நன்னாட்டுப் பொருநன்
எஃகுவிளங்கு தடக்கை யியறேர்ச் சென்னி
சிலைத்தா ரகல மலைக்குந ருளரெனிற்
றாமறி குவர்தமக் குறுதி யாமவன்
எழுவுறழ் திணிதோள் வழுவின்று மலைந்தோர்

பி - ம். [1]செய்ம்மீன். [2]யோர்க்குமால். [3]முனையிற்.

வாழக் கண்டன் றா மிலமே தாழாது
திருந்தடி பொருந்த வல்லோர்
வருந்தக் காண்ட லதனினு மிலமே.

திணை - வாகை; துறை - அரசவாகை.

சோழன் [1]இலவந்திகைப்பள்ளித் துஞ்சிய நலங்கிள்ளி சேட்சென்னியைக் கோனாட்டு எறிச்சிலூர் மாடலன் மதுரைக்குமரனார் பாடியது. (௬௧)

(௬௨) வருதார் தாங்கி யமர்மிகல் யாவது
பொருதாண் டொழிந்த மைந்தர் புண்டொட்டுக்
குருதிச் செங்கைக் கூந்த றீட்டி
நிறங்கிள ருருவிற் பேஎய்ப் பெண்டிர்
எடுத்தெறி யனந்தற் பறைச்சீர் தூங்கப்
பருந்தருந் துற்ற தானையொடு செருமுனிந்
தறத்தின் மண்டிய [2]மறப்போர் வேந்தர்
தாமாய்ந் தனரே குடைதுளங் கினவே
உரைசால் சிறப்பின் முரைசொழிந் தனவே
பன்னூ றடுக்கிய வேறுபடு பைஞ்ஞிலம்
இடங்கெட வீண்டிய வியன்கட் பாசறைக்
களங்கொளற் குரியோ ரின்றித் தெறுவர
உடன்வீழ்ந் தன்றா லமரே பெண்டிரும்
பாசடகு மிசையார் பனிநீர் மூழ்கார்
மார்பகம் பொருந்தி யாங்கமைந் தனரே
வாடாப் பூவி னிமையா நாட்டத்து
நாற்ற வுணவி னோரு மாற்ற
அரும்பெற லுலக நிறைய
விருந்துபெற் றனராற் பொலிகநும் புகழே.

திணை - தும்பை; துறை - தொகைநிலை.

சேரமான்குடக்கோநெடுஞ்சேரலாதனும் சோழன்வேற்பஃறடக் கைப் பெருவிறற்கிள்ளியும் போர்ப்புறத்துப் பொருது வீழ்ந்தாரைக் கழாத்தலையார் பாடியது. (௬௨)

பி - ம். [1]காலேகப்பள்ளி. [2]விறற்போர், வயப்போர்.

(௬௩) எனைப்பல் யானையு மம்பொடு துளங்கி
விளைக்கும் வினையின்றிப் படையொழிந் தனவே
விறற்புகழ் மாண்ட புரவி யெல்லாம்
மறத்தகை மைந்தரொ டாண்டுப்பட் டனவே
தேர்தர வந்த சான்றோ ரெல்லாம்
தோல்கண் மறைப்ப வொருங்குமாய்ந் தனரே
விசித்துவினை மாண்ட மயிர்க்கண் முரசம்
பொறுக்குந ரின்மையி னிருந்துவிளிந் தனவே
சாந்தமை மார்பி னெடுவேல் பாய்ந்தென
வேந்தரும் பொருதுகளத் தொழிந்தன ரினியே
என்னா வதுகொ றானே கழனி
ஆம்பல் வள்ளித் தொடிக்கை மகளிர்
பாசவன் முக்கித் தண்புனற் பாயும்
யாண ரறாஅ வைப்பிற்
காமர் கிடக்கையவ ரகன்றலை நாடே.

திணையும் துறையும் அவை.
அவரை அக்களத்திற் பரணர் பாடியது. (௬௩)

(௬௪) நல்யா ழாகுளி பதலையொடு சுருக்கிச்
செல்லா மோதில் சில்வளை விறலி
களிற்றுக்கணம் பொருத கண்ணகன் பறந்தலை
[1]விசும்பா டெருவை பசுந்தடி தடுப்பப்
பகைப்புல மரீஇய தகைப்பெருஞ் சிறப்பிற்
குடுமிக் கோமாற் கண்டு
நெடுநீர்ப் புற்கை நீத்தனம் வரற்கே.

திணை - பாடாண்டிணை; துறை - விறலியாற்றுப்படை.
பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதியை நெடும் பல்லியத்தனார் பாடியது. (௬௪)

(௬௫) மண்முழா மறப்பப் பண்யாழ் மறப்ப
இருங்கட் குழிசி கவிழ்ந்திழுது மறப்பச்
சுரும்பார் தேறல் சுற்ற மறப்ப

பி - ம். [1]விசும்போ டெருவை.

உழவ ரோதை மறப்ப விழவும்
அகலு ளாங்கட் சீறூர் மறப்ப
உவவுத்தலை வந்த பெருநா ளமயத்
திருசுடர் தம்மு ணோக்கி யொருசுடர்
புன்கண் மாலை மலைமறைந் தாங்குத்
தன்போல் வேந்தன் முன்புகுறித் தெறிந்த
புறப்புண் ணாணி மறத்தகை மன்னன்
வாள்வடக் கிருந்தன னீங்கு
நாள்போற் கழியல ஞாயிற்றுப் பகலே.

திணை - பொதுவியல்; துறை - கையறுநிலை.

சேரமான் [1]பெருஞ்சேரலாதன் சோழன் கரிகாற்பெருவளத்தானோடு பொருது புறப்புண்ணாணி வடக்கிருந்தானைக் கழாத்தலையார் பாடியது. (௬௫)

(௬௬) நளியிரு முந்நீர் நாவா யோட்டி
வளிதொழி லாண்ட வுரவோன் மருக
களியியல் யானைக் கரிகால் வளவ
சென்றமர்க் கடந்தநின் னாற்ற றோன்ற
வென்றோய் நின்னினு நல்ல னன்றே
கலிகொள் யாணர் [2]வெண்ணிப் பறந்தலை
மிகப்புக ழுலக மெய்திப்
புறப்புண் ணாணி வடக்கிருந் தோனே

திணை - வாகை; துறை - அரசவாகை.

சோழன் கரிகாற்பெருவளத்தானை [3]வெண்ணிக் குயத்தியார் பாடியது. (௬௬)

(௬௭) அன்னச் சேவ லன்னச் சேவல்
ஆடுகொள் வென்றி யடுபோ ரண்ணல்
நாடுதலை யளிக்கு மொண்முகம் போலக்
கோடுகூடு மதிய முகிழ்நிலா விளங்கும்
மையன் மாலையாங் கையறு பினையக்

பி - ம். [1]பெருந்தோளாதன். [2]வெண்ணிற் பறந்தலை.
[3]வெண்ணிற்குயத்தியார்.

குமரியம் பெருந்துறை யயிரை மாந்தி
வடமலைப் பெயர்குவை யாயி னிடையது
சோழநன் னாட்டுப் படினே கோழி
உயர்நிலை மாடத்துக் குறும்பறை யசைஇ
வாயில் விடாது கோயில் புக்கெம்
பெருங்கோக் கிள்ளி கேட்க விரும்பிசிர்
ஆந்தை யடியுறை யெனினே மாண்டநின்
இன்புறு பேடை யணியத்தன்
நன்புறு நன்கல நல்குவ னினக்கே.

திணை - பாடாண்டிணை; துறை - இயன்மொழி.
கோப்பெருஞ்சோழனைப் [1]பிசிராந்தையார் பாடியது. (சுஎ)

(சுஅ) உடும்புரித் தன்ன வென்பெழு மருங்கிற்
கடும்பின் கடும்பசி களையுநர்க் காணாது
சில்செவித் தாகிய கேள்வி நொந்துநொந்
தீங்கெவன் செய்தியோ பாண பூண்சுமந்
தம்பகட் டெழிலிய செம்பொறி யாகத்து
மென்மையின் மகளிர்க்கு வணங்கி வன்மையின்
ஆடவர்ப் பிணிக்கும் பீடுகெழு நெடுந்தகை
புனிறுதீர் குழவிக் கிலிற்றுமுலை போலச்
சுரந்த காவிரி மரங்கொன் மலிநீர்
மன்பதை புரக்கு நன்னாட்டுப் பொருநன்
உட்பகை யொருதிறம் பட்டெனப் புட்பகைக்
கேவா னாகலிற் சாவேம் யாமென
நீங்கா மறவர் வீங்குதோள் புடைப்பத்
தணிபறை யறையு மணிகொ டேர்வழிக்
கடுங்கட் பருகுநர் நடுங்குகை யுகுத்த
நறுஞ்சே றாடிய வறுந்தலை யானை
நெடுநகர் வரைப்பிற் படுமுழா வோர்க்கும்
உறந்தை யோனே குருசில்
பிறன்கடை மறப்ப நல்குவன் செலினே.

திணை - அது ; துறை - பாணாற்றுப்படை.
சோழன் நலங்கிள்ளியைக் கோவூர்கிழார் பாடியது. (சுஅ)

பி - ம். [1]இரும்பிசிராந்தையார்.

(சுகூ) கையது கடனிறை யாழே மெய்யது
புரவல ரின்மையிற் பசியே யரையது
வேற்றிழை நுழைந்த [1]வேர்நனை சிதாஅர்
ஓம்பி யுடுத்த வுயவற் பாண
[2]பூட்கை யில்லோன் யாக்கை போலப்
பெரும்புல் லென்ற விரும்பே [3]ரொக்கலை
வையக முழுதுடன் வளைஇப் பையென
என்னை வினவுதி யாயின் மன்னர்
ஆடுகளி றுயவுங் கொடிகொள் பாசறைக்
குருதிப் பரப்பிற் கோட்டுமா தொலைச்சிப்
புலாக்களஞ் செய்த கலாஅத் தானையன்
பிறங்குநிலை மாடத் துறந்தை யோனே
பொருநர்க் [4]கோக்கிய வேல னொருநிலைப்
பகைப்புலம் படர்தலு முரியன் றகைத்தார்
ஒள்ளெரி புரையு முருகெழு பசும்பூட்
கிள்ளி வளவற் படர்குவை யாயின்
நெடுங்கடை நிற்றலு மிலையே கடும்பகற்
றேர்வீ சிருக்கை யார நோக்கி
நீயவற் கண்ட பின்றைப் பூவின்
ஆடும்வண் டிமிராத் தாமரை
சூடா யாத லதனினு மிலையே.

திணையும் துறையும் அவை.

சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவனை ஆலத்தூர்கிழார் பாடியது. (சுகூ)

(எ0) தேஎந் தீந்தொடைச் சீறியாழ்ப் பாண
கயத்துவாழ் யாமை காழ்கோத் தன்ன
நுண்கோற் றகைத்த தெண்கண் மாக்கிணை
இனிய காண்கிவட் டணிகெனக் கூறி
வினவ லானா முதுவா யிரவல
தைஇத் திங்கட் டண்கயம் போலக்

பி - ம். [1]வெயர்நனை. [2]பூணடகை. [3]ரொக்கலொடு. [4]கேற்றியவில்லன்.

கொளக்கொளக் குறைபடாக் கூழுடை வியனகர்
அடுதீ யல்லது சுடுதீ யறியா
திருமருந் து விளைக்கு நன்னாட்டுப் பொருநன்
கிள்ளி வளவ னல்லிசை யுள்ளி
நாற்ற நாட்டத் தறுகாற் பறவை
சிறுவெள் ளாம்பன் ஞாங்க ரூதும்
கைவள் ளீகைப் [1]பண்ணன் சிறுகுடிப்
பாதிரி கமழு மோதி யொண்ணுதல்
இன்னகை விறலியொடு மென்மெல வியலிச்
செல்வை யாயிற் செல்வை யாகுவை
விறகொய் மாக்கள் பொன்பெற் றன்னதோர்
தலைப்பா டன்றவ னீகை
நினைக்க வேண்டா வாழ்கவன் றாளே.

திணையும் துறையும் அவை.
அவனைக் [2]கோவூர்கிழார் பாடியது. (எ0)

(எக) மடங்கலிற் சினைஇ மடங்கா வுள்ளத்
தடங்காத் தானை வேந்த ருடங்கியைந்
தென்னொடு பொருது மென்ப வவரை
ஆரம ரலறத் தாக்கித் தேரொ
டவர்ப்புறங் காணே னாயிற் சிறந்த
பேரம ருண்க ணிவளினும் [3]பிரிக
அறனில திரியா வன்பி னவையத்துத்
திறனி லொருவனை நாட்டி முறைதிரிந்து
மெலிகோல் செய்தே னாகுக மலிபுகழ்
வையை சூழ்ந்த வளங்கெழு வைப்பிற்
பொய்யா யாணர் மையற் கோமான்
மாவனு மன்னெயி லாந்தையு முரைசால்
அந்துவஞ் சாத்தனு மாத [4]னழிசியும்
வெஞ்சின வியக்கனு முளப்படப் பிறரும்
கண்போ னண்பிற் கேளிரொடு கலந்த
இன்களி மகிழ்நகை யிழுக்கியா னொன்றோ

பி - ம். [1]பாணன். [2]கோவூரழகியார். [3]பிரிகு. [4]னிழிச்சியும்.

மன்பதை காக்கு நீள்[1]குடிச் சிறந்த
தென்புலங் காவலி னொரீஇப்பிறர்
வன்புலங் காவலின் மாறியான் பிறக்கே.

திணை - காஞ்சி; துறை - வஞ்சினக் காஞ்சி.

ஒல்லையூர்தந்த [2]பூதப்பாண்டியன் பாட்டு. (எக)

(எஉ) நகுதக் கனரே நாடுமீக் கூறுநர்
இளைய னிவனென வுளையக் கூறிப்
படுமணி யிரட்டும் பாவடிப் பணைத்தாள்
நெடுநல் யானையுந் தேரு மாவும்
படையமை மறவரு முடையம் யாமென்
றுறுதுப் பஞ்சா துடல்சினஞ் செருக்கிச்
சிறுசொற் சொல்லிய சினங்கெழு வேந்தரை
அருஞ்சமஞ் சிதையத் தாக்கி முரசமொ
டொருங்ககப் படேஎ னாயிற் பொருந்திய
என்னிழல் வாழ்நர் சென்னிழற் காணாது
கொடியனெம் மிறையெனக் கண்ணீர் பரப்பிக்
குடிபழி தூற்றுங் கோலே னாகுக
ஓங்கிய சிறப்பி னுயர்ந்த கேள்வி
மாங்குடி மருதன் றலைவ னாக
உலகமொடு நிலைஇய பலர்புகழ் சிறப்பிற்
புலவர் பாடாது வரைகவென் னிலவரை
புரப்போர் புன்கண் கூர
இரப்போர்க் கீயா வின்மையா னுறவே.

திணையும் துறையும் அவை.

பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் பாட்டு. (எஉ)

(எங) மெல்ல வந்தென் னல்லடி பொருந்தி
ஈயென விரக்குவ ராயிற் சீருடை
முரசுகெழு தாயத் [3]தரசோ தஞ்சம்
இன்னுயி ராயினுங் கொடுக்குவெ னிந்நிலத்

பி - ம். [1]குடிப் புறந்த. [2]பூதபாண்டியன். [3]தரசே.

தாற்ற லுடையோ ராற்றல் போற்றுதென்
உள்ள மெள்ளிய மடவோன் றெள்ளிதிற்
றுஞ்சுபுலி யிடறிய சிதடன் போல
உய்ந்தனன் பெயர்தலோ வரிதே மைந்துடைக்
கழைதின் யானைக் காலகப் பட்ட
வன்றிணி நீண்முளை போலச் சென்றவண்
[1]வருந்தப் பொரேஎ னாயிற் பொருந்திய
தீதி னெஞ்சத்துக் காதல் கொள்ளாப்
பல்லிருங் கூந்தன் மகளிர்
ஒல்லா முயக்கிடைக் குழைகவென் றாரே.

திணையும் துறையும் அவை.

சோழன் [2]நலங்கிள்ளி பாட்டு. (எங)

(எச) குழவி யிறப்பினு மூன்றடி பிறப்பினும்
[3]ஆளன் றென்று வாளிற் றப்பார்
தொடர்ப்படு ஞமலியி னிடர்ப்படுத் திரீஇய
கேளல் கேளிர் வேளாண் சிறுபதம்
மதுகை யின்றி [4]வயிற்றுத்தீத் தணியத்
தாமிரந் துண்ணு மளவை
[5]ஈன்ம ரோவிவ் வுலகத் தானே.

திணை - பொதுவியல்; துறை - முதுமொழிக்காஞ்சி.

சேரமான் கணைக்காலிரும்பொறை சோழன் செங்கணானோடு [6]திருப்போர்ப்புறத்துப் பொருது பற்றுக்கோட்பட்டுக் குடவாயிற்கோட்டத்துச் சிறையிற்கிடந்து தண்ணீர் தாவென்று பெறாது பெயர்த்துப்பெற்றுக் கைக்கொண்டிருந்து உண்ணான் சொல்லித் துஞ்சிய பாட்டு. (எச)

(எரு) [7]மூத்தோர் மூத்தோர்க் கூற்ற முய்த்தெனப்
பாறர வந்த பழவிறற் றாயம்
எய்தின மாயி னெய்தினஞ் சிறப்பெனக்
குடிபுர விரக்குங் கூரி லாண்மைச்

பி - ம். [1]வருந்த வொற்றேனாயிற். [2]நல்லுருத்திரன்.
[3]மானவிளையின்றெனவாளில். [4]வயிற்றலந்தித்.
[5]உண்பரோ. [6]போர்ப்.
[7]மூத்தோர்க் கூற்ற முய்த்தென வுய்த்தென.

சிறியோன் பெறினது சிறந்தன்று மன்னே
மண்டமர்ப் பரிக்கு மதனுடை நோன்றாள்
விழுமியோன் பெறுகுவ [1]னாயி னாழ்நீர்
அறுகய மருங்கிற் சிறுகோல் வெண்கிடை
என்றூழ் வாடுவறல் போல நன்றும்
நொய்தா லம்ம தானே மையற்று
விசும்புற் வோங்கிய வெண்குடை
முரசுகெழு வேந்த ரரசுகெழு திருவே.

திணை - அது; துறை - [2]பொருண்மொழிக்காஞ்சி.

சோழன் நலங்கிள்ளி பாட்டு. (எரு)

(எசு) ஒருவனை யொருவ னடுதலுந் தொலைதலும்
புதுவ தன்றிவ் வுலகத் தியற்கை
இன்றி னூங்கோ கேளலந் திரளரை
மன்ற வேம்பின் மாச்சினை யொண்டளிர்
நெடுங்கொடி யுழிஞைப் பவரொடு மிடைந்து
செறியத் தொடுத்த தேம்பாய் கண்ணி
ஒலியன் மாலையொடு பொலியச் சூடிப்
பாடின் றெண்கிணை கறங்கக் காண்டக
நாடுகெழு திருவிற் பசும்பூட் செழியன்
பீடுஞ் செம்மலு மறியார் கூடிப்
பொருது மென்று தன்றலை வந்த
புனைகழ லெழுவர் நல்வல மடங்க
ஒருதா னாகிப் பொருதுகளத் தடலே.

திணை - வாகை; துறை - அரசவாகை.

பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனை இடைக்குன்றூர்கிழார் பாடியது. (எசு)

(எஎ) கிண்கிணி களைந்தகா லொண்கழ றொட்டுக்
குடுமி களைந்த நுதல் வேம்பி னொண்டளிர்
நெடுங்கொடி யுழிஞைப் பவரொடு மிலைந்து
குறுந்தொடி கழித்தகைச் சாபம் பற்றி
நெடுந்தேர்க் கொடிஞ்சி பொலிய நின்றோன்

பி - ம். [1]னாயிற் கழுநீர். [2]பொதுமொழிக்காஞ்சி.

யார்கொல் வாழ்கவவன் கண்ணி தார்பூண்டு
தாலி களைந்தன்று மிலனே பால்விட்
டயினியு மின்றயின் றனனே வயின்வயின்
உடன்றுமேல் வந்த வம்ப மள்ளரை
வியந்தன்று மிழிந்தன்று மிலனே யவரை
அழுந்தப் பற்றி யகல்விசும் பார்ப்பெழக்
கவிழ்ந்துநிலஞ் சேர வட்டதை
மகிழ்ந்தன்று மலிந்தன்று மதனினு மிலனே.

திணையும் துறையும் அவை.
அவனை அவர் பாடியது. (எஎ)

(எஅ) வணங்குதொடைப் பொலிந்த [1]வலிகெழு நோன்றாள்
அணங்கருங் கடுந்திற லென்னை முணங்குநிமிர்ந்
தளைச்செறி யுழுவை யிரைக்குவந் தன்ன
மலைப்பரு மகல மதியார் சிலைத்தெழுந்து
விழுமியம் பெரியம் யாமே நம்மிற்
பொருநனு மிளையன் கொண்டியும் பெரிதென
எள்ளி வந்த வம்ப மள்ளர்
புல்லென் கண்ணர் புறத்திற் பெயர
ஈண்டவ ரடுதலு மொல்லா னாண்டவர்
மாணிழை மகளிர் நாணினர் கழியத்
தந்தை தம்மூ ராங்கட்
டெண்கிணை கறங்கச்சென் றாண்டட் டனனே.

திணையும் துறையும் அவை.
அவனை அவர் பாடியது. (எஅ)

(எகூ) மூதூர் வாயிற் பனிக்கய மண்ணி
மன்ற வேம்பி னொண்குழை மலைந்து
தெண்கிணை முன்னர்க் களிற்றி னியலி
வெம்போர்ச் செழியனும் வந்தன னெதிர்ந்த
வம்ப மள்ளரோ பலரே
எஞ்சுவர் கொல்லோ பகறவச் சிறிதே.

திணையும் துறையும் அவை.
அவனை அவர் பாடியது. (எகூ)

பி - ம். [1]மதனுடை.

(அ0) இன்கடுங் கள்ளி னாமூ ராங்கண்
மைந்துடை மல்லன் மதவலி முருக்கி
ஒருகான் மார்பொதுங் கின்றே யொருகால்
வருதார் தாங்கிப் பின்னொதுங் கின்றே
நல்கினு நல்கா னாயினும் வெல்போர்ப்
[1]போரருந் தித்தன் காண்கதி லம்ம
பசித்துப்பணை முயலும் யானை போல
இருதலை யொசிய வெற்றிக்
களம்புகு [2]மல்லற் கடந்தடு நிலையே.

திணை - தும்பை; துறை - எருமைமறம்.

சோழன் போர்வைக்கோப்பெருநற்கிள்ளி முக்காவனாட்டு ஆமூர் மல்லனைப் பொருது அட்டுநின்றானைச் சாத்தந்தையார் பாடியது. (அ0)

(அக) ஆர்ப்பெழு கடலினும் பெரிதவன் களிறே
கார்ப்பெய லுருமின் முழங்கலா னாவே
யார்கொ லளியர் தாமே யார்நார்ச்
செறியத் தொடுத்த கண்ணிக்
கவிகை மள்ளன் கைப்பட் டோரே.

திணை - வாகை; துறை - அரசவாகை.

அவனை அவர் பாடியது. (அக)

(அஉ) சாறுதலைக் கொண்டெனப் பெண்ணீற் றுற்றெனப்
பட்ட மாரி ஞான்ற ஞாயிற்றுக்
கட்டி [3]னிணக்கு மிழிசினன் கையது
[4]போழ்தூண் டூசியின் விரைந்தன்று மாதோ
ஊர்கொள வந்த பொருநனொ
டார்புனை தெரிய னெடுந்தகை போரே.

திணையும் துறையும் அவை.

அவனை அவர் பாடியது. (அஉ)

(அங) அடிபுனை தொடுகழன் மையணற் காளைக்கென்
தொடிகழித் திடுதல்யான் யாயஞ் சுவலே

பி - ம். [1]பொரலருந் தித்தன். [2]மள்ளர்க் கடந்தடு.
[3]னிணர்க்கு மிழிசனன். [4]போழ்தூன் னூசி.

[1]அடுதோண் முயங்க லவைநா ணுவலே
[2]என்போற் பெருவிதுப் புறுக வென்றும்
ஒருபாற் படாஅ தாகி
இருபாற் பட்டவிம் மைய லூரே.

திணை - கைக்கிளை; துறை - பழிச்சுதல்.

அவனைப் பெருங்கோழிநாய்கன் மகள் நக்கண்ணையார் பாடியது.()

(அச) என்னை, புற்கை யுண்டும் பெருந்தோ ளன்னே
யாமே, புறஞ்சிறை யிருந்தும் பொன்னன் னம்மே
போரெதிர்ந் தென்னை போர்க்களம் புகினே
கல்லென் பேரூர் விழவுடை யாங்கண்
ஏமுற்றுக் கழிந்த மள்ளர்க்
குமணர் வெரூஉந் துறையன் னன்னே.

திணையும் துறையும் அவை.

அவனை அவர் பாடியது. (அச)

(அரு) என்னைக் கூரிஃ தன்மை யானும்
என்னைக்கு நாடிஃ தன்மை யானும்
ஆடா டென்ப வொருசா ரோரே
ஆடன் றென்ப வொருசா ரோரே
நல்ல பல்லோ ரிருநன் மொழியே
அஞ்சிலம் பொலிப்ப வோடி யெம்மில்
முழாவரைப் போந்தை பொருந்திநின்
றியான்கண் டனனவ ளுடா குதலே.

திணையும் துறையும் அவை.

அவனை அவர் பாடியது. (அரு)

(அசா) சிற்றி னற்றூண் பற்றி நின்மகன்
யாண்டுள னோவென வினவுதி யென்மகன்
யாண்டுள னாயினு மறியே னோரும்
புலிசேர்ந்து போகிய கல்லளை போல

பா - ம். [1]அடுதொறு முயங்கல். [2]எம்போற் பெருவிதிர்ப்பு.

ஈன்ற வயிறோ விதுவே
தோன்றுவன் மாதோ போர்க்களத் தானே.

திணை - வாகை; துறை - ஏறாண்முல்லை.

[1]காவற்பெண்டின் பாட்டு. (அசு)

(அஎ) களம்புக லோம்புமின் றெவ்விர் போரெதிர்ந்
தெம்முளு முளனொரு பொருநன் வைகல்
எண்டேர் செய்யுந் தச்சன்
திங்கள் வலித்த காலன் னோனே.

திணை - தும்பை; துறை - தானைமறம்.

[2]அதியமான் நெடுமான் அஞ்சியை ஔவையார் பாடியது. (அஎ)

(அஅ) யாவி ராயினுங் கூழை தார்கொண்
டியாம்பொருது மென்ற லோம்புமி னோங்குதிறல்
ஒளிறிலங்கு நெடுவேன் மழவர் பெருமகன்
கதிர்விடு நுண்பூ ணம்பகட்டு மார்பின்
விழவுமேம் பட்ட நற்போர்
முழவுத்தோ ளென்னையைக் காணா வூங்கே.

திணையும் துறையும் அவை.

அவனை அவர் பாடியது. (அஅ)

(அகூ) இழையணிப் பொலிந்த வேந்துகோட் டல்குல்
மடவர லுண்கண் வாணுதல் விறலி
பொருநரு முளரோநும் மகன்றலை நாட்டென
வினவ லானாப் பொருபடை வேந்தே
எறிகோ லஞ்சா வரவி னன்ன
சிறுவன் மள்ளரு முளரே யதாஅன்று
பொதுவிற் றூங்கும் விசியுறு தண்ணுமை
வளிபொரு தெண்கண் கேட்பின்
அதுபோ ரென்னு மென்னையு முளனே.

திணையும் துறையும் அவை.

அவனை அவர் பாடியது. (அகூ)

பி - ம். [1]காதற்பெண்டு. [2]அதிகமானெடுமான்வஞ்சி.

(௬௦) உடைவளை கடுப்ப மலர்ந்த காந்தள்
அடைமல்கு குளவியொடு கமழுஞ் சாரல்
மறப்புலி யுடலின் மான்கண முளவோ
மருளின விசும்பின் மாதிரத் தீண்டிய
இருளு முண்டோ ஞாயிறு சினவின்
அச்சொடு தாக்கிப் பாருற் றியங்கிய
பண்டச் சாகாட் டாழ்ச்சி சொல்லிய
வரிமணன் [1]ஞெமரக் கற்பக நடக்கும்
பெருமிதப் பகட்டுக்குத் துறையு முண்டோ
எழுமரங் கடுக்குந் தாடோய் தடக்கை
வழுவில் [2]வன்கை மழவர் பெரும
இருநில மண்கொண்டு சிலைக்கும்
பொருநரு முளரோ நீகளம் புகினே.

திணையும் துறையும் அவை.

அவனை அவர் பாடியது. (௬௦)

(௬௧) [3]வலம்படு வாய்வா ளேந்தி யொன்னார்
களம்படக் கடந்த கழறொடித் தடக்கை
ஆர்கலி [4]நறவி னதியர் கோமான்
போரடு திருவிற் பொலந்தா ரஞ்சி
பால்புரை பிறைநுதற் பொலிந்த சென்னி
நீல மணிமிடற் றொருவன் போல
மன்னுக பெரும நீயே தொன்னிலைப்
பெருமலை விடரகத் தருமிசைக் கொண்ட
சிறியிலை நெல்லித் [5]தீங்கனி குறியா
தாத னின்னகத் தடக்கிச்
சாத னீங்க [6]வெமக்கீத் தனையே.

திணை - பாடாண்டிணை; துறை - வாழ்த்தியல்.

அவனை அவர் நெல்லிப்பழம்பெற்றுப் பாடியது. (௬௧)

பி - ம். [1]ஞெமல. [2]வண்கை.
[3]வளம். [4]முழவி னதிகர் கோமான்.
[5]தீங்கனி குறையாது காதனின். [6]வெனக்கீத் தோயே.

(௯௨) யாழொடுங் கொள்ளா பொழுதொடும் புணரா
பொருளறி வாரா வாயினுந் தந்தையர்க்
கருள்வந் தனவாற் புதல்வர்தம் மழலை
என்வாய்ச் சொல்லு மன்ன வொன்னார்
கடிமதி லரண்பல கடந்த
நெடுமா னஞ்சிநீ யருளன் மாறே.

திணை - அது; துறை - இயன்மொழி.

அவனை அவர் பாடியது. (௯௨)

(௯௩) திண்பிணி முரச மிழுமென முழங்கச்
சென்றமர் கடத்தல் யாவது வந்தோர்
தார்தாங் குதலு மாற்றார் வெடிபட்
டோடன் மரீஇய பீடின் மன்னர்
நோய்ப்பால் விளிந்த யாக்கை தழீஇக்
காதன் மறந்தவர் தீதுமருங் கறுமார்
அறம்புரி கொள்கை நான்மறை முதல்வர்
திறம்புரி பசும்புற் பரப்பினர் கிடப்பி
மறங்கந் தாக [1]நல்லமர் வீழ்ந்த
நீள்கழன் மறவர் செல்வுழிச் செல்கென
வாள்போழ்ந் தடக்கலு முய்ந்தனர் மாதோ
வரிஞிமி றார்க்கும் வாய்புகு கடாஅத்
தண்ணல் யானை யடுகளத் தொழிய
அருஞ்சமந் ததைய நூறிநீ
பெருந்தகை விழுப்புண் பட்ட மாறே.

திணை - வாகை; துறை - அரசவாகை.

அவன் பொருது புண்பட்டுநின்றானை அவர் பாடியது. (௯௩)

(௯௪) ஊர்க்குறு மாக்கள் வெண்கோடு கழாஅலின்
[2]நீர்த்துறை படியும் பெருங்களிறு போல
இனியை பெரும வெமக்கே மற்றதன்

பி - ம். [1]வாளமர். [2]நீர்த்துறைப் படியும்.

துன்னருங் கடாஅம் போல
இன்னாய் பெருமநின் னொன்னா தோர்க்கே.

திணையும் துறையும் அவை.

அவனை அவர் பாடியது. (கூச)

(கூரு) இவ்வே, பீலி யணிந்து மாலை சூட்டிக்
கண்டிர ணோன்காழ் திருத்திநெய் யணிந்து
கடியுடை வியனக ரவ்வே யவ்வே
பகைவர்க் குத்திக் கோடுநுதி சிதைந்து
கொற்றுறைக் குற்றில மாதோ வென்றும்
உண்டாயிற் பதங்கொடுத்
தில்லாயி னுடனுண்ணும்
இல்லோ ரொக்கற் றலைவன்
அண்ணலெங் கோமான் வைந்நுதி வேலே.

திணை - பாடாண்டிணை; துறை - வாண்மங்கலம்.

அவன் தூதுவிடத் தொண்டைமானுழைச் சென்ற ஔவைக்கு அவன் படைக்கலக்கொட்டில் காட்ட அவர் பாடியது. (கூரு)

(கூசு) அலர்பூந் தும்பை யம்பகட்டு மார்பிற்
றிரண்டுநீடு தடக்கை யென்னை யிளையோற்
கிரண்டெழுந் தனவாற் பகையே யொன்றே
பூப்போ லுண்கண் பசந்துதோ ணுணுகி
நோக்கிய மகளிர்ப் பிணித்தன் றொன்றே
விழவின் றாயினும் படுபதம் பிழையாது
மையூன் மொசித்த வொக்கலொடு துறைநீர்க்
கைமான் கொள்ளு மோவென
உறையுண் முனியுமவன் செல்லு மூரே.

திணை - அது; துறை - இயன்மொழி.

அவன்மகன் போதட்டேழினியை அவர் பாடியது. (கூசு)

(கூஎ) போர்க்குறைஇப் புகன்றுகழித்தவாள்
உடன்றவர்காப்புடை மதிலழித்தலின்
ஊனுற மூழ்கி யுருவிழந் தனவே

வேலே, குறும்படைந்த வரண்கடந்தவர்
நறுங்கள்ளி னாடுநைத்தலிற்
சுரைதழீஇய விருங்காழொடு
மடைகலங்கி நிலைதிரிந்தனவே
களிறே, எழூஉத்தாங்கிய கதவுமலைத்தவர்
[1]குழூஉக்களிற்றுக் குறும்புடைத்தலிற்
பரூஉப்பிணிய தொடிகழிந்தனவே
மாவே, பரந்தொருங்கு மலைந்தமறவர்
பொலம்பைந்தார் கெடப்பரிதலிற்
களனுழந் தசைஇய மறுக்குளம் பினவே
அவன்றானும், நிலந்திரைக்குங் கடற்றானைப்
பொலந்தும்பைக் கழற்பாண்டிற்
கணைபொருத துளைத்தோலன்னே
ஆயிடை, உடன்றோ ருய்தல் யாவது தடந்தாட்
பிணிக்கதிர் நெல்லின் செம்மன் மூதூர்
நுமக்குரித் தாகல் வேண்டிற் சென்றவற்
கிறுக்கல் வேண்டுந் திறையே மறுப்பின்
ஒல்வா னல்லன் வெல்போ ரானெனச்
சொல்லவுந் தேறீ ராயின் மெல்லியற்
கழற்கனி வகுத்த துணைச்சில் லோதிக்
குறுந்தொடி மகளிர் தோள்விடல்
இறும்பூ தன்றஃ தறிந்தா டுமினே.

திணையும் துறையும் அவை.
அதியமான் நெடுமானஞ்சியை அவர் பாடியது. (கூஎ)

(கூஅ) முனைத்தெவ்வர் முரணவியப்
பொரக்குறுகிய நுதிமருப்பினின்
இனக்களிறு செலக்கண்டவர்
மதிற்கதவ மெழூஉச்செல்லவும்
பிணனழுங்கக் களனுழக்கிச்
செலவசைஇய மறுக்குளம்பினின்
இனநன்மாச் செலக்கண்டவர்

பி - ம். [1]குரூஉக்களிற்றுக்.

கவைமுள்ளிற் புழையடைப்பவும்
மார்புறச் சேர்ந்தொல்காத்
தோல்செறிப்பினின் வேல்கண்டவர்
தோல்கழியொடு பிடிசெறிப்பவும்
வாள்வாய்த்த வடுப்பரந்தநின்
மறமைந்தர் மைந்துகண்டவர்
புண்படுகுருதி யம்பொடுக்கவும்
நீயே, ஐயவி புகைப்பவுந் தாங்கா தொய்யென
உறுமுறை மரபிற் புறநின் றுய்க்கும்
கூற்றத் தனையை யாகலிற் போற்றார்
இரங்க விளிவது கொல்லோ வரம்பணைந்
திறங்குகதி ரலம்வரு கழனிப்
பெரும்புனற் படப்பையவ ரகன்றலை நாடே.

திணை - வாகை; துறை - அரசவாகை; திணை - வஞ்சியும், துறை - கொற்றவள்ளையுமாம்.

அவனை அவர் பாடியது. (கூஅ)

(கூகூ) அமரர்ப் [1]பேணியு மாவுதி யருத்தியும்
அரும்பெறன் மரபிற் கரும்பிவட் டந்தும்
நீரக விருக்கை யாழி சூட்டிய
தொன்னிலை மரபினின் முன்னோர் போல
ஈகையங் கழற்கா லிரும்பனம் புடையற்
பூவார் காவிற் புனிற்றுப்புலா னெடுவேல்
எழுபொறி நாட்டத் தெழாஅத் தாயம்
வழுவின் றெய்திய மமையாய் செருவேட்
டிமிழ்குரன் முரசி னெழுவரொடு முரணிச்
சென்றமர் கடந்துநின் னாற்ற றோற்றிய
அன்றும் பாடுநர்க் கரியை யின்றும்
பரணன் பாடினன் மற்கொன் மற்றுநீ
முரண்மிகு கோவலூர் நூறிநின்
அரணடு திகிரி யேந்திய தோளே.

திணையும் துறையும் அவை.

அவன் கோவலூரேறிந்தானை அவர் பாடியது. (கூகூ)

பி - ம். [1]பேணி யாகுதி.

(க00) கையது வேலே காலன புனைகழல்
மெய்யது வியரே மிடற்றது பசும்புண்
வட்கர் போகிய வளரிளம் போந்தை
உச்சிக் கொண்ட வூசி வெண்டோடு
வெட்சி மாமலர் வேங்கையொடு விரைஇச்
சுரியிரும் பித்தை பொலியச் சூடி
வரிவயம் பொருத வயக்களிறு போல
இன்னு மாறாது சினனே யன்னோ
உய்ந்தன ரல்லரிவ னுடற்றி யோரே
செறுவர் நோக்கிய கண்டன்
சிறுவனை நோக்கியுஞ் சிவப்பா னாவே.

[1]திணையும் துறையும் அவை.

அதியமான்தவமகன்பிறந்தவனைக் கண்டானை அவர் பாடியது. (க00)

(க0க) ஒருநாட் செல்லல மிருநாட் செல்லலம்
பலநாள் பயின்று பலரொடு செல்லினும்
[2]தலைநாட் போன்ற விருப்பினன் மாதோ
அணிபூ ணணிந்த யானை யியறேர்
அதியமான் பரிசில் பெறூஉங் காலம்
நீட்டினு நீட்டா தாயினும் யானைதன்
கோட்டிடை வைத்த கவளம் போலக்
கையகத் ததுவது பொய்யா காதே
அருந்தே மாந்த நெஞ்சம்
வருந்த வேண்டா [3]வாழ்கவன் றாளே.

திணை - பாடாண்டிணை; துறை - பரிசில்கடாநிலை.

அவனை அவர் பாடியது. (க0க)

(க0உ) எருதே யிளைய நுகமுண ராவே
சகடம் பண்டம் பெரிதுபெய் தன்றே
அவலிழியினு மிசையேறினும்

பி - ம். [1]திணை - வாகை; துறை - அரசவாகை.
[2]தலைநாள் விருப்பினன்னபேணலன்.
[3]வாழ்கவவன் றாளே.

அவண தறியுநர் யாரென வுமணர்
கீழ்மரத் தியாத்த சேமவச் சன்ன
இசைவிளங்கு கவிகை நெடியோய் திங்கள்
நாணிறை மதியத் தனையையிருள்
யாவண தோநின் னிழல்வாழ் வோர்க்கே.

திணை - அது; துறை - இயன்மொழி.
அவன்மகன் பொகுட்டெழினியை அவர் பாடியது. (௧0௨)

(௧0௩) ஒருதலைப் பதலை தூங்க வொருதலைத்
தூம்பகச் சிறுமுழாத் தூங்கத் தூக்கிக்
கவிழ்ந்த மண்டை மலர்க்குநர் யாரெனச்
சுரன்முத லிருந்த சில்வளை விறலி
செல்வை யாயிற் சேணோ னல்லன்
முனைசுட வெழுந்த மங்குன் மாப்புகை
மலைசூழ் மஞ்சின் மழகளி றணியும்
பகைப்புலத் தோனே பல்வே லஞ்சி
பொழுதிடைப் படாஅப் புலரா மண்டை
மெழுகுமெல் லடையிற் கொழுநிணம் [1]பெருப்ப
அலத்தற் காலை யாயினும்
புரத்தல் வல்லன் வாழ்கவன் றாளே.

திணை - அது ; துறை - விறலியாற்றுப்படை.
அதியமான் நெடுமானஞ்சியை அவர் பாடியது. (௧0௩)

(௧0௪) போற்றுமின் மறவீர் சாற்றுது நும்மை
ஊர்க்குறு மாக்க ளாடக் கலங்கும்
தாட்படு சின்னீர்க் களிறட்டு வீழ்க்கும்
ஈர்ப்புடைக் கராஅத் தன்ன [2]வென்னை
நுண்பல் கருமம் நினையா
திளையனென் றிகழிற் பெறலரி தாடே.

திணை - வாகை ; துறை - அரசவாகை.
அவனை அவர் பாடியது. (௧0௪)

பி - ம். [1]பரிப்ப வறத்தற் காலை. [2]வெந்தை.

(க௦௫) சேயிழை பெறுகுவை வாணுதல் விறலி
தடவுவாய்க் கலித்த மாயிதழ்க் குவளை
வண்டுபடு புதுமலர்த் தண்சிதர் கலாவப்
பெய்யினும் பெய்யா தாயினு மருவி
கொள்ளுழு வியன்புலத் துழைகா லாக
மால்புடை நெடுவரைக் கோடுதோ றிழிதரும்
நீரினு மினிய சாயற்
பாரி வேள்பாற் பாடினை செலினே.

திணை - பாடாண்டிணை; துறை - விறலியாற்றுப்படை.
வேள்பாரியைக் கபிலர் பாடியது. (க௦௫)

(க௦௬) நல்லவுந் தீயவு மல்ல குவியிணர்ப்
புல்லிலை யெருக்க மாயினு முடையவை
கடவுள் [1]பேணே மென்னா வாங்கு
மடவர் மெல்லியர் செல்லினும்
கடவன் பாரி கைவண் மையே.

திணை - அது; துறை - இயன்மொழி.
அவனை அவர் பாடியது. (க௦௬)

(க௦௭) பாரி பாரி யென்றுபல வேத்தி
ஒருவற் புகழ்வர் செந்நாப் புலவர்
பாரி யொருவனு மல்லன்
மாரியு முண்டீண் டுலகுபுரப் பதுவே.

திணையும் துறையும் அவை.
அவனை அவர் பாடியது. (க௦௭)

(க௦௮) குறத்தி மாட்டிய வறற்கடைக் கொள்ளி
ஆர மாதலி னம்புகை யயலது
சாரல் வேங்கைப் பூஞ்சினைத் தவழும்
பறம்பு பாடின ரதுவே யறம்பூண்டு
பாரியும் பரிசில ரிரப்பின்
வாரே னென்னா னவர்வரை யன்னே.

திணையும் துறையும் அவை.
அவனை அவர் பாடியது. (க௦௮)

பி - ம். [1]வேண்டே மென்னா.

(க0௯) அளிதோ தானே பாரியது பறம்பே
நளிகொண் [1]முரசின் மூவிரு முற்றினும்
உழவ ருழாதன நான்குபய னுடைத்தே
ஒன்றே, சிறியிலை வெதிரி னெல்விளை யும்மே
இரண்டே, தீஞ்சுளைப் பலவின் [2]பழமூழ்க் கும்மே
மூன்றே, கொழுங்கொடி வள்ளிக் கிழங்குவீழ்க் கும்மே
நான்கே, அணிநிற வோரி [3]பாய்தலின் மீதழிந்து
திணிநெடுங் குன்றந் தேன்சொரி யும்மே
வான்க ணற் [4]றவன் மலையே வானத்து
மீன்க ணற்றதன் சுனையே [5]யாங்கு
மரந்தொறும் பிணித்த களிற்றினி ராயினும்
புலந்தொறும் பரப்பிய தேரினி ராயினும்
[6]தாளிற் கொள்ளலிர் வாளிற் றூரலன்
யானறி குவனது கொள்ளு மாறே
சுகிர்புரி நரம்பின் சீறியாழ் பண்ணி
[7]விரையொலி கூந்தனும் விறலியர் பின்வர
ஆடினிர் பாடினிர் செலினே
நாடுங் குன்று மொருங்கீ யும்மே.

திணை - [8]நொச்சி; துறை - மகண்மறுத்தல்.
அவனை அவர் பாடியது. (க0௯)

(கக0) கடந்தடு தானை மூவிருங் கூடி
உடன்றனி ராயினும் பறம்புகொளற் கரிதே
முந்நூ றூர்த்தே தண்பறம்பு நன்னாடு
முந்நூ றூரும் பரிசிலர் பெற்றனர்
[9]யாமும் பாரியு முளமே
குன்று முண்டுநீர் பாடினிர் செலினே.

திணையும் துறையும் அவை.
மூவேந்தரும் பறம்புமுற்றியிருந்தாரை அவர் பாடியது. (கக0)

பி - ம். [1]முரசம். [2]பழம்வீழ்க்கும். [3]பாயமீ தழிந்து.
[4]அகன் மலையே வான்கணத்து.
[5]ஆங்குப், புலந்......தேரினராயினும், மரந்......களிற்றி னராயினும். [6]வாளிற்கொள்ளலிற்றாளிற்றூரலன்.
[7]விரைபொலி. [8]காஞ்சி. [9]யானும்.

(௧௧௧) அளிதோ தானே பேரிருங் குன்றே
வேலின் வேறல் வேந்தர்க்கோ வரிதே
நீலத், திணைமலர் புரையு முண்கட்
கிணைமகட் கெளிதாற் பாடினள் வரினே.

திணையும் துறையும் அவை.

அவனை அவர் பாடியது. (௧௧௧)

(௧௧௨) அற்றைத் திங்க ளவ்வெண் ணிலவின்
எந்தையு முடையேமெங் குன்றும் பிறர்கொளார்
இற்றைத் திங்க ளிவ்வெண் ணிலவின்
வென்றெறி முரசின் வேந்தரெம்
குன்றுங் கொண்டார்யா மெந்தையு மிலமே.

திணை - பொதுவியல்; துறை - கையறுநிலை.

பாரிமகளிர் பாடியது. (௧௧௨)

(௧௧௩) மட்டுவாய் திறப்பவு மைவிடை வீழ்ப்பவும்
அட்டான் றானாக் கொழுந்துவை யூன்சோறும்
பெட்டாங் கீயும் பெருவளம் பழுனி
நட்டனை மன்னோ முன்னே யினியே
பாரி மாய்ந்தெனக் கலங்கிக் கையற்று
நீர்வார் கண்ணேந் தொழுதுநிற் பழிச்சிச்
சேறும் வாழியோ பெரும்பெயர்ப் பறம்பே
கோறிரண் முன்கைக் குறுந்தொடி மகளிர்
நாறிருங் கூந்தற் கிழவரைப் படர்ந்தே.

திணையும் துறையும் அவை.

அவன்மகளிரைப் பார்ப்பார்ப்படுக்கக் கொண்டுபோவான் பறம்பு விடுத்த கபிலர் பாடியது. (௧௧௩)

(௧௧௪) ஈண்டுநின் றோர்க்குந் தோன்றுஞ் சிறுவரை
சென்றுநின் றோர்க்குந் தோன்று மன்ற
களிறுமென் றிட்ட கவளம் போல
நறவுப்பிழிந் திட்ட கோதுடைச் சிதறல்

வாரசும் பொழுகு முன்றிற்
றேர்வீ சிருக்கை நெடியோன் குன்றே.

திணையும் துறையும் அவை.

அவன்மகளிரைக் கொண்டுபோம் கபிலர் பறம்புநோக்கி நின்று சொல்லியது. (௧௧௪)

(௧௧௫) ஒருசா ரருவி யார்ப்ப வொருசார்
பாணர் மண்டை நிறையப் பெய்ம்மார்
வாக்க வுக்க தேக்கட் டேறல்
கல்லலைத் தொழுகு மன்னே பல்வேல்
அண்ணல் யானை வேந்தர்க்
கின்னா னாகிய வினியோன் குன்றே.

திணையும் துறையும் அவை.

அவனை அவர் பாடியது. (௧௧௫)

(௧௧௬) [1]தீநீர்ப் பெருங்குண்டு சுனைப்பூத்த குவளைக்
கூம்பவிழ் முழுநெறி புரள்வரு மல்குல்
ஏந்தெழின் மழைக்க ணின்னகை மகளிர்
புன்மூசு கவலைய முண்மிடை வேலிப்
பஞ்சி முன்றிற் சிற்றி லாங்கட்
பீரை நாறிய சுரையிவர் மருங்கின்
ஈத்திலைக் குப்பை யேறி யுமணர்
உப்பொ யொழுகை யெண்ணுப மாதோ
நோகோ யானே தேய்கமா காலை
பயில்பூஞ் சோலை மயிலெழுந் தாலவும்
பயிலிருஞ் சிலம்பிற் கலைபாய்ந் துகளவும்
கலையுங் கொள்ளா [2]வாகப் பலவும்
கால மன்றியு மரம்பயம் பகரும்
யாண ரறாஅ வியன்மலை யற்றே
அண்ண னெடுவரை யேறித் தந்தை
பெரிய நறவிற் கூர்வேற் பாரிய
தருமை யறியார் போரெதிர்ந்து வந்த

பி - ம். [1]தீம்பெருங். [2]வாகிப்.

வலம்படு தானை வேந்தர்
பொலம்படைக் கலிமா வெண்ணு வோரே.

திணையும் துறையும் அவை.

அவனை அவர் பாடியது. (௧௧௬)

(௧௧௭) மைம்மீன் புகையினுந் தூமந் தோன்றினும்
தென்றிசை மருங்கின் வெள்ளி யோடினும்
வயலக நிறையப் புதற்பூ மலர
மனைத்தலை மகவை யீன்ற வமர்க்கண்
ஆமா நெடுநிரை நன்பு லாரக்
கோஒல் செம்மையிற் சான்றோர் பல்கிப்
பெயல்பிழைப் பறியாப் புன்புலத் ததுவே
பிள்ளை வெருகின் முள்ளெயிறு புரையப்
பாசிலை முல்லை முகைக்கும்
ஆய்தொடி யரிவையர் தந்தை நாடே.

திணையும் துறையும் அவை.

அவனை அவர் பாடியது. (௧௧௭)

(௧௧௮) அறையும் பொறையு மணந்த தலைய
எண்ணாட் டிங்க ளனைய கொடுங்கரைத்
தெண்ணீர்ச் சிறுகுளங் கீள்வது மாதோ
கூர்வேற் குவைஇய மொய்ம்பிற்
றேர்வண் பாரி தண்பறம்பு நாடே.

திணையும் துறையும் அவை.

அவனை அவர் பாடியது. (௧௧௮)

(௧௧௯) கார்ப்பெய றலைஇய காண்பின் காலைக்
களிற்றுமுக வரியிற் றெறுழ்வீ பூப்பச்
செம்புற் றீயலி னின்னளைப் புளித்து
மென்றினை யாணர்த்து நந்துங் கொல்லோ
நிழலி னீளிடைத் தனிமரம் போலப்
பணைகெழு வேந்தரை யிறந்தும்
இரவலர்க் கீயும் வள்ளியோ னாடே.

திணையும் துறையும் அவை.

அவனை அவர் பாடியது. (௧௧௯)

(கஉ0) வெப்புள் விளைந்த வேங்கைச் செஞ்சுவற்
கார்ப்பெயற் கலித்த பெரும்பாட் டீரத்துப்
பூழி மயங்கப் பலவுழுது வித்திப்
பல்லி யாடிய பல்கிளைச் செவ்விக்
களைகால் கழாலிற் றோடொலிபு நந்தி
மென்மயிற் புனிற்றுப்பெடை கடுப்ப நீடிக்
கருந்தாள் [1]போகி யொருங்குபிள் விரிந்து
கீழு மேலு மெஞ்சாமைப் பலகாய்த்து
வாலிதின் விளைந்த புதுவர கரியத்
தினைகொய்யக் கவ்வை கறுப்ப வவரைக்
கொழுங்கொடி விளர்க்காய் கோட்பத மாக
நிலம்புதைப் பழுனிய மட்டின் றேறல்
புல்வேய் குரம்பைக் [2]குடிதொறும் பகர்ந்து
நறுநெய்க் கடலை விசைப்பச் சோறட்டுப்
பெருந்தோ டாலம் பூசன் மேவர
வருந்தா யாணர்த்து நந்துங் கொல்லோ
இரும்பல் கூந்தன் மடந்தையர் தந்தை
ஆடுகழை நரலுஞ் சேட்சிமைப் புலவர்
பார்டி யாளுப் பண்பிற் பகைவர்
ஓடுகழற் கம்பலை கண்ட
செருவெஞ் சேஎய் பெருவிற லுடே.

திணையும் துறையும் அவை.

அவனை அவர் பாடியது. (கஉ0)

(கஉக) ஒருதிசை யொருவனை யுள்ளி நாற்றிசைப்
பலரும் வருவர் பரிசின் மாக்கள்
வரிசை யறிதலோ வரிதே பெரிதும்
ஈத லெளிதே மாவண் டோன்றல்
அதுநற் கறிந்தனை யாயிற்
பொதுநோக் கொழிமதி புலவர் மாட்டே.

திணை - அது ; துறை - பொருண்மொழிக்காஞ்சி.

மலையமான் திருமுடிக்காரியைக் கபிலர் பாடியது. (கஉக)

பி - ம். [1]போக்கி. [2]குடிமுறும்.

(௧௨௨) கடல்கொளப் படாஅ துடலுந ருக்கார்
கழல்புனை திருந்தடிக் காரிநின் னாடே
அழல்புறந் தரூஉ மந்தண ரதுவே
வீயாத் திருவின் விறல்கெழு தானை
மூவரு ளொருவன் றுப்பா கியரென
ஏத்தினர் தரூஉங் கூழே நுங்குடி
வாழ்த்தினர் வரூஉ மிரவல ரதுவே
வடமீன் புரையுங் கற்பின் மடமொழி
அரிவை தோளள வல்லதை
நினதென விலைநீ பெருமிதத் தையே.

திணை - பாடாண்டிணை ; துறை - இயன்மொழி.

அவனை அவர் பாடியது. (௧௨௨)

(௧௨௩) நாட்கள் ளுண்டு நாண்மகிழ் மகிழின்
யார்க்கு மெளிதே தேரீ தல்லே
தொலையா நல்லிசை விளங்கு மலையன்
மகிழா தீத்த விழையணி நெடுந்தேர்
பயன்கெழு முள்ளூர் மீமிசைப்
பட்ட மாரி யுறையினும் பலவே.

திணையும் துறையும் அவை.

அவனை அவர் பாடியது. (௧௨௩)

(௧௨௪) நாளன்று போகிப் புள்ளிடை தட்பப்
பதனன்று புக்குத் திறனன்று மொழியினும்
வறிது [1]பெயர்குந ரல்லர் நெறிகொளப்
பாடான் றிரங்கு மருவிப்
பீடுகெழு மலையற் பாடி யோரே.

திணையும் துறையும் அவை.

அவனை அவர் பாடியது. (௧௨௪)

(௧௨௫) பருத்திப் பெண்டின் பனுவ லன்ன
நெருப்புச்சினந் தணிந்த நிணந்தயங்கு கொழுங்குறை

பி - ம். [1]பெயர்குவர்.

பரூஉக்கண் மண்டையொ டூழ்மாறு பெயர
உண்கு மெந்தைநிற் காண்குவந் திசினே
நள்ளாதார் மிடல்சாய்த்த
வல்லாளநின் மகிழிருக்கையே
உழுத நோன்பக டழிதின் றாங்கு
நல்லமிழ் தாகநீ நயந்துண்ணு நறவே
குன்றத் தன்ன களிறு பெயரக்
கடந்தட்டு வென்றோனு நிற்கூ றும்மே
வெலீஇயோ னிவனெனக்
கழலணிப் பொலிந்த சேவடி நிலங்கவர்பு
விரைந்துவந்து [1]சமந்தாங்கிய
வல்வேன் மலைய னல்ல னாயின்
நல்லமர் கடத்த லெளிதும னமக்கெனத்
தோற்றோன் றானு நிற்கூ றும்மே
தொலைஇயோ னிவனென
ஒருநீ யாயினை பெரும பெருமழைக்
கிருக்கை சான்ற வுயர்மலைத்
திருத்தகு சேஎய்நிற் பெற்றிசி னோர்க்கே.

திணை - வாகை; துறை - அரசவாகை.

சேரமான் மாந்தரஞ்சேரலிரும்பொறையும் சோழன் இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளியும் பொருதவழிச் சோழற்குத் [2]துப்பாகிய தேர் வண்மலையனை வடமவண்ணக்கன் பெருஞ்சாத்தனார் பாடியது. (கஉரு)

(கஉசு) ஒன்னார் யானை யோடைப்பொன் கொண்டு
பாணர் சென்னி பொலியத் தைஇ
வாடாத் தாமரை சூட்டிய விழுச்சீர்
ஓடாப் பூட்கை யுரவோன் மருக
வல்லே மல்லே மாயினும் வல்லே
நின்வயிற் கிளக்குவ மாயிற் கங்குல்
துயின்மடிந் தன்ன தூங்கிரு ளிறும்பிற்
பறையிசை யருவி முள்ளூர்ப் பொருந
தெறலரு மரபினின் கிளையொடும் பொலிய

பி - ம். [1]சமரந். [2]துப்பாகிய வொருவனும்மலையனை வடவண்ணத்தன் பேரிசாத்தன்.

நிலமிசைப் [1]பரந்த மக்கட் கெல்லாம்
புலனழுக் கற்ற வந்த ணாளன்
இரந்துசென் மாக்கட் கினியிட னின்றிப்
பரந்திசை நிற்கப் பாடின னதற்கொண்டு
சினமிகு தானை வானவன் குடகடற்
பொலந்தரு நாவா [2]யோட்டிய வவ்வழிப்
பிறகலஞ் செல்கலா தனையே மத்தை
இன்மை துரப்ப விசைதர வந்துநின்
வண்மையிற் றொடுத்தனம் யாமே முள்ளெயிற்
றரவெறி யுருமின் முரசெழுந் தியம்ப
அண்ணல் யானையொடு வேந்துகளத் தொழிய
அருஞ்சமந் ததையத் தாக்கி நன்றும்
நண்ணாத் தெவ்வர்த் தாங்கும்
பெண்ணையம் படப்பை நாடுகிழ வோயே.

திணை - பாடாண்டிணை; துறை - பரிசிற்றுறை.

மலையமான் திருமுடிக்காரியை [3]மாறேக்கத்து நப்பசலையார் பாடியது. (கஉ௬)

(கஉஎ) களங்கனி யன்ன கருங்கோட்டுச் சீறியாழ்ப்
பாடின் பனுவற் பாண ருய்த்தெனக்
களிறில வாகிய புல்லரை நெடுவெளிற்
கான மஞ்ஞை கணனொடு சேப்ப
ஈகை யரிய விழையணி மகளிரொடு
சாயின் றென்ப வாஅய் கோயில்
சுவைக்கினி தாகிய குய்யுடை யடிசில்
பிறர்க்கீ வின்றித் தம்வயி றருத்தி
உரைசா லோங்குபுக ழொரீஇய
முரசுகெழு செல்வர் நகர்போ லாதே.

திணை - அது; துறை - கடைநிலை.

ஆயை உறையூர் ஏணிச்சேரி முடமோசியார் பாடியது. (கஉஎ)

பி - ம். [1]பிறந்த. [2]யோட்டிய வழிப்பிறர்கலஞ். [3]மாறோகத்து.

(கஉஅ) மன்றப் பலவின் மாச்சினை மந்தி
இரவலர் நாற்றிய விசிகூடு முழவின்
பாடின் றெண்கண் கனிசெத் தடிப்பின்
அன்னச் சேவன் மாறெழுந் தாலும்
கழறொடி யாஅய் மழைதவழ் பொதியில்
ஆடுமகள் குறுகி னல்லது
பீடுகெழு மன்னர் குறுகலோ வரிதே.

திணை - அது; துறை - வாழ்த்து; இயன்மொழியுமாம்.
அவனை அவர் பாடியது. (கஉஅ)

(கஉகூ) [1]குறியிறைக் குரம்பைக் குறவர் மாக்கள்
வாங்கமைப் பழுனிய தேறன் மகிழ்ந்து
வேங்கை முன்றிற் குரவை யயரும்
தீஞ்சுளைப் பலவின் மாமலைக் கிழவன்
ஆஅ யண்டிர னடுபோ ரண்ணல்
இரவலர்க் கீத்த யானையிற் கரவின்று
வான மீன்பல பூப்பி னானா
தொருவழிக் கருவழி யின்றிப்
பெருவெள் ளென்னிற் பிழையாது மன்னே.

திணை - அது; துறை - இயன்மொழி.
அவனை அவர் பாடியது. (கஉகூ)

(கஙO) விளங்கு [2]மணிக் கொடும்பூ ணாஅய் நின்னாட்
டிளம்பிடி யொருசூல் பத்தீ னும்மோ
நின்னுநின் மலையும் பாடி வருநர்க்
கின்முகங் கரவா துவந்துநீ யளித்த
அண்ணல் யானை யெண்ணிற் கொங்கர்க்
குடகட லோட்டிய ஞான்றைத்
தலைப்பெயர்த் திட்ட வேலினும் பலவே.

திணையும் துறையும் அவை.
அவனை அவர் பாடியது. (கஙO)

பி - ம். [1]குறையிறை.
[2]மணிப் பசும்பூணாய், மணிக்கொடும் பூணாய்.

(௧௩௧) மழைக்கணஞ் சேக்கு மாமலைக் கிழவன்
வழைப்பூங் கண்ணி வாய்வா ளண்டிரன்
குன்றம் பாடின கொல்லோ
களிறுமிக வுடையவிக் கவின்பெறு காடே.

திணையும் துறையும் அவை.

அவனை அவர் பாடியது. (௧௩௧)

(௧௩௨) முன்னுள் ளுவோனைப் [1]பின்னுள்ளி னேனே
ஆழ்கென் னுள்ளம் போழ்கென் னாவே
பாழூர்க் கிணற்றிற் றூர்கவென் செவியே
நரந்தை நறும்புன் மேய்ந்த கவரி
குவளைப் பைஞ்சுனை பருகி யயல
தகரத் தண்ணிழற் பிணையொடு வதியும்
வடதிசை யதுவே வான்றோ யிமயம்
தென்றிசை யாஅய்குடி யின்றாயிற்
பிறழ்வது மன்னோவிம் மலர்தலை யுலகே.

திணையும் துறையும் அவை.

அவனை அவர் பாடியது. (௧௩௨)

(௧௩௩) மெல்லியல் விறலிநீ நல்லிசை செவியிற்
கேட்பி னல்லது காண்பறி யலையே
காண்டல் வேண்டினை யாயின் மாண்டநின்
விரைவளர் கூந்தல் வரைவளி யுளரக்
கலவ மஞ்ஞையிற் காண்வர வியலி
மாரி யன்ன [2]வண்மைத்
தேர்வே ளாயைக் காணிய சென்மே.

திணை - அது; துறை - விறலியாற்றுப்படை.

அவனை அவர் பாடியது. (௧௩௩)

(௧௩௪) இம்மைச் செய்தது மறுமைக் காமெனும்
அறவிலை [3]வணிக னாயலன் பிறரும்

பி - ம். [1]பின்னுள்ளின் யானே. [2]வண்கை.
[3]வாணிக னாஅயலன் பிறவும்.

சான்றோர் சென்ற நெறியென
ஆங்குப் பட்டன் றவன்கைவண் மையே.

திணை - அது; துறை - இயன்மொழி.

அவனை அவர் பாடியது. (௧௩௪)

(௧௩௫) கொடுவரி வழங்குங் கோடுயர் நெடுவரை
அருவிடர்ச் சிறுநெறி யேறலின் வருந்தித்
தடவால் கொண்ட தகைமெல் லொதுக்கின்
வளைக்கை விறலியென் பின்ன ளாகப்
பொன்வார்ந் தன்ன புரியடங்கு நரம்பின்
வரிநவில் பனுவல் புலம்பெயர்ந் திசைப்பப்
படுமலை நின்ற பயங்கெழு சீறியாழ்
ஒல்க லுள்ளமொ டொருபுடைத் தழீஇப்
புகழ்சால் சிறப்பினின் னல்லிசை யுள்ளி
வந்தனெ னெந்தை யானே யென்றும்
மன்றுபடு பரிசிலர்க் காணிற் கன்றொடு
கறையடி யானை யிரியல் போக்கும்
மலைகெழு நாடன் மாவே ளாஅய்
களிறு மன்றே மாவு மன்றே
ஒளிறுபடைப் புரவிய தேரு மன்றே
பாணர் பாடுநர் பரிசில ராங்கவர்
தமதெனத் தொடுக்குவ ராயி னெமதெனப்
பற்ற றேற்றுப் பயங்கெழு தாயமொ
டன்ன வாகநின் னூழி நின்னைக்
காண்டல் வேண்டிய வளவை வேண்டார்
உறுமுரண் கடந்த வாற்றற்
பொதுமீக் கூற்றத்து நாடுகிழ வோயே.

திணை - அது; துறை - பரிசிற்றுறை.

அவனை அவர் பாடியது. (௧௩௫)

(௧௩௬) யாழ்ப்பத்தர்ப் புறங்கடுப்ப
இழைவலந்த பஃறுன்னத்
திடைப்புரைபற்றிப் பிணிவிடாஅ
ஈர்க்குழாத்தோ டிறைகூர்ந்த

பேஎற்பகையென வொன்றென்கோ
உண்ணாமையி னூன்வாடித்
தெண்ணீரிற் கண்மல்கிக்
கசிவுற்றவென் பல்கிளையொடு
பசியலைக்கும் பகையொன்றென்கோ
அன்னதன்மையு மறிந்தீயார்
நின்னதுதாவென நிலைதளர
மரம்பிறங்கிய நளிச்சிலம்பிற்
குரங்கன்னபுன் குறுங்கூளியர்
பரந்தலைக்கும் பகையொன்றென்கோ
ஆஅங், கெனைப்பகையு மறியுனய்
எனக்கருதிப் பெயரேத்தி
வாயாரநின் னிசைநம்பிச்
சுடர்சுட்ட சுரத்தேறி
இவண்வந்த பெருநசையேம்
எமக்கீவோர் பிறர்க்கீவோர்
பிறர்க்கீவோர் தமக்கீபவென
அனைத்துரைத்தனன் யானாக
நினக்கொத்தது நீநாடி
நல்கினை விடுமதி பரிசி லல்கலும்
தண்புனல் வாயிற் றுறையூர் முன்றுறை
நுண்பல மணலினு மேத்தி
உண்குவம் பெருமநீ நல்கிய வளனே.

திணை - அது; துறை - பரிசில்கடாநிலை.

அவனைத் துறையூர் [1]ஓடைகிழார் பாடியது. (கருசு)

(கருஎ) இரங்கு முரசி னினஞ்சால் யானை
முந்நீ ரேணி விறல்கெழு மூவரை
இன்னு மோர்யா னவாவறி யேனே
நீயே, முன்யா னறியு மோனே துவன்றிய
கயத்திட்ட வித்து வறத்திற் சாவாது
கழைக்கரும்பி னொலிக்குந்து

பி - ம். [1]அரிசில்கிழார்.

கொண்டல் கொண்டநீர் கோடை காயினும்
கண்ணன்ன மலர்பூக்குந்து
கருங்கால் வேங்கை மலரி னாலும்
பொன்னன்ன வீசுமந்து
மணியன்னநீர் கடற்படரும்
செவ்வரைப் படப்பை நாஞ்சிற் பொருந
சிறுவெள் ளருவிப் பெருங்க ணாடனை
நீவா ழியர்நின் றந்தை
தாய்வா ழியர்நிற் பயந்திசி னோரே.

திணை - அது; துறை - இயன்மொழி; பரிசிற்றுறையுமாம்.
நாஞ்சில்வள்ளுவனை ஒருசிறைப் [1]பெரியனார் பாடியது. (கருஎ)

(கருஅ) ஆனினங் கலித்த வதர்பல கடந்து
மானினங் கலித்த மலைபின் னொழிய
மீனினங் கலித்த துறைபல நீந்தி
உள்ளி வந்த வள்ளுயிர்ச் சீறியாழ்
சிதாஅ ருடுக்கை முதாஅரிப் பாண
நீயே பேரெண் ணலையே நின்னிறை
மாறி வாவென மொழியலன் மாதோ
ஒலியிருங் கதுப்பி னாயிழை கணவன்
கிளிமரீஇய வியன்புனத்து
மரனணி பெருங்குர லனைய னாதலின்
நின்னை வருத லறிந்தனர் யாரே.

திணை - அது; துறை - பாணாற்றுப்படை.
அவனை மருதனிளநாகனார் பாடியது. (கருஅ)

(கருகூ) சுவலழுந்தப் பலகாய
சில்லோதிப் பல்லிளைஞருமே
அடிவருந்த நெடிதேறிய
கொடிமருங்குல் விறலியருமே
வாழ்தல் வேண்டிப்
பொய்கூறேன் மெய்கூறுவல்

பி - ம். [1]பெயரியனார், பெயரினார்.

ஓடாப் பூட்கை யுரவோர் மருக
உயர்சிமைய வுழாஅ நாஞ்சிற் பொருந
மாயா வுள்ளமொடு பரிசி றுன்னிக்
கனிபதம் பார்க்குங் காலை யன்றே
ஈத லானான் வேந்தே வேந்தற்குச்
சாத லஞ்சாய் நீயே யாயிடை
இருநில மிளிர்ந்திசி னாஅங் கொருநாள்
அருஞ்சமம் வருகுவ தாயின்
வருந்தலு முண்டென் பைதலங் கடும்பே.

திணை - அது; துறை - பரிசில் கடாநிலை.

அவனை அவர் பாடியது. (கஙகூ)

(கசO) தடவுநிலைப் பலவி னாஞ்சிற் பொருநன்
மடவன் மன்ற செந்நாப் புலவீர்
வளைக்கை விறலியர் [1]படப்பைக் கொய்த
அடகின் [2]கண்ணுறை யாக யாஞ்சில
அரிசி வேண்டினெ மாகத் தான் [3]பிற
வரிசை யறிதலிற் றன்னுந் தூக்கி
இருங்கடறு வளைஇய குன்றத் தன்னதோர்
பெருங்களிறு நல்கி யோனே [4]யன்னதோர்
தேற்றா வீகையு [5]முளதுகொல்
[6]போற்றா ரம்ம பெரியோர்தங் கடனே.

திணை - அது; துறை - பரிசில்விடை.

அவனை [7]ஔவையார் பாடியது. (கசO)

(கசக) பாணன் சூடிய பசும்பொற் றாமரை
மாணிழை விறலி மாலையொடு விளங்கக்
கடும்பரி நெடுந்தேர் பூட்டுவிட் டசைஇ
ஊரீர் போலச் சுரத்திடை யிருந்தனிர்
யாரீ ரோவென வினவ லானாக்

பி - ம். [1]படப்பை கொய்த. [2]கையுறை யாக. [3]பிறர்.
[4]இன்னதேற்றா. [5]உண்டுகொல்.
[6]போற்றா தம்ம. [7]அவர் பாடியது.

காரெ ரொக்கற் கடும்பசி யிரவல
[1]வென்வே லண்ணற் காணா வூங்கே
நின்னினும் புல்லியே மன்னே யினியே
இன்னே மாயினே மன்னே யென்றும்
உடாஅ போரா வாகுத லறிந்தும்
படாஅ மஞ்ஞைக் கீத்த வெங்கோ
கடாஅ யானைக் கலிமான் பேகன்
எத்துணை யாயினு மீத்த னன்றெண
மறுமை நோக்கின்றோ வன்றே
பிறர், வறுமை நோக்கின்றவன் கைவண் மையே.

திணை - அது; துறை-பாணாற்றுப்படை; புலவராற்றுப்படையுமாம்.
வையாவிக்கோப் பெரும்பேகனைப் பரணர் பாடியது. (கசக)

(கசஉ) அறுகுளத் துகுத்து மகல்வயற் பொழிந்தும்
[2]உறுமிடத் துதவா துவர்நில மூட்டியும்
வரையா மரபின் மாரி போலக்
கடாஅ யானைக் கழற்காற் பேகன்
கொடைமடம் படுத லல்லது
படைமடம் படான்பிறர் படைமயக் குறினே.

திணை - அது; துறை - இயன்மொழி.
அவனை அவர் பாடியது. (கசஉ)

(கசங) மலைவான் கொள்கென வுயர்பலி தூஉய்
மாரி யான்று மழைமேக் குயர்கெனக்
கடவுட் பேணிய குறவர் மாக்கள்
பெயல்கண் மாறிய வுவ்கையர் சாரற்
புனத்திணை யயிலு நாட சினப்போர்க்
கைவள் ளீகைக் கடுமான் பேக
யார்கொ லளிய டானே நெருநற்
சுரனுழந்து வருந்திய வொக்கல் பசித்தெனக்
குணில்பாய் முரசி னிரங்கு மருவி
நளியிருஞ் சிலம்பிற் சீறா ராங்கண்

பி - ம். [1]வெல்வேல். [2]உறுநிலத் துதவா.

வாயிற் றோன்றி வாழ்த்தி நின்று
நின்னுநின் மலையும் பாட வின்னா
திருத்த கண்ணீர் நிறுத்தல் செல்லாள்
முலையக நனைப்ப விம்மிக்
குழலினை வதுபோ லழுதனள் பெரிதே.

திணை - பெருந்திணை; துறை - குறுங்கலி; தாபதநிலையுமாம்.

அவனால் துறக்கப்பட்ட கண்ணகிகாரணமாக அவனைக் கபிலர் பாடியது. (கசங)

(கசச) அருளா [1]யாகலோ கொடிதே யிருள்வரச்
சீறியாழ் செவ்வழி பண்ணி யாழநின்
காரெதிர் கானம் பாடினே மாக
நீனறு நெய்தலிற் பொலிந்த வுண்கண்
கலுழ்ந்துவா ரரிப்பனி பூணக நனைப்ப
இனைத லானா ளாக விளையோய்
கிளையை மன்னெங் கேள்வெய் யோற்கென
யாந்தற் றொழுதனம் வினவக் காந்தள்
[2]முகைபுரை விரலிற் கண்ணீர் துடையா
யாமவன் கிளைஞரே மல்லேங் கேளினி
எம்போ லொருத்தி நலனயந் தென்றும்
வரூஉ மென்ப வயங்குபுகழ்ப் பேகன்
ஒல்லென வொலிக்குந் தேரொடு
முல்லை வேலி நல்லூ ரானே.

திணையும் துறையும் அவை.

அவனை அவள்காரணமாகப் [3]பரணர் பாடியது. (கசச)

(கசரு) மடத்தகை மாமயில் பனிக்குமென் றருளிப்
படாஅ மீத்த கெடாஅ நல்லிசைக்
கடாஅ யானைக் கலிமான் பேக
பசித்தும் வாரேம் பாரமு மிலமே
களங்கனி யன்ன கருங்கோட்டுச் சீறியாழ்

பி - ம். [1]யாதலோ கொடிதே மருள்.
[2]முகைபுணர். [3]வன்பரணர்.

நயம்புரிந் துறையுநர் நடுங்கப் பண்ணி
அறஞ்செய் தீமோ வருள்வெய் யோயென
இஃதியா மிரந்த பரிசிலஃ திருளின்
இனமணி நெடுந்தே ரேறி
இன்னா துறைவி யரும்படர் களைமே.

திணையும் துறையும் அவை.

அவனை அவள்காரணமாக அவர் பாடியது. (கசரு)

(கசசு) அன்ன வாகநின் னருங்கல வெறுக்கை
அவைபெறல் வேண்டே மடுபோர்ப் பேக
சீறியாழ் செவ்வழி பண்ணிநின் வன்புல
நன்னாடு பாட வென்னை நயந்து
பரிசி னல்குவை யாயிற் குரிசினீ
[1]நல்கா மையி னைவரச் சாஅய்
அருந்துய ருழக்குநின் றிருந்திழை யரிவை
கலிமயிற் கலாவங் கால்குவித் தன்ன
ஒலிமென் கூந்தற் கமழ்புகை கொளீஇத்
தண்கமழ் கோதை புனைய
வண்பரி நெடுந்தேர் பூண்கநின் மாவே.

திணையும் துறையும் அவை.

அவனை அவள்காரணமாக அரிசில்கிழார் பாடியது. (கசசு)

(கசஎ) [2]கன்முழை யருவிப் பன்மலை நீந்திச்
சீறியாழ் செவ்வழி பண்ணி வந்ததைக்
கார்வா னின்னுறை தமியள் கேளா
நெருந லொருசிறைப் புலம்புகொண் டுறையும்
அரிமதர் மழைக்க ணம்மா வரிவை
நெய்யொடு துறந்த மையிருங் கூந்தல்
மண்ணுறு மணியின் மாசற மண்ணிப்
புதுமலர் கஞல வின்று பெயரின்
அதுமனெம் பரிசி லாவியர் கோவே.

திணையும் துறையும் அவை.

அவள்காரணமாக அவனைப் பெருங்குன்றூர்கிழார் பாடியது. (கசஎ)

பி - ம். [1]நல்கா மையினீ வரச். [2]கன்முகை யருவி.

(கசஅ) கறங்குமிசை யருவிப் பிறங்குமலை நள்ளிநின்
அசைவி னோன்றா ணசைவள னேத்தி
நாடொறு நன்கலங் களிற்றொடு கொணர்ந்து
கூடுவிளங்கு வியனகர்ப் பரிசின்முற் றளிப்பப்
பீடின் மன்னர்ப் புகழ்ச்சி வேண்டிச்
செய்யா கூறிக் கிளத்தல்
எய்யா தாகின்றெஞ் சிறுசெந் நாவே.

திணை - பாடாண்டிணை; துறை - பரிசிற்றுறை.

[1]கண்டீரக்கோப் பெருநள்ளியை வன்பரணர் பாடியது. (கசஅ)

(கசக) நள்ளி வாழியோ நள்ளி நள்ளென்
மாலை மருதம் பண்ணிக் காலைக்
கைவழி மருங்கிற் செவ்வழி பண்ணி
வரவெமர் மறந்தன ரதுநீ
புரவுக்கடன் பூண்ட வண்மை யானே.

திணை - அது; துறை - இயன்மொழி.

அவனை அவர் பாடியது. (கசக)

(கரு0) கூதிர்ப் பருந்தி னிருஞ்சிற கன்ன
பாறிய சிதாரேன் பலவுமுதற் பொருந்தித்
தன்னு முள்ளேன் பிறிதுபுலம் படர்ந்தவென்
உயங்குபடர் வருத்தமு முலைவு நோக்கி
மான்கணந் தொலைச்சிய குருதியங் கழற்கால்
வான்கதிர்த் திருமணி விளங்குஞ் சென்னிச்
செல்வத் தோன்றலோர் வல்வில் வேட்டுவன்
தொழுதன னெழுவேற் கைகவித் திரீஇ
இழுதி னன்ன வானிணக் கொழுங்குறை
கானதர் மயங்கிய விளையர் வல்லே
தாம்வந் தெய்தா வளவை யொய்யெனத்
தான்ஞெலி தீயின் [2]விரைவனன் சுட்டுநின்
இரும்பே ரொக்கலொடு தின்மெனத் தருதலின்
அமிழ்தின் மிசைந்து காய்பசி நீங்கி

பி - ம். [1]கண்டிற்கோப் பெருநற்கிள்ளி. [2]விரைவினன்.

நன்மர னளிய நறுந்தண் சாரற்
[1]கன்மிசை யருவி தண்ணெனப் பருகி
விடுத்த றொடங்கினே னாக வல்லே
பெறுதற் கரிய வீறுசா னன்கலம்
பிறிதொன் றில்லைக் காட்டுநாட் டேமென
மார்பிற் பூண்ட வயங்குகா ழாரம்
மடைசெறி முன்கைக் கடகமோ டீத்தனன்
எந்நா டோவென நாடுஞ் சொல்லான்
யாரீ ரோவெனப் [2]பேருஞ் சொல்லான்
பிறர்பிறர் கூற வழிக்கேட் டிசினே
இரும்புபுனைந் தியற்றாப் பெரும்பெயர்த் தோட்டி
அம்மலை காக்கு மணிநெடுங் குன்றிற்
பளிங்குவகுத் தன்ன தீநீர்
நளிமலை நாட னள்ளியவ னெனவே.

திணை - அது; துறை - இயன்மொழி.

அவனை அவர் பாடியது. (கரு0)

(கருக) பண்டும் பண்டும் பாடுந ருவப்ப
விண்டோய் சிமைய விறல்வரைக் கவாஅற்
கிழவன் சேட்புலம் படரி னிழையணிந்து
புன்றலை மடப்பிடி பரிசி லாகப்
பெண்டிருந் தம்பதங் கொடுக்கும் வண்புகழ்க்
கண்டீ ரக்கோ னாகலி னன்றும்
முயங்க லான்றிசின் யானே பொலந்தேர்
நன்னன் மருக னன்றியு நீயும்
முயங்கற் கொத்தனை மன்னே வயங்குமொழிப்
பாடுநர்க் கடைத்த கதவி னாடுமழை
அணங்குசா லடுக்கம் பொழியு நும்
மணங்கமழ் மால்வரை வரைந்தன ரெமரே.

திணையும் துறையும் அவை.

இளங்கண்டீரக்கோவும் [3]இளவிச்சிக்கோவும் ஒருங்கிருந்தவழிச் சென்ற பெருந்தலைச்சாத்தனார் இளங்கண்டீரக்கோவைப் புல்லி இளவிச்சிக்கோவைப் புல்லாராக, என்னை என்செயப் புல்லீராயினீரென அவர் பாடியது. (கருக)

பி - ம். [1]கண்முகை யருவி. [2]பெயரும். [3]இளவச்சிரக்கோ

(கருஉ) வேழம் வீழ்த்த விழுத்தொடைப் பகழி
பேழ்வா யுழுவையைப் பெரும்பிறி துறீஇப்
புழற்றலைப் புகர்க்கலை யுருட்டி யுரற்றலைக்
கேழற் பன்றி வீழ வயல
தாழற் புற்றத் துடும்பிற் செற்றும்
வல்வில் வேட்டம் வலம்படுத் திருந்தோன்
புகழ்சால் சிறப்பி னம்புமிகத் திளைக்கும்
கொலைவன் யார்கொலோ கொலைவன் மற்றிவன்
விலைவன் போலான் வெறுக்கைநன் குடையன்
ஆரந் தாழ்ந்த வம்பகட்டு மார்பிற்
சார லருவிப் பயமலைக் கிழவன்
ஓரி கொல்லோ வல்லன் கொல்லோ
பாடுவல் விறலியோர் வண்ண நீரும்
மண்முழா வமைமின் பண்யாழ் நிறுமின்
கண்விடு தூம்பிற் களிற்றுயிர் தொடுமின்
எல்லரி தொடுமி னாகுளி தொடுமின்
பதலை யொருகண் பையென வியக்குமின்
மதலை மாக்கோல் கைவலந் தமினென்
றிறைவ னாகலிற் சொல்லுபு குறுகி
மூவேழ் துறையு முறையுளிக் கழிப்பிக்
கோவெனப் பெயரிய காலை யாங்கது
தன்பெய ராகலி னாணி மற்றியாம்
நாட்டிட னாட்டிடன் வருது மீங்கோர்
வேட்டுவ ரில்லை நின்னொப் போரென
வேட்டது மொழியவும் விடாஅன் வேட்டத்திற்
றானுயிர் செகுத்த மானிணப் புழுக்கோ
டானுருக் கன்ன வேரியை நல்கித்
தன்மலைப் பிறந்த தாவி னன்பொன்
பன்மணிக் குவையொடும் விரைஇக் கொண்மெனச்
சுரத்திடை நல்கி யோனே விடர்ச்சிமை
ஓங்கிருங் கொல்லிப் பொருநன்
ஓம்பா வீகை விறல்வெய் யோனே.

திணை - அது; துறை - பரிசில்விடை.

வல்வில்லோரியை வன்பரணர் பாடியது. (கருஉ)

(கருங) மழையணி குன்றத்துக் கிழவ னாளும்
இழையணி யானை யிரப்போர்க் கீயும்
சுடர்விடு பசும்பூட் சூர்ப்பமை முன்கை
அடுபோ ரானா வாத னோரி
மாரி வண்கொடை காணிய நன்றும்
சென்றது மன்னெங் கண்ணுளங் கடும்பே
பனிநீர்ப் பூவா மணிமிடை குவளை
வானார்த் தொடுத்த கண்ணியுங் கலனும்
யானை யினத்தொடு பெற்றனர் நீங்கிப்
பசியா ராகன் மாறுகொல் விசிபிணிக்
கூடுகொ ளின்னியங் கறங்க
ஆடலு மொல்லார்தம் பாடலு மறந்தே.

திணை - அது; துறை - இயன்மொழி.
அவனை அவர் பாடியது. (கருங)

(கருச) திரைபொரு முந்நீர்க் கரைநணிச் செலினும்
அறியுநர்க் காணின் வேட்கை நீக்கும்
சின்னீர் வினவுவர் மாந்த ரதுபோல்
அரச ருழைய ராகவும் புரைதபு
வள்ளியோர்ப் படர்குவர் புலவ ரதனால்
யானும், பெற்ற தூதியம் பேறியா தென்னேன்
உற்றனெ னாதலி னுள்ளிவந் தனனே
ஈயென விரத்தலோ வரிதே நீயது
நல்கினு நல்கா யாயினும் வெல்போர்
எறிபடைக் கோடா வாண்மை யறுவைத்
தூவிரி கடுப்பத் துவன்றி மீமிசைத்
தண்பல விழிதரு மருவிநின்
கொண்பெருங் கானம் பாடலெனக் கெளிதே.

திணை - அது; துறை - பரிசிற்றுறை.
கொண்கானங்கிழானை மோசிகீரனர் பாடியது. (கருச)

(கருரு) வணர்கோட்டுச் சீறியாழ் வாடுபுடைத் தழீஇ
உணர்வோர் யாரென் னிடும்பை தீர்க்கெனக்
கிளக்கும் பாண கேளினி நயத்திற்

பாழூர் நெருஞ்சிப் பசலை வான்பூ
ஏர்தரு சுடரி னெதிர்கொண் டாஅங்
கிலம்படு புலவர் மண்டை விளங்குபுகழ்க்
கொண்பெருங் கானத்துக் கிழவன்
தண்டா ரகல நோக்கின மலர்ந்தே.

திணை - அது; துறை - பாணாற்றுப்படை.

அவனை அவர் பாடியது. (௧௫௫)

(௧௫௬) ஒன்றுநன் குடைய பிறர்குன்ற மென்றும்
இரண்டுநன் குடைத்தே கொண்பெருங் கானம்
நச்சிச் சென்ற விரவலர்ச் சுட்டித்
தொடுத்துணக் கிடப்பினுங் கிடக்கு மஃதான்று
நிறையருந் தானை வேந்தரைத்
திறைகொண்டு பெயர்க்குஞ் செம்மலு முடைத்தே.

திணை - அது; துறை - இயன்மொழி.

அவனை அவர் பாடியது. (௧௫௬)

(௧௫௭) தமர்தற் றப்பி னதுநோன் றலும்
பிறர்கை யறவு தானா ணுதலும்
படைப்பழி தாரா மைந்தினா குதலும்
வேந்துடை யவையத் தோங்குபு நடத்தலும்
நும்மோர்க்குத் தகுவன வல்ல வெம்மோன்
சிலைசெல மலர்ந்த மார்பிற் கொலைவேற்
கோடற் கண்ணிக் குறவர் பெருமகன்
ஆடுமழை தவிர்க்கும் பயங்கெழு மீமிசை
எற்படு பொழுதி னினந்தலை மயங்கிக்
கட்சி காணாக் கடமா னல்லேறு
மடமா னாகுபிணை [1]பயிரின் விடர்முழை
இரும்புலிப் புகர்ப்போத் தோர்க்கும்
பெருங்க னாடனெம் மேறைக்குத் தகுமே.

திணையும் துறையும் அவை.

ஏறைக்கோனைக் குறமகள் இளவெயினி பாடியது. (௧௫௭)

பி - ம். [1]பயிரழைப்பின், பயிர்ப்பழைப்பின், பயிர்பழைப்பின்.

(௧௫௮) முரசுகடிப் பிகுப்பவும் வால்வளை துவைப்பவும்
அரசுடன் பொருத வண்ண னெடுவரைக்
கறங்குவெள் ளருவி கல்லலைத் தொழுகும்
பறம்பிற் கோமான் பாரியும் பிறங்குமிசைக்
கொல்லி யாண்ட வல்வி லோரியும்
காரி யூர்ந்து பேரமர்க் கடந்த
மாரி யீகை மறப்போர் மலையனும்
ஊரா தேந்திய குதிரைக் கூர்வேற்
கூவிளங் கண்ணிக் கொடும்பூ ணெழினியும்
ஈர்ந்தண் சிலம்பி னிருடூங்கு நளிமுழை
அருந்திறற் கடவுள் காக்கு முயர்சிமைப்
பெருங்க னாடன் பேகனுந் திருந்துமொழி
மோசி பாடிய வாயு மார்வமுற்
றுள்ளி வருந ருலைவுநனி தீரத்
தள்ளா தீயுந் தகைசால் வண்மைக்
கொள்ளா ரோட்டிய நள்ளியு மெனவாங்
கெழுவர் மாய்ந்த பின்றை யழிவரப்
பாடி வருநரும் பிறருங் கூடி
இரந்தோ ரற்றந் தீர்க்கென விரைந்திவண்
உள்ளி வந்தனென் யானே விசும்புறக்
கழைவளர் சிலம்பின் வழையொடு நீடி
ஆசினிக் கவினிய பலவி னார்வுற்று
முட்புற முதுகனி பெற்ற கடுவன்
துய்த்தலை மந்திக் கையிடூஉப் பயிரும்
அதிரா யாணர் முதிரத்துக் கிழவ
இவண்விளங்கு சிறப்பி னியறேர்க் குமண
இசைமேந் தோன்றிய வண்மையொடு
பகைமேம் படுகநீ யேந்திய வேலே.

திணை - அது ; துறை - வாழ்த்தியல் ; பரிசில்கடாநிலையுமாம்.
குமணனைப் பெருஞ்சித்திரனார் பாடியது. (௧௫௮)

(௧௫௯) வாழு நாளோ டியாண்டுபல வுண்மையிற்
றீர்தல்செல் லாதென் னுயிரெனப் பலபுலந்து
கோல்கா லாகக் குறும்பல வொதுங்கி

நூல்விரித் தன்ன கதுப்பினள் கண்டுயின்று
முன்றிற் போகா முதிர்வினள் யாயும்
பசந்த மேனியொடு படரட வருந்தி
மருங்கிற் கொண்ட பல்குறு மாக்கள்
பிசைந்துதின வாடிய முலையள் பெரிதழிந்து
குப்பைக் கீரை கொய்கண் ணகைத்த
முற்றா விளந்தளிர் கொய்துகொண் டுப்பின்று
நீருலை யாக வேற்றி மோரின்
றவிழ்ப்பத மறந்து பாசடகு மிசைந்து
மாசொடு குறைந்த வுடுக்கைய ளறம்பழியாத்
துவ்வா ளாகிய வென்வெய் யோளும்
என்றாங், கிருவர் நெஞ்சமு முவப்பக் கானவர்
கரிபுன மயக்கிய வகன்கட் கொல்லை
ஐவனம் வித்தி மையுறக் கவினி
ஈனல் செல்லா வேனிற் கிழுமெனக்
கருவி வானந் தலைஇ யாங்கும்
ஈத்த நின்புக ழேத்தித் தொக்கவென்
பசிதினத் திரங்கிய வொக்கலு முவப்ப
உயர்ந்தேந்து மருப்பிற் கொல்களிறு பெறினும்
தவிர்ந்துவிடு பரிசில் கொள்ளலெ னுவந்துநீ
இன்புற விடுதி யாயிற் சிறிது
குன்றியுங் கொள்வல் கூர்வேற் குமண
அதற்பட வருளல் வேண்டுவல் விறற்புகழ்
வசையில் விழுத்திணைப் பிறந்த
இசைமேந் தோன்றனிற் பாடிய யானே.

திணை - அது ; துறை - பரிசில்கடாநிலை.

அவனை அவர் பாடியது. (கசுக)

(கசுo) உருகெழு ஞாயிற் றொண்கதிர் மிசைந்த
முளிபுற் கானங் குழைப்பக் கல்லென
அதிர்குர லேறொடு துளிசொரிந் தாங்குப்
பசிதினத் திரங்கிய கசிவுடை யாக்கை
அவிழ்புகு வறியா தாகலின் வாடிய
நெறிகொள் வரிக்குடர் சுளிப்பத் தண்ணெனக்

குய்கொள் கொழுந்துவை நெய்யுடை யடிசில்
மதிசேர் நாண்மீன் போல நவின்ற
சிறுபொ னன்கலஞ் சுற்ற விரீஇக்
கேடின் றாக பாடுநர் கடும்பென
அரிதுபெறு பொலங்கல மெளிதினின் வீசி
நட்டோர் நட்ட நல்லிசைக் குமணன்
மட்டார் மறுகின் முதிரத் தோனே
செல்குவை யாயி னல்குவன் பெரிதெனப்
பல்புகழ் நுவலுநர் கூற வல்விரைந்
துள்ளந் துரப்ப வந்தனெ னெள்ளுற்
றில்லுணாத் துறத்தலி னின்மறந் துறையும்
புல்லுளைக் குடுமிப் புதல்வன் பன்மாண்
பாலில் வறுமுலை சுவைத்தனன் பெறாஅன்
கூழுஞ் சோறுங் கடைஇ யூழின்
உள்ளில் வறுங்கலந் திறந்தழக் கண்டு
மறப்புலி யுரைத்து மதியங் காட்டியும்
நொந்தன ளாகி நுந்தையை யுள்ளிப்
பொடிந்தநின் செவ்வி காட்டெனப் பலவும்
வினவ லானா ளாகி நனவின்
அல்ல லுழப்போண் மல்லல் சிறப்பச்
செல்லாச் செல்வ மிகுத்தனை வல்லே
[1]விடுதல் வேண்டுவ லத்தை படுதிரை
நீர்சூழ் நிலவரை யுயரநின்
சீர்கெழு விழுப்புக ழேத்துகம் பலவே.

திணையும் துறையும் அவை.

அவனை அவர் பாடியது. (கசுO)

(கசுக) நீண்டொலி யழுவங் குறைபட முகந்துகொண்
டீண்டுசெலற் கொண்மூ வேண்டுவயிற் குழீஇப்
பெருமலை யன்ன தோன்றல சூன்முதிர்
புருமுரறு கருவியொடு பெயல்கட னிறுத்து
வளமழை மாறிய வென்றாழ்க் காலை

பி - ம். [1]விடுத்தல்.

மன்பதை யெல்லாஞ் சென்றுணக் கங்கைக்
கரைபொரு மலிநீர் நிறைந்து தோன்றியாங்
கெமக்கும் பிறர்க்குஞ் செம்மலை யாகலின்
அன்பி லாடவர் கொன்றாறு கவரச்
சென்றுதலை வருந வல்ல வன்பின்று
வன்கலை தெவிட்டு மருஞ்சுர மிறந்தோர்க்
கிற்றை நாளொடும் யாண்டுதலைப் பெயரவெனக்
கண்பொறி [1]போகிய கசிவொ டுரனழிந்
தருந்துய ருழக்குமென் பெருந்துன் புறுவினின்
தாள்படு செல்வங் காண்டொறு மருளப்
பணைமரு டடக்கையொடு முத்துப்பட முற்றிய
உயர்மருப் பேந்திய வரைமரு ணோன்பக
டொளிதிக ழோடை பொலிய மருங்கிற்
படுமணி யிரட்ட வேறிச் செம்மாந்து
செலனசைஇ யுற்றனென் விறன்மிகு குருசில்
இன்மை துரப்ப விசைதர வந்துநின்
வண்மையிற் றொடுத்தவென் னயந்தனை கேண்மதி
வல்லினும் வல்லே னாயினும் வல்லே
என்னளந் தறிந்தனை நோக்காது சிறந்த
நின்னளந் தறிமதி பெரும வென்றும்
வேந்தர் நாணப் பெயர்வேன் [2]சாந்தருந்திப்
பல்பொறிக் கொண்ட வேந்தெழி லகலம்
மாணிழை மகளிர் புல்லுதொறும் புகல
நாண்முர சிரங்கு மிடனுடை வரைப்பினின்
தாணிழல் வாழ்நர் நன்கல மிகுப்ப
வாளமருழந்தநின் றானையும்
சீர்மிகு செல்வமு மேத்துகம் பலவே.

திணை - அது ; துறை - பரிசிற்றுறை.
அவனை அவர் பாடிப் பகடுபெற்றது. (கசுக)

(கசுஉ) இரவலர் புரவலை நீயு மல்லை
புரவல ரிரவலர்க் கில்லையு மல்லர்

பி - ம். [1]மாறிய. [2]சாத்தருந்து.

இரவல ருண்மையுங் காணினி யிரவலர்க்
கீவோ ருண்மையுங் காணினி நின்னூர்க்
கடிமரம் வருந்தத் தந்தியாம் பிணித்த
நெடுநல் யானையெம் பரிசில்
கடுமான் றோன்றல் செல்வல் யானே.

திணை - அது; துறை - பரிசில்விடை.

அவர் வெளிமானுழைச் சென்றார்க்கு வெளிமான் றுஞ்சுவான் தம்பியைப் பரிசில்கொடுவென அவன் சிறிதுகொடுப்பக் கொள்ளாது போய்க் குமணனைப் பாடிக் குமணன் பகடுகொடுப்பக் கொணர்ந்துநின்று வெளிமானூர்க் கடிமரத்து யாத்துச்சென்று அவர் சொல்லியது. (கசுஉ)

(கசுங) நின்னயந் துறைநர்க்கு நீநயந் துறைநர்க்கும்
[1]பன்மாண் கற்பினின் கிளைமுத லோர்க்கும்
கடும்பின் கடும்பசி தீர யாழநின்
நெடுங்குறி யெதிர்ப்பை நல்கி யோர்க்கும்
இன்னோர்க் கென்னா தென்னொடுஞ் சூழாது
வல்லாங்கு வாழ்து மென்னாது நீயும்
எல்லோர்க்குங் கொடுமதி மனைகிழ வோயே
பழந்தூங்கு முதிரத்துக் கிழவன்
திருந்துவேற் குமண னல்கிய வளனே.

திணை - அது; துறை - பரிசில்.

பெருஞ்சித்திரனார் குமணனைப் பாடிப் பரிசில்கொணர்ந்து மனையோட்குச் சொல்லியது. (கசுங)

(கசுச) ஆடுநனி மறந்த கோடுய ரடுப்பின்
ஆம்பி பூப்பத் தேம்புபசி யுழவாப்
பாஅ லின்மையிற் றோலொடு திரங்கி
இல்லி தூர்ந்த பொல்லா வறுமுலை
சுவைத்தொ றழூஉந்தன் மகத்துமுக நோக்கி
நீரொடு நிறைந்த வீரிதழ் மழைக்கணென்
மனையோ ளெவ்வ நோக்கி நினைஇ
நிற்படர்ந் திசினே நற்போர்க் குமண
என்னிலை யறிந்தனை யாயி னிந்நிலைத்

பி - ம். [1]மன்மாண்.

[1]தொடுத்துங் கொள்ளா தமையலெ னடுக்கிய
பண்ணமை நரம்பின் பச்சை நல்யாழ்
[2]மண்ணமை முழவின் வயிரியர்
இன்மை தீர்க்குங் குடிப்பிறந் தோயே.

திணை - அது; துறை - பரிசில்கடாநிலை.

தம்பியால் நாடுகோள்ளப்பட்டுக் காடுபற்றியிருந்த குமணனைப் பெருந்தலைச்சாத்தனர் பாடியது. (கசுச)

(கசுரு) மன்னு வுலகத்து மன்னுதல் குறித்தோர்
தம்புகழ் நிறீஇத் தாமாய்ந் தனரே
துன்னருஞ் சிறப்பி னுயர்ந்த செல்வர்
இன்மையி னிரப்போர்க் கீஇ யாமையிற்
றொன்மை மாக்களிற் றொடர்பறி யலரே
தாடாழ் படுமணி யிரட்டும் பூநுதல்
ஆடியல் யானை பாடுநர்க் கருகாக்
கேடி னல்லிசை வயமான் றோன்றலைப்
பாடி நின்றனெ னாகக் கொன்னே
பாடுபெறு பரிசிலன் வாடினன் பெயர்தலென்
நாடிழந் ததனினு நனியின் னாதென
வாடந் தனனே தலையெனக் கீயத்
தன்னிற் சிறந்தது பிறிதொன் றின்மையின்
ஆடுமலி யுவகையொடு வருவல்
ஓடாப் பூட்கைநின் கிழமையோற் கண்டே.

திணை - அது; துறை - பரிசில்விடை.

தம்பியால் நாடுகோள்ளப்பட்டுக் காடுபற்றியிருந்த குமணனைக் கண்டு அவன் தன்வாள்கோடுப்பக் கோண்டுவந்து இளங்குமணற்குக் காட்டிப் பெருந்தலைச்சாத்தனர் பாடியது. (கசுரு)

(கசுசு) நன்றாய்ந்த நீணிமிர்சடை
முதுமுதல்வன் வாய்போகா
தொன்றுபுரிந்த வீரிரண்டின்
ஆறுணர்ந்த வொருமுதுநூல்
இகல்கண்டோர் மிகல்சாய்மார்

பி - ம். [1]தடுத்தும். [2]மண்ணர்.

மெய்யன்ன பொய்யுணர்ந்து
பொய்யோராது மெய்கொளீஇ
மூவேழ் துறையு முட்டின்று போகிய
உரைசால் சிறப்பி னுரவோர் மருக
வினைக்குவேண்டி நீபூண்ட
புலப்புல்வாய்க் கலைப்பச்சை
சுவற்பூண்ஞாண் மிசைப்பொலிய
மறங்கடிந்த வருங்கற்பின்
அறம்புகழ்ந்த வலைசூடிச்
சிறு நுதற்பே ரகலல்குற்
சிலசொல்லிற் பலகூந்தனின்
நிலைக்கொத்தநின் றுணைத்துணைவியர்
தமக்கமைந்த தொழில்கேட்பக்
காடென்றா நாடென்றாங்
கீரேழி னிடமுட்டாது
நீர்நாண நெய்வழங்கியும்
எண்ணாணப் பலவேட்டும்
மண்ணாணப் புகழ்பரப்பியும்
அருங்கடிப் பெருங்காலை
விருந்துற்றநின் றிருந்தேந் துநிலை
என்றுங், காண்கதில் லம்ம யாமே குடாஅது
பொன்படு நெடுவரைப் புயலேறு சிலைப்பிற்
பூவிரி புதுநீர்க் காவிரி புரக்கும்
தண்புனற் படப்பை யெம்மூ ராங்கண்
உண்டுந் தின்று மூர்ந்து மாடுகம்
செல்வ லத்தை யானே செல்லாது
மழையண் ணாப்ப நீடிய நெடுவரைக்
கழைவள ரிமயம் போல
நிலீஇய ரத்தைநீ நிலமிசை யானே.

திணை - வாகை; துறை - பார்ப்பனவாகை.

சோணாட்டுப் [1]பூஞ்சாற்றூர்ப் பார்ப்பான் கௌணியன் விண்ணந்தாயனை ஆவூர் மூலங்கிழார் பாடியது. (கசுசு)

பி - ம். [1]பூஞ்சிற்றூர்.

(௧௬௭) நீயே, அமர்காணி னமர்கடந்தவர்
படைவிலக்கி யெதிர்நிற்றலின்
வாஅள் வாய்த்த வடுவாழ் யாக்கையொடு
கேள்விக் கினியை கட்கின் னாயே
அவரே, நிற்காணிற் புறங்கொடுத்தலின்
ஊறறியா மெய்யாக்கையொடு
கண்ணுக் கினியர் செவிக்கின் னாரே
அதனா, னீயுமொன் றினியை யவருமொன் றினியர்
ஒவ்வா யாவுள மற்றே வெல்போர்க்
கழல்புனை திருந்தடிக் கடுமான் கிள்ளி
நின்னை வியக்குமிவ் வுலகமஃ
தென்னோ பெரும வுரைத்திசி னெமக்கே.

திணை - அது; துறை - அரசவாகை.

ஏனாதி திருக்கிள்ளியைக் கோனாட்டு எறிச்சிலூர் மாடலன் மதுரைக் குமரனார் பாடியது. (௧௬௭)

(௧௬௮) அருவி யார்க்குங் கழைபயி னனந்தலைக்
கறிவள ரடுக்கத்து மலர்ந்த காந்தட்
கொழுங்கிழங்கு மிளிரக் கிண்டிக் கிளையொடு
கடுங்கட் கேழ லுழுத பூழி
நன்னாள் வருபத நோக்கிக் குறவர்
உழாஅது வித்திய பரூஉக்குரற் சிறுதினை
முந்துவிளை யாணர் நாட்புதி துண்மார்
மரையான் கறந்த நுரைகொ டீம்பால்
மான்றடி புழுக்கிய புலவுநாறு குழிசி
வான்கே ழிரும்புடை கழாஅ தேற்றிச்
சாந்த விறகி னுவித்த புன்கம்
[1]கூதளங் கவினிய குளவி முன்றிற்
செழுங்கோள் வாழை யகலிலைப் பகுக்கும்
ஊராக் குதிரைக் கிழவ கூர்வேல்
நறைநார்த் தொடுத்த வேங்கையங் கண்ணி
வடிநவி லம்பின் வில்லோர் பெரும

பி - ம். [1]கூதளங்.

கைவள் ளீகைக் கடுமான் கொற்ற
வையக வரைப்பிற் றமிழகங் கேட்பப்
பொய்யாச் செந்நா நெளிய வேத்திப்
பாடுப வென்ப பரிசிலர் நாளும்
ஈயா மன்னர் நாண
வீயாது பரந்தநின் வசையில்வான் புகழே.

திணை - பாடாண்டிணை; துறை - பரிசிற்றுறை; இயன்மொழியும், அரசவாகையுமாம்.

பிட்டங்கொற்றனைக் கருவூர்க் கந்தப்பிள்ளைசாத்தனார் பாடியது.

(கசுஅ)

(கசா௯) நும்படை செல்லுங் காலை யவர்படை
எடுத்தெறி தானை முன்னரை யெனாஅ
அவர்படை வரூஉங் காலை நும்படைக்
கூழைதாங்கிய வகல்யாற்றுக்
குன்றுவிலங்கு சிறையி னின்றனை யெனாஅ
அரிதாற் பெருமநின் செவ்வி யென்றும்
பெரிதா லத்தையென் கடும்பின திடும்பை
இன்னே விடுமதி பரிசில் வென்வேல்
இளம்பல் கோசர் விளங்குபடை கன்மார்
இகலின ரெறிந்த வகலிலை முருக்கின்
பெருமரக் கம்பம் போலப்
பொருநர்க் குலையாநின் வலன்வா ழியவே.

திணை - அது; துறை - பரிசில்கடாநிலை.

அவனைக் காவிரிப்பூம்பட்டினத்துக் காரிக்கண்ணனார் பாடியது.

(கசுக)

(கஎ0) மரைபிரித் துண்ட நெல்லி வேலிப்
பரலுடை முன்றி லங்குடிச் சீறூர்
எல்லடிப் படுத்த கல்லாக் காட்சி
வில்லுழு துண்மார் நாப்ப ணொல்லென
இழிபிறப் பாளன் கருங்கை சிவப்ப
வலிதுரந்து சிலைக்கும் வன்கட் கடுந்துடி
புலிதுஞ்சு நெடுவரைக் குடிஞையோ டிரட்டும்
மலைகெழு நாடன் கூர்வேற் பிட்டற்
குறுக லோம்புமின் றெவ்வி ரவனே

சிறுகண் யானை வெண்கோடு பயந்த
ஒளிதிகழ் முத்தம் விறலியர்க் கீத்து
நார்பிழிக் கொண்ட வெங்கட் டேறல்
பண்ணமை நல்யாழ்ப் பாண்கடும் பருத்தி
நசைவர்க்கு மென்மை யல்லது பகைவர்க்
கிரும்புபயன் படுக்குங் கருங்கைக் கொல்லன்
விசைத்தெறி கூடமொடு பொரூஉம்
உலைக்கல் லன்ன வல்லா ளன்னே.

திணை - வாகை; துறை - வல்லாண்முல்லை; தானைமறமுமாம்.
அவனை உறையூர் மருத்துவன் தாமோதரனார் பாடியது. (கஎ0)

(கஎக) இன்று செலினுந் தருமே சிறுவரை
நின்று செலினுந் தருமே பின்னும்
முன்னே தந்தனெ னென்னாது துன்னி
வைகலுஞ் செலினும் பொய்யல னாகி
யாம்வேண்டி யாங்கெம் வறுங்கல நிறைப்போன்
தான்வேண்டி யாங்குத் தன்னிறை யுவப்ப
அருந்தொழின் முடியரோ திருந்துவேற் கொற்றன்
இனமலி கதச்சேக் களனொடு வேண்டினும்
களமலி நெல்லின் குப்பை வேண்டினும்
அருங்கலங் களிற்றொடு வேண்டினும் பெருந்தகை
பிறர்க்கு மன்ன வறத்தகை யன்னே
அன்ன னாகலி னெந்தை யுள்ளடி
முள்ளு நோவ வுறாற்க தில்ல
ஈவோ ரரியவிவ் வுலகத்து
வாழ்வோர் வாழவவன் றாள்வா ழியவே.

திணை - பாடாண்டிணை; துறை - இயன்மொழி.
அவனைக் காவிரிப்பூம்பட்டினத்துக் காரிக்கண்ணனார் பாடியது.

(கஎஉ) ஏற்றுக வுலையே யாக்குக சோறே
கள்ளுங் குறைபட லோம்புக வொள்ளிழைப்
பாடுவல் விறலியர் கோதையும் புனைக
அன்னவை பிறவுஞ் செய்க வென்னதூஉம்
பரியல் வேண்டா வருபத நாடி

ஐவனங் காவலர் பெய்தீ நந்தின்
ஒளிதிகழ் திருந்துமணி நளியிரு ளகற்றும்
வன்புல நாடன் வயமான் பிட்டன்
ஆரமர் கடக்கும் வேலு மவனிறை
மாவள் ளீகைக் கோதையும்
மாறுகொண் மன்னரும் வாழியர் நெடிதே.

திணையும் துறையும் அவை.

அவனை வடமவண்ணக்கன் தாமோதரனார் பாடியது. (௱எ௨)

(௱எ௩) யான்வாழு நாளும் பண்ணன் வாழிய
பாணர் காண்கிவன் கடும்பின திடும்பை
யாணர்ப் பழுமரம் புள்ளிமிழ்ந் தன்ன
வூணொலி யரவந் தானுங் கேட்கும்
பொய்யா வெழிலி பெய்விட நோக்கி
முட்டை கொண்டு வற்புலஞ் சேரும்
சிறுநுண் ணெறும்பின் சில்லொழுக் கேய்ப்பச்
சோறுடைக் கையர் [1]வீறுவீ றியங்கும்
இருங்கிளைச் சிறாஅர்க் காண்டுங் கண்டும்
மற்று மற்றும் வினவுதுந் தெற்றெனப்
பசிப்பிணி மருத்துவ னில்லம்
அணித்தோ சேய்த்தோ கூறுமி னெமக்கே.

திணையும் துறையும் அவை.

சிறுகுடிகிழான் பண்ணனைச் சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் பாடியது. (௱எ௩)

(௱எ௪) அணங்குடை யவுணர் கணங்கொண் டொளித்தெனச்
சேண்விளங்கு சிறப்பின் ஞாயிறு காணா
திருள்கண் கெடுத்த பருதி ஞாலத்
திடும்பைகொள் பருவர றீரக் கடுந்திறல்
[2]அஞ்சன வுருவன் றந்து நிறுத்தாங்
கரசிழந் திருந்த வல்லற் காலை
முரசெழுந் திரங்கு முற்றமொடு கரைபொரு
திரங்குபுன னெரிதரு மிகுபெருங் காவிரி

பி - ம். [1]வீற்று வீற்று. [2]அஞ்சன வண்ணன்.

மல்ல னன்னாட் டல்ல றீரப்
பொய்யா நாவிற் கபிலன் பாடிய
மையணி நெடுவரை யாங்க ணொய்யெனச்
செருப்புகன் மறவர் செல்புறங் கண்ட
எள்ளறு சிறப்பின் முள்ளூர் மீமிசை
அருவழி யிருந்த பெருவிறல் வளவன்
மதிமருள் வெண்குடை காட்டி யக்குடை
புதுமையி னிறுத்த புகழ்மேம் படுந
விடர்ப்புலி பொறித்த கோட்டைச் சுடர்ப்பூட்
சுரும்பார் கண்ணிப் பெரும்பெயர் நும்முன்
ஈண்டுச்செய் நல்வினை யாண்டுச்சென் றுணீஇயர்
உயர்ந்தோ ருலகத்துப் பெயர்ந்தன னாகலின்
ஆறுகொன் மருங்கின் மாதிரந் துழவும்
கவலை நெஞ்சத் தவலந் தீர
நீதோன் றினையே நிரைத்தா ரண்ணல்
கல்கண் பொடியக் கானம் வெம்ப
மல்குநீர் வரைப்பிற் கயம்பல வுணங்கக்
கோடை நீடிய பைதறு காலை
இருநில நெளிய வீண்டி
உருமுரறு கருவிய மழைபொழிந் தாங்கே.

திணை - வாகை; துறை - அரசவாகை.

மலையமான் சோழியவேனாதி [1]திருக்கண்ணனை மாறோக்கத்து நப்பசலையார் பாடியது. (கஎச)

(கஎரு) எந்தை வாழி யாத னுங்கவென்
நெஞ்சந் திறப்போர் நிற்காண் குவரே
நின்னியான் மறப்பின் மறக்குங் காலை
என்னுயிர் யாக்கையிற் பிரியும் பொழுதும்
என்னியான் மறப்பின் மறக்குவென் வென்வேல்
விண்பொரு நெடுங்குடைக் [2]கொடித்தேர் மோரியர்
திண்கதிர்த் திகிரி திரிதரக் குறைத்த
உலக விடைகழி யறைவாய் நிலைஇய

பி - ம். [1]திருக்கிள்ளியை. [2]கொடித்தே ரோரியர்.

மலர்வாய் மண்டிலத் தன்ன நாளும்
பலர்புர வெதிர்ந்த வறத்துறை நின்னே.

திணை - பாடாண்டிணை ; துறை - இயன்மொழி.

ஆதனுங்கனைக் கள்ளில் ஆத்திரையனார் பாடியது. (௧௱௭௫)

(௧௱௭௬) ஓரை யாயத் தொண்டொடி மகளிர்
கேழ லுழுத விருஞ்சேறு கிளைப்பின்
யாமை யீன்ற புலவுநாறு முட்டையைத்
தேனா றாம்பற் கிழங்கொடு பெறூஉம்
இழுமென வொலிக்கும் புனலம் புதவிற்
பெருமா விலங்கைத் தலைவன் சீறியாழ்
இல்லோர் சொன்மலை நல்லியக் கோடனை
உடையை வாழியெற் புணர்ந்த பாலே
பாரி பறம்பிற் பனிச்சுனைத் தெண்ணீர்
ஓரூ ருண்மையி னிகந்தோர் போலக்
காணாது கழிந்த வைகல் காணா
வழிநாட் கிரங்குமென் னெஞ்சமவன்
கழிமென் சாயல் காண்டொறு நினைந்தே.

திணையும் துறையும் அவை.

ஓய்மான் நல்லியக்கோடனைப் புறத்திணை நன்னாகனார் பாடியது. ()

(௧௱௭௭) ஒளிறுவாண் மன்ன ரொண்சுடர் நெடுநகர்
வெளிறுகண் போகப் பன்னாட் டிரங்கிப்
பாடிப் பெற்ற பொன்னணி யானை
தமரெனின் யாவரும் புகுப வமரெனிற்
றிங்களு நுழையா வெந்திரப் படுபுழைக்
கண்மாறு நீட்ட நணிநணி யிருந்த
குறும்பல் குறும்பிற் றதும்ப வைகிப்
புளிச்சுவை வேட்ட செங்க ணாடவர்
தீம்புளிக் களாவொடு துடரி முனையின்
மட்டற னல்யாற் றெக்க ரேறிக்
கருங்கனி நாவ லிருந்துகொய் துண்ணும்
பெரும்பெய ராதி பிணங்கரிற் குடநாட்
டெயினர் தந்த வெய்ம்மா னெறிதசைப்

பைஞ்ஞிணம் பெருத்த பசுவெள் ளமலை
வருநர்க்கு வரையாது தருவனர் சொரிய
இரும்பனங் குடையின் மிசையும்
பெரும்புலர் வைகறைச் சீர்சா லாதே.

திணையும் துறையும் அவை.

மல்லிகிழான் காரியாதியை ஆவூர் மூலங்கிழார் பாடியது. (கஎஎ)

(கஎஅ) கந்துமுனிந் துயிர்க்கும் யானையொடு பணைமுனிந்து
காலியற் புரவி யாலு மாங்கண்
மணன்மலி முற்றம் புக்க சான்றோர்
உண்ணு ராயினுந் தன்னொடு சூளுற்
றுண்மென விரக்கும் பெரும்பெயர்ச் சாத்தன்
ஈண்டோ வின்சா யலனே வேண்டார்
எறிபடை மயங்கிய வெருவரு ஞாட்பிற்
கள்ளுடைக் கலத்த ருள்ளுர்க் கூறிய
நெடுமொழி மறந்த சிறுபே ராளர்
அஞ்சி நீங்குங் காலை
ஏம மாகத் தான்முந் துறுமே.

திணை - வாகை; துறை - வல்லாண்முல்லை.

[1]பாண்டியன் கீரஞ்சாத்தனை அவர் பாடியது. (கஎஅ)

(கஎகூ) ஞால மீமிசை வள்ளியோர் மாய்ந்தென
ஏலாது கவிழ்ந்தவென் னிரவன் மண்டை
மலர்ப்போர் யாரென வினவலின் மலைந்தோர்
விசிபிணி முரசமொடு மண்பல தந்த
திருவீழ் நுண்பூட் பாண்டியன் மறவன்
படைவேண்டுவழி வாளுதவியும்
வினைவேண்டுவழி யறிவுதவியும்
வேண்டுப வேண்டுப வேந்தன் றேஎத்
தசைநுகம் படாஅ வாண்டகை யுள்ளத்துத்
தோலா நல்லிசை நாலை கிழவன்

பி - ம். [1]பாண்டிக்குதிரைச்சாக்கையனை அவர் பாடியது.

பருந்துபசி தீர்க்கு நற்போர்த்
திருந்துவே ளுகற் கூறினர் பலரே.

திணையும் துறையும் அவை.

நாலைகிழவன் நாகனை [1]வடநெடுந்தத்தனார் பாடியது. (கஎகூ)

(கஅ0) நிரப்பாது கொடுக்குஞ் செல்வமு மிலனே
இல்லென மறுக்குஞ் சிறுமையு மிலனே
இறையுறு விழுமந் தாங்கி யமரகத்
திரும்புசுவைக் கொண்ட விழுப்பு ணோய்தீர்ந்து
மருந்துகொண் மரத்தின் வாள்வடு மயங்கி
வடுவின்று வடிந்த யாக்கையன் கொடையெதிர்ந்
[2]தீர்ந்தை யோனே பாண்பசிப் பகைஞன்
இன்மை தீர வேண்டி னெம்மொடு
நீயும் வம்மோ முதுவா யிரவல
யாந்தன் னிரக்குங் காலைத் தானெம்
உண்ணு [3]மருங்குல் காட்டித் தன்னூர்க்
கருங்கைக் கொல்லனை யிரக்கும்
திருந்திலை நெடுவேல் வடித்திசி னெனவே.

திணையும் துறையும் அவை; துறை - பாணாற்றுப்படையுமாம்.

[4]ஈர்ந்தூர்கிழான் தோயன்மாறனைக் கோனாட்டு எறிச்சிலூர் மாடலன் மதுரைக்குமரனார் பாடியது. (கஅ0)

(கஅக) மன்ற விளவின் மனைவீழ் வெள்ளில்
கருங்க ணெயிற்றி காதன் மகனொடு
கான விரும்பிடிக் கன்று தலைக் கொள்ளும்
பெருங்குறும் புடுத்த வன்புல விருக்கைப்
[5]புலாஅ வம்பிற் போரருங் கடிமிளை
வலாஅ ரோனே வாய்வாட் பண்ணன்
உண்ணா வறுங்கடும் புய்தல் வேண்டின்
இன்னே சென்மதி நீயே சென்றவன்

பி - ம். [1]வடமநெடுநெத்தனார், வடமநெடுந்தச்சனார்.
[2]ஈரந்தையோன், ஈந்தையோன். [3]மருங்கு.
[4]ஈரந்தூர்கிழான் கோயமான். [5]புலாஅ லம்பிற்.

பகைப்புலம் படரா வளவைநின்
பசிப்பகைப் பரிசில் காட்டினை கொளற்கே.

திணையும் துறையும் அவை.

வல்லார்கிழான் பண்ணனைச் சோணாட்டு முகையலூர்ச் சிறுகருந் தும்பியார் பாடியது. (கஅக)

(கஅஉ) உண்டா லம்மவிவ் வுலக மிந்திரர்
அமிழ்த மியைவ தாயினு மினிதெனத்
தமிய ருண்டலு மிலரே முனிவிலர்
துஞ்சலு மிலர்பிற ரஞ்சுவ தஞ்சிப்
புகழெனி னுயிருங் கொடுக்குவர் பழியெனின்
உலகுடன் பெறினுங் கொள்ளல ரயர்விலர்
அன்ன மாட்சி யனைய ராகித்
தமக்கென முயலா நோன்றாட்
பிறர்க்கென முயலுந ருண்மை யானே.

திணை - பொதுவியல்; துறை - பொருண்மொழிக்காஞ்சி.

கடலுண்மாய்ந்த இளம்பெருவழுதி பாட்டு. (கஅஉ)

(கஅந) உற்றுழி யுதவியு முறுபொருள் கொடுத்தும்
பிற்றைநிலை முனியாது கற்ற னன்றே
பிறப்போ ரன்ன வுடன்வயிற் றுள்ளும்
சிறப்பின் பாலாற் றாயுமனந் திரியும்
ஒருகுடிப் பிறந்த பல்லோ ருள்ளும்
மூத்தோன் வருக வென்னா தவருள்
அறிவுடை யோனா றரசுஞ் செல்லும்
வேற்றுமை தெரிந்த நாற்பா லுள்ளும்
கீழ்ப்பா லொருவன் கற்பின்
மேற்பா லொருவனு மவன்கட் படுமே.

திணையும் துறையும் அவை.

பாண்டியன் ஆரியப்படை [1]கடந்த நெடுஞ்செழியன் பாட்டு. (கஅந)

பி - ம். [1]தந்த.

(கஅச) காய்நெல் லறுத்துக் கவளங் கொளினே
மாநிறை வில்லதும் பன்னாட் காகும்
நூறுசெறு வாயினுந் தமித்துப்புக் குணினே
வாய்புகு வதனினுங் கால்பெரிது கெடுக்கும்
அறிவுடை வேந்த னெறியறிந்து கொளினே
கோடி யாத்து நாடுபெரிது நந்தும்
மெல்லியன் கிழவ னாகி வைகலும்
வரிசை யறியாக் கல்லென் சுற்றமொடு
பரிவுதப வெடுக்கும் பிண்ட நச்சின்
யானை புக்க புலம்போலத்
தானு முண்ணா னுலகமுங் கெடுமே.

[1]திணை - பாடாண்டிணை; துறை - செவியறிவுறூஉ.

பாண்டியன் அறிவுடைநம்பியுழைச்சென்ற பிசிராந்தையார் பாடியது. (கஅச)

(கஅரு) கால்பார் கோத்து [2]ஞாலத் தியக்கும்
காவற் சாகாடு கைப்போன் மாணின்
ஊறின் றாகி யாறினிது படுமே
உய்த்த றேற்றா னாயின் வைகலும்
பகைக்கூ ழள்ளற் பட்டு
மிகப்பஃ றீநோய் தலைத்தலைத் தருமே.

திணை - பொதுவியல்; துறை - பொருண்மொழிக்காஞ்சி.

தொண்டைமான் இளந்திரையன் பாட்டு. (கஅரு)

(கஅசா) நெல்லு முயிரன்றே நீரு முயிரன்றே
மன்ன னுயிர்த்தே மலர்தலை யுலகம்
அதனால், [3]யானுயி ரென்ப தறிகை
வேன்மிகு தானை வேந்தற்குக் கடனே.

திணையும் துறையும் அவை.

[4]மோசிகீரனார் பாடியது. (கஅசா)

பி - ம். [1]திணையும் துறையுமவை. [2]ஞாலத் தியங்கும்.
[3]யாமுயிர், [4]மாதிமாதிரத்தனார் பாட்டு.

(௧௮௭) நாடா கொன்றோ காடா கொன்றோ
அவலா கொன்றோ மிசையா கொன்றோ
எவ்வழி நல்லவ ராடவர்
அவ்வழி நல்லை வாழிய நிலனே.

திணையும் துறையும் அவை.

ஔவையார் பாடியது. (௧௮௭)

(௧௮௮) படைப்புப்பல் படைத்துப் பலரோ டுண்ணும்
உடைப்பெருஞ் செல்வ ராயினு மிடைப்படக்
குறுகுறு நடந்து சிறுகை நீட்டி
இட்டுந் தொட்டுங் கவ்வியுந் துழந்தும்
நெய்யுடை யடிசின் மெய்பட விதிர்த்தும்
மயக்குறு மக்களை யில்லோர்க்குப்
பயக்குறை யில்லைத் தாம்வாழு நாளே.

திணையும் துறையும் அவை.

பாண்டியன் அறிவுடைநம்பி பாட்டு. (௧௮௮)

(௧௮௯) தெண்கடல் வளாகம் பொதுமை யின்றி
வெண்குடை நிழற்றிய வொருமை யோர்க்கும்
நடுநாள் யாமத்தும் பகலுந் துஞ்சான்
கடுமாப் பார்க்குங் கல்லா வொருவற்கும்
[1]உண்பது நாழி யுடுப்பவை யிரண்டே
பிறவு மெல்லா மோரொக் கும்மே
செல்வத்துப் பயனே யீதல்
துய்ப்பே மெனினே தப்புந பலவே.

திணையும் துறையும் அவை.

மதுரைக் கணக்காயனார்மகனார் நக்கீரனார் பாடியது. (௧௮௯)

(௧௯௦) விளைபதச் சீறிட நோக்கி வளைகதிர்
வல்சி கொண்டளை மல்க வைக்கும்
எலிமுயன் றனைய ராகி [2]யுள்ளதம்
வளன்வலி யுறுக்கு முளமி லாளரொ

பி - ம். [1]உண்பவை நாழி யுடுப்பன. [2]யுடையதம்.

டியைந்த கேண்மை யில்லா கியரோ
கடுங்கட் கேழ லிடம்பட வீழ்ந்தென
அன்றவ ணுண்ணா தாகி வழிநாட்
பெருமலை விடரகம் புலம்ப [1]வேட்டெழுந்
திருங்களிற் றொருத்த னல்வலம் படுக்கும்
புலிபசித் தன்ன மெலிவி லுள்ளத்
துரனுடை யாளர் கேண்மையொ
டியைந்த வைக லுளவா கியரோ.

திணையும் துறையும் அவை.

[2]சோழன் நல்லுருத்திரன் பாட்டு. (கக0)

(ககக) யாண்டுபல வாக நரையில வாகுதல்
யாங்கா கியரென வினவுதி ராயின்
மாண்டவென் மனைவியொடு மக்களு நிரம்பினர்
யான்கண் டனையரென் னிளையரும் வேந்தனும்
அல்லவை செய்யான் காக்கு மதன்றலை
ஆன்றவிந் தடங்கிய கொள்கைச்
சான்றோர் பலர்யான் வாழு மூரே.

திணையும் துறையும் அவை.

கோப்பெருஞ்சோழன் வடக்கிருந்தானுழைச்சென்ற பிசிராந்தையாரை, 'கேட்குங்காலம் பலவாலோ? நரைநுமக்கில்லையாலோ?' என்ற சான்றோர்க்கு அவர் சொற்றது. (ககக)

(ககஉ) யாது மூரே யாவருங் கேளிர்
தீது நன்றும் பிறர்தர வாரா
நோதலுந் தணிதலு மவற்றோ ரன்ன
சாதலும் புதுவ தன்றே வாழ்தல்
இனிதென மகிழ்ந்தன்று மிலமே முனிவின்
இன்னா தென்றலு மிலமே மின்னொடு
வானந் தண்டுளி தலைஇ யானாது
கல்பொரு திரங்கு மல்லற் பேர்யாற்று
நீர்வழிப் படூஉம் புணைபோ லாருயிர்

பி - ம். [1]வேட்டெழுந் தாங்கிருங்களிற் றொருத்தல்.
[2]சோழனல்லுத்திரன்.

முறைவழிப் படூஉ மென்பது திறவோர்
காட்சியிற் றெளிந்தன மாகலின் மாட்சியிற்
பெரியோரை வியத்தலு மிலமே
சிறியோரை யிகழ்த லதனினு மிலமே.

திணையும் துறையும் அவை.

கணியன் பூங்குன்றன் பாட்டு. (௧௯௨)

(௧௯௩) அதளெறிந் தன்ன நெடுவெண் களரின்
[1]ஒருவ னட்டும் புல்வாய் போல
ஓடி யுய்தலுங் கூடுமன்
ஒக்கல் வாழ்க்கை தட்குமா காலே.

திணையும் துறையும் அவை.

[2]ஓரேருழவர் பாட்டு. (௧௯௩)

(௧௯௪) ஓரி னெய்தல் கறங்க வோரில்
ஈர்ந்தண் முழவின் பாணி ததும்பப்
புணர்ந்தோர் பூவணி யணியப் பிரிந்தோர்
பைத லுண்கண் பனிவார் புறைப்பப்
படைத்தோன் மன்றவப் பண்பி லாளன்
இன்னா தம்மவிவ் [3]வுலகம்
இனிய காண்கித னியல்புணர்ந் தோரே.

திணை - அது ; துறை - பெருங்காஞ்சி.

பக்குடுக்கை நன்கணியார் பாடியது. (௧௯௪)

(௧௯௫) பல்சான் றீரே பல்சான் றீரே
கயன்முள் ளன்ன நரைமுதிர் திரைகவுட்
பயனின் மூப்பிற் பல்சான் றீரே
கணிச்சிக் கூர்ம்படைக் கடுந்திற லொருவன்
பிணிக்குங் காலை யிரங்குவிர் மாதோ
[4]நல்லது செய்த லாற்றீ ராயினும்
அல்லது செய்த லோம்புமி னதுதான்

பி - ம். [1]ஒருவ னேட்டும். [2]ஒன்றுருழவர் பாட்டு.
[3]வுலகினதியற்கை, யினிய. [4]நல்லவை.

எல்லாரு முவப்ப தன்றியும்
நல்லாற்றுப் படூஉ [1]நெறியுமா ரதுவே.

திணை - அது ; துறை - பொருண்மொழிக்காஞ்சி.

நரிவெரூஉத்தலையார் பாடியது. (ககூரு)

(ககூசா) ஒல்லுவ தொல்லு மென்றலும் யாவர்க்கும்
ஒல்லா தில்லென மறுத்தலு மிரண்டும்
ஆள்வினை மருங்கிற் கேண்மைப் பாலே
ஒல்லா தொல்லு மென்றலு மொல்லுவ
தில்லென மறுத்தலு மிரண்டும் வல்லே
இரப்போர் வாட்ட லன்றியும் புரப்போர்
புகழ்குறை படூஉம் வாயி லத்தை
அனைத்தா கியரினி [2]யிதுவே யெனைத்தும்
சேய்த்துக் காணாது கண்டன மதனால்
நோயில ராகநின் புதல்வர் யானும்
வெயிலென முனியேன் பனியென மடியேன்
கல்குயின் றன்னவென் னல்கூர் வளிமறை
நாணல தில்லாக் கற்பின் வாணுதல்
மெல்லியற் குறுமக ளுள்ளிச்
செல்வ லத்தை சிறக்கநின் னாளே.

திணை - பாடாண்டிணை; துறை - பரிசில்கடாநிலை.

பாண்டியன் இலவந்திகைப்பள்ளித் துஞ்சிய நன்மாறன் பரிசில் நீட்டித்தானை ஆவூர் மூலங்கிழார் பாடியது. (ககூசா)

(ககூஎ) வளிநடந் தன்ன [3]வாச்செல லிவுளியொடு
கொடிநுடங்கு மிசைய [4]தேரின ரெனாஅக்
கடல்கண் டன்ன வொண்படைத் தானையொடு
மலைமாறு மலைக்குங் [5]களிற்றின ரெனாஅ
[6]உருமுரற் றன்ன வுட்குவரு முரசமொடு
செருமேம் படூஉம் வென்றிய ரெனாஅ
மண்கெழு தானை யொண்பூண் வேந்தர்

பி - ம். [1]நெறியுமற்றதுவே. [2]யதுவே.
[3]வாஅய்செலிவுளி. [4]தேரின மெனாஅ.
[5]களிற்றின மெனா. [6]உருமுரான் றன்ன.

வெண்குடைச் செல்வம் வியத்தலோ விலமே
எம்மால் வியக்கப் படூஉ மோரே
இடுமுட் படப்பை மறிமேய்ந் தொழிந்த
குறுநறு முஞ்ஞைக் கொழுங்கட் குற்றடகு
புன்புல வரகின் சொன்றியொடு பெறாஉம்
சீறூர் மன்ன ராயினு மெம்வயிற்
பாடறிந் தொழுகும் பண்பி னோரே
மிகப்பே ரெவ்வ முறினு மெனைத்தும்
உணர்ச்சி யில்லோ ருடைமை யுள்ளேம்
நல்லறி வுடையோர் நல்குர
வுள்ளுதும் பெருமயா முவந்துநனி பெரிதே.

திணையும் துறையும் அவை.

சோழன் குராப்பள்ளித் துஞ்சிய பெருந்திருமாவளவன் பரிசில் நீட்டித்தானைக் கோனாட்டு எறிச்சிலூர் மாடலன் மதுரைக்குமரனார் பாடியது. (கசுஎ)

(கசுஅ) அருவி தாழ்ந்த பெருவரை போல
ஆரமொடு பொலிந்த மார்பிற் றண்டாக்
கடவுள் சான்ற கற்பிற் சேயிழை
மடவோள் பயந்த மணிமரு ளவ்வாய்க்
கிண்கிணிப் புதல்வர் பொலிகென் றேத்தித்
திண்டே ரண்ண னிற்பா ராட்டிக்
காதல் பெருமையிற் கனவினு மரற்றுமென்
காமர் நெஞ்ச மேமாந் துவப்ப
ஆலமர் கடவு ளன்னநின் செல்வம்
வேல்கெழு குருசில் கண்டே னாதலின்
விடுத்தனென் வாழ்கநின் கண்ணி தொடுத்த
தண்டமிழ் வரைப்பகங் கொண்டி யாகப்
பணித்துக்கூட் டுண்ணுந் தணிப்பருங் கடுந்திறல்
நின்னோ ரன்னநின் புதல்வ ரென்றும்
ஒன்னார் வாட வருங்கலந் தந்துநும்
பொன்னுடை நெடுநகர் நிறைய வைத்தநின்
முன்னோர் போல்கிவர் பெருங்கண் ணோட்டம
யாண்டு நாளும் பெருகி யீண்டுதிரைப்
பெருங்கட னீரினு மக்கடன் மணலினும்

நீண்டுயர் வானத் துறையினு நன்றும்
இவர்பெறும் புதல்வர்க் காண்டொறு நீயும்
புகன்ற செல்வமொடு புகழினிது விளங்கி
நீடு வாழிய நெடுந்தகை யானும்
கேளில் சேஎய் நாட்டினெந் நாளும்
துளிநசைப் புள்ளினின் னளிநசைக் கிரங்கிநின்
அடிநிழற் பழகிய வடியுறை
கடுமான் மாற மறவா தீமே.

திணையும் துறையும் அவை.

பாண்டியன் இலவந்திகைப்பள்ளித் துஞ்சிய நன்மாறனை வடம வண்ணக்கன் [1]பேரிசாத்தனார் பாடியது.

(ககூகூ) கடவு ளாலத்துத் தடவுச்சினைப் பல்பழம்
நெருந லுண்டன மென்னாது பின்னும்
செலவா ஞவே கலிகொள் புள்ளினம்
அனையர் வாழியோ விரவல ரவரைப்
புரவெதிர் கொள்ளும் பெருஞ்செய் யாடவர்
உடைமை யாகுமவ [2]ருடைமை
அவர், இன்மை யாகு மவரின் மையே.

திணையும் துறையும் அவை.

பெரும்பதுமனார் பாட்டு. (ககூகூ)

(உ00) பனிவரை நிவந்த பாசிலைப் பலவின்
கனிகவர்ந் துண்ட கருவிரற் கடுவன்
செம்முக மந்தியொடு சிறந்துசேண் விளங்கி
மழைமிசை யறியா மால்வரை யடுக்கத்துக்
கழைமிசைத் துஞ்சுங் கல்லக வெற்ப
நிணந்தின்று செருக்கிய நெருப்புத்தலை நெடுவேற்
களங்கொண்டு கனலுங் கடுங்கண் யானை
விளங்குமணிக் கொடும்பூண் விச்சிக் கோவே
இவரே, பூத்தலை யறாஅப் புனைகொடி முல்லை
நாத்தழும் பிருப்பப் பாடா தாயினும்

பி - ம். [1]பெரியசாத்தன். [2]உடைமை யின்மை.

கறங்குமணி நெடுந்தேர் கொள்கெனக் கொடுத்த
பரந்தோங்கு சிறப்பிற் பாரி மகளிர்
யானே, பரிசிலன் மன்னு மந்தண னீயே
வரிசையில் வணக்கும் வாண்மேம் படுநன்
நினக்கியான் கொடுப்பக் கொண்மதி சினப்போர்
அடங்கா மன்னரை யடக்கும்
மடங்கா விளையு ணாடுகிழ வோயே.

திணை - அது; துறை - பரிசிற்றுறை.

பாரிமகளிரை விச்சிக்கோனுழைக் கொண்டுசென்ற கபிலர் பாடியது. (உ00)

(உ0க) இவரியா ரென்குவை யாயி னிவரே
ஊருட னிரவலர்க் கருளித் தேருடன்
முல்லைக் கீத்த செல்லா நல்லிசைப்
படுமணி யானைப் பறம்பிற் கோமான்
நெடுமாப் பாரி மகளிர் யானே
தந்தை தோழ னிவரென் மகளிர்
அந்தணன் புலவன் கொண்டுவந் தனனே
நீயே, வடபான் முனிவன் றடவினுட் டோன்றிச்
செம்புபுனைந் தியற்றிய சேணெடும் புரிசை
உவரா வீகைத் துவரை யாண்டு
நாற்பத் தொன்பது வழிமுறை வந்த
வேளிருள் வேளே விறற்போ ரண்ணல்
தாரணி யானைச் சேட்டிருங் கோவே
ஆண்கட னுடைமையிற் பாண்கட னாற்றிய
ஒலியற் கண்ணிப் புலிகடி மாஅல்
யான்றர விவரைக் கொண்மதி வான்கவித்
திருங்கட லுடுத்தவிவ் வையகத் தருந்திறற்
பொன்படு மால்வரைக் கிழவ வென்வேல்
உடலுந ருட்குந் தானைக்
கெடலருங் குரைய நாடுகிழ வோயே.

திணையும் துறையும் அவை.

பாரிமகளிரை இருங்கோவேளுழைக் கொண்டுசென்ற கபிலர் பாடியது. (உ0க)

(உ0உ) வெட்சிக் கானத்து வேட்டுவ ராட்டக்
கட்சி காணுக் கடமா நல்லேறு
கடறுமணி கிளரச் சிதறுபொன் மிளிரக்
கடிய கதழு நெடுவரைப் படப்பை
வென்றி நிலைஇய விழுப்புக ழொன்றி
இருபாற் பெயரிய வுருகெழு மூதூர்க்
கோடிபல வடுக்கிய பொருணுமக் குதவிய
நீடுநிலை யரையத்துக் கேடுங் கேளினி
நுந்தை தாய நிறைவுற வெய்திய
ஒலியற் கண்ணிப் புலிகடி மாஅல்
நும்போ லறிவி னுமரு ளொருவன்
புகழ்ந்த செய்யுட் கழாஅத் தலையை
இகழ்ந்ததன் பயனே யியறே ரண்ணல்
எவ்வி தொல்குடிப் படீஇயர் மற்றிவர்
கைவண் பாரி மகளி ரென்றவென்
தேற்றாப் புன்சொ னோற்றிசிற் பெரும
விடுத்தனென் வெலீஇயர்நின் வேலே யடுக்கத்
தரும்பற மலர்ந்த கருங்கால் வேங்கை
மாத்தகட் டொள்வீ தாய துறுகல்
இரும்புலி வரிப்புறங் கடுக்கும்
பெருங்கல் வைப்பி னாடுகிழ வோயே.

திணையும் துறையும் அவை.

இருங்கோவேள் பாரிமகளிரைக் கொள்ளானாகக் கபிலர் பாடியது. (உ0உ)

(உ0௩) கழிந்தது பொழிந்தென வான்கண் மாறினும்
தொல்லது [1]விளைந்தென நிலம்வளங் கரப்பினும்
எல்லா வுயிர்க்கு [2]மில்லால் வாழ்க்கை
இன்னுந் தம்மென வெம்மனோ ரிரப்பின்
முன்னுங் கொண்டிரென நும்மனோர் மறுத்தல்
இன்னா தம்ம வியறே ரண்ணல்
இல்லது [3]நிரப்ப லாற்றா தோரினும்

பி - ம். [1]விளைந்ததுநிலம். [2]மில்வாழ்க்கையேயின்னுங்.
[3]நிரப்ப தாற்றாது.

உள்ளி வருநர் நசையிழப் போரே
அனையையு மல்லை நீயே யொன்னார்
ஆரெயி லவர்கட் டாகவு நும்மெனப்
பாண்கட னிறுக்கும் வள்ளியோய்
பூண்கட னெந்தைநீ யிரவலர் புரவே.

திணையும் துறையும் அவை.

சேரமான் பாழனூரெறிந்த நெய்தலங்கானல் இளஞ்சேட்சென்னியை ஊன்பொதி பசுங்குடையார் பாடியது. (உ௦௩)

(உ௦௪) ஈயென விரத்த லிழிந்தன் றதனெதிர்
ஈயே னென்ற லதனினு மிழிந்தன்று
கொள்ளெனக் கொடுத்த லுயர்ந்தன் றதனெதிர்
கொள்ளே னென்ற [1]லதனினு முயர்ந்தன்று
தெண்ணீர்ப் பரப்பி னிமிழ்திரைப் பெருங்கடல்
உண்ணா [2]ராகுப நீர்வேட் டோரே
ஆவு மாவுஞ் சென்றுணக் கலங்கிச்
[3]சேறொடு பட்ட சிறுமைத் தாயினும்
உண்ணீர் மருங்கி னதர்பல வாகும்
புள்ளும் பொழுதும் பழித்த லல்லதை
உள்ளிச் சென்றோர்ப் பழியல ரதனாற்
புலவேன் வாழிய ரோரி விசும்பிற்
கருவி வானம் போல
வரையாது சுரக்கும் வள்ளியோய் நின்னே.

திணையும் துறையும் அவை.

வல்வில் ஓரியைக் கழைதின்யானையார் பாடியது. (உ௦௪)

(உ௦௫) முற்றிய திருவின் மூவ ராயினும்
பெட்பின் றீதல் யாம்வேண் டலமே
விறற்சினந் தணிந்த விரைபரிப் புரவி
உறுவர் செல்சார் வாகிச் செறுவர்
தாருளந் தபுத்த வாண்மிகு தானை
வெள்வீ வேலிக் கோடைப் பொருந

பி - ம். [1]லதனினுயர்ந்தன்று. [2]ராகுவர். [3]சேற்றொடு.

சிறியவும் பெரியவும் புழைகெட விலங்கிய
மான்கணந் தொலைச்சிய கடுவிசைக் கதநாய்
நோன்சிலை வேட்டுவ நோயிலை யாகுக
ஆர்கலி யாணர்த் தரீஇய கால்வீழ்த்துக்
கடல்வயிற் குழீஇய வண்ணலங் கொண்மூ
நீரின்று பெயரா வாங்குத் தேரொ
டொளிறுமருப் பேந்திய செம்மற்
களிறின்று பெயரல பரிசிலர் கடும்பே.

திணையும் துறையும் அவை.

கடியநெடுவேட்டுவன் பரிசில் நீட்டித்தானைப் பெருந்தலைச்சாத்தனூர் பாடியது. (உ0ரு)

(உ0சு) வாயி லோயே வாயி லோயே
வள்ளியோர் செவிமுதல் வயங்குமொழி வித்தித்தாம்
[1]உள்ளியது முடிக்கு [2]முரனுடை யுள்ளத்து
வரிசைக்கு வருந்துமிப் பரிசில் வாழ்க்கைப்
பரிசிலர்க் கடையா வாயி லோயே
கடுமான் றோன்ற னெடுமா னஞ்சி
தன்னறி யலன்கொ லென்னறி யலன்கொல்
அறிவும் புகழு முடையோர் மாய்ந்தென
வறுந்தலை யுலகமு மன்றே யதனாற்
காவினெங் கலனே சுருக்கினெங் கலப்பை
[3]மரங்கொஃ றச்சன் கைவல் சிறாஅர்
மழுவுடைக் காட்டகத் தற்றே
எத்திசைச் செலினு மத்திசைச் சோறே.

திணையும் துறையும் அவை.

அதியமான்நெடுமானஞ்சி பரிசில் நீட்டித்தானை ஔவையார் பாடியது. (உ0சு)

(உ0எ) எழுவினி நெஞ்சஞ் செல்கம் யாரோ
பருகு வன்ன வேட்கை யில்வழி
அருகிற் கண்டு மறியார் போல

பி - ம். [1]முன்னியது. [2]முரணுடை. [3]மரங்கொ றச்சர்.

[1]அகனக வாரா முகனழி பரிசில்
தாளி லாளர் வேளா ரல்லர்
வருகென வேண்டும் வரிசை யோர்க்கே
பெரிதே யுலகம் பேணுநர் பலரே
மீளி முன்பி னாளி போல
உள்ள முள்ளவிந் தடங்காது வெள்ளென
நோவா தோன்வயிற் றிரங்கி
வாயா வன்கனிக் குலமரு வோரே.

திணையும் துறையும் அவை.

வெளிமான் துஞ்சியபின் அவன் தம்பி இளவெளிமானைப் பரிசில் கொடுவென அவன் சிறிது கொடுப்பக் கொள்ளாது பெருஞ்சித்திரனார் பாடியது. (௨௦௭)

(௨௦௮) குன்று மலையும் பலபின் னொழிய
வந்தனென் பரிசில் கொண்டனென் செலற்கென
நின்ற வென்னயந் தருளி யீதுகொண்
டீங்கனஞ் செல்க தானென வென்னை
யாங்கறிந் தனனோ தாங்கருங் காவலன்
காணா தீத்த விப்பொருட் கியானோர்
வாணிகப் பரிசில னல்லேன் பேணித்
தினையனைத் தாயினு மினிதவர்
துணையள வறிந்து நல்கினர் விடினே.

திணையும் துறையும் அவை.

அதியமான்நெடுமானஞ்சியுழைச் சென்ற பெருஞ்சித்திரனாரைக் காணாது இதுகொண்டுசெல்கென்று அவன் பரிசில்கொடுப்பக் கொள்ளாது அவர் சொல்லியது. (௨௦௮)

(௨௦௯) பொய்கை நாரை போர்விற் சேக்கும்
நெய்தலங் கழனி நெல்லரி தொழுவர்
கூம்புவிடு மென்பிணி யவிழ்ந்த வாம்பல்
அகலடை யரியன் மாந்தித் தெண்கடற்
படுதிரை யின்சீர்ப் பாணி தூங்கும்

பி - ம். [1] அகனகு.

மென்புல வைப்பி னன்னாட்டுப் பொருந
பல்கனி நசைஇ யல்குவிசும் புகந்து
பெருமலை விடரகஞ் சிலம்ப முன்னிப்
பழனுடைப் பெருமரந் தீர்ந்தெனக் கையற்றுப்
பெறாது பெயரும் புள்ளினம் போலநின்
நசைதர வந்துநின் னிசைநுவல் பரிசிலேன்
வறுவியேன் பெயர்கோ வாண்மேம் படுந
ஈயா யாயினு மிரங்குவே னல்லேன்
நோயிலை யாகுமதி பெரும நம்முட்
குறுநணி காண்குவ தாக நாளும்
நறும்ப லொலிவருங் கதுப்பிற் றேமொழித்
தெரியிழை மகளிர் பாணி பார்க்கும்
பெருவரை யன்ன மார்பிற்
செருவெஞ் சேஎய்நின் மகிழிருக் கையே.

திணை - அது; துறை - பரிசில்கடாநிலை.

மூவன் பரிசில்நீட்டித்தானைப் பெருந்தலைச்சாத்தனார் பாடியது.

(உகO)
மன்பதை காக்குநின் புரைமை நோக்கா
தன்புகண் மாறிய வறனில் காட்சியொடு
நும்ம னோருமற் றினைய ராயின்
எம்ம னோரிவட் பிறவலர் மாதோ
செயிர்தீர் கொள்கை யெம்வெங் காதலி
உயிர்சிறி துடைய ளாயி னெம்வயின்
உள்ளா திருத்தலோ வரிதே யதனால்
அறனில் கூற்றந் திறனின்று துணியப்
பிறனா யினன்கொ லிறீஇயரென் னுயிரெனா
நுவல்வுறு சிறுமையள் பலபுலந் துறையும்
இடுக்கண் மனையோ டிரிய விந்நிலை
விடுத்தேன் வாழியர் குருசி லுதுக்காண்
அவல நெஞ்சமொடு செல்வனிற் கறுத்தோர்
அருங்கடி முனையரண் போலப்

பெருங்கை யற்றவென் புலம்புமுந் துறத்தே.

திணையும் துறையும் அவை.

சேரமான் குடக்கோச்சேரலிரும்பொறை பரிசில் நீட்டித்தானைப் பெருங்குன்றூர்கிழார் பாடியது. (உகo)

(உகக) அஞ்சுவரு மரபின் வெஞ்சினப் புயலே
றணங்குடை யரவி னருந்தலை துமிய
நின்றுகாண் பன்ன நீண்மலை மிளிரக்
குன்றுதூ வெறியு மரவம் போல
முரசெழுந் திரங்குந் தானையொடு தலைச்சென்
றரைசுபடக் கடக்கு முரைசா றோன்றனின்
உள்ளி வந்த வோங்குநிலைப் பரிசிலென்
வள்ளியை யாதலின் வணங்குவ னிவனெனக்
கொள்ளா மாந்தர் கொடுமை கூறநின்
உள்ளியது [1]முடித்தோய் மன்ற முன்னாட்
கையுள் ளதுபோற் காட்டி வழிநாட்
பொய்யொடு நின்ற புறநிலை வருத்தம்
நாணு யாயினு நாணக் கூறியென்
நுணங்குசெந்நா வணங்க வேத்திப்
பாடப் பாடப் பாடுபுகழ் கொண்டநின்
ஆடுகொள் வியன்மார்பு தொழுதனென் பழிச்சிச்
செல்வ லத்தை யானே வைகலும்
வல்சி யின்மையின் வயின்வயின் மாறி
இல்லெலி மடிந்த தொல்சுவர் வரைப்பிற்
பாஅ லின்மையிற் பல்பாடு சுவைத்து
முலைக்கோண் மறந்த புதல்வனொடு
[2]மனைத்தொலைந் திருந்தவென் வாணுதற் படர்ந்தே.

திணையும் துறையும் அவை.

அவனை அவர் பாடியது. (உகக)

(உகஉ) நுங்கோ யாரென வினவி னெங்கோக்
களமர்க் கரித்த விளையல் வெங்கள்

பி - ம். 1செய்தோய். 2மனைத்தொலைஇந் திருந்த.

யாமைப் புழுக்கிற் காமம் வீட வாரா
ஆரற் கொழுஞ்சூ டங்கவு ளடாஅ
வைகுதொழின் மடியு மடியா விழவின்
யாணர் நன்னாட் டுள்ளும் பாணர்
பைதற் சுற்றத்துப் பசிப்பகை யாகிக்
கோழி யோனே கோப்பெருஞ் சோழன்
பொத்தி னண்பிற் பொத்தியொடு கெழீஇ
வாயார் பெருநகை வைகலு [1]நக்கே.

திணை - அது; துறை - இயன்மொழி.

கோப்பெருஞ்சோழனைப் பிசிராந்தையார் பாடியது. (உகஉ)

(உகங) மண்டம ரட்ட மதனுடை நோன்றாள்
வெண்குடை விளக்கும் விறல்கெழு வேந்தே
பொங்குநீ ருடுத்தவிம் மலர்தலை யுலகத்து
நின்றலை வந்த விருவரை நினைப்பிற்
றொன்றுறை துப்பினின் பகைஞரு மல்லர்
அமர்வெங் காட்சியொடு மாறெதிர் பெழுந்தவர்
நினையுங் காலை நீயு மற்றவர்க்
கனையை யல்லை யடுமான் றோன்றல்
பரந்துபடு நல்லிசை யெய்தி மற்றுநீ
உயர்ந்தோ ருலக மெய்திப் பின்னும்
ஒழித்த தாய மவர்க்குரித் தன்றே
அதனால், அன்ன தாதலு மறிவோய் நன்றும்
இன்னுங் கேண்மதி யிசைவெய் யோயே
நின்ற துப்பொடு நிற்குறித் தெழுந்த
எண்ணில் காட்சி யிளையோர் தோற்பின்
நின்பெருஞ் செல்வம் யார்க்கெஞ் சுவையே
அமர்வெஞ் செல்வ நீயவர்க் குலையின்
இகழுந ருவப்பப் பழியெஞ் சுவையே
அதனால், ஒழிகதி லத்தைநின் மறனே வல்விரைந்
தெழுமதி வாழ்கநின் னுள்ள மழிந்தோர்க்
கேம மாகுநின் றாணிழன் மயங்காது

பி - ம். [1]மகிழ்ந்தே.

செய்தல் வேண்டுமா னன்றே வானோர்
அரும்பெற லுலகத் தான்றவர்
[1]விதும்புறு விருப்பொடு விருந்தெதிர் கொளற்கே.

திணை - வஞ்சி; துறை - துணைவஞ்சி.

அவன் மக்கண்மேற் சென்றானைப் புல்லாற்றூர் [2]எயிற்றியனார் பாடியது. (உகங)

(உகச) செய்குவங் கொல்லோ நல்வினை யெனவே
ஐய [3]மறுஅர் கசடீண்டு காட்சி
நீங்கா நெஞ்சத்துத் துணிவில் லோரே
யானை வேட்டுவன் யானையும் பெறுமே
குறும்பூழ் வேட்டுவன் வறுங்கையும் வருமே
அதனால், உயர்ந்த வேட்டத் [4]துயர்ந்திசி னோர்க்குச்
செய்வினை மருங்கி னெய்த லுண்டெனிற்
றொய்யா வுலகத்து நுகர்ச்சியுங் கூடும்
தொய்யா வுலகத்து நுகர்ச்சி யில்லெனின்
மாறிப் [5]பிறப்பி னின்மையுங் கூடும்
மாறிப் பிறவா ராயினு மிமயத்துக்
கோடுயர்ந் தன்ன தம்மிசை நட்டுத்
தீதில் யாக்கையொடு மாய்தறவத் தலையே.

திணை - பொதுவியல்; துறை - பொருண்மொழிக்காஞ்சி.

அவன் வடக்கிருந்தான் சொற்றது. (உகச)

(உகரு) கவைக்கதிர் வரகி னவைப்புறு வாக்கல்
தாதெரு மறுகிற் போதொடு பொதுளிய
வேளை வெண்பூ வெண்டயிர்க் கொளீஇ
ஆய்மக ளட்ட வம்புளி மிதவை
அவரை கொய்யுந ரார மாந்தும்
தென்னம் பொருப்ப னன்னாட் டுள்ளும்
பிசிரோ னென்பவென் னுயிரோம் புநனே

பி - ம். [1]விதுப்புறு. [2]எயிற்றியார். [3]மாறுஅர்.
[4]துயந்திசி னோரே. [5]பிறப்பின் வன்மையும்.

செல்வக் காலை நிற்பினும்
அல்லற் காலை நில்லலன் மன்னே.

திணை - பாடாண்டிணை ; துறை - இயன்மொழி.

கோப்பெருஞ்சோழன், பிசிராந்தையார் வாராரென்ற சான்றோர்க்கு அவர் வருவாரென்று சொல்லியது. (உகரு)

(உகசு) கேட்டன் மாத்திரை யல்ல தியாவதும்
[1]காண்ட லில்லா தியாண்டுபல கழிய
வழுவின்று பழகிய கிழமைய ராகினும்
அரிதே தோன்ற லதற்பட வொழுகலென்
றையங் கொள்ளன்மி னாரறி வாளீர்
இகழ்வில னினிய னியாத்த நண்பினன்
புகழ்கெட வரூஉம் பொய்வேண் டலனே
தன்பெயர் கிளக்குங் காலை யென்பெயர்
பேதைச் சோழ னென்னுஞ் சிறந்த
காதற் கிழமையு முடைய னதன்றலை
இன்னதோர் காலை நில்லலன்
இன்னே வருகுவ னொழிக்கவவற் கிடமே.

திணையும் துறையும் அவை.

அவன் வடக்கிருந்தான் பிசிராந்தையார்க்கு இடனொழிக்க வென்றது. (உகசு)

(உகஎ) நினைக்குங் காலை மருட்கை யுடைத்தே
எனைப்பெருஞ் சிறப்பினோ டீங்கிது துணிதல்
அதனினு மருட்கை யுடைத்தே பிறனாட்டுத்
தோற்றஞ் சான்ற சான்றோன் போற்றி
இசைமர பாக நட்புக் கந்தாக
இனையதோர் காலை யீங்கு வருதல்
வருவ னென்ற கோனது பெருமையும்
அதுபழு தின்றி வந்தவ னறிவும்
வியத்தொறும் வியத்தொறும் வியப்பிறந் தன்றே
அதனால், தன்கோ லியங்காத் தேயத் துறையும்
சான்றோ னெஞ்சுறப் பெற்ற றொன்றிசை

பி - ம். [1]காண்டலீயாது.

அன்னோனை யிழந்தவிவ் வுலகம்
என்னா வதுகொ லளியது தானே.

திணை - பொதுவியல்; துறை - கையறுநிலை.

அவன் வடக்கிருந்தானுழைச் சென்ற பிசிராந்தையாரைக் கண்டு பொத்தியார் பாடியது. (உகஎ)

(உகஅ) பொன்னுந் துகிரு முத்து மன்னிய
மாமலை பயந்த காமரு மணியும்
இடைபடச் சேய வாயினுந் தொடைபுணர்ந்
தருவிலை நன்கல மமைக்குங் காலை
ஒருவழித் தோன்றியாங் கென்றுஞ் சான்றோர்
சான்றோர் பால ராப
சாலார் சாலார் [1]பாலரா குபவே.

திணையும் துறையும் அவை.

[2]பிசிராந்தையார் வடக்கிருந்தாரைக் கண்ட கண்ணகனார் பாடியது. (உகஅ)

(உகக) உள்ளாற்றுக் கவலைப் புள்ளி நீழல்
முழூஉ வள்ளூர முணக்கு மள்ள
புலவுதி மாதோ நீயே
பலரா லத்தைநின் குறியிருந் தோரே.

திணையும் துறையும் அவை.

அவன் வடக்கிருந்தானைக் கருவூர்ப் பெருஞ்சதுக்கத்துப் பூதநாதனார் பாடியது. (உகக)

(உஉ0) பெருஞ்சோறு பயந்து பல்யாண்டு புரந்த
பெருங்களி றிழந்த பைதற் பாகன்
அதுசேர்ந் தல்கிய வழுங்க லாலை
வெளில்பா ழாகக் கண்டுகலுழ்ந் தாங்குக்
கலங்கினே னல்லனோ யானே பொலந்தார்த்

பி - ம். [1]பாலாரா குகவே.
[2]பிசிராந்தையாரைக் கண்ட நத்தத்தனார் பாடியது.

தேர்வண் கிள்ளி போகிய
பேரிசை மூதூர் மன்றங் கண்டே.

திணையும் துறையும் அவை.

அவன் வடக்கிருந்தானுழைச் சென்று மீண்டுவந்து உறையூர்கண்ட பொத்தியார் அழுது பாடியது. (உஉ0)

(உஉக) பாடுநர்க் கீத்த பல்புக ழன்னே
ஆடுநர்க் கீத்த பேரன் பினனே
அறவோர் புகழ்ந்த வாய்கோ லன்னே
திறவோர் புகழ்ந்த திண்ணன் பினனே
மகளிர் சாயன் மைந்தர்க்கு மைந்து
துகளறு கேள்வி யுயர்ந்தோர் புக்கில்
அனைய னென்னு தத்தக் கோனை
நினையாக் கூற்ற மின்னுயி ருய்த்தன்று
பைத லொக்கற் றழீஇ யதனை
வைகம் வம்மோ வாய்மொழிப் புலவீர்
நனந்தலை யுலக மரந்தை தூங்கக்
கெடுவி னல்லிசை சூடி
நடுக லாயினன் புரவல னெனவே.

திணையும் துறையும் அவை.

அவன் நடுகற்கண்டு அவர் பாடியது. (உஉக)

(உஉஉ) அழலவிர் வயங்கிழைப் பொலிந்த மேனி
நிழலினும் போகாநின் வெய்யோள் பயந்த
புகழ்சால் புதல்வன் பிறந்தபின் வாவென
என்னிவ ணொழித்த வன்பி லாள
எண்ணா திருக்குவை யல்லை
என்னிடம் யாதுமற் றிசைவெய் யோயே.

திணையும் துறையும் அவை.

அவனை, தன்மகன் பிறந்தபின் பெயர்த்துச்சென்று பொத்தியார் எனக்கு இடந்தாவென்று சொற்றது. (உஉஉ)

(உஉங) பலர்க்குநிழ லாகி யுலகமீக் கூறித்
தலைப்போ கன்மையிற் சிறுவழி மடங்கி

நிலைபெறு நடுக லாகியக் கண்ணும்
இடங்கொடுத் தளிப்ப மன்ற வுடம்போ
டின்னுயிர் விரும்புங் கிழமைத்
தொன்னட் புடையார் தம்முழைச் செலினே.

திணையும் துறையும் அவை.

கல்லாகியும் இடங்கொடுத்த கோப்பெருஞ்சோழனை வடக்கிருந்த போத்தியார் பாடியது. (௨௨௩)

(௨௨௪) அருப்பம் பேணா தமர்கடந் ததூஉம்
துணைபுண ராயமொடு தசும்புடன் றொலைச்சி
இரும்பா ணொக்கற் கடும்பு புரந்ததூஉம்
அறமறக் கண்ட நெறிமா ணவையத்து
முறைநற் கறியுநர் முன்னுறப் புகழ்ந்த
தூவியற் கொள்கைத் துகளறு மகளிரொடு
பருதி யுருவிற் பல்படைப் புரிசை
எருவை நுகர்ச்சி யூப நெடுந்தூண்
வேத வேள்வித் தொழின்முடித் ததூஉம்
அறிந்தோன் மன்ற வறிவுடை யாளன்
இறந்தோன் றானே யளித்திவ் வுலகம்
அருவி மாறி யஞ்சுவரக் கடுகிப்
பெருவறங் கூர்ந்த வேனிற் காலைப்
பசித்த வாயத்துப் பயனிரை தருமார்
பூவாட் கோவலர் பூவுட னுதிரக்
கொய்துகட் டழித்த வேங்கையின்
மெல்லியன் மகளிரு மிழைகளைந் தனரே.

திணையும் துறையும் அவை.

சோழன் கரிகாற்பெருவளத்தானைக் கருங்குழலாதனார் பாடியது. ()

(௨௨௫) தலையோர் நுங்கின் றீஞ்சேறு மிசைய
இடையோர் பழத்தின் பைங்கனி மாந்தக்
கடையோர், விடுவாய்ப் பிசிரொடு சுடுகிழங்கு நுகர
நிலமலர் வையத்து வலமுறை வளைஇ
வேந்துபீ டழித்த வேந்துவேற் றானையொ
டாற்ற லென்பதன் றோற்றங் கேளினிக்

கள்ளி போகிய களரியம் பறந்தலை
முள்ளுடை வியன்காட் டதுவே நன்றும்
சேட்சென்னி நலங்கிள்ளி கேட்குவன் கொல்லென
இன்னிசைப் பறையொடு வென்றி நுவலத்
தூக்கணங் குரீஇத் தூங்குகூ டேய்ப்ப
ஒருசிறைக் கொளீஇய திரிவாய் வலம்புரி
ஞாலங் காவலர் கடைத்தலைக்
காலைத் தோன்றினு நோகோ யானே.

திணையும் துறையும் அவை.
சோழன் நலங்கிள்ளியை ஆலத்தூர்கிழார் பாடியது. (உஉரு)

(உஉசா) செற்றன் றாயினுஞ் செயிர்த்தன் றாயினும்
உற்றன் றாயினு முய்வின்று மாதோ
பாடுநர் போலக் கைதொழு தேத்தி
இரந்தன் றாகல் வேண்டும் பொலந்தார்
மண்டமர் கடக்குந் தானைத்
[1]திண்டேர் வளவற் கொண்ட கூற்றே.

திணையும் துறையும் அவை.
சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவனை மாறோக்கத்து நப்பசலையார் பாடியது. (உஉசா)

(உஉஎ) நனிபே தையே நயனில் கூற்றம்
விரகின் மையின் வித்தட் டுண்டனை
இன்னுங் காண்குவை நன்வா யாகுதல்
ஒளிறுவாண் மறவருங் களிறு மாவும்
குருதியங் குரூஉப்புனற் பொருகளத் தொழிய
நாளு மானான் கடந்தட் டென்றுநின்
வாடுபசி [2]யருத்திய பழிதீ ராற்றல்
நின்னோ ரன்ன பொன்னியற் பெரும்பூண்
வளவ னென்னும் வண்டுமூசு கண்ணி
இனையோற் கொண்டனை யாயின்
இனியார் மற்றுநின் பசிதீர்ப் போரே.

திணையும் துறையும் அவை.
அவனை ஆடுதுறை மாசாத்தனார் பாடியது. (உஉஎ)

பி - ம். [1]திண்டோள். [2]யருக்கிய.

(உஉஅ) கலஞ்செய் கோவே கலஞ்செய் கோவே
இருடிணிந் தன்ன குரூஉத்திரட் பரூஉப்புகை
அகலிரு விசும்பி னூன்றுஞ் சூளை
நனந்தலை மூதூர்க் கலஞ்செய் கோவே
அளியை நீயே யாங்கா குவைகொல்
நிலவரை சூட்டிய நீணெடுந் தானைப்
புலவர் புகழ்ந்த பொய்யா நல்லிசை
விரிகதிர் ஞாயிறு விசும்பிவர்ந் தன்ன
சேண்விளங்கு சிறப்பிற் செம்பியர் மருகன்
கொடிநுடங்கு யானை நெடுமா வளவன்
தேவ ருலக மெய்தின னாதலின்
அன்னோற் கவிக்குங் கண்ணகன் றாழி
வனைதல் வேட்டனை யாயி னெனையதூஉம்
இருநிலந் திகிரியாப் பெருமலை
மண்ணா வனைத லொல்லுமோ நினக்கே.

திணை - அது; துறை - ஆனந்தப்பையுள்.
அவனை [1]ஐயூர் முடவனார் பாடியது. (உஉஅ)

(உஉகூ) ஆடிய லழற்குட்டத்
தாரிரு ளரையிரவில்
முடப்பனையத்து வேர்முதலாக்
கடைக்குளத்துக் கயங்காயப்
பங்குனியுய ரழுவத்துத்
தலைநாண்மீ னிலைதிரிய
நிலைநாண்மீ னதனெதி ரேர்தரத்
தொன்னாண்மீன் றுறைபடியப்
பாசிச் செல்லா தூசி முன்னா
தளக்கர்த்திணை விளக்காகக்
கனையெரி பரப்பக் காலெதிர்பு பொங்கி
ஒருமீன் விழுந்தன்றால் விசும்பி னானே
அதுகண், டியாமும் பிறரும் பல்வே றிரவலர்

பி - ம். [1]உறையூர்.

பறையிசை யருவி நன்னாட்டுப் பொருநன்
நோயில னாயி னன்றுமற் றில்லென
அழிந்த நெஞ்ச மடியுளம் பரப்ப
அஞ்சின மெழுநாள் வந்தன் றின்றே
மைந்துடை யானை கைவைத் துறங்கவும்
திண்பிணி முரசங் கண்கிழிந் துருளவும்
காவல் வெண்குடை கால்பரிந் துலறவும்
காலியற் கலிமாக் கதியின்றி வைகவும்
மேலோ ருலக மெய்தின னாகலின்
ஒண்டொடி மகளிர்க் குறுதுணை யாகித்
தன்றுணை யாய மறந்தனன் கொல்லோ
பகைவர்ப் பிணிக்கு மாற்ற னசைவர்க்
களந்துகொடை யறியா வீகை
மணிவரை யன்ன மாஅ யோனே.

திணையும் துறையும் அவை.

கோச்சேரமான் யானைக்கட்சேஎய் மாந்தரஞ்சேரல் இரும்பொறை இன்னநாளிற்றுஞ்சுமென அஞ்சி, அவன் துஞ்சியவிடத்துக் கூடலூர் கிழார் பாடியது. (உஉக)

(உ௩O) கன்றம ராயங் கானத் தல்கவும்
வெங்கால் வம்பலர் வேண்டுபுலத் துறையவும்
களமலி குப்பை காப்பில வைகவும்
விலங்குபகை கடிந்த கலங்காச் செங்கோல்
வையகம் புகழ்ந்த வயங்குவினை யொள்வாட்
பொய்யா வெழினி பொருதுகளஞ் சேர
ஈன்றோ ணீத்த குழவி போலத்
தன்னமர் சுற்றந் தலைத்தலை யினையக்
கடும்பசி கலக்கிய விடும்பைகூர் நெஞ்சமொடு
நோயுழந்து வைகிய வுலகினு மிகநனி
நீயிழந் தனையே யறனில் கூற்றம்
வாழ்தலின் வரூஉம் வயல்வள னறியான்
வீழ்குடி யுழவன் வித்துண் டாஅங்
கொருவ னாருயி ருண்ணா யாயின்

நேரார் பல்லுயிர் பருகி
ஆர்குவை மன்னோவவ னமரடு களத்தே.

திணை - அது; துறை - கையறுநிலை.

அதியமான் தகடூர் பொருதுவீழ்ந்த எழினியை அரிசில்கிழார் பாடியது. (௨௫௦)

(௨௫௧) எறிபுனக் குறவன் குறைய லன்ன
கரிபுற விறகி னீம வொள்ளழற்
குறுகினுங் குறுகுக குறுகாது சென்று
விசும்புற நீளினு நீள்க பசுங்கதிர்த்
திங்க ளன்ன வெண்குடை
ஒண்ஞாயி றன்னோன் புகழ்மா யலவே.

[1]திணையும் துறையும் அவை.

[2]அதியமான் நெடுமானஞ்சியை ஔவையார் பாடியது. (௨௫௧)

(௨௫௨) இல்லா கியரோ காலை மாலை
அல்லா கியர்யான் வாழு நாளே
நடுகற் பீலி சூட்டி நாரரி
சிறுகலத் துகுப்பவுங் கொள்வன் கொல்லோ
கோடுயர் பிறங்குமலை கெழீஇய
நாடுடன் கொடுப்பவுங் கொள்ளா தோனே.

[3]திணையும் துறையும் அவை.

அவனை அவர் பாடியது. (௨௫௨)

(௨௫௩) பொய்யா கியரோ பொய்யா கியரோ
பாவடி யானை பரிசிலர்க் கருகாச்
சீர்கெழு நோன்றா ளகுதைகட் டோன்றிய
பொன்புனை திகிரியிற் பொய்யா கியரோ
இரும்பா ணொக்கற் றலைவன் பெரும்பூட்
போரடு தானை யெவ்வி மார்பின்

பி-ம். 1 திணை - பொதுவியல்; துறை - கையறுநிலை.
2 அவனை அவர் பாடியது.
3 திணை : தும்பை; துறை - பாண்பாட்டு.

எஃகுறு விழுப்புண் பலவென
வைகுறு விடிய லியம்பிய குரலே.

திணையும் துறையும் அவை.
வேள் எவ்வியை வெள்ளெருக்கிலையார் பாடியது. (உகங)

(உகச) நோகோ யானே தேய்கமா காலை
பிடியடி யன்ன சிறுவழி மெழுகித்
தன்னமர் காதலி புன்மேல் வைத்த
இன்சிறு பிண்டம் யாங்குண் டனன்கொல்
உலகுபுகத் திறந்த வாயிற்
பலரோ டுண்டன் மரீஇ யோனே.

திணையும் துறையும் அவை.
அவனை அவர் பாடியது. (உகச)

(உகரு) சிறியகட் பெறினே யெமக்கீயு மன்னே
பெரியகட் பெறினே
யாம்பாடத் தான்மகிழ்ந் துண்ணு மன்னே
சிறுசோற் றானு நனிபல கலத்தன் மன்னே
பெருஞ்சோற் றானு நனிபல கலத்தன் மன்னே
என்பொடு தடிபடு வழியெல்லா மெமக்கீயு மன்னே
அம்பொடு வேனுழை வழியெல்லாந் தானிற்கு மன்னே
நரந்த நாறுந் தன்கையாற்
புலவு நாறு மென்றலை தைவரு மன்னே
[1]அருந்தலை யிரும்பாண ரகன்மண்டைத் [2]துளையுரீஇ
இரப்போர் கையுளும் போகிப்
புரப்போர் புன்கண் [3]பாவை சோர
அஞ்சொனுண் டேர்ச்சிப் புலவர் நாவிற்
சென்றுவீழ்ந் தன்றவன்
[4]அருநிறத் தியங்கிய வேலே
ஆசா கெந்தை யாண்டுளன் கொல்லோ
இனிப், பாடுநரு மில்லைப் [5]பாடுநர்க்கொன் றீகுநரு மில்லைப்

பி - ம். [1]அருங்கலை. [2]துளையிரப்போர். [3]பார்வை. [4]திருநிறத்திலங்கிய. [5]பாடுநருக்கொன் றீயுநரும்.

பனித்துறைப் பகன்றை நறைக்கொண் மாமலர்
சூடாது வைகியாங்குப் பிறர்க்கொன்
றீயாது வீயு முயிர்தவப் பலவே.

திணையும் துறையும் அவை.

அதியமான் நெடுமானஞ்சியை ஔவையார் பாடியது. (உருரு)

(உருசு) கலையுணக் கிழிந்த முழவுமருள் பெரும்பழம்
சிலைகெழு குறவர்க் கல்குமிசை வாகும்
மலைகெழு நாட மாவண் பாரி
கலந்த கேண்மைக் கொவ்வாய் நீயெற்
புலந்தனை யாகுவை புரந்த யாண்டே
பெருந்தகு சிறப்பி னட்பிற் கொல்லா
தொருங்குவரல் விடாஅ தொழிகெனக் கூறி
இனையை யாதலி னினக்கு மற்றியான்
மேயினே னன்மை யானே யாயினும்
இம்மை போலக் காட்டி யும்மை
இடையில் காட்சி நின்னோ
டுடனுறை வாக்குக வுயர்ந்த பாலே.

திணை - அது; துறை - கையறுநிலை.

வேள்பாரி துஞ்சியவழி அவன் மகளிரைப் பார்ப்பார்ப்படுத்து வடக்கிருந்த கபிலர் பாடியது. (உருசு)

(உருஎ) நீடுவாழ் கென்றியா னெடுங்கடை குறுகிப்
பாடி நின்ற பசிநாட் கண்ணே
கோடைக் காலத்துக் கொழுநிழ லாகிப்
பொய்த்த லறியா வுரவோன் செவிமுதல்
வித்திய பனுவல் விளைந்தன்று நன்றென
நச்சி யிருந்த நசைபழு தாக
அட்ட குழிசி யழற்பயந் தாஅங்
களியர் தாமே யார்க வென்னா
அறனில் கூற்றந் திறனின்று துணிய
ஊழி னுருப்ப வெருக்கிய மகளிர்
வாழைப் பூவின் வளைமுறி சிதற
முதுவா யொக்கற் பரிசில ரிரங்கக்

கள்ளி போகிய களரியம் பறந்தலை
வெள்வேல் விடலை சென்றுமாய்ந் தனனே
ஆங்கது நோயின் றாக வோங்குவரைப்
புலிபார்த் தொற்றிய களிற்றிரை பிழைப்பின்
எலிபார்த் தொற்றா தாகு மலிதிரைக்
கடன்மண்டு புனலி னிழுமெனச் சென்று
நனியுடைப் பரிசிற் றருகம்
எழுமதி நெஞ்சே துணிபுமுந் துறுத்தே.

திணையும் துறையும் அவை.

வெளிமானுழைச்சென்றார்க்கு அவன் துஞ்ச இளவெளிமான் சிறிது கொடுப்பக் கொள்ளாது பெருஞ்சித்திரனார் பாடியது. (உஙஎ)

(உஙஅ) கவிசெந் தாழிக் குவிபுறத் திருந்த
செவிசெஞ் சேவலும் பொகுவலும் வெருவா
வாய்வன் காக்கையுங் கூகையுங் கூடிப்
பேஎ யாயமொடு பெட்டாங்கு வழங்கும்
காடுமுன் னினனே கட்கா முறுநன்
தொடிகழி மகளிரிற் றொல்கவின் வாடிப்
பாடுநர் கடும்பும் பையென் றனவே
தோடுகொண் முரசுங் கிழிந்தன கண்ணே
ஆளில், வரைபோல் யானையு மருப்பிழந் தனவே
வெந்திறற் கூற்றம் பெரும்பே துறுப்ப
எந்தை [1]யாகுல வதற்பட லறியேன்
அந்தோ வளியேன் வந்தனென் மன்ற
என்னா குவர்கொலெற் றுன்னி யோரே
மாரி யிரவின் மரங்கவிழ் பொழுதின்
ஆரஞ ருற்ற நெஞ்சமொ டொராங்குக்
கண்ணி லூமன் கடற்பட் டாங்கு
வரையளந் தறியாத் திரையரு நீத்தத்
தவல மறுசுழி மறுகலிற்
றவலே நன்றுமற் றகுதியு மதுவே.

திணையும் துறையும் அவை.

வெளிமான் துஞ்சியபின் அவர் பாடியது. (உஙஅ)

பி - ம். [1]யாகுத லதற்பட.

(௨௩௯) தொடியுடைய தோண்மணந் தனன்
கடிகாவிற் பூச்சூடினன்
[1]தண்கமழுஞ் சாந்துநீவினன்
செற்றோரை [2]வழிதபுத்தனன்
நட்டோரை யுயர்புகூறினன்
வலியரென [3]வழிமொழியலன்
மெலியரென [4]மீக்கூறலன்
பிறரைத்தா னிரப்பறியலன்
இரந்தோர்க்கு மறுப்பறியலன்
வேந்துடையவையத் தோங்குபுகழ்தோற்றினன்
வருபடை யெதிர் [5]தாங்கினன்
பெயர்படை புறங்கண்டனன்
கடும்பரிய மாக்கடவினன்
நெடுந்தெருவிற் [6]றேர்வழங்கினன்
[7]ஓங்கியல களிறூர்ந்தனன்
[8]தீஞ்செறி தசும்புதொலைச்சினன்
பாணுவப்பப் பசிதீர்த்தனன்
மயக்குடைய மொழிவிடுத்தனன், ஆங்குச்
செய்ப வெல்லாஞ் செய்தன னாகலின்
இடுக வொன்றோ சுடுக வொன்றோ
[9]படுவழிப் படுகவிப் புகழ்வெய்யோன் றலையே.

திணையும் துறையும் அவை.

நம்பிநெடுஞ்செழியனைப் பேரெயின்முறுவலார் பாடியது. (௨௩௯)

(௨௪௦) ஆடுநடைப் புரவியுங் களிறுந் தேரும்
வாடா யாணர் நாடு மூரும்
பாடுநர்க் கருகா வாஅ யண்டிரன்
கோடேந் தல்குற் குறுந்தொடி மகளிரொடு
கால னென்னுங் கண்ணிலி யுய்ப்ப
மேலோ ருலக மெய்தின னெனாஅப்

பி - ம். [1]நறைகமழ்சாந்த நீவினன். [2]வழிதேய்த்தனன். [3]வாய்மொழியலன். [4]மேற்செல்லலன் பிறரையொன்றிரப்பு. [5]கழறினன். [6]தேர்மறுங்கினன், தேரோட்டினன். [7]உடல்சினத்த களிறு. [8]தீஞ்சொற்றசும்பு. [9]படுகுழி.

பொத்த வறையுட் போழ்வாய்க் கூகை
சுட்டுக் குவியெனச் செத்தோர்ப் பயிரும்
கள்ளியம் பறந்தலை யொருசிறை யல்கி
ஒள்ளெரி நைப்ப வுடம்பு மாய்ந்தது
புல்லென் கண்ணர் புரவலர்க் காணாது
கல்லென் சுற்றமொடு கையழிந்து புலவர்
வாடிய பசிய ராகிப்பிறர்
நாடுபடு செலவின ராயின ரினியே.

திணையும் துறையும் அவை.
ஆயைக் குட்டுவன்கீரனார் பாடியது. (உசo)

(உசக) திண்டே ரிரவலர்க் கீத்த தண்டார்
அண்டிரன் வரூஉ மென்ன வொண்டொடி
வச்சிரத் தடக்கை நெடியோன் கோயிலுட்
போர்ப்புறு முரசங் கறங்க
ஆர்ப்பெழுந் தன்றால் விசும்பி னானே.

திணையும் துறையும் அவை.
அவனை உறையூர் ஏணிச்சேரி முடமோசியார் பாடியது. (உசக)

(உசஉ) இளையோர் சூடார் வளையோர் கொய்யார்
நல்லியாழ் மருப்பின் மெல்ல வாங்கிப்
பாணன் சூடான் பாடினி யணியாள்
ஆண்மை தோன்ற வாடவர்க் கடந்த
வல்வேற் சாத்தன் மாய்ந்த பின்றை
முல்லையும் பூத்தியோ வொல்லையூர் நாட்டே.

திணையும் துறையும் அவை.
ஒல்லையூர்கிழான் மகன் பெருஞ்சாத்தனைக் [1]குடவாயிற் கீரத்தனார் பாடியது. (உசஉ)

(உசங) இனிநினைந் திரக்க மாகின்று திணிமணற்
செய்வுறு பாவைக்குக் கொய்பூத் தைஇத்
தண்கய மாடு மகளிரொடு கைபிணைந்து

பி - ம். [1]குடவாயினல்லாதனார்.

தழுவுவழித் தழீஇத் [1]தூங்குவழித் தூங்கி
மறையென லறியா மாயமி லாயமொ
[2]டுயர்சினை மருதத் துறையுறத் தாழ்ந்து
நீர்நணிப் படிகோ டேறிச் சீர்மிகக்
கரையவர் மருளத் திரையகம் பிதிர
[3]நெடுநீர்க் குட்டத்துத் துடுமெனப் பாய்ந்து
குளித்துமணற் கொண்ட [4]கல்லா விளமை
அளிதோ தானே யாண்டுண்டு கொல்லோ
தொடித்தலை விழுத்தண் டூன்றி நடுக்குற்
றிருமிடை மிடைந்த சிலசொற்
பெருமூ தாளரே மாகிய வெமக்கே.

திணையும் துறையும் அவை.

தொடித்தலை விழுத்தண்டினார் பாடியது. (உசங)

(உசச) பாணர் சென்னியும் வண்டுசென் றாதா
விறலியர் முன்கையுந் தொடியிற் பொலியா
இரவன் மாக்களு............

(உசரு) யாங்குப்பெரி தாயினு நோயள வெனைத்தே
உயிர்செகுக் கல்லா மதுகைத் தன்மையிற்
கள்ளி போகிய களரியம் பறந்தலை
வெள்ளிடைப் பொத்திய விளைவிற கீமத்
தொள்ளழற் பள்ளிப் பாயல் சேர்த்தி
ஞாங்கர் மாய்ந்தனண் மடந்தை
இன்னும் வாழ்வ லென்னிதன் பண்பே.

திணையும் துறையும் அவை.

சேரமான் கோட்டம்பலத்துத் துஞ்சிய மாக்கோதை தன் பெருங்கோப்பெண்டு துஞ்சியகாலைச் சொல்லிய பாட்டு. (உசரு)

(உசசு) பல்சான் றீரே பல்சான் றீரே
செல்கெனச் சொல்லா தொழிகென விலக்கும்

பி-ம். [1]தங்குவழித் தங்கி. [2]பாசினமருத......தாழ்ந்த நீர்க்கணிப் படிந்த. [3]நிலையருங் குட்டம். [4]கள்ளாமை யளிதோ.

பொல்லாச் சூழ்ச்சிப் பல்சான் றீரே
அணில்வரிக் கொடுங்காய் [1]வாள்போழ்ந் திட்ட
காழ்போ னல்விளர் நறுநெய் தீண்டா
[2]தடையிடைக் கிடந்த கைபிழி பிண்டம்
வெள்ளெட் சாந்தொடு புளிப்பெய் தட்ட
வேளை வெந்தை வல்சி யாகப்
பரற்பெய் பள்ளிப் பாயின்று வதியும்
உயவற் பெண்டிரே மல்லே மாதோ
பெருங்காட்டுப் பண்ணிய கருங்கோட் டீமம்
நுமக்கரி தாகுக தில்ல வெமக்கெம்
பெருந்தோட் கணவன் மாய்ந்தென வரும்பற
வள்ளித ழவிழ்ந்த தாமரை
நள்ளிரும் பொய்கையுந் தீயுமோ ரற்றே.

திணை - அது; துறை - ஆனந்தப்பையுள்.

பூதபாண்டியன்றேவி பெருங்கோப்பெண்டு தீப்பாய்வாள் சொல்லியது. (உசசு)

(உசஎ) யானை தந்த முளிமர விறகிற்
கானவர் பொத்திய ஞெலிதீ விளக்கத்து
மடமான் பெருநிரை வைகுதுயி லெடுப்பி
மந்தி சீக்கு மணங்குடை முன்றிலின்
நீர்வார் கூந்த லிரும்புறந் தாழப்
[3]பேரஞர்க் கண்ணள் பெருங்காடு நோக்கித்
தெருமரு மம்ம தானேதன் கொழுநன்
முழவுகண் டுயிலாக் கடியுடை வியனகர்ச்
சிறுநனி தமிய ளாயினும்
இன்னுயிர் [4]நடுங்குந் தனிளமைபுறங் கொடுத்தே.

திணையும் துறையும் அவை.

அவள் தீப்பாய்வாளைக் கண்டு மதுரைப்பேராலவாயார் சொல்லியது. (உசஎ)

பி - ம். [1]வாள்போந் தட்ட. [2]தடகிடை மிடைந்த, தடைகிடந்த. [3]பேரமர்க். [4]நீங்கும்.

(௨௪௮) அளிய தாமே சிறுவெள் ளாம்பல்
இளைய மாகத் தழையா யினவே
இனியே, பெருவளக் கொழுநன் மாய்ந்தெனப் பொழுதுமறுத்
தின்னா வைக லுண்ணும்
அல்லிப் படூஉம் புல்லா யினவே.

திணை - அது; துறை - தாபதநிலை.

.........[1]ஒக்கூர் மாசாத்தனார் பாடியது. (௨௪௮)

(௨௪௯) கதிர்மூக் காரல் கீழ்ச்சேற் றொளிப்பக்
கணைக்கோட்டு வாளை மீநீர்ப் பிறழ
எரிப்பூம் பழன நெரித்துடன் வலைஞர்
அரிக்குரற் றடாரியின் யாமை மிளிரப்
பனைநுகும் பன்ன சினைமுதிர் வராலொ
டுறழ்வே லன்ன வொண்கயன் முகக்கும்
அகனாட் டண்ணல் புகாவே நெருநைப்
பகலிடங் கண்ணிப் பலரொடுங் கூடி
ஒருவழிப் பட்டன்று மன்னே யின்றே
அடங்கிய கற்பி னாய்நுதன் மடந்தை
உயர்நிலை யுலக மவன்புக . . லரி
நீருடு சுளகிற் சீறிட நீக்கி
அழுத லானாக் கண்ணள்
மெழுகு மாப்பிகண் கலுழ்நீ ரானே.

திணையும் துறையும் அவை.

..................[2]தும்பிசேர்கீரனார் பாடியது. (௨௪௯)

(௨௫௦) குய்குரன் மலிந்த கொழுந்துவை யடிசில்
இரவலர்த் தடுத்த வாயிற் புரவலர்
கண்ணீர்த் தடுத்த தண்ணறும் பந்தர்க்
கூந்தல் கொய்து குறுந்தொடி நீக்கி
அல்லி யுணவின் மனைவியோ டினியே
புல்லென் றனையால் வளங்கெழு திருநகர்
வான்சோறு கொண்டு தீம்பால் வேண்டும்

பி - ம். [1]எக்கூர். [2]தும்பிசேர் சீரனார்.

முனித்தலைப் புதல்வர் தந்தை
தனித்தலைப் பெருங்காடு முன்னிய பின்னே.

திணையும் துறையும் அவை.

.........தாயங்கண்ணியார் பாடியது. (உ௫0)

(உ௫க) ஓவத் தன்ன விடனுடை வரைப்பிற்
பாவை யன்ன குறுந்தொடி மகளிர்
இழைநிலை நெகிழ்த்த மள்ளற் கண்டிகும்
கழைக்க ணெடுவரை யருவி யாடிக்
கான யானை தந்த விறகிற்
கடுந்தெறற் செந்தீ வேட்டுப்
புறந்தாழ் புரிசடை புலர்த்து வோனே.

திணை - வாகை; துறை - தாபதவாகை.

.........மாற்பித்தியார் பாடியது. (உ௫க)

(உ௫உ) கறங்குவெள் ளருவி யேற்றலி னிறம்பெயர்ந்து
தில்லை யன்ன புல்லென் சடையோ
டள்ளிலைத் தாளி கொய்யு மோனே
இல்வழங்கு மடமயில் பிணிக்கும்
சொல்வலை வேட்டுவ னாயினன் முன்னே.

திணையும் துறையும் அவை.

அவனை அவர் பாடியது. (உ௫உ)

(உ௫௩) என்றிறத் தவலங் கொள்ள லினியே
வல்வார் கண்ணி யிளையர் திளைப்ப
[1]நகாஅலென வந்த மாறே யெழாநெற்
பைங்கழை பொதிகளைந் தன்ன விளர்ப்பின்
வளையில் வறுங்கை யோச்சிக்
கிளையு ளொய்வலோ கூறுநின் னுரையே.

திணை - பொதுவியல்; துறை - முதுபாலை.

.... [2]குளம்பாதாயனார் பாடியது. (உ௫௩)

பி - ம். [1]நகாரென. [2]குளம்பாதயானார்.

(உருச) இளையரு முதியரும் வேறுபுலம் படர
எடுப்ப வெழாஅய் மார்பமண் புல்ல
இடைச்சுரத் திறுத்த மள்ள விளர்த்த
வளையில் வறுங்கை யோச்சிக் கிளையுள்
இன்ன னாயின னிளையோ னென்று
நின்னுரை [1]செல்லு மாயின் மற்று
[2]முன்னூர்ப் பழுனிய கோளி யாலத்துப்
புள்ளார் யாணர்த் தற்றே யென்மகன்
வளனுஞ் செம்மலு மெமக்கென நாளும்
ஆனாது புகழு மன்னை
யாங்கா குவள்கொ லளிய டானே.

திணையும் துறையும் அவை.
.........கயமனார் பாடியது. (உருச)

(உருரு) ஐயோ வெனின்யான் புலியஞ் சுவலே
[3]அணைத்தனன் கொளினே யகன்மார் பெடுக்க வல்லேன்
என்போற் பெருவிதிர்ப் புறுக நின்னை
இன்னா துற்ற வறனில் கூற்றே
நிரைவளை முன்கை பற்றி
வரைநிழற் [4]சேர்க நடத்திசிற் சிறிதே.

திணையும் துறையும் அவை.
...............வன்பரணர் பாடியது. (உருரு)

(உருசா) கலஞ்செய் கோவே கலஞ்செய் கோவே
அச்சுடைச் சாகாட் டாரம் பொருந்திய
சிறுவெண் பல்லி போலத் [5]தன்னொடு
சுரம்பல வந்த வெமக்கு மருளி
வியன்மல ரகன்பொழி லீமத் தாழி
அகலி தாக வனைமோ
நனந்தலை மூதூர்க் கலஞ்செய் கோவே.

திணையும் துறையும் அவை.
.... (உருசா)

பி - ம். [1]சொல்லு மாயின். [2]முன்னூர்.
[3]எடுத்தனன் கொளி னுய்த்தனென் கோனே மார்பெடுக்கல்லேன்.
[4]சேரநடத்தி. [5]தம்மொடு.

(உருஎ) செருப்பிடைச் [1]சிறுபர லன்னன் கணைக்கால்
அவ்வயிற் றகன்ற மார்பிற் பைங்கட்
[2]குச்சி னிரைத்த குரூஉமயிர் மோவாய்ச்
செவியிறந்து தாழ்தருங் கவுளன் வில்லொ
டியார்கொலோ வளியன் றானே தேரின்
ஊர்பெரி திகந்தன் றுமிலனே யரணெனக்
காடுகைக் கொண்டன் றுமிலனே காலைப்
புல்லா ரினநிரை செல்புற நோக்கிக்
கையிற் சுட்டிப் பையென வெண்ணிச்
சிலையின் மாற்றி யோனே யவைதாம்
மிகப்பல வாயினு மென்னா மெனைத்தும்
வெண்கோ டோன்றாக் குழிசியொடு
நாணுறை மத்தொலி கேளா தோனே.

திணை - வெட்சி; துறை - உண்டாட்டு.

.... (உருஎ)

(உருஅ) முட்காற் காரை [3]முதுபழ னேய்ப்பத்
தெறிப்ப விளைந்த [4]தீங்கந் தாரம்
நிறுத்த வாயந் தலைச்சென் றுண்டு
[5]பச்சூன் றின்று பைந்நிணம் பெருத்த
எச்சி லீர்ங்கை விற்புறந் திமிரிப்
புலம்புக் கனனே புல்லணற் காளை
ஒருமுறை யுண்ணா [6]வளைவைப் பெருநிரை
ஊர்ப்புற நிறையத் தருகுவன் யார்க்கும்
தொடுதே லோம்புமதி முதுகட் சாடி
[7]ஆதரக் கழுமிய துகளன்
காய்தலு முண்டக் கள்வெய் யோனே.

திணையும் துறையும் அவை.

..............உலோச்சனார் பாடியது. (உருஅ)

பி - ம். [1]செறுபால். [2]குச்சிநிரை......மேவாய். [3]முதுகனியேய்ப்ப. [4]தீங்கட்டாரம். [5]பைச்சூன். [6]வளைவை பெருநிரை. [7]ஆத்தா.

(உ௫௯) ஏறுடைப் பெருநிரை பெயர்தரப் பெயரா
திலைபுதை பெருங்காட்டுத் தலைகரந் திருந்த
வல்வின் மறவ ரொடுக்கங் காணாய்
செல்லல் செல்லல் சிறக்கநின் னுள்ளம்
முருகுமெய்ப் பட்ட புலைத்தி போலத்
தாவுபு தெறிக்கு மான்மேற்
புடையிலங் கொள்வாட் புனைகழ லோயே.

திணை-கரந்தை; துறை - செருமலைதல்; பிள்ளைப்பெயர்ச்சியுமாம்.

........கோடைபாடிய பெரும்பூதனுர் பாடியது. (உ௫௯)

(உ௬0) வளரத் தொடினும் வெளவுபு திரிந்து
விளரி யுறுதருந் தீந்தொடை நினையாத்
தளரு நெஞ்சந் தலைஇ மனையோள்
உளரும் கூந்த னோக்கிக் களர
கள்ளி நீழற் கடவுள் வாழ்த்திப்
பசிபடு மருங்குலை கசிபுகை தொழாஅக்
காணலென் கொல்லென வினவினை வரூஉம்
பாண கேண்மதி யாணரது நிலையே
புரவுத்தொடுத் துண்குவை யாயினு மிரவெழுந்
தெவ்வங் கொள்குவை யாயினு மிரண்டும்
கையுள போலுங் கடிதண் மையவே
முன்னூர்ப் பூசலிற் றோன்றித் தன்னூர்
[1]நெடுநிரை தழீஇய மீளி யாளர்
விடுகணை நீத்தந் துடிபுணை யாக
வென்றி தந்து கொன்றுகோள் விடுத்து
வையகம் புலம்ப வளைஇய பாம்பின்
வையெயிற் றுய்ந்த மதியின் மறவர்
கையகத் துய்ந்த கன்றுடைப் பல்லான்
நிரையொடு வந்த வுரைய னாகி
உரிகளை யரவ மானத் தானே
அரிதுசெல் லுலகிற் சென்றன னுடம்பே
கானச் சிற்றியாற் றருங்கரைக் [2]காலுற்றுக்
கம்பமொடு துளங்கிய [3]இலக்கம் போல

பி - ம். [1]நெடுவெறி. [2]காலுறக். [3]விலங்கு.

அம்பொடு துளங்கி யாண்டொழிந் தன்றே
உயரிசை வெறுப்பத் தோன்றிய பெயரே
மடஞ்சான் மஞ்ஞை யணிமயிர் சூட்டி
இடம்பிறர் கொள்ளாச் சிறுவழிப்
படஞ்செய் பந்தர்க் கன்மிசை யதுவே.

திணை - [1]அது; துறை - கையறுநிலை; [2]பாண்பாட்டுமாம்.

.... வடமோதங்கிழார் பாடியது. (௨௬௰)

(௨௬௧) அந்தோ வெந்தை யடையாப் பேரில்
வண்டுபடு நறவிற் றண்டா மண்டையொடு
வரையாப் பெருஞ்சோற்று [3]முரிவாய் முற்றம்
வெற்றியாற் றம்பியி னெற்றற் றாகக்
கண்டனென் மன்ற சோர்கவென் கண்ணே
வையங் காவலர் வளங்கெழு திருநகர்
மையல் [4]யானை யயாவுயிர்த் தன்ன
[5]நெய்யுலை சொரிந்த மையூ னோசை
புதுக்கண் மாக்கள் செதுக்க ணாரப்
பயந்தனை மன்னான் முன்னே யினியே
[6]பல்லா தழீஇய கல்லா வல்வில்
உழைக்குரற் கூகை யழைப்ப [7]வாட்டி
நாகுமுலை யன்ன நறும்பூங் கரந்தை
விரகறி யாளர் மரபிற் சூட்ட
நிரையிவட் டந்து நடுக லாகிய
வென்வேல் விடலை யின்மையிற் புலம்பிக்
கொய்ம்மழித் தலையொடு [8]கைம்மையுறக் கலங்கிய
கழிகல மகடூஉப் போலப்
புல்லென் றனையாற் பல்லணி யிழந்தே.

[9]திணையும் துறையும் அவை.

..................ஆவூர் மூலங்கிழார் பாடியது. (௨௬௧)

பி - ம். [1]பாடாண்டிணை; துறை - செருவிடைவீழ்தல்; கையறு நிலையுமாம். [2]பாடாண்பாட்டுமாம். [3]முரவுவாய் முற்றம் பெற்றியாற்று. [4]யானையவா. [5]நெய்யுலைச் சொரிந்த. [6]பல்லாத் தழீஇ. [7]ஆட்டி ஞகுமுலை. [8]கைமிகக். [9]திணை - கரந்தை; துறை - கையறுநிலை.

(உசுஉ) நறவுந் தொடுமின் விடையும் வீழ்மின்
பாசவ லிட்ட [1]புன்காற் பந்தர்ப்
புனறரு மிளமண னிறையப் பெய்ம்மின்
ஒன்னார் முன்னிலை முருக்கிப் பின்னின்று
நிரையொடு வரூஉ மென்னைக்
குழையோர் தன்னினும் பெருஞ்சா யலரே.

திணை - வெட்சி; துறை - உண்டாட்டு; தலைத்தோற்றமுமாம்.
..................மதுரைப் பேராலவாயார் பாடியது. (உசுஉ)

(உசுந) பெருங்களிற் றடியிற் றோன்று மொருகண்
இரும்பறை யிரவல சேறி யாயிற்
றொழாதனை கழித லோம்புமதி வழாது
வண்டுமேம் படூஉமிவ் வறநிலை யாறே
பல்லாத் திரணிரை பெயர்தரப் பெயர்தந்து
கல்லா விளையர் நீங்க நீங்கான்
வில்லுமிழ் கடுங்கணை மூழ்கக்
கொல்புனற் சிறையின் விலங்கியோன் கல்லே.

திணை - கரந்தை; துறை - கையறுநிலை.
.... (உசுந)

(உசுச) பரலுடை மருங்கிற் பதுக்கை [2]சேர்த்தி
மரல்வகுந்து தொடுத்த செம்பூங் கண்ணியொ
டணிமயிற் பீலி சூட்டிப் பெயர்பொறித்
தினிநட் டனரே கல்லுங் கன்றொடு
கறவை தந்து பகைவ ரோட்டிய
நெடுந்தகை கழிந்தமை [3]யறியா
தின்றும் வருங்கொல் பாணரது கடும்பே.

திணையும் துறையும் அவை.
.... [4]உறையூர் இளம்பொன்வாணிகனார் பாடியது. (உசுச)

(உசுரு) ஊர்நனி யிறந்த பார்முதிர் பறந்தலை
ஓங்குநிலை வேங்கை யொள்ளிணர் நறுவீப்
போந்தையந் தோட்டிற் புனைந்தனர் தொடுத்துப்

பி - ம். [1]பைங்கால். [2]சேர்த்து.
[3]அறியா நின்று மிவருங்கொல். [4]......ன் சாத்தன் கொற்றனார்.

பல்லான் கோவலர் படலை சூட்டக்
கல்லா யிணையே கடுமான் றோன்றல்
வானேறு புரையுநின் றாணிழல் வாழ்க்கைப்
பரிசிலர் செல்வ மன்றியும் விரிதார்க்
கடும்பகட் டியானை வேந்தர்
ஒடுங்கா வென்றியு நின்னொடு செலவே.

திணையும் துறையும் அவை. (உசுரு)

.........சோணாட்டு முகையலூர்ச் சிறுகருந்தும்பியார் பாடியது.

(உசுசு) பயங்கெழு மாமழை பெய்யாது மாறிக்
கயங்களி முளியுங் கோடை யாயினும்
புழற்கா லாம்ப லகலடை நீழற்
கதிர்க்கோட்டு நந்தின் சுரிமுக வேற்றை
நாகிள வளையொடு பகன்மணம் புகூஉம்
நீர்திகழ் கழனி நாடுகெழு பெருவிறல்
வான்றோய் நீள்குடை வயமான் சென்னி
சான்றோ ரிருந்த வவையத் துற்றோன்
ஆசா கென்னும் பூசல் போல
வல்லே களைமதி யத்தை யுள்ளிய
விருந்துகண் டொளிக்குந் திருந்தா வாழ்க்கைப்
[1]பொறிப்புண ருடம்பிற் றோன்றியென்
அறிவுகெட நின்ற நல்கூர் மையே.

திணை - பாடாண்டிணை; துறை - பரிசில்கடாநிலை.

சோழன் உருவப்பஃறேர் இளஞ்சேட்சென்னியைப் பெருங்குன்றூர் கிழார் பாடியது. (உசுசு)

*(உசுஎ)........ ....

*(உசுஅ)........ ....

பி - ம். [1]பொறியுணர்.

* இவ்வெண்களுக்குரிய பாட்டுக்கள், கிடைத்த கையெழுத்துப் பிரதிகளுள் ஒன்றிலும் காணப்படவில்லை.

(உசுகூ) குயில்வா யன்ன கூர்முகை [1]யதிரல்
பயிலா தல்கிய பல்காழ் மாலை
மையிரும் பித்தை பொலியச் சூட்டிப்
புத்தகற் கொண்ட புலிக்கண் வெப்பர்
ஒன்றிரு முறையிருந் துண்ட பின்றை
உவலைக் கண்ணித் துடியன் வந்தெனப்
பிழிமகிழ் வல்சி வேண்ட மற்றிது
[2]கொள்ளா யென்ப கள்ளின் வாழ்த்திக்
கரந்தை நீடிய வறிந்துமாறு செருவிற்
பல்லா னினநிரை தழீஇய வில்லோர்க்
கொடுஞ்சிறைக் குரூஉப்பருந் தார்ப்பத்
தடிந்துமாறு [3]பெயர்த்ததிக் கருங்கை வாளே.

திணை - வெட்சி; துறை - உண்டாட்டு.

ஔவையார். (உசுகூ)

(உஎ0) பன்மீ னிமைக்கு மாக விசும்பின்
இரங்கு [4]முரசி னினஞ்சால் யானை
நிலந்தவ வுருட்டிய நேமி யோரும்
சமங்கண் கூடித் தாம்வேட் பவ்வே
நறுவிரை துறந்த நாறு நரைத்தலைச்
சிறுவர் தாயே பேரிற் பெண்டே
நோகோ யானே நோக்குமதி நீயே
மறப்படை நுவலு மரிக்குரற் றண்ணுமை
இன்னிசை கேட்ட துன்னரு மறவர்
வென்றிதரு வேட்கையர் மன்றங் கொண்மார்
பேரம ருழந்த வெருவரு பறந்தலை
விழுநவி பாய்ந்த மரத்தின்
வாண்மிசைக் கிடந்த வாண்மையோன் றிறத்தே.

திணை - கரந்தை; துறை - கையறுநிலை.

கழாத்தலையார். (உஎ0)

பி - ம். [1]யதரல். [2]கொள்ளா னென்ப. [3]பெயர்த்தவிக்.
[4]முகிலி னினஞ்சால்.

(உஎக) [1]நீரற வறியா நிலமுதற் கலந்த
[2]கருங்குரா னொச்சிக் கண்ணார் குரூஉத்தழை
[3]மெல்லிழை மகளி ரைதக லல்குற்
றொடலை யாகவுங் கண்டன மினியே
வெருவரு குருதியொடு மயங்கி யுருவுகரந்
[4]தொறுவாய்ப் பட்ட தெரிய [5]லூன்செத்துப்
பருந்துகொண் டுகப்பயாங் கண்டனம்
மறம்புகன் மைந்தன் மலைந்த மாறே.

திணை - நொச்சி; துறை - செருவிடை வீழ்தல்.

[6]வெறிபாடிய காமக்கண்ணியார். (உஎக)

(உஎஉ) மணிதுணர்ந் தன்ன மாக்குர னொச்சி
போதுவிரி பன்மர னுள்ளுஞ் சிறந்த
காதல னன்[7]மர நீமற் றிசினே
கடியுடை வியனகர்க் காண்வரப் பொலிந்த
[8]தொடியுடை மகளி ரல்குலுங் கிடத்தி
காப்புடைப் புரிசை புக்குமா றழித்தலின்
ஊர்ப்புறங் கொடாஅ நெடுந்தகை
பீடுகெழு சென்னிக் கிழமையு நினதே.

திணையும் துறையும் அவை.

மோசிசாத்தனர். (உஎஉ)

(உஎங) மாவா ராதே மாவா ராதே
[9]எல்லார் மாவும் வந்தன வெம்மிற்
புல்லுளைக் குடுமிப் புதல்வற் றந்த
செல்வ னூரு மாவா ராதே
[10]இருபேர் யாற்ற வொருபெருங் கூடல்

பி - ம். [1]நீனற வறியா நிலமுதற் கரந்த.
[2]கருங்கா னொச்சிக் கண்ணார் குவவுத்தழை.
[3]மெல்லி மகளிர்க்கல்குற். [4]தெற்றுவாய்.
[5]லூரன் செத்துப் பருந்துகண் டுவப்பவும். [6]வெறியாடிய.
[7]மானீழற் றிசினே. [8]கொடியணிமகளிர், தொடையுடை.
[9]எல்லா மாவும். [10]இரும்பே ராற்ற லொருபெருங் கடலை.

விலங்கிடு பெருமரம் போல
[1]உலந்தன்று கொல்லவன் மலைந்த மாவே.

திணை - தும்பை; துறை - குதிரைமறம்.

எருமைவெளியனார். (உஎங)

(உஎச) நீலக் கச்சைப் பூவா ராடைப்
பீலிக் கண்ணிப் பெருந்தகை மறவன்
மேல்வருங் களிற்றொடு வேறுரந் தினியே
தன்னுந் [2]துரக்குவன் போலு மொன்னலர்
எஃகுடை வலத்தர் மாவொடு பரத்தரக்
கையின் வாங்கித் தழீஇ
மொய்ம்பி னூக்கி [3]மெய்க்கொண் டனனே.

திணை - அது; துறை - எருமைமறம்.

உலோச்சனார். (உஎச)

(உஎரு) கோட்டங் கண்ணியுங் கொடுந்திரை யாடையும்
வேட்டது சொல்லி வேந்தனைத் தொடுத்தலும்
ஒத்தன்று மாதோ விவற்கே செற்றிய
[4]திணிநிலை யலறக் கூவை போழ்ந்துதன்
வடிமா ணெஃகங் [5]கடிமுகத் தேந்தி
ஓம்புமி னோம்புமி னிவணென வோம்பாது
தொடர்கொள் யானையிற் குடர்கா றட்பக்
கன்றமர் கறவை மான
முன்[6]சமத் தெதிர்ந்ததன் றோழற்கு வருமே.

திணையும் துறையும் அவை.

ஒருஉத்தனார். (உஎரு)

(உஎகா) நறுவிரை துறந்த நரைவெண் கூந்தல்
[7]இரங்கா முன்ன திரங்குகண் வறுமுலைச்
செம்முது பெண்டின் காதலஞ் [8]சிறாஅன்

பி - ம். [1]உலந்தின்று. [2]துரக்குநன். [3]மொய்கொண்டனனே.
[4]திணிநிலை மலரக் கூழை. [5]கழிமுகத். [6]சமத் தொழிந்ததன்.
[7]ஈர்ங்கா ழன்ன திரங்குதலை. [8]சிறுன் முட்பாற் சில.

மடப்பா லாய்மகள் வள்ளுகிர்த் தெறித்த
குடப்பாற் சில்லுறை போலப்
படைக்குநோ யெல்லாந் தானு யினனே.

திணை - அது; துறை - தானைநிலை.

மதுரைப் பூதனிளநாகனார். (உஎசு)

(உஎஎ) மீனுண் கொக்கின் [1]றூவி யன்ன
வானரைக் கூந்தன் முதியோள் சிறுவன்
களிறெறிந்து பட்டன னென்னு முவகை
ஈன்ற ஞான்றினும் பெரிதே கண்ணீர்
[2]நோன்கழை துயல்வரும் [3]வெதிரத்து
[4]வான்பெயத் தூங்கிய சிதரினும் பலவே.

திணை - அது; துறை - உவகைக் கலுழ்ச்சி.

[5]பூங்கணுத்திரையார். (உஎஎ)

(உஎஅ) நரம்பெழுந் [6]துலறிய நிரம்பா மென்றோள்
முளரி மருங்கின் முதியோள் சிறுவன்
படையழிந்து மாறின னென்றுபலர் கூற
மண்டமர்க் [7]குடைந்தன னாயி னுண்டவென்
[8]முலையறுத் திடுவென் யானெனச் சினைஇக்
கொண்ட வாளொடு படுபிணம் பெயராச்
செங்களந் துழவுவோள் சிதைந்துவே றாகிய
படுமகன் கிடக்கை [9]காணூஉ
ஈன்ற ஞான்றினும் பெரிதுவந் தனளே.

திணையும் துறையும் அவை.

காக்கைபாடினியார் [10]நச்சேள்ளையார். (உஎஅ)

(உஎகூ) கெடுக சிந்தை கடிதிவ ளுணிவே
மூதின் மகளி ராதல் தகுமே

பி - ம். [1]வெண்சிறகன்ன. [2]கோன்கழையயலமரும்.
[3]வெதிரத்துச்சிமையத்து, வெதிர்......வானலியற் றூங்கிய.
[4]வான்பெயற் றூங்கிய. [5]பூங்கண்ணுத்திரை [6]துூறிய.
[7]குலைந்தனனாயின். [8]முளையறுத்திடுகுவன். [9]காணுவீன்ற.
[10]நெச்செள்ளையார் நச்செள்ளையார்.

மேனா ளுற்ற செருவிற் கிவடன்னை
யானை யெறிந்து களத்தொழிந் தனனே
[1]நெருந லுற்ற செருவிற் கிவள்கொழுநன்
பெருநிரை விலக்கி யாண்டுப்பட் டனனே
இன்றும், செருப்பறை கேட்டு விருப்புற்று [2]மயங்கி
வேல்கைக் கொடுத்து [3]வெளிது விரித் துடீஇப்
பாறுமயிர்க் குடுமி யெண்ணெய் நீவி
ஒருமக னல்ல தில்லோள்
செருமுக நோக்கிச் செல்கென விடுமே.

திணை - வாகை ; துறை - மூதின்முல்லை.

ஒக்கூர் மாசாத்தியார். (உஎகூ)

(உஅ௦) என்னை [4]மார்பிற் புண்ணும் வெய்ய
நடுநாள் வந்து தும்பியுந் துவைக்கும்
நெடுநகர் வரைப்பின் விளக்கு நில்லா
[5]துஞ்சாக் கண்ணே துயிலும் வேட்கும்
அஞ்சுவரு குராஅற் குரலுந் தூற்றும்
நென்னீ ரெறிந்து விரிச்சி யோர்க்கும்
செம்முது பெண்டின் சொல்லு நிரம்பா
துடிய பாண பாடுவல் விறலி
என்னா குவிர்கொ லளியிர் நுமக்கும்
இவணுறை [6]வாழ்க்கையோ வரிதே யானும்
மண்ணுறு மழித்தலைத் தெண்ணீர் வாரத்
தொன்றுதா முடுத்த வம்பகைத் தெரியற்
சிறுவெள் ளாம்ப லல்லி யுண்ணும்
கழிகல மகளிர் போல
வழிநினைந் திருத்த லதனினு மரிதே.

திணை - பொதுவியல்; துறை - ஆனந்தப்பையுள்.

மாறோக்கத்து நப்பசலையார். (உஅ௦)

பி - ம். [1]நெருநை யுற்ற. [2]முயங்கி. [3]வெளிறு.
[4]மார்பமாப் புண்ணும். [5]துஞ்சா கண்ண.
[6]வாட்கையோ......வறிதே.

(உஅக) [1]தீங்கனி யிரவமொடு வேம்பு [2]மனைச் செரீஇ
வாங்குமருப் பியாழொடு பல்லியங் கறங்கக்
[3]கைபயப் பெயர்த்து மையிழு திழுகி
ஐயவி சிதறி யாம்ப லூதி
இசைமணி யெறிந்து காஞ்சி பாடி
நெடுநகர் வரைப்பிற் கடிநறை புகைஇக்
[4]காக்கம் வம்மோ காதலந் தோழி
வேந்துறு விழுமந் தாங்கிய
பூம்பொறிக் [5]கழற்கா னெடுந்தகை புண்ணே.

திணை - காஞ்சி; துறை - பேய்க்காஞ்சி.

அரிசில்கிழார். (உஅக)

(உஅஉ) எஃகுளங் கழிய விருநில மருங்கின்
அருங்கட னிறுத்த பெருஞ்செ யாளனை
யாண்டுள னோவென வினவுதி யாயிற்
. . . .
வருபடை தாங்கிய கிளர்தா ரகலம்
அருங்கட னிறுமார் [6]வயவ ரெறிய
உடம்புந் தோன்றா வுயிர்கெட் டன்றே
மலையுநர் மடங்கி மாறெதிர் [7]கழியத்
. . . .
அலகை [8]போகிச் சிதைந்துவே றாகிய
பலகை யல்லது களத்தொழி யாதே
சேண்விளங்கு நல்லிசை நிறீஇ
நாநவில் புலவர் வாயு ளானே.

திணை - . . . .

பாலை பாடிய பெருங்கடுங்கோ. (உஅஉ)

பி - ம். [1]தீங்கனி யரவமொடு, தீங்கணவிரமொடு.
[2]மனைசெரீஇயாங்கு மருப்பியானை.
[3]பையப் பெயர்த்து மைவிழு திழுகி. [4]காக்க வம்மோ.
[5]உடையநெடுந். [6]வாய வெறிய. [7]கழறிய. [8]போற்கச்.

(உஅங) ஒண்செங் [1]குரலித் தண்கயங் [2]கலங்கி
வாளை [3]நீர்நாய் நாளிரை பெறூஉப்
பௌவ வுறையள வா....வி மயக்கி
மாறுகொண் முதலையொ டூழ்மாறு [4]பெயரும்
அழும்பிலனடாங்காறகையுமென்றும் (?)
வலம்புரி கோசர வைக்களத் தானும்
மன்று ளென்பது கெட....ானே பாங்கற்
கார்சூழ் குறட்டின் வேணிறத் [5]திங்க
உயிர்புறப் படாஅ வளைவைத் தெறுவரத்
தெற்றிப் பாவை திணிமண லயரும்
மென்றோண் மகளிர் நன்று புரப்ப
........ண்ட பாசிலைக்
[6]கமழ்பூந் தும்பை நுதலசைத் தோனே.

திணை - தும்பை; துறை - [7]பாண்பாட்டு.

[8]அடைநெடுங்கல்வியார். (உஅங)

(உஅச) வருகதில் வல்லே வருகதில் வல்லென
வேந்துவிடு விழுத்தூ தாங்காங் கிசைப்ப
நூலரி மாலை [9]சூடிக் காலிற்
றமியன் வந்த மூதி லாளன்
அருஞ்சமந் தாங்கி முன்னின் றெறிந்த
ஒருகை யிரும்பிணத் தெயிறு [10]மிறையாகத்
[11]திரிந்த வாய்வா டிருத்தாத்
[12]தனக்கிரிந் தானைப் பெயர்புற நகுமே.

திணையும் துறையும் அவை.

ஓரம்போகியார். (உஅச)

பி - ம். [1]குரவித். [2]களைநீர் காய, களையுளானே.
[3]மாநீர்நாய் நாளிரைபெறூஉம யௌவவவுறையளவா.
[4]கதிர்பெயருமழும்பிலனண்டாங்காற்கையும்.
[5]திங்கணுயிறுயிர்ப் படாஅ. [6]கவிழ். [7]பாடாண்பாட்டு.
[8]அண்டநெடுங்க...யார். [9]சூட்டிநங் காலிற் றனியன்.
[10]பிறையாக. [11]திருந்த.
[12]தனக்கிருந் தானை, தனக்கிரிதானைபெயர்.

(உஅரு) பாசறை யீரே பாசறை யீரே
துடியன் கையது வேலே யடிபுணர்
வாங்கிரு மருப்பிற் றீந்தொடைச் சீறியாழ்ப்
பாணன் கையது தோலே காண்வரக்
கடுந்தெற்று மூடையின் ......
வாடிய மாலை மலைந்த சென்னியன்
வேந்துதொழி லயரு மருந்தலைச் சுற்றமொடு
[1]நெடுநகர் வந்தென விடுகணை மொசித்த
[2]மூரி வெண்டோள் ....
சேறுபடு குருதிச் [3]செம்மலுக் கோஒ
மாறுசெறு நெடுவேன் மார்புளம் போக
நிணம்பொதி கழலொடு நிலஞ்சேர்ந் தனனே
அதுகண்டு, [4]பரந்தோ ரெல்லாம் புகழத் தலைபணிந்
திறைஞ்சி யோனே குருசில் பிணங்குகதிர்
அலமருங் கழனித் தண்ணடை யொழிய
[5]இலம்பா டொக்கற் றலைவற்கோர்
கரம்பைச் [6]சீறூர் நல்கின னெனவே.

திணை - வாகை; துறை - ....முல்லை.

அரிசில்கிழார். (உஅரு)

(உஅசு) வெள்ளை வெள்யாட்டுச் செச்சை போலத்
தன்னோ ரன்ன விளைய ரிருப்பப்
பலர்மீது [7]நீட்டிய மண்டையென் சிறுவனைக்
கால்கழி கட்டிலிற் கிடப்பித்
தூவெள் ளறுவை [8]போர்ப்பித் திலதே.

திணை - கரந்தை ; துறை - வேத்தியல்.

ஔவையார். (உஅசு)

பி - ம். [1]நடுநகர். [2]மூரி வெண்டோல். [3]செம்பறுக் கோஒ மாறுபடு நெடு. [4]பார்த்தோர். [5]வலப்பாடு. [6]செறூா, களறூர். [7]நீட்டிப்பண்டையெண். [8]போர்ப்பித்திலனே, போர்ப்பித் திலவே.

(உ௱எ) துடியெறியும் புலைய
எறிகோல் கொள்ளு [1]மிழிசின
கால மாரியி னம்பு தைப்பினும்
வயற்கெண்டையின் வேல்பிறழினும்
பொலம்புனை யோடை யண்ணல் [2]யானை
இலங்குவான் மருப்பி னுதிமடுத் தூன்றினும்
ஓடல் செல்லாப் பீடுடை யாளர்
நெடுநீர்ப் பொய்கைப் பிறழிய வாளை
நெல்லுடை நெடுநகர்க் கூட்டுமுதற் [3]புரளும்
தண்ணடை பெறுதல் யாவது படினே
மாசின் மகளிர் [4]மன்ற னன்றும்
உயர்நிலை யுலகத்து நுகர்ப வதனால்
வம்ப வேந்தன் றானை
இம்பர் நின்றுங் காண்டிரோ வரவே.

திணை - கரந்தை ; துறை - நீண்மொழி.

சாத்தந்தையார். (உ௱எ)

(உ௱அ) மண்கொள வரிந்த வைந்நுதி மருப்பின்
அண்ண னல்லே றிரண்டுடன் மடுத்து
வென்றதன் பச்சை சீவாது போர்த்த
திண்பிணி முரச மிடைப்புலத் திரங்க
ஆரமர் மயங்கிய ஞாட்பிற் றெறுவர
நெடுவேல் பாய்ந்த நாணுடை நெஞ்சத்
[5]தருகுகை...... ......மன்ற
குருதியொடு துயல்வரு மார்பின்
முயக்கிடை யீயாது மொய்த்தன பருந்தே.

திணை - தும்பை ; துறை - மூதின்முல்லை.

கழாத்தலையார். (உ௱அ)

(உ௱கூ) ஈரச் செவ்வி யுதவின வாயினும்
பல்லெருத் துள்ளு நல்லெருது நோக்கி

பி - ம். [1]அறிசன, காலமளியினம்புகைப்பினும். [2]யாஅனை யிலங்குவாண். [3]பிறழும். [4]மண்ணநன்று. [5]தருகுறை.

வீறுவீ றுயு முழவன் போலப்
பீடுபெறு தொல்குடிப் பாடுபல தாங்கிய
[1]மூதி லாள ருள்ளுங் காதலிற்
றனக்குமுகந் [2]தேந்திய பசும்பொன் மண்டை
[3]இவற்கீ கென்னு மதுவுமன் றிசினே
கேட்டியோ வாழி பாண பாசறைப்
[4]பூக்கோ ளின்றென் றறையும்
மடிவாய்த் தண்ணுமை யிழிசினன் குரலே.

திணை - ....; துறை......மூல்லை.

கழாத்தலையார். (உஅகூ)

(உகூO) [5]இவற்கீத் துண்மதி கள்ளே சினப்போர்
இனக்களிற் றியானை [6]யியறேர்க் குருசில்
நுந்தை தந்தைக் கிவன்றந்தை தந்தை
எடுத்தெறி ஞாட்பி னிமையான் றச்சன்
அடுத்தெறி [7]குறட்டி னின்றுமாய்ந் தனனே
மறப்புகழ் நிறைந்த மைந்தினோ னிவனும்
[8]உறைப்புழி யோலை போல
[9]மறைக்குவன் பெருமநிற் குறித்துவரு வேலே.

திணை - கரந்தை; துறை - குடிநிலையுரைத்தல்.

ஔவையார். (உகூO)

(உகூக) சிறாஅஅர் [10]துடியர் பாடுவன் மகாஅஅர்
தூவெள் ளறுவை மாயோற் குறுகி
[11]இரும்புட் பூச லோம்புமின் யானும்
[12]விளரிக் கொட்பின் வெண்ணரி கடிகுவென்

பி - ம். [1]முரண்டலை களித்தமியருங், மூளைதலை, கழிதமீருங்.
[2]தெய்திய. [3]இவற்கீதென்னு தறகுமனறிசினே.
[4]பூக்கோளினறிரையும். [5]எற்கீத்து. [6]யியற்றேர்.
[7]குடடினிதுனறுமாதனனே. [8]உறைப்பெயலோலை.
[9]மறைவல...காந்தை. [10]துடியபாடு.
[11]இரும்புபூட்பூசல், இரும்பூட் பூசல்.
[12]விளரிக் கோடின வெண்ணரிகடிவென்.

[1]என்போற் பெருவிதுப் புறுக வேந்தே
கொன்னுஞ் சாதல் வெய்யோற்குத் தன்றலை
மணிமருண் மாலை சூட்டி யவன்றலை
ஒருகாழ் மாலை தான்மலைந் தனனே.

திணை - அது; துறை - வேத்தியல்.
நெடுங்கழத்துப் பரணர். (உகூக)

(உகூஉ) [2]வேந்தற் கேந்திய தீந்தண் ணறவம்
யாந்தனக் குறுமுறை வளாவ விலக்கி
வாய் [3]வாள் பற்றி நின்றனெ னென்று
சினவ லோம்புமின் சிறுபுல் லாளர்
ஈண்டே போல வேண்டுவ னாயின்
என்முறை வருக வென்னான் கம்மென
எழுதரு பெரும்படை விலக்கி
ஆண்டு நிற்கு மாண்டகை யன்னே.

திணை - வஞ்சி; துறை - பெருஞ்சோற்றுநிலை.
விரிச்சியூர் நன்னாகனார். (உகூஉ)

(உகூங) [4]நிறப்புடைக் கொல்கா யானை மேலோன்
[5]குறும்பர்க் கெறியு மேவற் றண்ணுமை
நாணுடை மாக்கட் கிரங்கு மாயின்
[6]எம்மினும் பேரெழி லிழந்து [7]வினையெனப்
பிறர்மனை [8]புகுவள் கொல்லோ
[9]அளிய டானே பூவிலைப் பெண்டே.

திணை - காஞ்சி ; துறை - பூக்கோட்காஞ்சி.
[10]நொச்சி நியமங்கிழார். (உகூங)

(உகூச) வெண்குடை மதிய மேனிலாத் திகழ்தரக்
[11]கண்கூ டிறுத்த கடன்மருள் பாசறைக்

பி - ம். [1]எம்போல். [2]வேந்தர்க்கு. [3]வாள மற்றி நின்றனன்.
[4]நிறப்புடைகலனை மேலோனதுவமபறகெறியும்.
[5]குறும்பற்கெறியுமோவற், குறும்பறவெறியும். [6]எம்மிநும்.
[7]விலையெனப். [8]புகுவர். [9]ஒளியடானே.
[10]நொசசிநீயககிழார். [11]கண்கூ டியத்த.

குமரிப்படை [1]தழீஇய கூற்றுவினை யாடவர்
தமர்பிற [2]ரறியா வமர்மயங் கழுவத்
திறையும் பெயருந் [3]தோற்றி நுமருள்
நாண்முறை [4]தபுத்தீர் வம்மி னீங்கெனப்
போர்மலைந் [5]தொருசிறை நிற்ப யாவரும்
அரவுமிழ் மணியிற் குறுகார்
[6]நிரைதார் மார்பினின் கேள்வனைப் பிறரே.

திணை - தும்பை; துறை - தானைமறம்.

[7]பெருந்தலைச்சாத்தனார். (உகூச)

(உகூரு) கடல்கிளர்ந் தன்ன கட்டூர் நாப்பண்
வெந்துவாய் மடித்து வேறலைப் [8]பெயரித்
[9]தோடுகைத் தெழுதரூஉத் துரந்தெறி ஞாட்பின்
வருபடை போழ்ந்து [10]வாய்ப்பட விலங்கி
இடைப்படை யழுவத்துச் சிதைந்துவே றாகிய
சிறப்புடை யாளன் மாண்புகண் டருளி
[11]வாடுமுலை யூறிச் சுரந்தன
ஓடாப் பூட்கை விடலை தாய்க்கே.

திணை - அது ; துறை - உவகைக் கலுழ்ச்சி.

ஔவையார். (உகூரு)

(உகூசா) வேம்புசினை யொடிப்பவுங் காஞ்சி பாடவும்
நெய்யுடைக் கைய ரையவி புகைப்பவும்
எல்லா மனையுங் [12]கல்லென் றனவே
வெந்துடன் றெறிவான் [13]கொல்லோ
நெடிதுவந் [14]தன்றா னெடுந்தகை தேரே.

திணை - வாகை ; துறை - ஏறாண்முல்லை.

வெள்ளைமாளர். (உகூசா)

பி - ம். [1]தழீஇக் கூற்று. [2]ரறியா தமர்.
[3]தோற்றினு நுமரு ணான். [4]தவத்தீர். [5]தொருதிற.
[6]நிரைகாழ் மாலையெங்கேள் வனை. [7]பெருத்தலைச்சாத்தனார்.
[8]பெயரதொழுகைத் தெழுதரு நடுதூரந்தேறி, பெயரித்தோறுவைத் தெழுதருந். [9]தோறுடைத்து, தோறுணித்து. [10]வாய்ப்படை.
[11]மாடு. [12]கல்லென்றவ்வே. [13]கொல்லெனை. [14]தன்றா நெடுந்.

(உகஎ) பெருநீர் மேவற் றண்ணடை யெருமை
இருமருப் புறழு [1]நெடுமா ணொற்றின்
பைம்பய றுதிர்த்த கோதின் [2]கோலணைக்
கன்றுடை மரையாத் துஞ்சுஞ் சீறூர்க்
கோளிவண் வேண்டேம் புரவே [3]நாரரி
நறைமுதிர் சாடி நறவின் வாழ்த்தித்
[4]துறைநனி கெழீஇக் கம்பு ளீனும்
தண்ணடை பெறுதலு முரித்தே [5]வைந்நுதி
நெடுவேல் பாய்ந்த மார்பின்
மடல்வன் போந்தையி னிற்கு மோர்க்கே.

திணை - வெட்சி; துறை - உண்டாட்டு.

.... (உகஎ)

(உகஅ) எமக்கே கலங்க றருமே தானே
தேற லுண்ணு மன்னே நன்றும்
இன்னான் மன்ற வேந்தே யினியே
நேரா ராரெயின் முற்றி
வாய்மடித் [6]துரறிநீ முந்தென் னானே.

திணை - கரந்தை; துறை - நெடுமொழி.

[7]ஆலியார். (உகஅ)

(உகக) பருத்தி வேலிச் சீறூர் மன்னன்
[8]உழுத்தத ருண்ட வோய்நடைப் புரவி
கடன்மண்டு தோணியிற் படைமுகம் போழ
நெய்ம்மிதி [9]யருந்திய கொய்சுவ லெருத்திற்
[10]றண்ணடை மன்னர் தாருடைப் புரவி

பி - ம். [1]நெடுமா னெற்றின்.
[2]கோலணைக் குன்றுடை...துஞ்சூர்க்கோளி.
[3]நாரிநிறைமுதிராடிநறவின. [4]துறைநனிக் கொந்தண்.
[5]வைந்நுனை. [6]துரறிய நீமுந் தெனவே. [7]ஆனியார், ஆவியார்.
[8]உழுத்த ருண்ட, உழுத்ததழுண்ட வொய. [9]யருத்தகொய், யருந்தக்கொய். [10]தண்ணடை மன்னர்தாருடைக் கலிமான்.

அணங்குடை முருகன் கோட்டத்துக்
[1]கலந்தொடா மகளிரி னிகழ்ந்துநின் றவ்வே.

திணை - நொச்சி; துறை - குதிரைமறம்.

பொன்முடியார். (௨௯௯)

(௩௦௦) தோரூ தோரூ வென்றி தோலொடு
[2]துறுகன் மறையினு முய்குவை போலாய்
நெருந லெல்லைநீ யெறிந்தோன் றம்பி
[3]அகற்பெய் குன்றியிற் சுழலுங் கண்ணன்
பேரூ ரட்ட கள்ளிற்
[4]கோரிற் கோயிற் றேருமா னின்னே.

திணை - தும்பை; துறை - தானைமறம்.

அரிசில்கிழார். (௩௦௦)

(௩௦௧) பல்சான் றீரே பல்சான் றீரே
குமரி மகளிர் கூந்தல் புரைய
அமரி னிட்ட வருமுள் வேலிக்
கல்லென் பாசறைப் பல்சான் றீரே
முரசுமுழங்கு [5]தானைநு மரசு மோம்புமின்
ஒளிறேந்து மருப்பினுங் களிறும் போற்றுமின்
எனை [6]நாட் டங்குநும் போரே [7]யனைநாள்
எறியா ரெறிதல் யாவண தெறிந்தோர்
எதிர்சென் றெறிதலுஞ் [8]செல்லா னதனால்
[9]அறிந்தோர் யாரவன் கண்ணிய பொருளே
பலமென் றிகழ்த லோம்புமி னுதுக்காண்
நிலனளப் பன்ன நில்லாக் குறுநெறி
வண்பரிப் புரவிப் பண்புபா ராட்டி
[10]எல்லிடைப் படர்தந் தோனே கல்லென

பி - ம். [1]கலங்கொடா...நின்றனவே. [2]துறுகண்மறை. [3]கற்பெய். [4]போறரிற் கோரிற் றேரு, கோரிற்கோரிற். [5]தானையு மரசும். [6]நாட்டாகு. [7]யனைநான். [8]சொல்லானதனால். [9]அறிந்தோ ராயவன். [10]எல்லிடப் பட்டாதந்தோனே.

வேந்தூர் யானைக் கல்ல
தேந்துவன் [1]போலான்ற னிலங்கிலை வேலே.

திணையும் துறையும் அவை.

ஆவூர்மூலங்கிழார். (௩௦௧)

(௩௦௨) வெடிவேய் கொள்வது போல வோடித்
[2]தாவு புகளு மாவே பூவே
விளங்கிழை மகளிர் கூந்தற் கொண்ட
நரந்தப் பல்காழ்க் கோதை [3]சுற்றிய
ஐதமை பாணி வணர்கோட்டுச் சீறியாழ்க்
[4]கைவார் நரம்பின் பாணர்க் கோக்கிய
நிரம்பா வியல்பிற் கரம்பைச் சீறூர்
நோக்கினர்ச் செகுக்குங் காளை [5]யூக்கி
[6]வேலி னட்ட களிறுபெயர்த் தெண்ணின்
விண்ணிவர் விசும்பின் மீனும்
தண்பெய லுறையு முறையாற் றாவே.

திணை - அது; துறை - குதிரைமறம்.

[7]வெறிபாடிய காமக்கண்ணியார். (௩௦௨)

(௩௦௩) நிலம்பிறக் கிடுவது [8]போற்குளம்பு கடையூஉ
உள்ள மொழிக்கும் [9]கொட்பின் மான்மேல்
எள்ளுநர்ச் செகுக்குங் காளை கூர்த்த
[10]வெந்திற லெஃகம் நெஞ்சுவடு விளைப்ப
[11]ஆட்டிக் காணிய வருமே நெருநை
உரைசால் சிறப்பின் [12]வேந்தர் முன்னர்க்
[13]கரைபொரு முந்நீர்த் [14]திமிலிற் போழ்ந்தவர்

பி - ம். [1]போலா னினங்கிலை. [2]தாவ வுகளும்.
[3]சுற்றி யைதமை. [4]கைகவர் நரம்பின். [5]யூக்கு.
[6]வேலினிட்ட. [7]வெறிபா பாடிய காமக்கணியார்.
[8]போற்குளங்குடையூ. [9]கொடைபின் மான. [10]வெங்தெறல்.
[11]வாடிக் காணிய, வாட்டிடக்காணிய.
[12]வேந்தன், வேந்தர்தாமுன்னர்க் கரைபொரு முன்னர்.
[13]கங்கரைபொருமுன்னீர். [14]திரையிற்.

கயந்தலை மடப்பிடி புலம்ப
[1]இலங்குமருப் பியானை யெறிந்த வெற்கே.

திணையும் துறையும் அவை.

எருமைவெளியனார். (௩௱௩)

(௩௱௪) கொடுங்குழை மகளிர் கோதை [2]சூட்டி
[3]நடுங்கு [4]பணிக் களைஇயர் நாரரி பருகி
வளிதொழி லொழிக்கும் வண்பரிப் புரவி
பண்ணற்கு விரைதி நீயே நெருநை
எம்முற் றப்பியோன் றம்பியொ டோராங்கு
[5]நாளைச் [6]செய்குவெ னமரெனக் கூறிப்
[7]புன்வயி றருத்தலுஞ் செல்லான் [8]பன்மான்
கடவு மென்ப பெரிதே யதுகேட்டு
வலம்படு [9]முரசின் வெல்போர் [10]வேந்தன்
இலங்கிரும் பாசறை நடுங்கின்
றிரண்டா காதவன் கூறிய தெனவே.

திணையும் துறையும் அவை.

அரிசில்கிழார். (௩௱௪)

(௩௱௫) வயலைக் கொடியின் வாடிய [11]மருங்குல்
உயவ லூர்திப் பயலைப் பார்ப்பான்
எல்லி வந்து நில்லாது புக்குச்
[12]சொல்லிய சொல்லோ சிலவே யதற்கே
ஏணியுஞ் சீப்பு மாற்றி
மாண்வினை யானையு மணி [13]களைந் தனவே.

திணை - வாகை; துறை - பார்ப்பனவாகை.

[14]மதுரைவேளாசான். (௩௱௫)

பி - ம். [1]இடு மருப்பியானை. [2]சூடி.
[3]நடுங்குமணி களையார் நாரி பருகி, நடுக்குமணிகளையா நாளரிபருகி.
[4]பணிக்கசாஅய். [5]நாடனைச்.
[6]செய்குவமமரெனக், செய்குவனமரெனக்.
[7]புன்மயிருகுத்தலுஞ் செய்யான் வன்மான், புன்மையிற்.
[8]பண்மாண். [9]முரசில் வெல். [10]வேந்த ரிலங்கிரும்.
[11]மருங்கின், மருங்கினுயவ. [12]சொல்லியது.
[13]களைந்தனனே, களந்தனனே. [14]மதவேளரசன்.

(௩௦௬) களிறுபொரக் [1]கலங்கு [2]கழன்முள் வேலி
அரிதுண் கூவ லங்குடிச் சீறூர்
ஒலிமென் கூந்த லொண்ணுத லரிவை
நடுகற் கைதொழுது பரவு மொடியாது
விருந்தெதிர் பெறுகதில் யானே யென்னையும்
ஒ.................... வேந்தனொடு
நாடுதரு விழுப்பகை யெய்துக வெனவே.

திணை - அது; துறை - மூதின்முல்லை.
அள்ளூர்நன் முல்லையார். (௩௦௬)

(௩௦௭) ஆசா கெந்தை யாண்டுளன் கொல்லோ
குன்றத் தன்ன களிற்றொடு பட்டோன்
[3]வம்பலன் போலத் தோன்று முதுக்காண்
வேனல் வரியணில் வாலத் தன்ன
கான வூகின் கழன்றுகு முதுவீ
அரியல் வான்குழற் சுரியற் றங்க
நீரும் புல்லு [4]மீயா துமணர்
யாருமி லொருசிறை முடத்தொடு துறந்த
வாழா வான்பக டேய்ப்பத் [5]தெறுவர்
[6]பேருயிர் கொள்ளு [7]மாதோ வதுகண்டு
வெஞ்சின யானை வேந்தனு மிக்களத்
தெஞ்சலிற் சிறந்தது பிறிதொன் றில்லெனப்
பண்கொளற் கருமை நோக்கி
நெஞ்சற வீழ்ந்த புரைமை யோனே.

திணை - தும்பை; துறை - களிற்றுடனிலை.
.... (௩௦௭)

(௩௦௮) பொன்வார்ந் தன்ன புரியடங்கு நரம்பின்
மின்னேர் பச்சை மிஞிற்றுக்குரற் சீறியாழ்
நன்மை நிறைந்த நயவரு பாண
சீறூர் மன்னன் சிறியிலை யெஃகம்

பி - ம். [1]கலங்கி. [2]கன்முன். [3]வம்பல போலத்.
[4]மீயா துமன்ற. [5]தெறுவவர், தெறுவா.
[6]பேருயிர்க். [7]மாதோவ......கெகள.

வேந்தூர் யானை யேந்துமுகத் ததுவே
வேந்துடன் றெறிந்த [1]வேலே யென்னை
சாந்தா ரகல முளங்கழிந் தன்றே
உளங்கழி சுடர்ப்படை யேந்திநம் [2]பெருவிறல்
ஓச்சினன் றுரந்த காலை [3]மற்றவன்
புன்றலை மடப்பிடி நாணக்
குஞ்சர மெல்லாம் புறக்கொடுத் தனவே.

திணை - வாகை; துறை - மூதின்முல்லை.

கோவூர்கிழார். (௩0௮)

(௩0௯) இரும்பு[4]முகஞ் சிதைய நூறி யொன்னார்
இருஞ்சமங் கடத்த லேனோர்க்கு மெளிதே
நல்லரா வுறையும் புற்றம் போலவும்
கொல்லேறு திரிதரு மன்றம் போலவும்
ஆற்றருந் துப்பின் மாற்றோர் பாசறை
[5]உளனென வெரூஉ மோரொளி
வலனுயர் நெடுவேல் [6]என்னைகண் ணதுவே.

திணை - தும்பை; துறை - நூழிலாட்டு.

மதுரையிளங்கண்ணிக் கௌசிகனார். (௩0௯)

(௩௧0) பால்கொண்டு மடுப்பவு முண்ணா னாகலிற்
செறாஅ தோச்சிய சிறுகோ லஞ்சியொ
டுயவொடு வருந்து மன்னே யினியே
புகர்நிறங் கொண்ட களிறட் டானான்
முன்னாள் வீழ்ந்த வுரவோர் மகனே
உன்னில னென்னும் புண்ணொன் றம்பு
மானுளை யன்ன குடுமித்
தோன்மிசைக் கிடந்த [7]புல்லண லோனே.

திணையும் துறையும் அவை.

பொன்முடியார். (௩௧0)

பி - ம். [1]வேலேயன்னை. [2]பெருவ...வாபுன்றலைமடப்பிடி.
[3]மற்றவர். [4]முகளு...யொன்.
[5]உளனேவரூஉம், உளனெனவெரூஉம்.
[6]லென்னைக்கண, லென்னைக் கண்ணதுவே. [7]புல்லனலோனே.

(ஙகக) களர்ப்படு கூவற் றோண்டி நாளும்
புலைத்தி கழீஇய தூவெள் ளறுவை
தாதெரு [1]மறுகின் மாசுண விருந்து
பலர்குறை செய்த மலர்தா ரண்ணற்
கொருவரு மில்லை மாதோ செருவத்துச்
சிறப்புடைச் செங்கண் புகையவோர்
தோல்கொண்டு மறைக்குஞ் [2]சால்புடை யோனே.

திணை - அது; துறை - பாண்பாட்டு.
ஔவையார். (ஙகக)

(ஙகஉ) ஈன்று புறந் தருத லென்றலைக் கடனே
சான்றோ னாக்குத றந்தைக்குக் கடனே
[3]வேல்வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே
[4]நன்னடை நல்கல் வேந்தற்குக் கடனே
ஒளிறு [5]வா ளருஞ்சம முருக்கிக்
களிறெறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே.

திணை - வாகை; துறை - மூதின்முல்லை.
பொன்முடியார். (ஙகஉ)

(ஙகங) அத்த நண்ணிய நாடுகெழு பெருவிறல்
கைப்பொருள் யாதொன்று மிலனே நச்சிக்
காணிய சென்ற விரவன் மாக்கள்
[6]களிறொடு நெடுந்தேர் வேண்டினுங் [7]கடவ
உப்பொய் சாகாட் டுமணர் காட்ட
கழிமுரி குன்றத் தற்றே
எள்ளமை வின்றவ னுள்ளிய பொருளே.

திணை - அது; துறை - வல்லாண்முல்லை.
மாங்குடிகிழார். (ஙகங)

(ஙகச) மனைக்குவிளக் காகிய வாணுதல் கணவன்
முனைக்குவரம் பாகிய வென்வே னெடுந்தகை
நடுகற் பிறங்கிய வுவலிடு பறந்தலைப்

பி - ம். [1]மறுகிறன. [2]சால்புடை யோரே. [3]வேலடித்து. [4]தண்ணடை, ந......ன்னடை. [5]வாள்வெஞ்சம. [6]களிறொடு கடுந்தேர். [7]கடல, கடவு.

புன்காழ் நெல்லி வன்புலச் சீறூர்க்
குடியு மன்னுந் தானே கொடியெடுத்து
[1]நிறையழிந் தெழுதரு தானைக்குச்
சிறையுந் தானேதன் னிறைவிழு முறினே.

திணையும் துறையும் அவை.

ஐயூர் முடவனார். (௱௧௪)

(௱௧௫) உடைய னாயி னுண்ணவும் வல்லன்
கடவர் மீது மிரப்போர்க் கீயும்
மடவர் மகிழ்துணை நெடுமா னஞ்சி
இல்லிறைச் செரீஇய ஞெலிகோல் போலத்
தோன்று திருக்கவும் வல்லன் மற்றதன்
கான்றுபடு கனையெரி போலத்
தோன்றவும் வல்லன்றான் றோன்றுங் காலே.

திணையும் துறையும் அவை.

நெடுமானஞ்சியை [2]ஔவையார். (௱௧௫)

(௱௧௬) கள்ளின் வாழ்த்திக் கள்ளின் [3]வாழ்த்திக்
காட்டொடு மிடைந்த சீயா முன்றில்
நாட்செருக் [4]கனந்தர்த் துஞ்சு வோனே
அவனெம் [5]மிறைவன் யாமவன் பாணர்
நெருநை வந்த விருந்திற்கு மற்றுத்தன்
இரும்புடைப் பழவாள் வைத்தன னின்றிக்
கருங்கோட்டுச் சீறியாழ் பணைய மிதுகொண்
[6]டுவதி லாள னென்னாது நீயும்
[7]வள்ளி மருங்குல் வயங்கிழை யணியக்
கள்ளுடைக் கலத்தேம் யாமகிழ் தூங்கச்

பி - ம். [1]நிறையறிந் தெழுந்தரும், நிறையறிந் தெழுதரு.
[2]ஔவையாரள். [3]வாழ்த்திகள்ளின்...தசீயா.
[4]களந்தரத்துஞ்சு. [5]மிறையவன்.
[6]டூதலிலாளன். [7]வள்ளியலகு விளங்கிழை.

[1]சென்றுவாய் சிவந்துமேல் வருக
சிறுகண் யானை வேந்துவிழு முறவே.

திணையும் துறையும் அவை.

மதுரைக்கள்ளிற் [2]கடையத்தன் வெண்ணாகனார். (ருகசு)

(ருகஎ) வென்வேல்.............நது
முன்றிற் கிடந்த பெருங்களி யாளற்
கதளுண் டாயினும் பாயுண் டாயினும்
யாதுண் டாயினுங் கொடுமின் வல்லே
வேட்கை மீளப..............
..................கு மெமக்கும் பிறர்க்கும்
யார்க்கு மீய்ந்து [3]துயிலேற் பினனே.

திணையும் துறையும் அவை.

[4]வேம்பற்றூர்க் குமரனார். (ருகஎ)

(ருகஅ) கொய்யடகு வாடத் தருவிற குணங்க
மயிலஞ் சாயன் மாஅ யோளொடு
பசித்தன் றம்ம பெருந்தகை யூரே
மனையுறை குரீஇக் கறை[5]யணற் சேவல்
பாணர் [6]நரம்பின் சுகிரொடு வயமான்
[7]குரற்செய் பீலியி னிழைத்த குடம்பைப்
பெருஞ் [8]செய் நெல்லி னரிசி யார்ந்துதன்
புன்புறப் பெடையொடு வதியும்
யாணர்த் தாகும் வேந்துவிழு முறினே.

திணையும் துறையும் அவை.

பெருங்குன்றூர்கிழார். (ருகஅ)

பி - ம். [1]சென்றுநாசி வந்து மேவருசிறுகண், செறுவர்சிவந்து, செறுநர்சிவந்து. [2]கடையத்தனார் வெண்ணாகனார்.

[3]துயலேற்பினனே. [4]வேப்பத்தூர்க்குமரன்.

[5]யணற செலலப், பாண. [6]நரம்பிசைநீரொடு.

[7]குரசை பிலியினிளமை மூத்தகுடம்பை, குரசெய்பீலியினிமை மூத்த, பூத்த. [8]செய்செல்லின்.

(௩௱௧௯) பூவற் படுவிற் கூவற் [1]றோண்டிய
செங்கட் சின்னீர் பெய்த சீறில்
முன்றி லிருந்த முதுவாய்ச் சாடி
[2]யாங்கஃ டுண்டென வறிது [3]மாசின்று
படலை முன்றிற் சிறுதினை யுணங்கல்
[4]புறவு மிதலு [5]மறவு முண்கெனப்
பெய்தற் கெல்லின்று பொழுதே யதனால்
முயல்சுட்ட வாயினுந் தருகுவேம் [6]புகுதந்
[7]தீங்கிருந் தீமோ முதுவாய்ப் பாண
கொடுங்கோட் டாமா னடுங்குதலைக் குழவி
புன்றலைச் சிறாஅர் கன்றெனப் பூட்டும்
சீறூர் மன்ன னெருநை ஞாங்கர்
வேந்துவிடு தொழிலொடு சென்றனன் வந்துநின்
பாடினி மாலை யணிய
வாடாத் தாமரை சூட்டுவ னினக்கே.

திணையும் துறையும் அவை.

ஆலங்குடி வங்கனார். (௩௱௧௯)

(௩௱௨௰) முன்றின் முஞ்ஞையொடு முசுண்டை பம்பிப்
பந்தர் வேண்டாப் பலர்தூங்கு நீழற்
கைம்மான் வேட்டுவன் கனைதுயின் மடிந்தெனப்
பார்வை மடப்பிணை தழீஇப் பிறிதோர்
தீர்தொழிற் றனிக்கலை [8]திளைத்துவிளை யாட
இன்புறு [9]புணர்நிலை கண்ட மனையோள்
கணவ னெழுதலு மஞ்சிக் கலையே
பிணைவயிற் றீர்தலு மஞ்சி யாவதும்
இல்வழங் காமையிற் கல்லென வொலித்து
மானதட் பெய்த வுணங்குதினை வல்சி
கானக் கோழியோ டிதல்கவர்ந் துண்டென

பி - ம். [1]றொடிய. [2]யாகஃடுண்டென, யாறுஃடுண. [3]மாகின்று. [4]புறவுமீதலு. [5]மறவுமுணடெனப். [6]புகுநரீங்கிரு. [7]ஈங்கிருந்தீமே, இருந்தீரேமுது. [8]தினைத்துவிளையாட. [9]புணரரநிலை.

ஆர நெருப்பி னார நாறத்
தடிவார்ந் திட்ட முழுவள் ளூரம்
இரும்பே ரொக்கலொ டொருங்கினி தருந்தித்
தங்கினை சென்மோ பாண தங்காது
வேந்துதரு விழுக்கூழ் பரிசிலர்க் கென்றும்
அருகா தீயும் வண்மை
[1]உரைசா னெடுந்தகை யோம்பு மூரே.

திணையும் துறையும் அவை.

வீரை வெளியனார். (ருஉ0)

(ருஉக) [2]பொறிப்புறப் பூழின் போர்வல் [3]சேவல்
மேந்தோல் களைந்த தீங்கொள் வெள்ளெட்
[4]சுளகிடை யுணங்கற் செவ்வி [5]கொண்டுடன்
வேனிற் [6]கோங்கின் பூம்பொகுட் டன்ன
குடந்தையஞ் செவிய கோட்டெலி யாட்டக்
கலியார் வரகின் பிறங்குபீ ளொளிக்கும்
வன்புல வைப்பி னதுவே சென்று
தின்பழம் பசீஇ........னனே பாண
வாள்வடு விளங்கிய சென்னிச்
செருவெங் குருசி லோம்பு மூரே.

திணையும் துறையும் அவை.

உறையூர் மருத்துவன் தாமோதரனார். (ருஉக)

(ருஉஉ) [7]உழுதூர் காளை யூழ்கோ டன்ன
கவைமுட் கள்ளிப் பொரியரைப் பொருந்திப்
புதுவர கரிகாற் கருப்பை பார்க்கும்
புன்றலைச் சிறாஅர் வில்லெடுத் தார்ப்பிற்
பெருங்கட் குறுமுயல் கருங்கல னுடைய
[8]மன்றிற் பாயும் வன்புலத் ததுவே
கரும்பி னெந்திரஞ் சிலைப்பி [9]னயல

பி - ம். [1]உரைசொல். [2]பொரிப்புறப். [3]செலவன. [4]களகிடை. [5]கொண்டென. [6]வேனிறகொண். [7]உழுதூர்க்காளை. [8]முனறினறபாயும். [9]னயலினிருஞ்சுவலி......யானை பிறழுமாங்கட்.

திருஞ்சுவல் வாளை பிறழு மாங்கட்
டண்பணை யாளும் வேந்தர்க்குக்
கண்படை யீயா வேலோ னூரே.

திணையும் துறையும் அவை.

ஆவூர்கிழார். (௩௨௨)

(௩௨௩) புலிப்பாற் [1]பட்ட வாமான் குழவிக்குச்
சினங்கழி மூதாக் கன்றுமடுத் தூட்டும்
கா . . . . க்
குள்ளியது சுரக்கு மோம்பா வீகை
வெள்வே [2]லாவ மாயி னொள்வாள்
கறையடி யானைக் கல்ல
துறைகழிப் பறியா வேலோ னூரே.

. . . .

. . . . **டார்கிழார்.** (௩௨௩)

(௩௨௪) வெருக்குவிடை யன்ன [3]வெருகுணைக்குக் கயந்தலைப்
புள்ளூன் றின்ற புலவுநாறு கயவாய்
வெள்வாய் [4]வேட்டுவர் வீழ்துணை மகாஅர்
சிறியிலை [5]யுடையின் சுரையுடை வான்முள்
ஊக நுண்கோற் செறித்த வம்பின்
வலாஅர் வல்விற் [6]குலாவரக் கோலிப்
பருத்தி [7]வேலிக் கருப்பை பார்க்கும்
புன்புலந் தழீஇய வங்குடிச் சீறூர்க்
குமிழூண் வெள்ளை [8]பகுவாய் பெயர்த்த
[9]வெண்காழ் [10]தாய [11]வண்காற் பந்தர்
இடையன் பொத்திய சிறுதீ விளக்கத்துப்
பாணரொ டிருந்த நாணுடை நெடுந்தகை

பி - ம். [1]பட்டவிரமான். [2]லாப. [3]வெருணைக்குக்.
[4]வேட்டுவன். [5]யுடையினை சுரையடை வானஞ்சுநுண்கோற்.
[6]குலா புறக். [7]வேலி கருபலிப்பார்க்கும்.
[8]மதுவாய், மறுகுவாய், மறுவாய். [9]வெண்காழ்ப்பத்தரிடை.
[10]காய. [11]வன்காழ்ப்பந்தர்.

வலம்படு தானை வேந்தற்
குலந்துழி யுலக்கு நெஞ்சறி துணையே.

திணையும் துறையும் அவை.

ஆலத்தூர்கிழார். (ஙஉச)

(ஙஉரு) களிறுநீ ருடிய விடுநில மருங்கின்
வம்பப் பெரும்பெயல் வரைந்துசொரிந் திறந்தெனக்
குழிகொள் சின்னீர் குராஅ லுண்டலிற்
சேறுகிளைத் திட்ட கலுழ்கண் ணூறல்
முறையி னுண்ணு நிறையா வாழ்க்கை
[1]முளவுமாத் தொலைச்சிய முழுச்சொ லாடவர்
உடும்பிழு தறுத்த [2]வொடுங்காழ்ப் படலைச்
சீறின் முன்றிற் கூறுசெய் திடுமார்
கொள்ளி வைத்த கொழுநிண நாற்றம்
மறுகுடன் கமழு மதுகை மன்றத்
தலந்தலை யிரத்தி [3]யலங்குபடு நீழற்
கயந்தலைச் சிறாஅர் கணைவிளை யாடும்
[4]அருமிளை யிருக்கை யதுவே வென்வேல்
வேந்துதலை வரினுந் தாங்கும்
தாங்கா வீகை நெடுந்தகை யூரே.

திணையும் துறையும் அவை.

உறையூர் முதுகண்ணன் சாத்தனார். (ஙஉரு)

(ஙஉசு) ஊர்முது வேலிப் பார்நடை வெருகின்
இருட்பகை வெரீஇய நாகிளம் பேடை
உயிர்நடுக் குற்றுப் [5]புலாவிட் டரற்றச்
சிறையுஞ் செற்றையும் புடையுந ளெழுந்த
பருத்திப் பெண்டின் சிறுதீ விளக்கத்துக்
[6]கவிர்ப்பூ நெற்றிச் சேவலிற் [7]றணியும்
[8]அருமிளை யிருக்கை யதுவே மனைவியும்

பி - ம். [1]முழவுமா தொலைச்சிய. [2]கொடுங்காழ, தொடுங்காழ. [3]யிலங்குபடு. [4]அருமுனை. [5]புலாவிட்டியாற்றச். [6]கதிர்ப்பூ. [7]தணிவும். [8]அருமுனை.

வேட்டச் சிறுஅர் சேட்புலம் படராது
[1]படமடைக் கொண்ட குறுந்தா ளுடும்பின்
விழுக்குநிணம் பெய்த தயிர்க்கண் விதவை
யாணர் நல்லவை பாணரொ டொராங்கு
வருவிருந் தயரும் விருப்பினள் கிழவனும்
அருஞ்சமந் ததையத் தாக்கிப் பெருஞ்சமத்
தண்ணல் யானை யணிந்த
பொன்செ யோடைப் பெரும்பரி சிலனே.

திணை - வாகை; துறை - மூதின்முல்லை.

[2]தண்காற் பூட்கோல்லனார். (௩௨௬)

(௩௨௭) எருதுகா லுறாஅ திளைஞர் கொன்ற
[3]சில்விளை வரகின் புல்லென் குப்பை
தொடுத்த கடவர்க்குக் கொடுத்த மிச்சில்
பசித்த பாண [4]ருண்டுகடை தப்பலின்
ஒக்க லொற்கஞ் சொலியத் தன்னூர்ச்
சிறுபுல் லாளர் முகத்தவை கூறி
[5]வரகுகட னிரக்கு நெடுந்தகை
அரசுவரிற் றுங்கும் வல்லா ளன்னே.

திணையும் துறையும் அவை.

.... (௩௨௭)

(௩௨௮) ....டைமுதற் புறவு [6]சேர்ந் திருந்த
புன்புலச் சீறூர் நெல்விளை யாதே
வரகுந் தினையு முள்ளவை யெல்லாம்
இரவன் மாக்களுக் [7]கீயத் தொலைந்தன
..................டமைந் தனனே
அன்ன னாயினும் [8]பாண நன்றும்
[9]வெள்ளத் திடும்பா லுள்ளுறை தொட....

பி - ம். [1]படபடைக். [2]தண்காற்.........பொற்கொல்லனார், மூடக்கொல்லனார், தங்கான்மூட கோலனை, தங்கால நாட் கோவலனார். [3]சில்வினை. [4]ருண்டுகென...தலொற்கஞ். [5]வரகுகட னீர்க்கு. [6]சோர்ந்திந்த. [7]கீயாததா...டமைந்த. [8]மன்ன. [9]வெள்ளத்தீடும்.

களவுப் புளியன்ன விளை . . . .
. . . . வாடூன் கொழுங்குறை
கொய்குர லரிசியொடு நெய்பெய் தட்டுத்
துடுப்பொடு சிவணிய களிக்கொள் வெண்சோ
றுண்டினி திருந்த பின் . . . .
. . . . தருகுவன் மாதோ
[1]தாளிமுத னீடிய சிறுநறு முஞ்ஞை
முயல்வந்து கறிக்கு முன்றிற்
சீறூர் மன்னனைப் பாடினை செலினே.

[2]திணையும் துறையும் அவை.

பங்து. . . . . (ருஉஅ)

(ருஉக) இல்லடு கள்ளின் சில்குடிச் சீறூர்ப்
புடைநடு கல்லி னாட்[3]பலி யூட்டி
[4]நன்னீ ராட்டி நெய்ந்நறைக் கொளீஇய
மங்குன் மாப்புகை மறுகுடன் கமழும்
அருமுனை யிருக்கைத் தாயினும் வரிமிடற்
றரவுறை புற்றத் தற்றே நாளும்
புரவலர் புன்கண் ணோக்கா திரவலர்க்
கருகா தீயும் வண்மை
உரைசா னெடுந்தகை யோம்பு மூரே.

திணையும் துறையும் அவை.

மதுரை அறுவைவாணிகன் இளம்வேட்டனார். (ருஉக)

(ருருO) வேந்துடைத் தானை முனைகெட நெரிதர
ஏந்து [5]வாள் வலத்த னொருவ னாகித்
தன்னிறந்து வாராமை விலக்கலிற் பெருங்கடற்
காழி யனையன் மாதோ வென்றும்
பாடிச் சென்றோர்க் கன்றியும் வாரிப்

பி - ம். [1]தாழி முதல். [2]இதுவுமது.
[3]பலியூட்டி நெய்ந்நறை. [4]நன்ன ராட்டி.
[5]வாள் வல்லத்தன், வல்லத்தன்.

புரவிற் காற்றுச் சீறூர்த்
தொன்மை [1]சுட்டிய வண்மை யோனே.

திணையும் துறையும் அவை.

மதுரைக் கணக்காயனுர். (௩௩௦)

(௩௩௧) கல்லறுத் தியற்றிய வல்லுவர்க் கூவல்
வில்லேர் வாழ்க்கைச் சீறூர் மதவலி
நனிநல் கூர்ந்தன னாயினும் பனிமிகப்
புல்லென் மாலைச் சிறுதீ ஞெலியும்
கல்லா விடையன் போலக் குறிப்பின்
இல்லது படைக்கவும் வல்ல னுள்ளது
தவச்சிறி தாயினு மிகப்பல ரென்னாள்
[2]நீணெடும் பந்த ரூண்முறை யூட்டும்
இற்பொலி மகடூஉப் போலச் சிற்சில
வரிசையி னளிக்கவும் வல்ல னுரிதினிற்
காவன் மன்னர் கடைமுகத் துகுக்கும்
போகுபலி வெண்சோறு போலத்
[3]தூவவும் வல்லனவன் றாவுங் காலே.

திணையும் துறையும் அவை.

[4]உறையூர் முதுகூத்தனுர். (௩௩௧)

(௩௩௨) பிறர்வேல் போலா தாகி யிவ்வூர்
மறவன் வேலோ பெருந்தகை யுடைத்தே
[5]இரும்புற நீறு மாடிக் கலந்திடைக்
[6]குரம்பைக் கூரைக் கிடக்கினுங் கிடக்கும்
மங்கல மகளிரொடு மாலை [7]சூட்டி
இன்குர [8]லிரும்பை யாழொடு ததும்பத்
தெண்ணீர்ப் படுவினுந் தெருவினுந் திரிந்து
மண்முழு தழுங்கச் [9]செல்லினுஞ் [10]செல்லுமாங்

பி - ம். [1]சூடிய வன்மை. [2]நீணெடுபந்தருண். [3]தூஉவும்.
[4]உறையூர்முதுகூற்றன். [5]இரும்புக நீருமாடிக் கலத்திடை.
[6]குரம்பைக் கூனராக்கினுங் கிடக்கு. [7]சூடி.
[8]விரும்பை யாழெடுத்தியம்ப, யிரும்பெயர். [9]சொல்லினுஞ்.
[10]செல்லுங் கண்ணுறின், செல்லுமாங்குகடற்றனே.

கிருங்கடற் றானை வேந்தர்
பெருங்களிற்று முகத்தினுஞ் செலவா னாதே.

திணையும் துறையும் அவை.

[1]விரியூர் நக்கனார். (௩௩௨)

(௩௩௩) நீருட் பட்ட மாரிப் பேருறை
மொக்கு ளன்ன பொகுட்டுவிழிக் கண்ண
கரும்பிடர்த் தலைய பெருஞ்செவிக் குறுமுயல்
உள்ளூர்க் குறும்புதற் றுள்ளுவன வுகளும்
தொள்ளை மன்றத் தாங்கட் படரின்
உண்கென வுணரா வுயவிற் றாயினும்
[2]தங்கினிர் சென்மோ புலவிர் நன்றும்
சென்றதற் கொண்டு மனையோள் விரும்பி
வரகுந் தினையு முள்ளவை யெல்லாம்
இரவன் மாக்க ளுணக்கொளத் தீர்ந்தெனக்
குறித்துமா றெதிர்ப்பை பெறாஅ மையிற்
குரலுணங்கு விதைத்தினை யுரல்வாய்ப் பெய்து
சிறிது [3]புறப்பட்டன் றோவில டன்னூர்
வேட்டக் குடிதொறுங் கூட்டு........
.............................[4]உடும்புசெய்
பாணி நெடுந்தேர் [5]வல்லரோ ரோ
வம்பணி யானை வேந்துதலை வரினும்
உண்பது மன்னு மதுவே
பரிசின் மன்னுங் குரிசில்கொண் டதுவே.

திணையும் துறையும் அவை.

.... (௩௩௩)

(௩௩௪) காமரு பழனக் கண்பி னன்ன
தூமயிர்க் குறுந்தா ணெடுஞ்செவிக் குறுமுயல்
புன்றலைச் சிறாஅர் மன்றத் தார்ப்பிற்
படப்பொடுங் கும்மே....பின்பு....

பி - ம். [1]விரியூகநக்கனார். [2]தங்கி நீர்.
[3]புறப்படனறோவிலளே. [4]உழுமெபுசெய். [5]வலவரோாரே.

...............னாரே [1]மனையோள்
பாண ரார்த்தவும் பரிசில [2]ரோம்பவும்
ஊனொலி யரவமொடு [3]கைதூ வாளே
உயர்மருப் பியானைப் புகர்முகத் தணிந்த
பொலம்.........................ப்
[4]பரிசில் பரிசிலர்க் கீய
உரவுவேற் காளையுங் கைதூ வானே.

திணையும் துறையும் அவை.
மதுரைத் தமிழக்கூத்தனார். (௩௩௪)

(௩௩௫) அடலருந் துப்பின்............
.................குருந்தே முல்லையென்
றிந்நான் கல்லது பூவு மில்லை
கருங்கால் வரகே யிருங்கதிர்த் தினையே
சிறுகொடிக் கொள்ளே பொறிகிள ரவரையொ
டிந்நான் கல்ல துணவு மில்லை
[5]துடியன் பாணன் பறையன் கடம்பனென்
றிந்நான் கல்லது குடியு மில்லை
ஒன்னாத் தெவ்வர் முன்னின்று விலங்கி
ஒளிறேந்து மருப்பிற் களிறெறிந்து வீழ்ந்தெனக்
கல்லே பரவி னல்லது
நெல்லுகுத்துப் பரவுங் கடவுளு மிலவே.

திணையும் துறையும் அவை.
[6]மாங்குடிகிழார். (௩௩௫)

(௩௩௬) வேட்ட வேந்தனும் [7]வெஞ்சினத் தினனே
[8]கடவன கழிப்பிவ டந்தையுஞ் செய்யான்
ஒளிறுமுகத் தேந்திய வீங்குதொடி மருப்பிற்
களிறு கடிமரஞ் சேரா சேர்ந்த
ஒளிறுவேன் மறவரும் [9]வாய்மூழ்த் தனரே

பி - ம். [1]மனையோர். [2]ஓம்பும். [3]கைத்தூஉவாளே.
[4]பரிசிலர். [5]பாணன் பறையன் றுடியன் கடம்பனென்று.
[6]மாறுகுடிகிழார். [7]பெருஞ்சினத்தனனே.
[8]கெடவனகறிபபிள். [9]வாயு மூழ்த்தனரே.

இயவரு மறியாப் பல்லியங் கறங்க
அன்னோ, பெரும்பே துற்றன் [1]றிவ் வருங்கடி மூதூர்
அறனிலண் மன்ற தானே விறன்மலை
வேங்கை வெற்பின் விரிந்த கோங்கின்
முகைவனப் பேந்திய முற்றா விளமுலைத்
தகைவளர்த் தெடுத்த நகையொடு
பகைவளர்த் திருந்தவிப் [2]பண்பி றாயே.

திணை - காஞ்சி; துறை - மகட்பாற்காஞ்சி.

பரணர். (௩௩௬)

(௩௩௭) [3]ஆர்கலி யினனே சோணாட் டண்ணல்
கவிகை மண்ணாள் செல்வ ராயினும்
வாள்வலத் தொழியப் [4]பாடிச் சென்றார்
வாரா கமலர ....
ஈத லானா விலங்குதொடித் தடக்கைப்
பாரி பறம்பிற் பனிச்சுனை போலக்
காண்டற் கரிய ளாகி மாண்ட
பெண்மை நிறைந்த பொலிவொடு மண்ணிய
துகில்விரி கடுப்ப நுடங்கித் தண்ணென
அகிலார் நறும்புகை யைதுசென் றடங்கிய
கபில [5]நெடுநகர்க் கமழு நாற்றமொடு
மனைச்செறிந் தனளே வாணுத லினியே
அற்றன் றாகலிற் றெற்றெனப் போற்றிக்
காய்நெற் கவளந் தீற்றிக் காவுதொறும்
கடுங்கண் யானை காப்பன ரன்றி
வருத லானார் வேந்தர் [6]தன்னையர்
பொருசமங் கடந்த வுருகெழு நெடுவேற்
குருதி பற்றிய வெருவரு [7]தலையர்
மற்றிவர் மறனு மிற்றாற் றெற்றென
யாரா குவர்கொ றாமே நேரிழை

பி - ம். [1]இல்லங் கடிமூதூரறனிலமன்ற. [2]பண்பிற்றாயே.
[3]ஆர்கலிவினனே சேணாட்டண்ணல். [4]பாடிச் சேரார்.
[5]நெடுநககா. [6]தன்னையலர். [7]தலைய.

[1]உருத்த பல்சுணங் கணிந்த
மருப்பிள வனமுலை ஞெமுக்கு வோரே.

திணையும் துறையும் அவை.
கபிலர். (௩௩௭)

(௩௩௮) ஏர்பரந் தவய னீர்பரந் தசெறுவின்
நென்மலிந் தமனைப் பொன்மலிந் தமறுகிற்
படுவண் [2]டார்க்கும் பன்மலர்க் காவின்
நெடுவே ளாதன் போந்தை யன்ன
பெருஞ்சீ ரருங்கொண் டியளே கருஞ்சினை
வேம்பு மாரும் போந்தையு மூன்றும்
மலைந்த [3]சென்னிய ரணிந்த வில்லர்
கொற்ற வேந்தர் வரினுந் தற்றக
வணங்கார்க் கீகுவ னல்லன்வண் டோட்டுப்
பிணங்குகதிர்க் கழனி நாப்ப ணேமுற்
[4]றுணங்குகல னாழியிற் றோன்றும்
ஓரெயின் மன்ன னொருமட மகளே.

திணையும் துறையும் அவை.
குன்றூர்கிழார்மகனார். (௩௩௮)

(௩௩௯) வியன்புலம் படர்ந்த பல்லா [5]நெடுவேறு
மடலை மாணிழ லசைவிடக் கோவலர்
வீததை முல்லைப் பூப்பறிக் குந்து
குறுங்கோ லெறிந்த நெடுஞ்செவிக் குறுமுயல்
நெடுநீர்ப் பரப்பின் வாளையொ டுகளுந்து
தொடலை யல்குற் றொடித்தோண் மகளிர்
கடலாடிக் கயம்பாய்ந்து
கழிநெய்தற் பூக்குறாஉந்து
பைந்தழை துயல்வருஞ் செறுவிறற....
.....................லத்தி
வளர வேண்டு மவளே யென்றும்

பி - ம். [1]உரித்தல்பல். [2]டார்க்குங்காவிற்பஃளி, நெடுவேலாதன். [3]செனனியாரணிந்த. [4]றுணங்குக னாழியிற, றுணங்குகராழியிற். [5]வெறறி, மடலை.

[1]ஆரம ருழப்பது ம்மரிய ளாகி
முறஞ்செவி யானை வேந்தர்
மறங்கெழு நெஞ்சங் கொண்டொளித் தோளே.

திணையும் துறையும் அவை.

.... (௩௪௯)

(௩௫௦) அணித் [2]தழை நுடங்க வோடி [3]மணிப்பொறிக்
[4]குரலங் குன்றி கொள்ளு மிளையோள்
மாமகள் ....
..............லென வினவுதி கேணீ
[5]வெடுப்பவெ ....
...............மைந்தர் தந்தை
[6]இரும்பனை யன்ன பெருங்கை யானை
கரந்தையஞ் செறுவிற் பெயர்க்கும்
பெருந்தகை மன்னர்க்கு வரைந்திருந் தனனே.

திணையும் துறையும் அவை.

அ........................ (௩௫௦)

(௩௫௧) வேந்துகுறை யுறவுங் கொடாஅ னேந்துகோட்
டம்பூந் தொடலை [7]யணித்தழை யல்குல்
செம்பொறிச் சிலம்பி [8]னிளையோ டந்தை
எழுவிட் டமைத்த திண்ணிலைக் கதவின்
அரைம ணிஞ்சி நாட்கொடி [9]நுடங்கும்
....
புலிக்கணத் தன்ன கடுங்கட் சுற்றமொடு
மாற்ற மாறான் மறலிய சினத்தன்
[10]பூக்கோ ளனவேஎய்க் கயம்புக் கனனே
[11]விளங்கிழைப் பொலிந்த வேளா மெல்லியற்
சுணங்கணி வனமுலை யவளொடு நாளை

பி - ம். [1]ஆரமொழிப்பதுவுமமரிய. [2]தழைத்துடங்க. [3]பணிப்பொரி. [4]கூறலங்குன்றி. [5]யெடுப்ப. [6]மிருபனை, இருபனை. [7]யணிந்ததழை. [8]னிளையோ டாதை. [9]நுடங்கப. [10]பூக்கொளனபகயமபுக. [11]வயங்கிழைப் பொலிந்த வே...ா.

[1]மணம்புகு வைக லாகுத லொன்றோ
ஆரம ருழக்கிய மறங்கிளர் முன்பின்
[2]நீளிலை யெஃக மறுத்த வுடம்பொடு
[3]வாரா வுலகம் புகுத லொன்றெனப்
படைதொட் டனனே குருசி லாயிடைக்
[4]களிறுபொரக் கலங்கிய தண்கயம் போலப்
[5]பெருங்கவி னிழப்பது கொல்லோ
[6]மென்புனல் வைப்பினித் தண்[7]பணை யூரே.

திணையும் துறையும் அவை.

பரணர். (ருசக)

(ருசஉ) கானக் காக்கைக் கலிச்சிற கேய்க்கும்
மயிலைக் கண்ணிப் பெருந்தோட் குறுமகள்
ஏனோர் மகள்கொ லிவளென விதுப்புற்
றென்னொடு வினவும் வென்வே னெடுந்தகை
திருநயத் தக்க பண்பினிவ ணல்லனே
பொருநர்க் கல்லது பிறர்க்கா காதே
பைங்காற் கொக்கின் பகுவாய்ப் பிள்ளை
[8]மென்சேற் றடைகரை [9]மேய்ந் துண் டதற்பின்
ஆர லீன்ற வையவி முட்டை
[10]கூர்ந விறவின் பிள்ளையொடு பெறூஉம்
தண்பணைக் கிழவனிவ டந்தையும் வேந்தரும்
[11]பெறாஅ மையிற் பேரமர் செய்தலிற்
கழிபிணம் பிறங்குபோர் பழிகளி றெருதா
[12]வாடக வைக லு [13]முழக்கும்
மாட்சி யவரிவ டன்னை மாரே.

திணையும் துறையும் அவை.

அரிசில்கிழார். (ருசஉ)

பி - ம். [1]வைகலாகுக வொன்றோ. [2]நேரிலையெஃகம். [3]ஓராவுலகம். [4]களிறுபொற கலங்கிய மதகயம். [5]பெருமகவனிழப். [6]மென்புல வைப்பின். [7]கணையூர். [8]மென்சொற்றடைகரை. [9]மேயத்தூண்கற்பினால், மேய்ந்துண்ட கற்பினுஅலீன்ற. [10]கூனவிறவு. [11]பெருமையின்மையிறபோமர். [12]வாடகை வைகலு. [13]முழக்கிமாட்சியிலர்.

(௩௪௩) மீனொடுத்து நெற்குவைஇ
மிசையம்பியின் மனைமறுக்குந்து
[1]மனைக்குவைஇய கறிமூடையாற்
கலிச் [2]சும்மைய கரைகலக்குறுந்து
கலந்தந்த பொற்பரிசம்
கழித்தோணியாற் கரைசேர்க்குந்து
மலைத்தாரமுங் கடற்றாரமும்
தலைப்பெய்து வருநர்க்கீயும்
புனலங் கள்ளின் பொலந்தார்க் குட்டுவன்
[3]முழங்குகடன் முழவின் [4]முசுறி யன்ன
நலஞ்சால் விழுப்பொருள் பணிந்துவந்து கொடுப்பினும்
புரைய ரல்லோர் [5]வரையல ளிவளெனத்
தந்தையுங் கொடாஅ னாயின் வந்தோர்
வாய்ப்பட விறுத்த வேணி யாயிடை
வருந்தின்று [6]கொல்லோ தானே பருந்துயிர்த்
திடைமதிற் சேக்கும் புரிசைப்
படைமயங் காரிடை நெடுநெ லூரே.

திணையும் துறையும் அவை.
பரணர். (௩௪௩)

(௩௪௪) செந்நெ லுண்ட பைந்தோட்டு மஞ்ஞை
[7]செறிவளை மகளி ரோப்பலிற் பறந்தெழுந்து
[8]துறைநணி மருதத் திறுக்கு மூரொடு
நிறைசால் விழுப்பொரு டருத லொன்றோ
புகைபடு கூரெரி பரப்பிப் பகைசெய்து
பண்பி லாண்மை தருத லொன்றோ
இரண்டினு ளொன்று காமையோ வரிதே
காஞ்சிப் பனிமுறி யாரங் கண்ணி.
கணிமே வந்தவ ளல்குலவ் வரியே.

[9]திணையும் துறையும் அவை.
....................அடைநெடுங்கல்வியார். (௩௪௪)

பி - ம். [1]மனைமறுக்குவைஇய. [2]சும்மையகுறுந்து, சும்மையக்குந்து. [3]முழங்கடன். [4]முசிறி. [5]வரையலனி வனலனே. [6]கொல்லெதானே. [7]செற்றிவளை மகளிரோம்ப விற்பிறந் தெழுந்து. [8]துறைநளி. [9]திணை - வாகை; துறை - மூதின்முல்லை.

(௩௪௫) களிறணைப்பக் கலங்கின, காஅ
தேரோடத் துகள்கெழுமின, தெருவு
[1]மாமறுகலின் மயக்குற்றன, வழி
கலங்கழாஅலிற், றுறை, [2]கலக்குற்றன
[3]தெறன்மறவ ரிறைகூர்தலிற்
பொறைமலிந்து நிலனெளிய
வந்தோர் பலரே வம்ப வேந்தர்
பிடியுயிர்ப் பன்ன கைகவ ரிரும்பின்
நோவுற ழிரும்புறங் காவல் கண்ணிக்
கருங்கண் கொண்ட [4]நெருங்கல் வெம்முலை
மைய னோக்கிற் றையலை நயந்தோர்
அளியர் தாமேயிவ டன்னை மாரே
செல்வம் வேண்டார் செருப்புகல் வேண்டி
[5]நிரலல் லோர்க்குத் தரலோ வில்லெனக்
கழிப்பிணிப் பலகையர் [6]கதுவாய் வாளர்
குழாஅங் கொண்ட குருதியம் புலவொடு
கழாஅத் தலையர் கருங்கடை நெடுவேல்
[7]இன்ன மறவர்த் தாயினு மன்னோ
என்னா வதுகொ றானே
[8]பன்னல் வேலியிப் பணைநல் லூரே.

திணையும் துறையும் அவை.

அவனை அவர். (௩௪௫)

(௩௪௬) பிற.........ளபாலெனை மடுத்தலின்
ஈன்ற தாயோ வேண்டா ளல்லள்
[9]கல்வியெ னென்னும் வல்லாண் சிறாஅன்
[10]ஒல்வே னல்ல னதுவா யாகுதல்
அழிந்தோ ரழிய வொழிந்தோ ரொக்கற்

பி-ம். [1]மாவழங்கலின். [2]கலக்கானாதே. [3]செறன்மறவர்.
[4]நெருங்கண் வெம்முலை, நெடுங்கண் மென்முலை.
[5]நீரலல்லோர்க்குந்தரல். [6]ததுவாய்.
[7]இன்னம்பிறவாததாயினும். [8]பன்னெல் வேலி.
[9]கல்வியென்னும் வல்லான். [10]ஒல்வ...ாதுகுடியே.

பேணுநர்ப் பெறாஅது விளியும்
புன்றலைப் பெரும்பாழ் செயுமிவ ணலனே.

திணையும் துறையும் அவை.

அண்டர்மகன் குறுவழுதி. (௩௪௬)

(௩௪௭) உண்போன் றானறுங் கள்ளி னிடச்சில
நாவிடைப் [1]பஃறேர் கோலச் சிவந்த
ஒளிறொள வாடக் குழைந்தபைந் தும்பை
எறிந்திலை முறிந்த [2]கதுவாய் வேலின்
மணநா றுமார்பின் மறப்போ [3]ரகுதை
குண்டுநீர் வரைப்பிற் கூட லன்ன
குவையிருங் கூந்தல் [4]வருமுலை சேப்ப
. . . .
வென்னா வதுகொ றானே . . . .
விளங்குறு பராரைய வாயினும் வேந்தர்
வினைநவில் யானை பிணிப்ப
வேர்துளங் கினநம் [5]மூருண் மரனே.

திணையும் துறையும் அவை.

கபிலர். (௩௪௭)

(௩௪௮) வெண்ணெல் லரிஞர் தண்ணுமை [6]வெரீஇக்
[7]கண்மடற் கொண்ட தீந்தே னிரியக்
[8]கள்ளரிக்குங் குயஞ் [9]சிறுசின்
மீன்சீவும் பாண்சேரி
வாய்மொழித் [10]தழும்ப னூணூ ரனன
குவளை யுண்க ணிவளைத் தாயே
[11]ஈனா ளாயின ளாயி னனைது
நிழறொறு நெடுந்தேர் நிற்ப வயின்றொறும்

பி - ம். [1]பஃறொகொலச். [2]கதுவாய்நேமி, கதுவாய்வாளர்.
[3]ரஃதை. [4]வருமுமம வேநதாவினை நவிலயானை பிறணிப்ப, மணநாறு மாரபின மறபபொராலெசெபப. [5]மூருனைமானே.
[6]வெரீஇப்பக். [7]கண்ணகொண்ட.
[8]கள்ளிரிக்குஞ் சிறுகனவும். [9]சிறுமீன்.
[10]தழும்பனூரனன. [11]ஈனள்.

செந் நுதல் யானை பிணிப்ப
[1]வருந்தல மன்னெம் பெருந்துறை மரனே.

திணையும் துறையும் அவை.

பரணர். (௩௪௮)

(௩௪௯) [2]நுதிவேல் கொண்டு [3]நுதல்வியர் துடையாக்
கடிய கூறும் வேந்தே தந்தையும்
நெடிய வல்லது பணிந்துமொழி யலனே
இஃதிவர் படிவ மாயின் வையெயிற்
[4]றரிமதர் மழைக்க ணம்மா வரிவை
மரம்படு [5]சிறுதீப் போல
அணங்கா யினடான் பிறந்த வூர்க்கே.

திணையும் துறையும் அவை.

மதுரை மருதனிளநாகனர். (௩௪௯)

(௩௫0) தூர்ந்த கிடங்கிற் சோர்ந்த ஞாயிற்
சிதைந்த விஞ்சிக் கதுவாய் மூதூர்
யாங்கா வதுகொ றானே தாங்காது
படுமழை யுருமி னிரங்கு முரசிற்
கடுமான் வேந்தர் காலை வந்தெம்
நெடுநிலை வாயிற் கொட்குவர் மாதோ
[6]பொருதா தமருவ ரல்லர் போருழந்
தடுமுரண் முன்பிற் றன்னைய ரேந்திய
வடிவே லெஃகிற் [7]சிவந்த வுண்கட்
டொடிபிறழ் முன்கை யிளையோள்
அணிநல் லாகத் தரும்பிய சுணங்கே.

திணையும் துறையும் அவை.

மதுரையோலைக்கடைக் [8]கண்ணம்புகுந்தாராயத்தனர். (௩௫0)

பி - ம். [1]வருந்தின. [2]நுதிபல. [3]நுதலவிளையா துடை.
[4]றெரிமதர். [5]செநதீபபோலடி. [6]பொருந்தாது.
[7]சிவந்தபுணகடடொடிமருள முனகை.
[8]கண்ணம் புகுதநாராயததனர்.

(நருக) படுமணி மருங்கின பணைத்தாள் யானையும்
கொடிநுடங்கு மிசைய தேரு மாவும்
படையமை மறவரொடு துவன்றிக் கல்லெனக்
கடல்கண் டன்ன கண்ணகன் றானை
வென்றெறி முரசின் வேந்த ரென்றும்
வண்கை யெயினன் வாகை யன்ன
இவணலந் தாரா தமைகுவ ரல்லர்
என்னா வதுகொ றானே தெண்ணீர்ப்
பொய்கை மேய்ந்த செவ்வரி நாரை
தேங்கொண் மருதின் பூஞ்சினை முனையிற்
[1]காமரு காஞ்சித் துஞ்சும்
ஏமஞ்சால் சிறப்பினிப் பணைநல் லூரே.

திணையும் துறையும் அவை.
மதுரைப் படைமங்கமன்னியார். (நருக)

(நருஉ) தேஎங்கொண்ட வெண்மண்டையான்
வீ.....................கறக்குந்து
அவல்வகுத்த பசுங்குடையாற்
புதன்முல்லைப் பூப்பறிக்குந்து
ஆம்பல் வள்ளித் தொடிக்கை மகளிர்
குன்றேறிப் புனற்பாயிற்
புறவாயாற் புனல்வள..........
.............நொடைநறவின்
மாவண் டித்தன் வெண்ணெல் வேலி
உறந்தை யன்ன வுரைசா னன்கலம்
கொடுப்பவுங் கொளாஅனெ............
...........ர்தந்த நாகிள வேங்கையிற்
கதிர்த்தொளி திகழு நுண்பல் சுணங்கின்
மாக்கண் மலர்ந்த முலைய டன்னையும்
சிறுகோ லுளையும் புரவிமெ..........
.....................யமரே.

திணையும் துறையும் அவை.
பரணர். (நருஉ)

பி-ம். [1]காமர் நாஞ்சில்.

(௩௫௩) ஆசில் கம்மியன் மாசறப் புனைந்த
பொலஞ்செய் பல்கா சணிந்த வல்குல்
ஈகைக் கண்ணி யிலங்கத் தைஇத்
தருமமொ டியல்வோள் சாய னோக்கித்
தவிர்த்த தேரை விளர்த்த கண்ணை
வினவ லானா வெல்போ ரண்ணல்
யார்மக ளென்போய் கூறக் கேளினிக்
குன்றுகண் டன்ன நிலைப்பல் போர்பு
நாட்கடா வழித்த நனந்தலைக் குப்பை
வல்வி லிளையர்க் கல்குபத மாற்றாத்
தொல்குடி மன்னன் மகளே முன்னாட்
கூறி வந்த மாமுது வேந்தர்க்கு
. . . .
. . . . யுழக்கிக் குருதி யோட்டிக்
கதுவாய் போகிய [1]துதிவா யெஃகமொடு
பஞ்சியுங் களையாப் புண்ணர்
அஞ்சுதக வுடையரிவ டன்னை மாரே.

திணையும் துறையும் அவை.

காவிரிப்பூம்பட்டினத்துக் காரிக்கண்ணனார். (௩௫௩)

(௩௫௪) அரைசுதலை வரினு மடங்க லானான்
நிரைகா ழெஃக நீரின் மூழ்கப்
புரையோர் சேர்ந்தெனத் தந்தையும் பெயர்க்கும்
வயலமர் கழனி வாயிற் பொய்கைக்
கயலார் நாரை [2]யுகைத்த வாளை
புனலாடு மகளிர் வளமனை யொய்யும்
ஊர்கவி னிழப்பவும் வருவது கொல்லோ
சுணங்கணிந் தெழிலிய [3]வணங்கேந் திளமுலை
வீங்கிறைப் பணைத்தோண் மடந்தை
மான்பிணை யன்ன மகிழ்மட நோக்கே.

திணையும் துறையும் அவை.

பரணர். (௩௫௪)

பி - ம். [1]நுதிவாய். [2]யுதைத்த. [3]வணைந்தேந்து.

(௩௫௫) மதிலு ஞாயி லின்றே கிடங்கும்
நீஇ ரின்மையிற் கன்றுமேய்ந் துகளும்
ஊரது நிலைமையு மிதுவே*
....
....
.... (௩௫௫)

(௩௫௬) களரி பரந்து [1]கள்ளி போகிப்
பகலுங் [2]கூவுங் கூகையொடு [3]பிறழ்பல்
ஈம விளக்கிற் பேஎய் மகளிரொ
டஞ்சுவந் [4]தன்றிம் மஞ்சுபடு முதுகாடு
நெஞ்சமர் †காதல ரழுத கண்ணீர்
என்புபடு சுடலை வெண்ணீ றவிப்ப
[5]எல்லார் புறனுந் தான்கண் டுலகத்து
மன்பதைக் கெல்லாந் தானாய்த்
தன்புறங் காண்போர்க் காண்பறி யாதே.

திணையும் துறையும் அவை.

[6]தாயங்கண்ணனார். (௩௫௬)

(௩௫௭) குன்றுதலை மணந்த மலைபிணித் தியாத்தமண்
பொதுமை சுட்டிய மூவ ருலகமும்
பொதுமை யின்றி யாண்டிசி னோர்க்கும்
ஆண்ட வன்றே யாண்டுக டுணையே
வைத்த தன்றே வெறுக்கை வி......
.............................ணை
புணைகை விட்டோர்க் கரிதே துணையழத்

பி - ம். [1]கள்ளிபொங்கிப. [2]கூஉங். [3]பிறழ்வால.
[4]தன்றிமஞ்சு. [5]எல்லாப். [6]கதையங்கண்ணனார்.

*இதன்பின், ௩எ௬ - ஆம் பாட்டுமுழுவதும் ஆசிரியர் பெயருடன் சில பழைய ஏட்டுப் பிரதிகளில் தவறி வரையப்பெற்றுள்ளது.

†இந்நூலின் முதற்பதிப்பில் இதன் முன்பிருந்த பகுதி சிலபிரதிகளில், ௩எஎ - ஆம் பாட்டின் முதலில் வரையப்பட்டிருந்தமையாலும், இச்செய்யுள் பழையவுரைகளில் இந்த அளவிலேயே மேற்கோளாகக் காட்டப்பட்டிருந்தமையாலும், பொருண் முடிபாலும் இங்ஙனம் பதிப்பிக்கலாயிற்று.

தொக்குயிர் வெளவுங் காலை
இக்கரை நின்றிவர்ந் துக்கரை [1]கொளலே.

திணை - அது ; துறை.............பெருங்காஞ்சியுமாம்.

பிரமனார். (௩௫௭)

(௩௫௮) பருதி சூழ்ந்தவிப் பயங்கெழு மாநிலம்
ஒருபக லெழுவ ரெய்தி யற்றே
வையமுந் தவமுந் [2]தூக்கிற் றவத்துக்
[3]கையவி யனைத்து மாற்றா தாகலிற்
கைவிட் டனரே காதல ரதனால்
விட்டோரை [4]விடாஅ டிருவே
[5]விடாஅ தோரிவள் விடப்பட் டோரே.

திணை - அது ; துறை - மனையறம் துறவறம்.

[6]வான்மீகியார். (௩௫௮)

(௩௫௯) பாறுபடப் பறைந்த பன்மாறு மருங்கின்
வேறுபடு குரல வெவ்வாய்க் கூகையொடு
பிணந்தின் குறுநரி நிணந்திகழ் பல்ல
[7]பேஎய் மகளிர் பிணந்தழூஉப் பற்றி
விளருன் றின்ற வெம்புலான் [8]மெய்யர்
களரி மருங்கிற் கால்பெயர்த் தாடி
ஈம விளக்கின் வெருவரப் பேரும்
காடுமுன் னினரே நாடுகொண் டோரும்
நினக்கும் வருதல் வைக லற்றே
வசையு நிற்கு மிசையு நிற்கும்
அதனால், வசைநீக்கி யிசைவேண்டியும்
நசைவேண்டாது நன்றுமொழிந்தும்
[9]நிலவுக்கோட்டுப் பலகளிற்றொடு
பொலம்படைய [10]மாமயங்கிட
இழைகிளர் நெடுந்தே ரிரவலர்க் கருகாது

பி - ம். [1]கொளவே. [2]தூக்கிற றவத்திற கைவினையவினைத்தும். [3]ஐயவித்துணையும். [4]விடாது திருவே. [5]விடாதோரிவண். [6]வான்மீகையார். [7]பேஎமகளிர். [8]மெய்யகளரி. [9]நிலவுததோட்டு. [10]மாமயங்கி.

கொள்ளென [1]விடுவை யாயின் வெள்ளென
ஆண்டுநீ பெயர்ந்த பின்னும்
ஈண்டுநீடு விளங்குநீ யெய்திய புகழே.

திணை - அது ; துறை - பெருங்காஞ்சி.

[2]அந்துவன்கீரனைக் காவட்டனார். (௩௫௯)

(௩௬0) [3]பெரிதாராச் சிறுசினத்தர்
சிலசொல்லாற் பலகேள்வியர்
நுண்ணுணர்விற் [4]பெருங்கொடையர்
கலுழ்நனையாற் றண்டேறலர்
கனிகுய்யாற் கொழுந்துவையர்
[5]தாழுவந்து தழூஉமொழியர்
[6]பயனுறப்பப் பலர்க்காற்றி
ஏம மாக விந்நில மாண்டோர்
சிலரே பெரும கேளினி நாளும்
பலரே தகையஃ தறியா தோரே
அன்னோர் செல்வமு மன்னி நில்லா
தின்னு மற்றதன் பண்பே யதனால்
நிச்சமு [7]மொழுக்க முட்டிலை பரிசில்
நச்சுவர் கையி [8]னிரப்ப லோம்புமதி யச்சுவரப்
[9]பாறிறை கொண்ட பறந்தலை மாகத
கள்ளி [10]போகிய களரி மருங்கின்
வெள்ளி னிறுத்த பின்றைக் கள்ளொடு
[11]புல்லகத் திட்ட சில்லவிழ் வல்சி
புலைய னேவப் புன்மே லமர்ந்துண்
டழல்வாய்ப் புக்க பின்னும்
பலர்வாய்த் திராஅர் பருத்துண் டோரே.

[12]திணையும் துறையும் அவை.

[13]தந்துமாறனைச் சங்கவருணரென்னும் நாகரியர் பாடியது. (௩௬0)

பி - ம். [1]விடுகையாயின. [2]அந்துபன கீரனைததகா நட்டனார்.
[3]பெரிதாராற சிறு சினததா. [4]பருங்கொடை.
[5]தாழுவநதழூஉம். [6]பானுறுப்ப. [7]மொழுக்கமும்.
[8]இரப்பவோமபுமதியஞ்சுவரப். [9]பாறிரை. [10]பொதியகளரி.
[11]புககலததிட்ட. [12]இதுவுமது. [13]தநதுமாறனை.

(௩௯௧) காரெதி ருருமி னூறிக் கல்லென
ஆருயிர்க் கலமரு மாராக் கூற்றம்
நின்வர வஞ்சலன் மாதோ நன்பல
கேள்வி முற்றிய வேள்வி யந்தணர்க்
கருங்கல நீரொடு சிதறிப் பெருந்தகைத்
தாயினன்று பலர்க்கீத்துக்
தெருணடை மாகளிறொடு [1]தன்
அருள்பாடுநர்க்கு நன்கருளியும்
உருணடை . . . . ான்றதன்
தாள்சேருநர்க் கினிதீத்தும்
புரிமாலையர் பாடினிக்குப்
பொலந்தாமரைப் பூம்பாணரொடு
[2]கலந்தளை இய நீளிருக்கையாற்
பொறையொ. . . . . மானோக்கின்
வில்லென [3]விலங்கிய புருவத்து வல்லென
நல்கி னுவஞ்சு முள்ளெயிற்று மகளிர்
அல்கு லுங்கா வசைஇ மெல்லென
. . . . பொலங்கலத் தேந்தி
அமிழ்தென மடுப்ப மாந்தி யிகழ்விலன்
நில்லா வுலகத்து . . . . மைநீ
சொல்ல வேண்டா . . . . முந்தறிந்த
. . . .
. . . . னர். (௩௯௧)

(௩௯௨) ஞாயிற் றன்ன வாய்மணி மிடைந்த
[4]மதியுற ழார மார்பிற் புரளப்
பலிபெறு முரசம் பாசறைச் சிலைப்பப்
பொழிலகம் பரந்த பெ. . . . .
. . . . கும விசய [5]வெண்கொடி
அணங்குருத் தன்ன கணங்கொ டானைக்
கூற்றத் தன்ன மாற்றரு முன்பின்

பி - ம். [1]தனருளபாடுநாககு. [2]கலந்தலைஇய. [3]விலங்கியவுருவத்து. [4]மணியுற ழாரம். [5]வெனகொடி.

ஆக்குரற் காண்பி [1]னந்த ணாளர்
நான்மறைக் குறி . . . . யின்
அறங்குறித் தன்று பொருளா குதலின்
மருடீர்ந்து மயக்கொரீஇக்
கைபெய்தநீர் கடற்பரப்ப
ஆமிருந்த வடைநல்கிச்
சோறு [2]கொடுத்து மிகப்பெரிதும்
வீறுசான . . . . நன்றும்
சிறுவெள் ளென்பி னெடுவெண் களரின்
வாய்வன் காக்கை கூகையொடு கூடிப்
பகலுங் கூவு மகலு ளாங்கட்
காடுகண் மறைத்த கல்லென் சுற்றமொ
டில்லென் றில்வயிற் பெயர மெல்ல
இடஞ்சிறி தொதுங்க லஞ்சி
உடம்பொடுஞ் சென்மா ருயர்ந்தோர் நாட்டே.

திணை - பொதுவியல்; துறை - பெருங்காஞ்சி.
அவனைச் சிறுவெண்டேரையார். (௩௬௨)

(௩௬௩) [3]இருங்கட லுடுத்தவிப் பெருங்கண் [4]மாநிலம்
உடையிலை [5]நடுவண திடை [6]பிறர்க் கின்றித்
தாமே யாண்ட வேமங் காவலர்
இடுதிரை மணலினும் பலரே சுடுபிணக்
காடுபதி யாகப் போகித் தத்தம்
நாடு பிறர்கொளச் [7]சென்றுமாய்ந் தனரே
அதனால், நீயுங் கேண்மதி [8]யத்தை வீயா
துடம்பொடு நின்ற வுயிரு மில்லை
மடங்க லுண்மை மாயமோ வன்றே
[9]கள்ளி லேய்ந்த [10]முள்ளியம் புறங்காட்டு

பி - ம். [1]னந்தணளிர். [2]கொடுக்குமிகப்.
[3]கருங்கடலுடுத்த, இருங்கடற்றானையோடு பெருநிலங் கவைஇ.
[4]மாநிலத்து. [5]நடுவுபிற........கின்றி. [6]பெறகொழியத்.
[7]சென்று மாயநதோரே, சென்று பாயந்தோரே.
[8]யக்கை. [9]களளிவேயநத.
[10]முளளிய புறங்காட்டு, முளிசுடலை நளிசுடலை, முள்ளிக்கள்ளி கள்ளிருஞ் சுடலை.

வெள்ளில் போகிய வியலு ளாங்கண்
உப்பிலா அவிப்புழுக்கல்
கைக்கொண்டு பிறக்குநோக்கா
[1]திழிபிறப்பினோ னீயப்பெற்று
நிலங்கல னாக விலங்குபலி மிசையும்
இன்னா வைகல் வாரா [2]முன்னே
செய்ந்நீ முன்னிய வினையே
முந்நீர் வரைப்பக முழுதுடன் றுறந்தே.

[3]திணையும் துறையும் அவை.

....................ஐயாதிச்சிறு[4]வெண்டேரையார். (௩௬௩)

(௩௬௪) வாடா மாலை பாடினி யணியப்
பாணன் சென்னிக் [5]கேணி பூவா
எரிமரு டாமரைப் பெருமலர் [6]தயங்க
மைவிடை யிரும்போத்துச் செந்தீச் சேர்த்திக்
காயங் கனிந்த கண்ணகன் கொழுங்குறை
நறவுண் செவ்வாய் நாத்திறம் பெயர்ப்ப
உண்டுந் தின்று மிரப்போர்க் [7]கீய்ந்தும்
[8]மகிழ்கம் வம்மோ மறப்போ ரோயே
அரிய வாகலு முரிய பெரும
நிலம்பக வீழ்ந்த வலங்கற் பல்வேர்
முதுமரப் பொத்திற் கதுமென வியம்பும்
[9]கூகைக் கோழி யானாத்
தாழிய பெருங்கா [10]டெய்திய ஞான்றே.

திணையும் துறையும் அவை.

அவனைக் கூகைக்கோழியார். (௩௬௪)

(௩௬௫) மயங்கிருங் [11]கருவிய விசும்புமுக னாக
இயங்கிய விருசுடர் கண்ணெனப் [12]பெயரிய

பி - ம். [1]இப்பிறப பினென்.
[2]இன்னசெய்தி நீ முன்னியவினையே. [3]இதுவுமது.
[4]வெண்டரையார். [5]தெணிபூவா. [6]கயங்க. [7]கீந்தும்.
[8]மகிழகவமமோ. [9]கூகை கோழியானந்.
[10]டெயதியதுஞான்று. [11]கருவி விசுமபுதுகனக. [12]பெரிய.

[1]வளியிடை வழங்கா வழக்கரு நீத்தம்
வயிரக் [2]குறட்டின் [3]வயங்குமணி யாரத்துப்
பொன்னந் திகிரி முன்சமத் [4]துருட்டிப்
பொருநர்க் காணாச் செருமிகு முன்பின்
முன்னோர் செல்லவுஞ் [5]செல்லா தின்னும்
[6]விலைநலப் பெண்டிரிற் பலர்மீக் கூற
[7]உள்ளேன் [8]வாழியர் யானெனப் பன்மாண்
நிலமக ளழுத காஞ்சியும்
உண்டென [9]வுரைப்பரா லுணர்ந்திசி னோரே.

திணை - காஞ்சி; துறை - பெருங்காஞ்சி.

[10]மார்க்கண்டேயனார். (௩௬௫)

(௩௬௬) [11]விழுக்கடிப் பறைந்த முழுக்குரன் முரசம்
ஒழுக்குடை மருங்கி னொருமொழித் தாக
அரவெறி யுருமி[12]னுரறுபு சிலைப்ப
ஒருதா மாகிய பெருமை யோரும்
தம்புகழ் நிறீஇச் சென்றுமாய்ந் தனரே
அதனால், அறவோன் மகனே மறவோர் செம்மால்
. . . . உரைப்பக் கேண்மதி
நின்னூற்றம் பிறரறியாது
பிறர்கூறிய மொழிதெரியா
ஞாயிற் றெல்லை யாள்வினைக் குதவி
இரவி னெல்லை வருவது நாடி
உரை . . . .
உழவொழி பெரும்பக டழிதின் றுங்குச்
செங்கண் மகளிரொடு சிறுதுனி யளைஇ
அங்கட் டேற [13]லாய்கலத் துகுப்பக்
[14]கெடலருந் திருவ . . . .
மடை [15]வேண்டுநர்க் கிடையருகா

பி - ம். [1]வழியிடை. [2]குரட்டின. [3]வயிரமணியாரததுப.
[4]துருட்டிய. [5]சொல்லாது. [6]விலைநற்.
[7]உளனேவாழிய. [8]வாழியனெனனப.
[9]உரைபபருணாந. [10]மாாககணடயனூர்.
[11]விழுக்கடிபபடைந்த. [12]னுரறுபரிலைபப. [13]ஆயகளதது.
[14]கெடிலருநதிவே. [15]வேண்டுநாகடையருதாதிவிழ்.

தவிழ்வேண்டுநர்க் கிடையருளி
விடைவீழ்த்துச் சூடுகிழிப்ப
நீர்நிலை பெருத்த வார்மண லடைகரைக்
காவு தோறும்.........
மடங்க லுண்மை மாயமோ வன்றே.

திணையும் துறையும் அவை.

தருமபுத்திரனைக் கோதமனார். (௩௱௬௬)

(௩௱௬௭) நாகத் தன்ன பாகார் மண்டிலம்
தமவே [1]யாயினுந் தம்மொடு செல்லா
வேற்றோ ராயினு நோற்றோர்க் கொழியும்
ஏற்ற பார்ப்பார்க் கீர்ங்கை நிறையப்
பூவும் பொன்னும் புனல்படச் சொரிந்து
பாசிழை மகளிர் பொலங்கலத் தேந்திய
நாரரி [2]தேறன் மாந்தி மகிழ்சிறந்
திரவலர்க் கருங்கல மருகாது வீசி
வாழ்தல் வேண்டுமிவண் வரைந்த வைகல்
வாழச் செய்த [3]நல்வினை யல்ல
தாழுங் [4]காலைப் புணைபிறி தில்லை
ஒன்றுபுரிந் தடங்கிய விருபிறப் பாளர்
முத்தீப் புரையக் காண்டக விருந்த
கொற்ற [5]வெண்குடைக் கொடித்தேர் [6]வேந்திர்
யானறி யளவையோ [7]விதுவே வானத்து
வயங்கித் தோன்று மீனினு [8]மிம்மென
இயங்கு மாமழை யுறையினும்
உயர்ந்துமேந் [9]தோன்றிப் பொலிகநுந் நாளே.

திணை - பாடாண்டிணை ; துறை - வாழ்த்தியல்.

சேரமான் மாரி [10]வெண்கோவும், பாண்டியன் கானப்பேர் [11]தந்த உக்கிரப் பெருவழுதியும், சோழன் இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளியும் ஒருங்கிருந்தாரை ஒளவையார். (௩௱௬௭)

பி - ம். [1]யாயினுநதமவேயனறி.
[2]தெறறவாது நனமகிழநது, தெறறநாணமகிழதூங்குநது.
[3]நாலவினை. [4]காலத்துத் துணைபிறிது. [5]நீள்குடை. [6]வேந்தர்.
[7]விவவெ. [8]மிமமெனபபாரதியங் குமாமழை.
[9]தொணடுமெபொலிக. [10]வெள்கோவும். [11]கடந்த.

(௩௱௬௮) களிறு முகந்து பெயர்குவ மெனினே
ஒளிறுமழை தவிர்க்குங் குன்றம் போலக்
கைம்மா வெல்லாங் கணையிடத் தொலைந்தன
[1]கொடுஞ்சி நெடுந்தேர் முகக்குவ மெனினே
கடும்பரி நன்மான் வாங்குவயி றொல்கி
நெடும்பீ டழிந்து நிலஞ்சேர்ந் தனவே
கொய்சுவற் புரவி முகக்குவ மெனினே
[2]மெய்நிறைந்த வடுவொடு பெரும்பிறி தாகி
வளிவழக் கறுத்த வங்கம் போலக்
குருதியம் பெரும்புனல் கூர்ந்தனவே யாங்க
[3]முகவை யின்மையி னுகவை யின்றி
இரப்போ ரிரங்கு மின்னா வியன்களத்
தாளழிப் படுத்த வாளே ருழவ
கடாஅ யானைக் [4]கால்வழி யன்னவென்
தெடாரித் தெண்கண் டெளிர்ப்ப வொற்றிப்
பாடி வந்த தெல்லாங் [5]கோடியர்
முழவுமருண் டிருமணி [6]மிடைந்தநின்
[7]அரவுற ழார முகக்குவ [8]மெனவே.

திணை - வாகை ; துறை - மறக்களவழி.

சேரமான் குடக்கோநெடுஞ்சேரலாதன் சோழன் [9]வேற்பஃறடக் கைப்பெருநற்கிள்ளியோடு போர்ப்புறத்துப் பொருது வீழ்ந்தாரங்கழத் தன்னதாக உயிர்போகாது கிடந்தானைக் கழாத்தலையார். (௩௱௬௮)

(௩௱௬௯) [10]இருப்புமுகஞ் செறித்த வேந்தெழின் மருப்பிற்
[11]கருங்கை யானை கொண்மூ வாக
நீண்மொழி மறவ ரெறிவன ருயர்த்த
வாண்மின் னாக வயங்குகடிப் [12]பமைந்த
குருதிப் பலிய முரசுமுழக் காக

பி - ம். [1]கொடிஞ்சி.
[2]மெயசிறைகத ் வாடுபெரும பிறிதாகி வழககறுத்த.
[3]முகவையினமையினறி.
[4]காலகழிவனனவெ்ன, காலகழியனனவென். [5]கொடியார்.
[6]மிடைந்த நிரையுறுமாரம. [7]அறையுறும். [8]மெனினே.
[9]வெல்பஃறடக்கை. [16]இரும்பு. [11]பெருங்கையானை. [13]படைநத.

அரசராப் பனிக்கு மணங்குறு பொழுதின்
வெவ்விசைப் புரவி வீசுவளி யாக
விசைப்புறு வல்வில் வீங்குநா [1]ணுகைத்த
கணைத்துளி பொழிந்த கண்ணகன் கிடக்கை
[2]ஈரச் செறுவயிற் றேரே ராக
விடியல் புக்கு நெடிய நீட்டிநின்
செருப்படை மிளிர்த்த திருத்துறு [3]பைஞ்சாற்
பிடித்தெறி [4]வெள்வேல் கணையமொடு வித்தி
[5]விழுத்தலை சாய்த்த வெருவரு பைங்கூழ்ப்
[6]பேய்மகள் பற்றிய பிணம்பிறங்கு பல்போர்பு
கணநரி யோடு [7]கழுதுகளம் படுப்பப்
பூதங் காப்பப் பொலிகளந் தழீஇப்
பாடுநர்க் கிருந்த பீடுடை யாளா
தேய்வை [8]வெண்காழ் புரையும் விசிபிணி
வேய்வை காணா விருந்திற் போர்வை
அரிக்குரற் றடாரி யுருப்ப [9]வொற்றிப்
பாடி வந்திசிற் பெரும பாடான்
றெழிலி தோயு மிமிழிசை யருவிப்
பொன்னுடை நெடுங்கோட் டிமயத் தன்ன
ஓடை நுதல வொல்குத லறியாத்
துடியடிக் குழவிய பிடியிடை மிடைந்த
வேழ முகவை நல்குமதி
தாழா வீகைத் தகைவெய் யோயே.

திணையும் துறையும் அவை; துறை - ஏர்க்கள உருவகமுமாம்.
சேரமான் கடலோட்டிய [10]வேல்கெழுகுட்டுவனைப் பரணர். (௩௬௯)

(௩௭௦) ....ளி
நாரும் போழுஞ் செய்துண் டோராங்குப்
[11]பசிதினத் திரங்கிய விரும்பே றொக்கற்

பி - ம். [1]ணுதைத்த. [2]ஈசசசெறுவவியிற், ஈசசசெறுவிற். [3]செஞசாற். [4]வைவேற்கணையொடு. [5]இருந்தலை காய்த்த. [6]பேஎயள். [7]கழுகு. [8]வெணகாள். [9]வொறறப். [10]வேலகெழு. [11]பரிதினத்.

கார்பதங் கண்ணென மாதிரந் துழைஇ
வேருழந் துலறி மருங்குசெத் தொழியவந்
தத்தக் குடிஞைத் துடிமரு டீங்குரல்
உழுஞ்சிலங் கவட்டிடை யிருந்த பருந்தின்
பெடைபயிர் குரலொ டிசைக்கு மாங்கட்
கழைகாய்ந் துலறிய வறங்கூர் நீளிடை
வரிமரற் றிரங்கிய கானம் பிற்படப்
பழுமர முள்ளிய பறவை போல
ஒண்படை மாரி வீழ்கனி பெய்தெனத்
துவைத்தெழு குருதி நிலமிசைப் பரப்ப
விளைந்த செழுங்குர லரிந்துகால் குவித்துப்
படுபிணப் பல்போர் பழிய வாங்கி
எருதுகளி றாக வாண்மட லோச்சி
அதரி திரித்த வாளுறு கடாவின்
அகன்கட் டடாரி [1]தெளிர்ப்ப வொற்றி
வெந்திறல் வியன்களம் பொலிகென் றேத்தி
இருப்புமுகஞ் செறித்த வேந்தெழின் மருப்பின்
வரைமருண் முகவைக்கு வந்தனென் பெரும
வடிநவி லெஃகம் பாய்ந்தெனக் கிடந்த
தொடியுடைத் தடக்கை யோச்சி வெருவார்
இனத்தடி விராய வரிக்குட ரடைச்சி
அழுகுரற் [2]பேய்மக ளயரக் கழுகொடு
செஞ்செவி யெருவை திரிதரும்
அஞ்சுவரு கிடக்கைய களங்கிழ வோயே.

திணையும் துறையும் அவை.

சோழன் செருப்பாழியெறிந்த இளஞ்சேட்சென்னியை ஊன்போதி பசுங்குடையார். (நஎ0)

(நஎக) அகன்றலை வையத்துப் [3]புரவலர்க் காணது
[4]மரந்தலைச் சேர்ந்து பட்டினி வைகிப்
போதவி ழலரி நாரிற் றொடுத்துத்

பி - ம். [1]தெளிர்ப்பவே யொற்றி. [2]பேஎயமகள்.
[3]புரவறகாணுத், பாவறகாணுது. [4]மறநதலேசோநது.

தயங்கிரும் பித்தை பொலியச் சூடிப்
பறையொடு தகைத்த கலப்பையென் முரவுவாய்
ஆடுறு குழிசி பாடின்று தூக்கி
மன்ற வேம்பி னொண்பூ வுறைப்பக்
குறைசெயல் வேண்டா நசைய விருக்கையேன்
அரிசி யின்மையி னாரிடை நீந்திக்
கூர்வா யிரும்படை நீரின் மிளிர்ப்ப
[1]வருகணை வாளி.......யன்பின்று தலைஇ
[2]இரைமுரா சார்க்கு முரைசால் பாசறை
வில்லேர் [3]ருழவினின் னல்லிசை யுள்ளிக்
குறைத்தலைப் படுபிண னெதிரப் போர்பழித்
தியானை யெருத்தின் வாண்மட லோச்சி
அதரி திரித்த வாளுகு கடாவின்
மதியத் தன்னவென் விசியுறு தடாரி
அகன்க ணதிர வாகுளி [4]தொடாலிற்
பணைமரு ணெடுந்தாட் [5]பல்பிணர்த் தடக்கைப்
புகர்முக [6]முகவைக்கு வந்திசிற் பெரும
களிற்றுக்கோட் டன்ன வாலெயி றழுத்தி
விழுக்கொடு விரைஇய வெண்ணிணச் சுவையினள்
குடர்த்தலை [7]மாலை சூடி யுணத்தின
ஆனாப் பெருவளஞ் செய்தோன் வானத்து
வயங்குபன் மீனினும் வாழியர் பலவென
உருகெழு [8]பேய்மக ளயரக்
குருதித்துக ளாடிய களங்கிழ வோயே.

திணையும் துறையும் அவை.

தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனைக் கல்லாடனார். (ருஎக)

(ருஎஉ) விசிபிணித் தடாரி விம்மென வொற்றி
ஏத்தி வந்த [9]தெல்லா முழுத்த

பி - ம். [1]இருகணை. [2]உரை சுரும்பார்க்கும், இரைசுரும்பு. [3]ருழவநின். [4]தொழாலிற. [5]பகலபிணர். [6]முகவை வந்திசிற். [7]மாலைதுயலவரச்சூடி, மாலைசூடி யுணத்தின மாணப். [8]பேஎயமகளயா. [9]தெல்லாமழுத்த.

இலங்குவா ளவிரொளி வலம்பட மின்னிக்
கணைத்துளி பொழிந்த கண்கூடு பாசறைப்
பொருந்தாத் தெவ்வ ரரிந்ததலை யடுப்பிற்
கூவிள விறகி [1]ளுக்குவரி நுடங்கல்
ஆனா மண்டை வன்னியந் துடுப்பின்
ஈனா வேண்மா னிடந்துழந் தட்ட
மாமறி பிண்டம் [2]வாலுவ னேந்த
வதுவை விழவிற் புதுவோர்க் கெல்லாம்
வெவ்வாய்ப் பெய்த பூதநீர் சால்கெனப்
புலவுக்களம் பொலிய வேட்டோய்நின்
நிலவுத்திக ழார முகக்குவ மெனவே.

திணை - வாகை; துறை - மறக்களவேள்வி.
அவனை [3]மாங்குடிகிழார். (௩௭௨)

(௩௭௩) உருமிசை [4]முழக்கென முரச மிசைப்பச்
செருநவில் வேழங் கொண்மூ வாகத்
தேர்மா வழிதுளி தலைஇ நாமுறக்
கணைக்காற் றெடுத்த கண்ணகன் பாசறை
இழிதரு குருதியொ டேந்திய வொள்வாட்
பிழிவது போலப் [5]பிட்டையூ றுவப்ப
மைந்த ராடிய மயங்குபெருந் தானைக்
கொங்குபுறம் பெற்ற கொற்ற வேந்தே
. . . . தண்ட மாப்பொறி
மடக்கண் மயிலியன் மறலி யாங்கு
நெடுஞ்சுவர் நல்லில் புலம்பக் கடைகழிந்து
மென்றோண் மகளிர் மன்றம் பேணார்
புண்ணுவ . . . .
. . . . யணியப் புரவி வாழ்கெனச்
சொன்னிழ லின்மையி னன்னிழற் சேர
நுண்பூண் மார்பிற் புன்றலைச் சிறாஅர்

பி - ம். [1]ளுக்குவதிதுடங்கல. [2]வலவனேநத.
[3]மாங . . கிழார். [4]முழகெயிசைய. [5]பிட்டயூறுவபப.

[1]அம்பழி பொழுதிற் றமர்முகங் காணா
. . . . ற் றெருக்கான
வேந்துபுறங் கொடுத்த வீய்ந்துகு பறந்தலை
மாட மயங்கெரி மண்டிக் கோடிறு
புருமெறி மலையி னிருநிலஞ் சேரச்
சென்றோன் மன்ற சொடெ . . . .
. . . . ண்ணாறிநர் கண்டுகண் ணலைப்ப
வஞ்சி முற்றம் வயக்கள னாக
அஞ்சா மறவ ராட்போர் பழித்துக்
கொண்டனை பெரும குடபுலத் ததரி
பொலிக வத்தைநின் பணைதனற . . . . ளம்
விளங்குதிணை வேந்தர் களந்தொறுஞ் சென்று
புகர்முக முகவை பொலிகென் றேத்திக்
[2]கொண்டன ரென்ப பெரியோர் யானும்
அங்கண் மாக்கிணை யதிர வொற்ற
. . . . லெனாயினுங் காதலி னேத்தி
நின்னோ ரன்னோர் [3]பிறரிவ ணின்மையின்
[4]மன்னெயின் முகவைக்கு வந்திசிற் பெரும
பகைவர் புகழ்ந்த வாண்மை [5]நகைவர்க்குத்
தாவின் றுதவும் பண்பிற் பேயொடு
கணநரி [6]திரிதரு மாங்க ணிணனருந்து
செஞ்செவி யெருவை குழீஇ
அஞ்சுவரு கிடக்கைய களங்கிழ வோயே.

திணை - அது. துறை - மறக்களவழி; ஏர்க்கள உருவகமுமாம்.

சோழன் குராப்பள்ளித்துஞ்சிய கிள்ளிவளவன் கருவூரெறிந்தானைக் கோவூர்கிழார். (௩௭௩)

(௩௭௪) கானன் மேய்ந்து வியன்புலத் தல்கும்
புல்வா யிரலை நெற்றி யன்ன
பொலமிலங்கு சென்னிய பாறுமயி [7]ரவியத்

பி - ம். [1]அமபாழிலொழிதிற றமா. [2]தொண்டரெனப். [3]பிறரிவர். [4]மின்னெயில். [5]நசைவாக்கு. [6]திரிதரூஉமாங்கண. [7]ரவியபபத

தண்பணி [1]யுறைக்கும் புலரா ஞாங்கர்
மன்றப் பலவின் மால்வரை பொருந்தியென்
தெண்கண் மாக்கிணை தெளிர்ப்ப வொற்றி
இருங்கலை யோர்ப்ப விசைஇக் காண்வரக்
கருங்கோற் குறிஞ்சி யடுக்கம் பாடப்
புலிப்பற் றாலிப் புன்றலைச் சிறாஅர்
மான்கண் மகளிர்க் கான்றே ரகன்றுவா
சிலைப்பாற் பட்ட முளவுமான் கொழுங்குறை
விடர்முகை யடுக்கத்துச் சினைமுதிர் [2]சாந்தம்
புகர்முக வேழத்து மருப்பொடு மூன்றும்
இருங்கேழ் வயப்புலி வரியதட் குவைஇ
விருந்திறை நல்கு நாட னெங்கோன்
கழறொடி யாஅ யண்டிரன் போல
வண்மையு முடையையோ ஞாயிறு
கொன்விளங் குதியால் விசும்பி னானே.

திணை - பாடாண்டிணை ; துறை - பூவைநிலை.
ஆய் அண்டிரனை உறையூர் ஏணிச்சேரி முடமோசியார். (௩௭௪)

(௩௭௫) அலங்குகதிர் சுமந்த கலங்கற் சூழி
நிலைதளர்வு தொலைந்த வொல்குநிலைப் பல்காற்
பொதியி லொருசிறை பள்ளி யாக
முழாவரைப் போந்தை யரவாய் மாமடல்
நாரும் [3]போழுங் கிணையொடு சுருக்கி
ஏரின் வாழ்நர் குடிமுறை புகாஅ
ஊழிரந் துண்ணு முயவல் வாழ்வைப்
புரவெதிர்ந்து கொள்ளுஞ் சான்றோர் யாரெனப்
பிரசந் தூங்கு மறாஅ [4]யாணர்
வரையணி படப்பை நன்னாட்டுப் பொருந
பொய்யா வீகைக் கழறொடி யாஅய்
யாவரு மின்மையிற் [5]கிணைப்பத் தாவது
பெருமழை கடற்பரந் தாஅங் கியானும்
ஒருநின் னுள்ளி வந்தனெ னதனாற்

பி - ம். [1]யிறைக்கும். [2]சாநதப். [3]போருங்.
[4]யாணாவரையணிப். [5]கினபப.

புலவர் புக்கி லாகி நிலவரை
நிலீஇய ரத்தை நீயே யொன்றே
நின்னின்று வறுவி தாகிய வுலகத்து
நிலவன் மாரோ புரவலர் துன்னிப்
[1]பெரிய வோதினுஞ் சிறிய வுணராப்
பீடின்று பெருகிய திருவிற்
[2]பாடின் மன்னரைப் பாடன்மா ரெமரே.

திணை - பாடாண்டிணை; துறை - வாழ்த்தியல்.

அவனை அவர். (௩௭௫)

(௩௭௬) [3]விசும்பு நீத்த மிறந்த ஞாயிற்றுப்
பசுங்கதிர் [4]மழுகிய சிவந்துவாங் [5]கந்தி
சிறுநனி பிறந்த பின்றைச் செறிபிணிச்
[5]சிதாஅர் வள்பினென் றெடாரி தழீஇப்
பாண ராரு மளவை யான்றன்
[7]யாணர் நன்மனைக் கூட்டுமுத னின்றனென்
இமைத்தோர் விழித்த மாத்திரை ஞெரேரெனக்
குணக்கெழு திங்கள் [8]கனையிரு ளகற்றப்
பண்டறி வாரா வுருவோ டென்னரைத்
தொன்றுபடு துளையொடு பருவிழை [9]போகி
நைந்துகரை பறைந்தவென் னுடையு நோக்கி
விருந்தின னளிய னிவனெனப் பெருந்தகை
நின்ற [10]முரற்கை நீக்கி நன்றும்
அரவுவெகுண் டன்ன தேறலொடு சூடுதருபு
நிரயத் தன்னவென் [11]வறன்களைந் தன்றே
இரவி னானே யீத்தோ னெந்தை
அன்றை [12]ஞான்றினொ டின்றி னூங்கும்
இரப்பச் சிந்தியே னிரப்படு புணையின்

பி - ம். [1]பெரியவேத்தினுஞ். [2]பாடிமன்னரை.
[3]விசும்பினீத்தமிறந்த, விசும்பிணியத்தமிறந்த.
[4]மழுங்கிய, பழுனிய, மழகிய. [5]கந்திச் சிறுநனியிறந்த.
[6]சிதாஅவளபின். [7]பாணர்நன்......நின்றென.
[8]மறையிருள். [9]போக்கி. [10]மூரற்கை மிக்குநன்று
[11]வறங். [12]நான்றினொடு.

உளத்தி னளக்கு மிளிர்ந்த தகையேன்
நிறைக்குளப் புதவின் மகிழ்ந்தனெ னாகி
ஒருநாள், இரவலர் வரையா வள்ளியோர் கடைத்தலை
ஞாங்கர் நெடுமொழி பயிற்றித்
தோன்றல் செல்லாதென் சிறுகிணைக் குரலே.

திணை - அது ; துறை - இயன்மொழி.
[1]ஓய்மான் நல்லியாதனைப் புறத்திணை நன்னாகனார். (நஎசு)

(நஎஎ) பனிபழுனிய பல்யாமத்துப்
பாறுதலை மயிர்நனைய
இனிது துஞ்சுந் திருநகர் வரைப்பின்
இனைய லகற்றவென் கிணை [2]தொடாக் குறுகி
அவியுணவினோர் புறங்காப்ப
அற [3]நெஞ்சத்தோன் வாழநாளென்
றதற்கொண்டு வரலேத்திக்
கரவில்லாக் கவிவண்கையான்
வாழ்கவெனப் பெயர்பெற்றோர்
பிறர்க்குவமந் தானல்லது
தனக்குவமம் பிறரில்லென
அதுநினைந்து மதி [4]மழுகி
ஆங்குநின்ற வெற்காணூஉச்
சேய்நாட்டுச் செல்கிணைஞனை
நீபுரவலை யெமக்கென்ன
[5]மலைபயந்த மணியுங் கடறுபயந்த பொன்னும்
கடல்பயந்த கதிர்முத்தமும்
வேறுபட்ட வுடையுஞ் சேறுபட்ட தசும்பும்
கனவிற் கண்டாங்கு வருந்தாது நிற்ப
நனவி [6]னல்கியோ னசைசா ன்றோன்றல்
நாடென மொழிவோரவ னாடென மொழிவோர்
வேந்தென மொழிவோரவன் [7]வேந்தென மொழிவோர்

பி - ம். [1]ஆய்மானல், ஓய்மான் வில்லியாதனைப், ஓய்மான் நல்லியக் கோடனைப். [2]தாடகுறுகி. [3]நெஞ்சத்தோனளென்று.
[4]பழுகி. [5]மலைபெயர்ந்த பொன்னும்...பயந்தமணியும்.
[6]னல்கியோனென்கை. [7]வேந்தன.

. . . . பொற்கோட் டியானையர்
கவர்பரிக் க்ச்சைநன்மான்
வடிமணி வாங்குருள
. . . . நற்றேர்க்குழுவினர்
கதழிசை வன்கணினர்
வாளின் வாழ்ந ரார்வமொ டீண்டிக்
கடலொலி கொண்ட தானை
அடல்வெங் குருசின் மன்னிய நெடிதே.

திணை - அது ; துறை - வாழ்த்தியல்.

சோழன் இராசசூயம்வேட்ட பெருநற்கிள்ளியை உலோச்சனார். (௱௭௭)

(௱௭௮) தென்பரதவர் மிடல்சாய
வடவடுகர் வாளோட்டிய
[1]தொடையமை கண்ணித் திருந்துவேற் றடக்கைக்
கடுமா [2]கடைஇய விடுபரி [3]வடிம்பின்
நற்றூர்க் கள்ளின் சோழன் கோயிற்
புதுப்பிறை யன்ன சுதைசெய் மாடத்துப்
பணிக்கயத் தன்ன நீணகர் நின்றென்
அரிக்கூடு மாக்கிணை யிரிய வொற்றி
எஞ்சா மரபின் வஞ்சி பாட
எமக்கென [4]வகுத்த வல்ல மிகப்பல
மேம்படு சிறப்பி [5]னருங்கல வெறுக்கை
தாங்காது பொழிதந் தோனே யதுகண்
டிலம்பா டுழந்தவென் னிரும்பே ரொக்கல்
விரற்செறி மரபின செவித்தொடக் குநரும்
செவித்தொடர் மரபின [6]விரற்செறிக் குநரும்
[7]அரைக்கமை மரபின மிடற்றியாக் குநரும்
மிடற்றமை மரபின வரைக்கியாக் குநரும்
[8]கடுந்தெற லிராம னுடன்புணர் சீதையை
வலித்தகை யரக்கன் வெளவிய [9]ஞான்றை

பி - ம். [1]தொடையமைக்கண்ணி. [2]குடைஇய.
[3]வடிம்பினறறைகிளளிசொழர். [4]வகுதகுவல்ல.
[5]னழுஙகலவெறுக்கை. [6]விரறசெறிகுநருஞ.
[7]மனக்கமைமரபினமிடறு. [8]கடுந்தேர். [9]ஞான்றுநிலஞ.

நிலஞ்சேர் மதரணி கண்ட குரங்கின்
செம்முகப் பெருங்கிளை [1]யிழைப்பொலிந் தாஅங்
கறாஅ [2]வருநகை யினிதுபெற் றிகுமே
இருங் [3]கிளைத் தலைமை யெய்தி
அரும்பட ரெவ்வ முழந்ததன் றலையே.

திணை - அது ; துறை - இயன்மொழி.

சோழன் செருப்பாழியெறிந்த இளஞ்சேட்சென்னியை [4]ஊன்பொதி பசுங்குடையார். (நூஎஅ)

(நூஎகூ) யானே பெறுகவன் றாணிழல் வாழ்க்கை
அவனே பெறுகவென் னாவிசை நுவறல்
நெல்லரி தொழுவர் கூர்வாண் மழுங்கிற்
[5]பின்னை மறத்தோ டரியக் கல்செத்
தள்ளல் யாமைக் கூன்புறத் துரிஞ்சும்
[6]நெல்லமல் புரவி னிலங்கை கிழவோன்
வில்லி யாதன் கிணையேம் பெரும
குறுந்தா ளேற்றைக் கொழுங்க ணவ்விளர்
நறுநெய் யுருக்கி நாட்சோ றீயா
வல்ல னெந்தை பசிதீர்த் தல்லெனக்
[7]கொன்வரல் வாழ்க்கைநின் கிணைவன் கூறக்
கேட்டதற் கொண்டும் வேட்கை தண்டாது
விண்டோய் தலைய குன்றம் பின்பட
..........ரவந்தனென் யானே தாயில்
தூவாக் குழவி போல வாங்கத்
திருவுடைத் திருமனை யைதுதோன்று கமழ்புகை
வருமழை மங்குலின் மறுகுடன் மறைக்கும்
[8]குறும்படு குண்டகழ் நீண்மதி லூரே.

திணை - அது; துறை - பரிசிற்றுறை.

ஓய்மான் வில்லியாதனைப் புறத்திணை [9]நன்னாகனார். (நூஎகூ)

பி - ம். [1]மிழைப்பொலிந். [2]வருநதை.
[3]கிணைத்தலைமை. [4]மொழி...திபசுங்குடையார்.
[5]பிள்ளைமறத்தோடு. [6]கெலலமல். [7]கோனவல்.
[8]குறுமபடுநதொடகழிநீண். [9]நன்னாதன்.

(௩௮௦) தென்பவ் வத்து முத்துப் பூண்டு
வடகுன் றத்துச் சாந்த முரீஇ
. . . . ங்கடற் றுணை
இன்னிசைய விறல்வென்றித்
தென்னவர் [1]வயமறவன்
மிசைப்பெய்தநீர் கடற்பரந்து முத்தாகுந்து
நாறிதழ்க் குளவியொடு [2]கூதளங் குழைய
வேறுபெ . . . . த்துந்து
தீஞ்சுளைப் பலவி னுஞ்சிற் பொருநன்
துப்பெதிர்ந் தோர்க்கே யுள்ளாச் சேய்மையன்
நட்பெதிர்ந் தோர்க்கே [3]யங்கை நண்மையன்
வல்வேற் கந்த னல்லிசை யல்ல
. . . . த்தார்ப் பிள்ளையஞ் சிறாஅர்
[4]அன்ன னாகன் மாறே யிந்நிலம்
[5]இலம்படு காலை யாயினும்
புலம்பல்போ யின்று பூத்தவென் கடும்பே.

திணை - அது; துறை - இயன்மொழி.

நாஞ்சில்வள்ளுவனைக் கருவூர்க்கதப்பிள்ளை. (௩௮௦)

(௩௮௧) ஊனு மூனு [6]முனையி னினிதெனப்
[7]பாலிற் பெய்தவும் பாகிற் கொண்டவும்
அளவுபு கலந்து மெல்லிது பருகி
விருந்துறுத் தாற்றி யிருந்தனெ மாகச்
சென்மோ பெருமவெம் விழவுடை நாட்டென
யாந்தன் னறியுந மாகத் தான்பெரி
தன்புடை மையி னெம்பிரி வஞ்சித்
[8]துணரியது கொளாஅ வாகிப் பழமூழ்த்துப்
[9]பயம்பகர் வறியா மயங்கரின் [10]முதுபாழ்ப்

பி - ம். [1]வயன்மறவர். [2]கூதளங்.
[3]யங்கையநன்மையன், யங்கையண்மையன், யாங்கனீ நன்மையை.
[4]அள்ளனுகன். [5]இளம்படுகாளையாயினும்.
[6]முணைஇயவினிதென. [7]பாஅறபெய்தவும்.
[8]துணரியதுளவாகி. [9]பயம்பகர்பறியா. [10]முதுபாட்.

பெயல்பெய் தன்ன செல்வத் [1]தாங்கண்
ஈயா மன்னர் [2]புறங்கடைத் தோன்றிச்
[3]சிதாஅர் வள்பிற் சிதர்ப்புறத் தடாரி
[4]ஊன்சுகிர் வலந்த தெண்கண் ணொற்றி
விரல்விசை தவிர்க்கு மரலையில் பாணியின்
இலம்பா டகற்றல் யாவது புலம்பொடு
தெருமா லுயக்கமுந் தீர்க்குவோ மதனால்
இருநிலங் கூலம் பாறக் கோடை
வருமழை முழக்கிசைக் கோடிய பின்றைச்
சேயை யாயினு மிவணை யாயினும்
இதற்கொண் [5]டறிநை வாழியோ கிணைவ
சிறுநனி, ஒருவழிப் படர்கென் றோனே யெந்தை
ஒலிவெள் ளருவி வேங்கட நாடன்
உறுவருஞ் சிறுவரு மூழ்மா றுய்க்கும்
அறத்துறை யம்பியின் மான [6]மறப்பின்
றிருங்கோ ளீராப் பூட்கைக்
கரும்ப னூரன் காதன் மகனே.

திணையும் துறையும் அவை.

கரும்பனூர் கிழானை நன்னாகனார். (௩௮௧)

(௩௮௨) கடற்படை யடற்கொண்டி
[7]மண்டுற்ற மலிர்நோன்றாட்
டண்சோழ நாட்டுப் [8]பொருநன்
அலங்குளை யணியிவுளி
நலங்கிள்ளி நசைப்பொருநரேம்
பிறர்ப்பாடிப் பெறல் [9]வேண்டேம்
அவற்பாடுது மவன்றாள் வாழியவென
நெய்குய்ய வூனவின்ற
பலசோற்றா [10]னின்சுவைய

பி - ம். [1]தாங்கினிதீயா. [2]புறங்கடைக்கொன்றி.
[3]சிதாஅரளமபிற...தடாரிடை [4]ஊனுகிர்வலந்ததெண்கண்.
[5]டறிகை. [6]பிறபபினறிருககொளளாப.
[7]மணடறற மறனெனறட, மண்டறற மலிறநொன.
[8]பொருநண வலஙகுளை. [9]வேணடேமயறபாடுதும்.
[10]னினஞசுவையநல்குரவின பசித்துன்பவென்பநின்.

நல்குரவின் பசித்துன்பினின்
முன்னாள் விட்ட மூதறி சிறாஅரும்
[1]யானும், ஏழ்மணியங் கேழணியுத்திக்
கட்கேள்விக் கவை [2]நாவின்
நிறனுற்ற வராஅப்போலும்
வறன்ஞரீஇ [3]வழங்குவாய்ப்ப
விடுமதி யத்தை கடுமான் றோன்றல்
நினதே, முந்நீ ருடுத்த [4]விவ் வியனுல கறிய
எனதே, [5]கிடைக்கா ழன்ன தெண்கண் மாக்கிணை
கண்ணகத் தியாத்த நுண்ணரிச் சிறுகோல்
எறிதொறு நுடங்கி யாங்குநின் பகைஞர்
கேட்டொறு நடுங்க [6]வேத்துவென்
வென்ற தேர்பிறர் வேத்தவை யானே.

திணை - அது; துறை - கடைநிலை.

சோழன் நலங்கிள்ளியைக் கோவூர்கிழார். (௩அ௨)

(௩அ௩) ஒண்பொறிச் சேவ லெடுப்பவேற் றெழுந்து
தண்பனி யுறைக்கும் புலரா ஞாங்கர்
நுண்கோற் சிறுகிணை சிலம்ப வொற்றி
நெடுங்கடை நின்று பகடுபல வாழ்த்தித்
[7]தன்புக ழேத்தினெ னாக வூன்புலந்
தருங்கடி வியனகர்க் [8]குறுகல் வேண்டிக்
கூம்புவிடு மென்பிணி யவிழ்த்த வாம்பற்
றேம்பா யுள்ள தங்கமழ் மடருளப்
[9]பாம்புரி யன்ன வடிவின காம்பின்
கழைபடு சொலியி னிழையணி வாரா
ஒண்பூங் கலிங்க முடீஇ நுண்பூண்
வசிந்துவாங்கு நுசுப்பி னவ்வாங் குந்திக்

பி - ம். [1]யானுமெமணி.
[2]நாவிறனூநிறத்தவராஅப், நாவிறனூ நிறத்தவாஅப்.
[3]வயங்குவாயபப, வமஙகுவாயபப. [4]விலவயினுலகு.
[5]கிடைகாழனனவென்றெண்கண். [6]வொநது, வோதுவென்.
[7]தான் புகழ்ந்து. [8]குறுங்கல்வேண்டி.
[9]பாம்பு பயனந தனனவடிவின சாமபின.

கற்புடை மடந்தை தற்புறம் புல்ல
எற்பெயர்ந்த நோக்கி....................
..............................கற்கொண்
[1]டழித்துப் பிறந்தன னாகி யவ்வழிப்
பிறர், பாடுபுகழ் பாடிப் [2]படர்பறி யேனே
குறுமுலைக் கலமரும் பாலார் வெண்மறி
நரைமுக வூகமொ டுகளுஞ்சென..................
.... [3]கன்றுபல கெழீஇய
கான்கெழு நாடன் கடுந்தே ரவியனென
ஒருவனை யுடையேன் மன்னே யானே
அருனெவன் [4]பரிசோ வெள்ளியது நிலையே.

திணையும் துறையும் அவை.
...............மாறேக்கத்து [5]நப்பசலையார். (௩௮௩)

(௩௮௪) மென்பாலா னுடனணைஇ
வஞ்சிக்கோட் [6]டுறங்குநாரை
[7]அறைக்கரும்பின் பூவருந்தும்
[8]வன்பாலாற் கருங்கால்வரகி
. . . .
னங்கட் குறுமுயல் வெருவ வயல
கருங்கோட் டிருப்பைப் பூவுறைக் குந்து
விழவின் [9]றுயினு முழவர் மண்டை
இருங்கெடிற்று மிசையொடு பூங்கள் வைகுந்து
.... [10]துணையேம் பெரும
[11]நெல்லென்று பொன்னென்று
[12]கனற்றக்கொண்ட நறவென்று
....................மனையென்று வவைபலவும்
[13]யான்றண்டவுந் தான்றண்டான்
நிணம்பெருத்த கொழுஞ்சோற்றிடை

பி - ம். [1]டளித்துப். [2]படர்பறிவோனே.
[3]தன்று பலகெழீஇயகாழகெழு. [4]பரிசொவெள்ளி.
[5]நபபாலையார். [6]டுறவங்குநாரை.
[7]வாடைக்கரும்பின, அடைக்கரும்பின [8]வனபாலாற்குக் கருங்.
[9]றுயுனுழவா. [10]கிணையேம். [11]நெல்லென்றும் பொன்னென்றும்.
[12]கன்னற்கொண்ட. [13]யானறண்டவும தான்றண்டா.

மண்ணுணப் புகழ்வேட்டு
நீர்நாண நெய்வழங்கிப்
[1]புரந்தோ னெந்தை யாமலந் தொலை.........
அன்னோனை யுடையே மென்ப......வறட்
கியாண்டு நிற்க வெள்ளி மாண்ட
உண்ட நன்கலம் பெய்து நுடக்கவும்
தின்ற [2]நண்ப லூன்றோண்டவும்
வந்த வைக லல்லது
சென்ற வெல்லைச் செலவறி யேனே.

திணையும் துறையும் அவை.

கரும்பனூர்கிழானைப் புறத்திணை நன்னாகனார். (௩அ௪)

(௩அ௫) வெள்ளி தோன்றப் புள்ளுக்குர லியம்பப்
புலரி விடியற் பகடுபல வாழ்த்தித்
தன்கடைத் தோன்றினு மிலனே பிறன்கடை
அகன்கட் டடாரிப் பாடுகேட் டருளி
வறனியா னீங்கல் வேண்டி யென்னரை
[3]நீனிறச் சிதாஅர் களைந்து
[4]வெளிய துடீஇயென் பசிகளைந் தோனே
[5]காவிரி யணையுந் தாழ்நீர்ப் படப்பை
நெல்விளை கழனி [6]யம்பர் கிழவோன்
நல்லரு வந்தை வாழியர் புல்லிய
வேங்கட விறல்வரைப் பட்ட
ஓங்கல் வானத் துறையினும் பலவே.

திணை அது; துறை - வாழ்த்தியல்.

[7]**அம்பர்கிழான் அருவந்தையைக் கல்லாடனார்.** (௩அ௫)

(௩அ௬) நெடுநீர [8]நிறைகயத்துப்
படுமாரித் துளிபோல

பி - ம். [1]புநதெனெந்தை. [2]நன்பலூண்டோண்டவும்.
[3]நிலநதினக குறைந்தசிதாஅர், நிலநதினசிதாஅர்.
[4]வெளி துடீஇக்களைந்தோனேபசி.
[5]காவிரியகனையுந், காவிரிகனையுந். [6]யம்பல்.
[7]அம்பல கிழான வெருநதையை. [8]நிறையககயத்துப.

நெய்துள்ளிய வறைமுகக்கவும்
சூடு கிழித்து வாடூன் மிசையவும்
ஊன்கொண்ட வெண்மண்டை
ஆன்பயத்தான் முற்றழிப்பவும்
வெய்துண்ட வியர்ப்பல்லது
செய்தொழிலான் வியர்ப்பறியாமை
ஈத்தோ னெந்தை யிசைதன தாக
வயலே, [1]நெல்லின் வேலி நீடிய கரும்பின்
பாத்திப் பன்மலர்ப் [2]பூத்த தும்பின
புறவே, புல்லருந்து பல்லாயத்தான்
வில்லிருந்த வெங்குறும்பின்று
கடலே, காறந்த கலனெண்ணுவோர்
கானற் புன்னைச் சினை [3]நிலைக் குந்து
கழியே, சிறுவெள் ளுப்பின் [4]கொள்ளை சாற்றிப்
[5]பெருங்கனன்னாட் டுமணொலிக்குந்து
அன்னநன் னாட்டுப் பொருநம் யாமே
பொராஅப் பொருநரேம்
[6]குணதிசை நின்று குடமுதற் செலினும்
குடதிசை நின்று குணமுதற் செலினும்
வடதிசை நின்று தென்வயிற் செலினும்
தென்றிசை நின்று குறுகாது நீடினும்
யாண்டு [7]நிற்க வெள்ளியாம்
வேண்டிய துணர்ந்தோன் றாள்வா ழியவே.

திணையும் துறையும் அவை.

சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவனைக் கோவூர் கிழார். (௩௮௬)

(௩௮௭) வள்ளுகிர வயலாமை
[8]வெள்ளகடு கண்டன்ன

பி - ம். [1]நெலலி வேயி னீடிய.
[2]பூத்த தமபின னுறவேபுலலருந்து. [3]நிலகருந்து.
[4]கொளளைச்சாறறி. [5]பெருங்கனனாட்டு.
[6]குடதிசை...செலினும் வடதிசை. [7]நிறகவெனறியாம்.
[8]வெளககொணடனன.

வீங்குவிசிப் புதுப்போர்வைத்
[1]தெண்கண் மாக்கிணை யியக்கி யென்றும்
மாறுகொண்டோர் மதிலிடறி
நீருடிய நறுங்கவுள
பூம்பொறிப் பணையெருத்தின
வேறுவேறு [2]பரந்தியங்கி
[3]வேந்துடைமிளை யயல்பரக்கும்
ஏந்துகோட் டிரும்பிணர்த்தடக்கைத்
திருந்துதொழிற் பலபகடு
பகைப்புல மன்னர் பணிதிறை தந்துநின்
[4]நகைப்புல வாணர் நல்குர வகற்றி
மிகப்பொலியர்தன் சேவடியத்தையென்
றியாணிசைப்பி னனிநன்றெனாப்
பலபிற வாழ்த்த விருந்தோ [5]ரென்கோ......
[6]மருவவினக ரகன்
திருந்துகழற் சேவடி குறுகல் வேண்டி
[7]வென்றிரங்கும் விறன்முரசினோன்
[8]என்சிறுமையி னிழித்துநோக்கான்
தன்பெருமையின் றகவுநோக்கிக்
[9]குன்றுறழ்ந்த களிறென்கோ
கொய்யுளைய மாவென்கோ
மன்றுநிறையு நிரையென்கோ
[10]மனைக்களமரொடு களமென்கோ
ஆங்கவை, கனவென மருள வல்லே நனவின்
[11]நல்கி யோனே நசைசா றோன்றல்
ஊழி வாழி பூழியர் பெருமகன்
பிணர்மருப் பியானைச் செருமிகு நோன்றாட்

பி - ம். [1]தென்கண். [2]பாநதியயங்கி. [3]வேந்துடையிளை.
[4]நகைபபல வாழ்நர்...மிபபொலியாத செவடிபொலி யாததையென்றனியானிசப பினனின னிநனறனிற பலபிறன்.
[5]ரெலகோ. [6]மிருவ.
[7]வெனறிரகரு முரசினனெனச சிலமபினிழித்து. [8]எனசசிறுமை.
[9]குனறகழகளிறு. [10]மகனைககளமரொடுகெலமென.
[11]நலகியோனெநதை நகைசானறோன்றல்.

செல்வக் கடுங்கோ வாழி யாதன்
[1]ஒன்னாத் தெவ்வ ருயர்குடை [2]பணித்திவன்
விடுவர் மாதோ நெடிதே நி . . . .
புல்லிலை வஞ்சிப் புறமதி லலைக்கும்
கல்லென் பொருநை [3]மணலினு மாங்கட்
பல்லூர் சுற்றிய கழனி
எல்லாம் விளையு நெல்லினும் பலவே.

திணையும் துறையும் அவை.

சேரமான் சிக்கற்பள்ளித் துஞ்சிய செல்வக்கடுங்கோ வாழியாதனைக் குண்டுகட்பாலியாதன். (௩அஎ)

(௩அஅ) வெள்ளி தென்புலத் துறைய விளைவயற்
பள்ளம் வாடிய பயனில் காலை
[4]இரும்பறைக் கிணைமகன் சென்றவன் பெரும்பெயர்
....பொருந்தித்
தன்னிலை [5]யறியுந ணாக வந்நிலை
இடுக்க ணிரியல் [6]போக வுடைய
கொடுத்தோ னெந்தை கொடைமேந் தோன்ற
................................ணுமருப்பாக
வெல்லும் வாய்மொழிப் புல்லுடைவி.......
[7]பெயர்க்கும் பண்ணற் கெடடீரொமககிரென
[8]விளைப்பக டேற்ற மேழி [9]கிணைத்தொடா
நாடொறும் [10]பாடே னாயி னணை
[11]மணிகிளர் முன்றிற் றென்னவன் மருகன்
பிணிமுர சிரங்கும் பீடுகெழு தானை

பி - ம். [1]என்னாத்தெவ்வர். [2]பணிதிவணிவிடுவா. [3]மணலினுமாக்கட். [4]இரும்பிறை கிணைமகன். [5]யறியினனாக. [6]போத. [7]பெயாகுமபணணறகெடடீரொ மகசிரென. [8]விளைப்பகடெததுமேனி திளைதொடர், விளைப்பகடெததுமெந் திணைநதொடா. [9]திணைத்தொடா. [10]பாடேனுபினைகநாண. [11]மணிகிளாமூககிறறெனனவன.

அண்ணல் [1]யானை வழுதி
கண்மா றிலியரென் பெருங்கிளைப் புரவே.

திணை - அது ; துறை - இயன்மொழி.

சிறுகுடிகிழான் பண்ணனை மதுரை அளக்கர்ஞாழார் மகனார் மள்ளனார். (௩அஅ)

(௩அ௯) நீர் நுங்கின் [2]கண்வலிப்பக்
கானவேம்பின் காய்திரங்கக்
கயங்களியுங் கோடையாயினும்
ஏலா வெண்பொன் [3]போருறு காலை
எம்மு முள்ளுமோ பிள்ளையம் [4]பொருநன்
என்றீத் தனனே யிசைசா னெடுந்தகை
இன்றுசென் றெய்தும் வழியனு மல்லன்
செலினே காணா வழியனு மல்லன்
புன்றலை மடப்பிடி யினையக் கன்றுதந்து
குன்றக நல்லூர் மன்றத்துப் பிணிக்கும்
கல்லிழி யருவி வேங்கடங் கிழவோன்
செல்வுழி யெழாஅ நல்லேர் முதியன்
[5]ஆத னுங்கன் போல நீயும்
[6]பசித்த வொக்கற் பழங்கண் வீட
வீறுசா னன்கல நல்குமதி [7]பெரும
ஐதக லல்குன் மகளிர்
நெய்தல்கே ளன்மார் நெடுங்கடை யானே.

திணையும் துறையும் அவை.

ஆதனுங்கனைக் கள்ளிலாத்திரையனார். (௩அ௯)

(௩௯0) அறவை நெஞ்சத் தாயர் வளரும்
மறவை நெஞ்சத் [8]தாயி வாளர்
அரும்பலர் [9]செருந்தி நெடுங்கான் மலர்கமழ்

பி - ம். [1]யானைவழுகணமாறிலியா. [2]கவைநிறபக.
[3]போகுறு....பொருநவென்று. [4]பொருந வென்று.
[5]ஆறுநுஙகன், ஆகுநுங்கன. [6]பசிதது வொஙககறபழஙு.
[7]பெருமவைததல. [8]தாயிவிளா.
[9]செநதிநெடுஙகாமலாகமழு.

. . . . .மன்னமுற்றத்
[1]தார்வலர் குறுகி னல்லது காவலர்
கனவினுங் குறுகாக் கடியுடை வியனகர்
[2]மலைக்கணத் தன்ன மாடஞ் சிலம்பவென்
அரிக்குரற் றடாரி யிரிய வொற்றிப்
பாடி நின்ற [3]பன்னா ளன்றியும்
சென்ற ஞான்றைச் சென்றுபட ரிரவின்
வந்ததற் கொண்டு நெடுங்கடை நின்ற
புன்றலைப் பொருந னளியன் றானெனத்
தன்னுழைக் குறுகல் வேண்டி யென்னரை
முதுநீர்ப் பாசி யன்ன [4]வுடைகளைந்து
திருமல ரன்ன புதுமடிக் கொளீஇ
மகிழ்தரன் மரபின் மட்டே யன்றியும்
[5]அமிழ்தன மரபி னூன்றுவை யடிசில்
வெள்ளி வெண்கலத் தூட்ட லன்றி
முன்னூர்ப் பொதியிற் சேர்ந்த மென்னடை
இரும்பே ரொக்கல் [6]பெரும்புலம் பகற்ற
[7]அகடுநனை வேங்கை வீகண் டன்ன
[8]பகடுதரு செந்நெல் போரொடு நல்கிக்
கொண்டி பெறுகென் றோனே யுண்டுறை
மலையல ரணியுந் தலைநீர் நாடன்
[9]கண்டாற் கொண்டுமனை திருந்தடி வாழ்த்தி
. . . .
வானறி யலவென் பாடுபசி போக்கல்
அண்ணல் யானை வேந்தர்
உண்மையோ வறியல் காண்பறி யலரே.

திணையும் துறையும் அவை.

அதியமான்நெடுமானஞ்சியை ஔவையார். (௩௯௦)

பி - ம். [1]தாவலர். [2]மழைககளத.
[3]பனனுளறையும். [4]வுடைகளைநததிருமவானனன.
[5]அமிரதானமரபின. [6]பொருமபுகறறத்தடுஙகண்வேஙகை.
[7]தகடுகனைவேஙகை. [8]படுதரு செநநெற்.
[9]கணடாககொணடுமவனதிருநதடி.

(௩௯௧) தண்டுளி பலபொழிந் தெழிலி யிசைக்கும்
விண்டு வணைய [1]விண்டோய் பிறங்கல்
முகடுற வுயர்ந்த [2]நெல்லின் மகிழ்வரப்
பகடுதரு பெருவளம் வாழ்த்திப் பெற்ற
திருந்தா மூரி பரந்துபடக் கெண்டி
அரிய லார்கைய ருண்டினி துவக்கும்
வேங்கட வரைப்பின் வடபுலம் பசித்தென
ஈங்குவந் திறுத்தவென் னிரும்பே ரொக்கல்
தீர்கை விடுக்கும் [3]பண்பில முதுகுடி
நன . . . . வினவலின்
முன்னும் வந்தோன் மருங்கில னின்னும்
அளிய னாகலிற் பொருந னிவனென
நின்னுணர்ந் தறியுந ரென்னுணர்ந்து கூறக்
காண்கு வந்திசிற் பெரும . . . .
. . . . பெருங்கழி [4]நுழைமீ னருந்தும்
துதைந்த தூவியம் புதாஅஞ் சேக்கும்
[5]ததைந்த புனனின் செழுநகர் வரைப்பின்
நெஞ்சமர் காத [6]னின்வெய் யோளொ
டின்றுயி . . . . ஞ்சால்
துளிபத னறிந்து பொழிய
வேலி யாயிரம் விளைகநின் வயலே.

திணை - அது; துறை - கடைநிலை.

பொறையாற்று கிழானைக் [7]கல்லாடனார். (௩௯௧)

(௩௯௨) மதியேர் வெண்குடை [8]யதியர் கோமான்
கொடும்பூ ணெழினி நெடுங்கடை நின்றியான்
பசலை நிலவின் பனிபடு விடியற்
பொருகளிற் றடிவழி யன்ன வென்கை
ஒருகண் மாக்கிணை யொற்றுபு கொடாஅ
உருகெழு மன்ன ராரெயில் [9]கடந்து

பி - ம். [1]விணடெறபயயிறஙகன. [2]நெலலினசீழவர். [3]பண்பின. [4]நுழைமீன. [5]தநதைதநத புனயானின செழுநகாவனபபின். [6]காதனீவெயயொடு. [7]காலலனர். [8]யுதியர். [9]கடந்த.

நிணம்படு [1]குருதிப் பெரும்பாட் டீரத்
தணங்குடை [2]மரபி னிருங்களந் தோறும்
வெள்வாய்க் கழுதைப் புல்லினம் [3]பூட்டி
வெள்ளை வரகுங் கொள்ளும் வித்தும்
வைக லுழவ [4]வாழிய பெரிதெனச்
சென்றியா [5]னின்றனெ னாக வன்றே
ஊருண் கேணிப் பகட்டிலைப் பாசி
வேர்புரை சிதாஅர் நீக்கி நேர்கரை
நுண்ணூற் கலிங்க முடீஇ [6]யுண்மெனத்
தேட்கடுப் பன்ன நாட்படு தேறல்
கோண்மீ னன்ன [7]பொலங்கலத் தளைஇ
[8]ஊண்முறை யீத்த லன்றியுங் கோண்முறை
விருந்திறை நல்கி யோனே யந்தரத்
தரும்பெற லமிழ்த மன்ன
கரும்பிவட் டந்தோன் பெரும்பிறங் கடையே.

திணையும் துறையும் அவை. (௩௯௨)

அதியமான் நெடுமானஞ்சிமகன் பொதுட்டெழினியை ஔவையார்.

(௩௯௩) பதிமுதற் பழகாப் பழங்கண் வாழ்க்கைக்
குறுநெடுந் துணையொடு கூமை வீதலிற்
குடிமுறை பாடி யொய்யென வருந்தி
அடனசை மறந்தவெங் குழிசி மலர்க்கும்
கடனறி யாளர் பிறநாட் டின்மையின்
[9]வள்ளன் மையினெம் வரைவோர் யாரென
உள்ளிய வுள்ளமொ [10]டுலைநசை துணையா
. . . . கவக மெல்லா மொருபாற் பட்டென
மலர்தா ரண்ணனி னல்லிசை யுள்ளி
ஈர்ங்கை [11]மறந்தவெ னிரும்பே றொக்கல்
[12]கூர்ந்த வெவ்வம்விடக் கொழுநிணங் கிழிப்பக்

பி - ம். [1]குருதிபெரும். [2]மார்பின. [3]பூட்டி...வெள்ளை. [4]வாழியபலவெனச். [5]னின்றனெனுதக. [6]யுண்ணெனத். [7]பொலங்கலத்தருள...விடுத்தல். [8]ஊனமுறை, ஊழமுறை. [9]வளளனமெனவவரை. [10]டுறுநசை. [11]மறைந்த. [12]கூர்ந்தவேவம்வீட.

கோடைப் பருத்தி [1]வீடுநிறை பெய்த
மூடைப் பண்ட மிடைநிறைந் தன்ன
வெண்ணிண மூரி யருள நாளுற
[2]ஈன்ற வரவி னுவுருக் கடுக்குமென்
[3]தொன்றுபடு சிதாஅர் துவர நீக்கிப்
போதுவிரி பகன்றைப் புதுமல ரன்ன
அகன்றுமடி கலிங்க முடீஇச் செல்வமும்
கேடின்று நல்குமதி பெரும மாசில்
மதிபுரை மாக்கிணை தெளிர்ப்ப வொற்றி
ஆடுமக ளல்கு லொப்ப வாடிக்
[4]கோடை யாயினுங் கோடி........
காவிரி புரக்கு நன்னாட்டுப் பொருந
வாய்வாள் [5]வளவன் வாழ்கெனப்
பீடுகெழு நோன்றாள் பாடுகம் பலவே.

திணையும் துறையும் அவை. [(௩௯௩)

சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவனை நல்லிறையனார்.

(௩௯௪) [6]சிலையுலாய் நிமிர்ந்த சாந்துபடு மார்பின்
[7]ஒலிபுனற் கழனி வெண்குடைக் கிழவோன்
வலிதுஞ்சு தடக்கை வாய்வாட் [8]குட்டுவன்
[9]வள்ளிய னாதல் வையகம் புகழினும்
[10]உள்ள லோம்புமி னுயர்மொழிப் புலவீர்
யானும், இருணிலாக் கழிந்த பகல்செய் வைகறை
ஒருகண் மாக்கிணை தெளிர்ப்ப வொற்றிப்
பாடிமிழ் முரசி னியறேர்த் தந்தை
வாடா வஞ்சி பாடினே னாக
அகமலி யுவகையொ டணுகல் வேண்டிக்
கொன்றுசினந் தணியாப் புலவுநாறு மருப்பின்
வெஞ்சின வேழ நல்கின னஞ்சி
யானது பெயர்த்தனெ னாகத் தானது

பி - ம். [1]விடுநிறை. [2]ஈன்றவாவினாருககடுகெகும். [3]தொனறுபடி.
[4]கொடியாயினும். [5]வளருவன. [6]சீந்தியுலாநிவாநத.
[7]ஒலிகதிர்க்கழனி. [8]குடவன். [9]வளளயிழுதல, வளளினியெறுதல.
[10]உள்ளமோம்புமின்.

சிறிதென [1]வுணர்ந்தமை நாணிப் பிறிதுமோர்
பெருங்களிறு நல்கி யோனே [2]யதற்கொண்
டிரும்பே ரொக்கல் பெரும்புலம் புறினும்
துன்னரும் பரிசி றருமென
என்றுஞ் செல்லேனவன் குன்றுகெழு நாட்டே.

திணையும் துறையும் அவை.
கடைநிலையாயினவெல்லாம் பாடாண்டிணை.

சோழிய ஏனாதி திருக்குட்டுவனைக் கோனாட்டு எறிச்சிலூர் மாடலன் மதுரைக்குமரனார். (௩௯௪)

(௩௯௫) மென்புலத்து வயலுழவர்
வன்புலத்துப் பகடுவிட்டுக்
குறுமுயலின் [3]குழைச்சூட்டொடு
நெடுவாளைப் பல்லுவியற்
பழஞ்சோற்றுப் [4]புகவருந்திப்
புதற்றளவின் பூச்சூடி
....
..............அரியலாருந்து
மனைக்கோழிப் பைம்பயிரினனே
கானக்கோழிக் கவர்குரலொடு
நீர்க்கோழிக் [5]கூய்ப்பெயர்க் குந்து
வேயன்ன மென்றோளால்
மயிலன்ன [6]மென்சாயலார்
கிளிகடியினனே
அகலள்ளற் [7]புள்ளிரீஇயுந்து
யாங்கப், பலநல்ல புலனணியும்
சீர்சான்ற விழுச்சிறப்பிற்
சிறுகண் யானைப் பெறலருந் தித்தன்
செல்லா நல்லிசை யுறந்தைக் குணாது
[8]நெடுங்கை வேண்மா [9]னருங்கடிப் பிடவூர்
அறப்பெயர்ச் சாத்தன் கிளையேம் பெரும

பி - ம். [1]வுணரமை. [2]பகறகொண்டு, பதற்கொணடு. [3]காழைச்சூட்டொடு நெடுவாளைபல்லுவியற். [4]புகவருத்திப். [5]கூடப்பெயர்க்குந்து. [6]மென்சாயலாற். [7]புள்ளுரீஇயுந்து. [8]இருங்கோவெணமான். [9]னருஙகடலபபிடவூர்.

முன்ற [1]ணண்பகற் சுரனுழந்து வருந்திக்
கதிர்நனி செ..................மாலைத்
[2]தன்கடைத் தோன்றி யென்னுற விசைத்தலிற்
றீங்குரல்........கி ணரிக்குரற் றடாரியோ
டாங்குநின்ற வெற்கண்டு
சிறிதுநில்லான் பெரிதுங்கூறான்
[3]அருங்கலம் வரவே யருளினன் வேண்டி
....யென வுரைத்தன்றி நல்கித் தன்மனைப்
பொன்போன் மடந்தையைக் காட்டி யிவனை
என்போற் போற்றென் றோனே [4]யதற்கொண்
டவன்மறவ லேனே பிறருள்ள லேனே
அகன்ஞாலம் பெரிதுவெம்பினும்
மிகவானு [5]ளெரிதோன்றினும்
குளமீனொடுந் [6]தாட்புகையினும்
[7]பெருஞ்செய் நெல்லின் கொக்குகிர் நிமிரல்
பசுங்கட் [8]கருனைச் சூட்டொடு மாந்தி
விளைவொன்றோ வெள்ளங்கொள்கென
உள்ளது மில்லது மறியா
தாங்கமைந் தன்றால் வாழ்கவன் றாளே.

திணையும் துறையும் அவை. (௩௯௫)

சோழநாட்டுப் பிடவூர்கிழார்மகன் பெருஞ்சாத்தனை மதுரைநக்கீரர்.

(௩௯௬) கீழ்நீரான் மீன்வழங்குந்து
மீநீராற் கண்ணன்ன [9]மலர்பூக்குந்து
கழிசுற்றிய விளைகழனி
அரிப்பறையாற் புள்ளோப்புந்து
[10]நெடுநீர்கூஉ மணற்றண்கான்
மென்பறையாற் [11]புள்ளிரியுந்து
நனைக்கள்ளின் மனைக்கோசர்
தீந்தேற னறவுமகிழ்ந்து

பி - ம். [1]ணன்பகற். [2]நன்கடை. [3]அயருஙகலம். [4]யதற்கண். [5]ளெரிததொனகரினுங். [6]காட்புரையினும். [7]பெருமபெய். [8]கருனைச்சூளைசசூடகமாடுமாந்தி. [9]மலர்ப்பூஙகுநது. [10]உண்டுநீர்கூறுமணற். [11]புள்ளிரிவுந்து.

தீங்குரவைக் கொளைத்தாங்குந்து
உள்ளிலோர்க்கு வலியாகுவன்
கேளிலோர்க்குக் கேளாகுவன்
[1]கழுமிய வென்வேல் வேளே
வளநீர் வாட்டாற் றெழினி யாதன்
கிணையேம் பெரும
கொழுந்தடிய சூடென்கோ
வளநனையின் மட்டென்கோ
குறுமுயலி [2]னிணம்பெய்தந்த
நறுநெய்ய சோறென்கோ
திறந்து [3]மறந்து கூட்டுமுதல்
முகந்துகொள்ளு முணவென்கோ
அன்னவை பலபல............
.........................ருநதய
இரும்பே [4]ரொக்க லிருஞ்செஞ்சிய
அழித்துவப்ப வீத்தோனெந்தை
எம்மோ [5]ராக்கக் கங்குண்டே
மாரிவானத்து [6]மீனுப்பண்
விரிகதிர வெண்டிங்களின்
விளங்கித் தோன்றுகவவன் கலங்கா நல்லிசை
யாமும் பிறரும் வாழ்த்த நாளும்
நிரைசா னன்கல னல்கி
உரைசெலச் சிறக்கவவன் பாடல்சால் வளனே.

திணையும் துறையும் அவை.
வாட்டாற்றெழினியாதனை மாங்குடிகிழார். (௩௯௬)

(௩௯௭) வெள்ளியு மிருவிசும் பேர்தரும் புள்ளும்
உயர்சினைக் குடம்பைக் [7]குரற்றோற் றினவே
பொய்கையும் போதுகண் விழித்தன [8]பையயச்

பி - ம். [1]கழுமியவெளவெலியிவளநீகிர வாடடெறறெழுனியா
கென கிணைவெமபெருபகழுமியவெளளையி.
[2]னிணமபெயதநதறு. [3]மறந்த. [4]ரொகசெல.
[5]ராககககஙகணடெ, ராககககயங குணடே. [6]மீனுலபபண.
[7]குரற்றோன்றினவே. [8]பைபபய.

சுடருஞ் சுருங்கின் ருளியே [1]மாடெழுந்
[2]திரங்குரன் முரசமொடு வலம்புரி யார்ப்ப
இரவுப் [3]புறங்கண்ட காலைத் தோன்றி
எஃகிரு ளகற்று மேமப் பாசறை
வைகறை யரவங் கேளியர் பலகோட்
செய்தார் மார்ப வெழுமதி துயிலெனத்
தெண்கண் மாக்கிணை தெளிர்ப்ப வொற்றி
நெடுங்கடைத் [4]தோன்றி யேனே யதுநயந்
துள்ளி வந்த பரிசில னிவனென
நெய்யுறப் பொரித்த குய்யுடை நெடுஞ்சூடு
மணிக்கல னிறைந்த மணநாறு தேறல்
பாம்புரித் தன்ன வான்பூங் கலிங்கமொடு
மாரி யன்ன [5]வண்மையிற் சொரிந்து
வேனி லன்னவென் வெப்பு நீங்க
அருங்கல நல்கி யோனே யென்றும்
செறுவிற் பூத்த சேயிதழ்த் தாமரை
அறுதொழி லந்தண ரறம்புரிந் தெடுத்த
தீயொடு விளங்கு நாடன் வாய்வாள்
வலம்படு தீவிற் பொலம்பூண் வளவன்
எறிதிரைப் பெருங்கட லிறுதிக்கட் செலினும்
தெறுகதிர்க் கனலி தென்றிசைத் தோன்றினும்
என்னென் றஞ்சலம் யாமே வென்வேல்
அருஞ்சமங் கடக்கு மாற்றலவன்
திருந்துகழ னோன்றாட் டண்ணிழ லேமே.

திணை - அது ; துறை - பரிசில்விடை ; கடைநிலைவிடையுமாம்.

சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவனை எருக்காட்டூர்த் தாயங்கண்ணனார். (நகஎ)

(நகஅ) மதிநிலாக் கரப்ப வெள்ளி யேர்தர
வகைமா ணல்லிற் . . . .
பொறிமயிர் வாரணம் பொழுதறிந் தியம்பப்
பொய்கைப் பூமுகை மலரப் பாணர்

பி - ம். [1]பாடெழுநது. [2]திரங்குகுரன். [3]பிறங்கணட. [4]தோனறியோனே. [5]வண்மைமிற்.

கைவல் சீறியாழ் கடனறிந் தியக்க
இரவுப்புறம் பெற்ற வேம வைகறைப்
பரிசிலர் விசையெ. . . . .
வரிசையி னிறுத்த வாய்மொழி வஞ்சன்
நகைவர் குறுகி னல்லது பகைவர்க்குப்
புலியின மடிந்த கல்லளை போலத்
[1]துன்னல் போகிய பெரும்பெயர் மூதூர்
மதியத் தன்னவென் னரிக்குரற் றடாரி
இரவுரை நெடுவா ரிப்ப வட்டித்
துள்ளி வருநர் கொள்கல நிறைப்போய்
தள்ளா [2]நிலையை யாகிய ரெமக்கென
என்வர [3]வறீஇச்
சிறிதிற்குப் பெரிதுவந்து
விரும்பிய முகத்த னாகி யெனதரைத்
துரும்புபடு சிதாஅர் நீக்கித் தன்னரைப்
புகைவிரிந் தன்ன பொங்குதுகி லுடீஇ
அழல்கான் றன்ன வரும்பெறன் மண்டை
நிழல்காண் டேற னிறைய வாக்கி
யானுண வருள லன்றியுந் தானுண்
[4]மண்டைய கண்ட மான்வறைக் கருனை
கொக்குகிர் நிமிர லொக்க லார
வரையுறழ் மார்பின் வையகம் விளக்கும்
விரவுமணி யொளிர்வரு [5]மரவுற ழாரமொடு
புரையோன் மேனிப் பூத்தசல. . . . . .
முரைசெல வருளி யோனே
. . . . .யருவிப் பாயற் கோவே.

திணை - அது ; துறை - கடைநிலை.

சேரமான் வஞ்சனைத் திருத்தாமனார். (நகூஅ)

(நகூகூ) அடுமகண் முகந்த வளவா வெண்ணெற்
[6]றொடிமா ணுலக்கைப் பருஉக்குற் றரிசி
காடி வெள்ளுலைக் கொளீஇ நீழல்
ஓங்குசினை மாவின் றீங்கனி நறும்புளி

பி - ம். [1]துன்னலமபோகிய. [2]நினையை. [3]வறியச். [4]மண்டை. [5]முழாவுறழாரமொடு, பிறையுறழாரமொடு. [6]றொடுமாண்.

மோட்டிரு வராஅற் கோட்டுமீன் கொழுங்குறை
செறுவின் [1]வள்ளை சிறுகொடிப் பாகற்
பாதிரி யூழ்முகை யவிழ்விடுத் தன்ன
மெய்களைந் தினனொடு விரைஇ..........
மூழ்ப்பப் பெய்த [2]முழுவவிழ்ப் புழுக்கல்
[3]அழிகளிற் படுநர் களியட வைகிற்
பழஞ்சோ [4]றயிலு முழங்குநீர்ப் படப்பைக்
காவிரிக் கிழவன் மாயா நல்லிசைக்
கிள்ளி வளவ னுள்ளி யவற்படர்தும்
செல்லேன் செல்லேன் பிறர்முக நோக்கேன்
நெடுங்கழைத் தூண்டில் விடுமீ னொடுத்துக்
கிணைமக ளட்ட [5]பாவற் புளிங்கூழ்
பொழுதுமறுத் துண்ணு முண்டியே னழிவுகொண்
டொருசிறை யிருந்தே னென்னே யினியே
அறவ ரறவன் மறவர் மறவன்
மள்ளர் மள்ளன் றொல்லோர் மருகன்
இசையிற் கொண்டா னசையமு துண்கென
மீப்படர்ந் திறந்து வன்கோன் மண்ணி
வள்பரிந்து கிடந்த ....மணக்க
விசிப்புறுத் தமைந்த புதுக்காழ்ப் போர்வை
அலகின் மாலை யார்ப்ப வட்டித்துக்
கடியு முணவென்னக் கடவுட்குந் தொடேன்
[6]கடுந்தே ரள்ளற் கசாவா நோன்சுவற்
பகடே யத்தையான் வேண்டிவந் ததுவென
ஒன்றியான் பெட்டா வளவை யன்றே
ஆன்று விட்டன [7]னத்தை விசும்பின்
மீன்பூத் தன்ன வுருவப் பன்னிரை
ஊர்தியொடு நல்கி யோனே சீர்கொள
இழுமென விழிதரு மருவி

பி - ம். [1]வாளைச்சிறுகொடிப். [2]முழுவவிநாம பபுகலரி.
[3]அரிகளறபடு. [4]நொகனி றயருமுடஙகு. [5]பாஅறபுளியஙகூழ.
[6]கடுநதெர்பபளளறகசாவா. [7]னத்தைய.

வான்றோ யுயர் [1]சிமைத் தோன்றிக் கோவே.

திணை - அது ; துறை - பரிசில்விடை.

[2]தாமான்தோன்றிக்கோனை ஐயூர் முடவனார். (௩௯௯)

(௪00) மாகவிசும்பின் வெண்டிங்கள்
மூவைந்தான் முறைமுற்றக்
கடனடுவெட் கண்டன்னவென்
இயமிசையா மரபேத்திக்
கடைத்தோன்றிய கடைக்கங்குலாற்
பலர்துஞ்சவுந் தான்றுஞ்சான்
உலகுகாக்கு முயர்ெ . . . . க்
கேட்டோ னெந்தையென் றெண்கிணைக் குரலே
கேட்டதற் கொண்டும் வேட்டை தண்டாது
தொன்றுபடு [4]சிதாஅர் மருங்கு நீக்கி
மிகப்பெருஞ் சிறப்பின் வீறு . . . . . .
. . . . லவான
கலிங்க [5]மளித்திட் டென்னரை நோக்கி
[6]நாரரி நறவி ஞண்மகிழ் தூங்குந்து
போதறியேன் பதிப்பழகவும்
[7]தன்பகை கடித லன்றியுஞ் சேர்ந்தோர்
[8]பசிப்பகை கடிதலும் வல்லன் மாதோ
மறவர் மலிந்தத . . . .
கேள்வி மலிந்த வேள்வித் தூணத்
திருங்கழி யிழிதரு . . . . . . கலிவங்கம்
தேறுநீர்ப் பரப்பின் [9]யாறுசீத் துய்த்துத்
துறைதொறும் பிணிக்கு நல்லூர்
உறைவின் யாணர் . . . . . . கிழவோனே.

திணை - அது ; துறை - இயன்மொழி.

சோழன் நலங்கிள்ளியைக் கோவூர்கிழார். (௪00)

புறநானூறு மூலம் முற்றுப்பெற்றது.

பி - ம். [1]சிமையத். [2]தாமானதருனறிகோனை.
[3]உலகுக்காக்கும். [4]சிதாறருநகு. [5]மழித்ததோட்டென்பனரை, மழித்ததொடடொனனரை. [6]நாரரித்தநறவமகிழ்ந்து.
[7]தன்பகைக்கடிதல். [8]பசிப்பகைக்கடிதலும். [9]யாறறசீத்துத்.

முற்றுமில்லாத பாட்டுக்கள் :— உசாஎ, உசாஅ.

முதலில்லாத பாட்டுக்கள் :— ஙஉஅ, ஙஎ0.

இடையிற் சில பகுதிகள் இல்லாத பாட்டுக்கள் :—

உஅஉ, உஅங, உஅரு, உஅஅ, ங0சா, ஙகஎ, ஙஉக, ஙஉங, ஙஉஅ, ஙஙங, ஙஙச, ஙஙரு, ஙஙஎ, ஙஙகூ, ஙச0, ஙசக, ஙசரு, ஙசஎ, ஙருஉ, ~~ஙருஉ~~, ஙருங, ஙருஎ, ஙசாக, ஙசாஉ, ஙசாசா, ஙஎங, ஙஎஎ, ஙஎகூ, ஙஅ0, ஙஅங, ஙஅச, ஙஅஎ, ஙஅஅ, ஙகூ0, ஙகூக, ஙகூங, ஙகூரு, ஙகூசா, ஙகூஅ, ஙகூகூ, ச00.

பிற்பகுதியில்லாப் பாட்டுக்கள் :— உசச, ஙருரு, ஙசாக.

பாட்டு முதற்குறிப்பகராதி

[எண் - செய்யுளெண்.]

அகன்றலைவையத்துப் ஙஎக
அஞ்சுவருமரபின் உகக
அடலருந்துப்பின் ஙஙரு
அடிபுனைதொடுகழன் அங
அடுநையாயினும் ஙசா
அடுமகண்முகந்த ஙகூகூ
அணங்குடைநெடுங் ருஉ
அணங்குடையவுணர் கஎச
அணித்தழைநுடங்க ஙச0
அத்தநண்ணிய ஙகங
அதளெறிந்தன்ன ககூங
அந்தோவெந்தை உசாக
அமரர்ப்பேணியு கூகூ
அரிமயிர்த்திரண் கக
அருப்பம்பேணு உஉச
அருவிதாழ்ந்த ககூஅ
அருவியார்க்கும் கசாஅ
அருளாயாகலோ கசச
அரைசுதலைவரினு ஙருச
அலங்குகதிர்சுமந்த ஙஎரு
அலர்பூந்தும்பை கூசா
அழல்புரிந்தவடர் உகூ
அழலவிர்வயங்கி உஉஉ
அளிதோதானே பாரி க0கூ
அளிதோதானேபேரிருங் ககக
அளியதாமேசிறுவெள் உசஅ
அற்றைத்திங்கள் ககஉ
அறவைநெஞ்சத் ஙகூ0
அறுகுளத்துகுத்து கசஉ
அறையும்பொறையும் ககஅ
அன்னச்சேவலன்ன சாஎ
அன்னவாகநின்னருங்கல கசசா
ஆசாகெந்தை ங0எ
ஆசில்கம்மியன் ஙருங
ஆடியலழற்குட்டத் உஉகூ
ஆடுநடைப்புரவி உச0
ஆடுநனிமறந்த கசாச
ஆர்கலியினனே ஙஙஎ
ஆர்ப்பெழுகடலினும் அக
ஆரந்தாழ்ந்த ருகூ

ஆவுமானியற்	கூ
ஆன்முலையறுத்த	ஙச
ஆனுவீகையடுபோர்	சஉ
ஆனினங்கலித்த	கஙஅ
இம்மைச்செய்தது	கஙச
இமிழ்கடல்வளை இய	ககூ
இரங்குமுரசின்	கஙஎ
இரவலர்புரவலை	கசுஉ
இருங்கடலுடுத்த	ஙசுங
இருப்புமுகஞ்செறித்த	ஙசுகூ
இரும்பனைவெண்டோடு	சரு
இரும்பிடித்தொழுதி	சச
இரும்புமுகஞ்சிதைய	ங௦கூ
இருமுந்நீர்க்குட்டமு	உ௦
இல்லடிகள்ளின்	ஙஉகூ
இல்லாகியரோ	உஙஉ
இவ்வே பீலியணிந்து	கூரு
இவரியாரென்குவை	உ௦க
இவற்கீத்துண்மதி	உகூ௦
இவனியாரென்குவை	கங
இழையணிப்பொலிந்த	அகூ
இளையருமுதியரு	உருச
இளையோர்சூடார்	உசஉ
இன்கடுங்கள்ளின்	அ௦
இன்றுசெலினுங்	கஎக
இனிநினைந்திரக்க	உசங
ஈண்டுநின்றோர்க்குந்	ககச
ஈயெனவிரத்தல்	உ௦ச
ஈரச்செவ்வி	உஅசு
ஈன்றுபுறந்தரு	ஙகஉ
உடும்புரித்தன்ன	சுஅ
உடையனுயினுண்ண	ஙகரு
உடைவளைகடுப்ப	கூ௦
உண்டாலம்மவிவ்	கஅஉ
உண்போன்றுனு	ஙசஎ
உருகெழுஞாயிற்றொண்	கசு௦
உருமிசைமுரச	ஙஎங
உவவுமதியுருவி	ங
உழுதூர்காளை	ஙஉஉ
உள்ளாற்றுக்கவலை	உககூ
உற்றுழியுதவியும்	கஅங
ஊர்க்குறுமாக்கள்	கூச
ஊர்நனியிறந்த	உசுரு
ஊர்முதுவேலி	ஙஉசு
ஊனுமூனுமுனையின்	ஙஅக
எஃகுளங்கழிய	உஅஉ
எங்கோனிருந்த	ருச
எந்தைவாழி	கஎரு
எமக்கேகலங்க	உகூஅ
எருதுகாலுரு	ஙஉஎ
எருதேயிளைய	க௦உ
எருமையன்ன	ரு
எழுவிணிநெஞ்ச	உ௦எ
எறிபுனக்குறவன்	உஙக
என்றிறத்தவலங்	உருங
என்னைக்கூரிஃத	அரு
என்னை புற்கையுண்டும்	அச
என்னைமார்பிற்	உஅ௦
எனைப்பல்யானையும்	சுங
ஏர்பரந்தவய	ஙஙஅ
ஏற்றுகவுலையே	கஎஉ
ஏற்றுவலனுயரிய	ருசு
ஏறுடைப்பெருநிரை	உருகூ
ஐயோவெனின்	உருரு
ஒண்செங்குரலி	உஅங
ஒண்பொறிச்சேவல்	ஙஙஅ
ஒருசாரருவியார்ப்ப	ககரு
ஒருதலைப்பதலை	க௦ங
ஒருதிசையொருவனை	கஉக
ஒருநாட்செல்லல	க௦க
ஒருவனையொருவன்	எசு
ஒல்லுவதொல்லும்	ககூசு
ஒளிறுவாண்மன்னர்	கஎஎ
ஒன்றுநன்குடைய	கருசு
ஒன்னார்யானை	கஉசு
ஓங்குமலைப்பெருவிற்	ருரு
ஓரினெய்தல்	ககூச
ஓரையாயத்து	கஎசு
ஓவத்தன்ன	உருக
கடந்தடுதானை	கக௦

கடல்கிளர்ந்தன்ன	௨௯௫
கடல்கொளப்படாஅது	௧௨௨
கடவுளாலத்து	௧௯௯
கடற்படையடற்	௩௮௨
கடுங்கண்ணகொல்	௧௪
கடுந்தேர்குழிந்த	௧௫
கடும்பினடுகல	௩௨
கண்ணிகார்நறுங்	௧
கதிர்மூக்காரல்	௨௪௯
கந்துமுனிந்துயிர்க்கும்	௧௭௮
கல்லறுத்தியற்றிய	௩௩௧
கலஞ்செய் . . . . அச்சு	௨௫௬
கலஞ்செய்...இருடிணிந்	௨௨௮
கலையுணக்கிழிந்த	௨௩௬
கவிசெந்தாழிக்	௨௩௮
கவைக்கதிர்வரகி	௨௧௫
கழிந்ததுபொழிந்தென	௨௦௩
கள்ளின்வாழ்த்தி	௩௧௬
களங்கனியன்ன	௧௨௭
களம்புகலோம்பு	௮௭
களர்ப்படுகூவற்	௩௧௧
களிபரந்து	௩௫௬
களிறணைப்ப	௩௪௫
களிறுகடையிய	௭
களிறுநீறாடிய	௨௨௫
களிறுபொரக்	௩௦௬
களிறுமுகந்து	௩௬௮
கறங்குமிசையருவிய	௧௪௮
கறங்குவெள்ளருவி	௨௫௨
கன்முழையருவி	௧௪௭
கன்றமராயங்	௨௩௦
காமருபழனக்	௩௩௪
காய்நெல்லறுத்து	௧௮௪
கார்ப்பெயறலைஇய	௧௧௯
காரெதிருருமின்	௩௬௧
கால்பார்கோத்து	௧௮௫
காலனுங்காலம்	௪௧
கானக்காக்கை	௩௪௨
கானன்மேய்ந்து	௩௭௪
கானுறைவாழ்க்கை	௩௩
கிண்கிணிகளைந்த	௭௭
கீழ்நீரான்	௩௯௬
குய்குரன்மலிந்த	௨௫௦
குயில்வாயன்ன	௨௬௯
குழவியிறப்பினு	௭௪
குறத்திமாட்டிய	௧௦௮
குறியிறைக்குரம்பை	௧௨௯
குன்றுதலைமணந்த	௩௫௭
குன்றுமலையும்	௨௦௮
கூதிர்ப்பருந்தின்	௧௫௦
கேடுகெசிந்தை	௨௭௯
கேட்டன்மாத்திரை	௨௪௬
கையதுகடனிறை	௬௯
கையதுவேலே	௧௦௦
கொடுங்குழைமகளிர்	௩௦௪
கொடுவரிவழங்கு	௧௩௫
கொண்டைக்கூழை	௬௧
கொய்யடகுவாட	௩௧௮
கோட்டங்கண்ணி	௨௭௫
கோதைமார்பிற்	௪௮
சாறுதலைக்கொண்டென	௮௨
சிலையுலாய்நிமிர்ந்த	௩௯௪
சிற்றினற்றாண்	௮௬
சிறப்பில்சிதடு	௨௮
சிறப்புடைமரபிற்	௩௧
சிறுஅர் துடியர்	௨௯௧
சிறியகட்பெறினே	௨௩௫
சுவலழுந்தப்பலகாய	௧௩௯
செஞ்ஞாயிற்றுச்	௩௦
செந்நெலுண்ட	௩௪௪
செய்குவங்கொல்லோ	௨௧௪
செருப்பிடைச்	௨௫௭
செற்றன்றாயினுஞ்	௨௨௬
சேயிழைபெறுகுவை	௧௦௫
சேற்றுவளர்தாமரை	௨௭
ஞாயிற்றன்ன	௩௬௨
ஞாலமீமிசை	௧௭௯
தடவுநிலைப்பலவின்	௧௪௦
தண்டுளிபலபொழிந்	௩௯௧
தமர்தற்றப்பின	௧௫௭

தலையோர் நுங்கின்	௨௨௫
திண்டேரிரவலர்	௨௪௧
திண்பிணிமுரசம்	௯௩
திரைபொருமுந்நீர்	௧௫௪
தீங்கனியிரவமொடு	௨௮௧
தீநீர்ப்பெருங்குண்டு	௧௧௬
துடியெறியும்புலைய	௨௮௭
தூங்குகையடான்	௨௨
தூர்ந்தகிடங்கிற்	௩௫௦
தெண்கடல்வளாகம்	௧௮௯
தென்குமரிவடபெரு	௧௭
தென்பரதவர்	௩௭௮
தென்பவ்வத்து	௩௮௦
தேஎங்கொண்ட	௩௫௨
தேஎந்தீந்தொடை	௭௦
தொடியுடையதோண்	௨௩௯
தோறுதோறு	௩௦௦
நகுதக்கனரே	௭௨
நஞ்சுடைவாலெயிற்	௩௭
நரம்பெழுந்து	௨௭௮
நல்யாழாகுளி	௬௪
நல்லவுந்தீயவு	௧௦௬
நள்ளிவாழியோ	௧௪௯
நளிகடலிருங்	௨௬
நளியிருமுந்நீர்நாவாய்	௬௬
நளியிருமுந்நீரேணி	௩௫
நறவுந்தொடுமி	௨௬௨
நறவிரைதுறந்த	௨௭௬
நன்றாய்ந்தநீணிமிர்	௧௬௬
நனிபேதையே	௨௨௭
நாகத்தன்னபாகார்	௩௬௭
நாட்கள்ளுண்டு	௧௨௩
நாடனென்கோ	௪௯
நாடாகொன்றோ	௧௮௭
நாளன்றுபோகி	௧௨௪
நிரப்பாதுகொடுக்கும்	௧௮௦
நிலம்பிறக்கிடுவது	௩௦௩
நிலமிசைவாழ்நர்	௪௩
நிறப்படைக்கொல்காய்	௨௯௩
நின்னயந்துறைநர்க்	௧௬௩
நினைக்குங்காலை	௨௧௭
நீடுவாழ்கென்றி	௨௩௭
நீண்டொலியழுவம்	௧௬௧
நீயே, அமர்காணின்	௧௬௭
நீயே, தண்புனற்காவிரி	௫௮
நீயே, பிறரோம்புற்ற	௪௦
நீயே, புறவினல்ல	௪௬
நீர்நுங்கின்கண்வலிப்ப	௩௮௯
நீர்மிகிற்சிறையு	௫௧
நீரறவறியாநில	௨௭௧
நீருட்பட்டமாரி	௩௩௩
நீலக்கச்சைப்பூவார்	௨௭௪
நுங்கோயாரென	௨௧௨
நுதிவேல்கொண்டு	௩௪௯
நும்படைசெல்லுங்	௧௬௯
நெடுநீரநிறைகயத்	௩௮௬
நெல்லரியுமிருந்	௨௪
நெல்லுமுயிரன்றே	௧௮௬
நோகோயானே	௨௩௪
படுமணிமருங்கின	௩௫௧
படைப்புப்பலபடைத்து	௧௮௮
பண்டும்பண்டும்	௧௫௧
பதிமுதற்பழகா	௩௯௩
பயங்கெழுமாமழை	௨௬௬
பரலுடைமருங்கிற்	௨௬௪
பருத்திப்பெண்டின்	௧௨௫
பருத்திவேலிச்	௨௯௯
பருதிசூழ்ந்த	௩௫௮
பல்சான்றீ....கயன்முள்	௧௯௫
பல்சான்றீ....குமரி	௩௦௧
பல்சான்றீ..செல்கென	௨௪௬
பலர்க்குநிழலாகி	௨௨௩
பன்மீனிமைக்கு	௨௭௦
பனிபழுனியபல்	௩௭௭
பனிவரைநிவந்த	௨௦௦
பாசறையீரே	௨௮௫
பாடுநர்க்கீத்த	௨௨௧
பாணர்சென்னி	௨௪௪
பாணர்தாமரை	௧௨
பாணன்சூடிய	௧௪௧

பாரிபாரி	௧0௭
பால்கொண்டு	௩௧0
பாறுபடப்பறைந்த	௩௫௯
பிற..ளபாலென	௩௪௬
பிறர்வேல்போலா	௩௩௨
புலவரையிறந்த	௨௧
புலிப்பாற்பட்ட	௩௨௩
புறவினல்லல்	௩௯
பூவற்படுவிற்	௩௧௯
பேரிதாராச்	௩௬0
பெருங்களிற்றடி	௨௬௩
பெருஞ்சோறுபயந்து	௨௨0
பெருநீர்மேவ	௨௯௭
பொய்கைநாரை	௨0௯
பொய்யாகியரோ	௨௩௩
பொரிப்புறப்பூழின்	௩௨௧
பொன்வார்ந்தன்ன	௩0௮
பொன்னுந்துகிரு	௨௧௮
போர்க்குரைஇ	௯௭
போற்றுமின்மறவீர்	௧0௪
மட்டுவாய்திறப்பவு	௧௧௩
மடங்கலிற்சினைஇ	௭௧
மடத்தகைமாமயில்	௧௪௫
மண்கொளவரிந்த	௨௮௮
மண்டமரட்ட	௨௧௩
மண்டிணிந்தநிலனும்	௨
மண்முழாமறப்ப	௬௫
மணிதுணர்ந்தன்ன	௨௭௨
மதிநிலாக்கரப்ப	௩௯௮
மதியேர்வெண்குடை	௩௯௨
மதிலுஞாயில்	௩௫௫
மயங்கிருங்கருவி	௩௬௫
மரைபிரித்துண்ட	௧௭0
மலைவான்கொள்கென	௧௪௩
மழைக்கணஞ்	௧௩௧
மழையணிகுன்றத்	௧௫௩
மன்பதைகாக்கு	௨௧0
மன்றப்பலவின்	௧௨௮
மன்றவிளவின்	௧௮௧
மன்னுவுலகத்து	௧௬௫
மனைக்குவிளக்காகிய	௩௧௪
மாகவிசும்பின்	௪00
மாசறவிசித்த	௫0
மாவாராதே	௨௭௩
மீன்றிகழ்விசும்பி	௨௫
மீனுண்கொக்கின்	௨௭௭
மீனொடுத்துநெற்	௩௪௩
முட்காற்காரை	௨௫௮
முதிர்வாரிப்பி	௫௩
முந்நீர்நாப்பட்டிமிற்சுடர்	௬0
முரசுகடிப்பிகுப்ப	௧௫௮
முழங்குமுந்நீர்	௧௮
முற்றியதிருவின்	௨0௫
முன்றின்முஞ்ஞை	௩௨0
முன்னுள்ளுவோனே	௧௩௨
முனைத்தெவ்வர்	௯௮
மூத்தோர்மூத்தோர்	௭௫
மூதூர்வாயில்	௭௯
மேல்லவந்தெனல்லடி	௭௩
மெல்லியல்விறலி	௧௩௩
மென்பாலானுடனணைஇ	௩௮௪
மென்புலத்துவயலுழவர்	௩௯௫
மைம்மீன்புகையினும்	௧௧௭
யாங்குப்பெரிதாயினு	௨௪௫
யாண்டுபலவாக	௧௯௧
யாதுமூரே	௧௯௨
யாவிராயினுங்	௮௮
யாழ்ப்பத்தர்	௧௩௬
யாழொடுங்கொள்ளா	௯௨
யான்வாழுநாளும்	௧௭௩
யானேபெறுக	௩௭௯
யானைதந்தமுளிமர	௨௪௭
வடாஅதுபனிபடு	௬
வணங்குதொடை	௭௮
வணர்கோட்டு	௧௫௫
வயலைக்கொடி	௩0௫
வருகதில்வல்லே	௨௮௪
வருதார்தாங்கி	௬௨
வரைபுரையு	௩௮
வல்லாராயினும்	௫௭

வலம்படுவாய்	௯௧	வெடிவேய்கொள்வது	௩௦௨
வழிபடுவோரை	௧௦	வெண்குடைமதி	௨௯௪
வள்ளியோர்	௪௭	வெண்ணெல்லரிநர்	௩௪௮
வள்ளுகிரவய	௩௮௭	வெப்புள்விளைந்த	௧௨௦
வளரத்தொடி	௨௬௦	வெருக்குவிடை	௩௨௪
வளிநடந்தன்ன	௧௯௭	வெள்ளிதென்புல	௩௮௮
வாடாமாலை	௩௬௪	வெள்ளிதோன்ற	௩௮௫
வாயிலோயே	௨௦௬	வெள்ளியுமிருவிசும்	௩௯௭
வாழுநாளோ	௧௫௯	வெள்ளைவெள்யாட்டு	௨௮௬
வாள் வலந்தர	௪	வெளிறினோன்காழ்	௨௩
விசிபிணித்தடாரி	௩௭௨	வென்வேல்	௩௧௭
விசும்புநீத்த	௩௭௬	வேட்டவேந்தனும்	௩௩௬
வியன்புலம்	௩௩௯	வேந்தற்கேந்தி	௨௯௨
விழுக்கடிப்பறை	௩௬௬	வேந்துகுறையுற	௩௪௧
விளங்குமணி	௧௩௦	வேந்துடைத்தானை	௩௩௦
விளைபதச்சீறி	௧௯௦	வேம்புசினை	௨௯௬
வினைமாட்சிய	௧௬	வேழம்வீழ்த்த	௧௫௨
வெட்சிக்கானத்	௨௦௨	வையங்காவலர்	௮

..ளி நாரும் போழுஞ் ௩௭௦

——:o:——

அரும்பத அகராதி

அ - அழகு.
அகடு - வயிறு.
அகநாடு - உள்நாடு.
அகப்படுதல் - சிக்கல்.
அகம் - இடம், உள்ளிடம், மனம், மனை.
அகலம் - பரப்பு, மார்பு.
அகலல் - நீங்கல், பரத்தல்.
அகலுள் - அகன்ற இடம்.
அகழி - கிடங்கு.
அகற்பெய் குன்றி - அகலில் பெய்யப்பட்ட குன்றிமணி.
அகற்றல் - அகலச்செய்தல்.
அகன்கிடக்கை - அகன்ற உலகம்.
அகன்றலை : அகன்ற இடம்.
அகுதை : ஒரு தலைவன்.
அகைத்தல் - கிளைத்தல்.
அச்சு - வண்டியின் அச்சு.
அசாவா - தளராத.
அசும்பு - சேறு.
அசைஇ - இளைப்பாறி, தங்கி.
அசைஇய - வருந்திய.
அசைவிடல் - அசையிடல்.
அசைவு - தளர்ச்சி.
அஞ்சனவுருவன் - திருமால்.
அஞ்சி - அதியமான் நெடுமான் அஞ்சி.
அஞர் - துன்பம்.
அடக்கல் - உட்கொள்ளல், ஒடுக்கல்.
அடகு - இலை, இலைக்கறி.
அடங்காதோர் - பகைவர்.
அடங்குதல் - இறைஞ்சுதல்.
அடர் - தகடு.
அடர்தல் - தட்டுதல், நெருங்குதல்.
அடா - அடக்கி.
அடார் - புலிப்பொறி.
அடியுறை - அடிமை.
அடுக்கம் - அரைமலை, மலைச்சாரல்.
அடுகலம் - சமைக்கும் பாத்திரம்.
அடுகள் - அடப்பட்ட கள்.
அடுதல் - கொல்லுதல், சமைத்தல், வருத்தல், வெல்லுதல்.
அடுதீ - சமைக்கும் நெருப்பு.
அடுநன் - அடுபவன்.
அடுநை - கொல்வாய்.
அடை - இலை, தண்ணடை, தழை, தேனடை, மருதநிலத்தூர்.
அடைச்சுதல் - சேர்த்துதல்.
அண்டிரன் - ஆய்.
அண்ணல் - இறைவன், தலைமை, தலைவன்.
அண்ணாத்தல் - தலையெடுத்தல்.
அண்மை - அணிமை.
அணங்கு - அச்சம், தெய்வம், பேய், வருத்தம், வருத்துதல்.
அணந்து - அண்ணாந்து.
அணல் - தாடி, மீசை.
அணி - அழகு, ஆபரணம்.
அணியல் - அழகுசெய்தல்.
அணில்வரிக் கொடுங்காய் - வெள்ளரிக்காய்.
அணைத்தல் - சேர்த்தல்.
அத்தக்கோன் - அத்தகுதியையுடையோன்.
அத்தக - அதற்குத்தக.
அத்தம் - அரியவழி, அருஞ்சுரம், காட்டுவழி.
அத்தை: அசைநிலை.
அதர் - வழி.
அதரி திரித்தல் - கடாவிடுதல்.
அதள் - தோல்.
அதற்கொண்டு - அதனால்.
அதற்பட - அதன்கண்ணே பட.
அதன்றலை - அதற்குமேலே.
அதியமான் : ஒரு தலைவன்.
அதியர் - ஒருசிற்றரசர் குலத்தினர்.

அதியர்கோமான் - அதியமான்.
அதிர்தல் - தளருதல்.
அதிரல் - காட்டுமல்லிகை, புனலிக்
கொடி, மோசிமல்லிகை.
அந்தரம் - தேவருலகம். [காலம்.
அந்தி - அந்திக்காலம், மாலைக்
அந்துவஞ்சாத்தன் : ஒருபகாரி.
அம்: அல்வழிச்சாரியை, அழகிய.
அம்பர் கிழவோன் - அம்பர் கிழான்
அருவந்தை.
அம்பி - ஓடம், தோணி.
அம்ம : அசைநிலை.
அமயம் - பொழுது.
அமர்த்தல், அமர்தல் - பொருந்து
தல், மேவுதல்.
அமரியள் - விரும்பியவள்.
அமலை - கட்டி, சோற்றுக்கட்டி,
அமை - மூங்கில். [திரளை.
அமைந்தனர் - உடன்கிடந்தனர்.
அயர்தல் - ஆடுதல், விரும்பிக்
அயர்வு - மனக்கவற்சி. [கொடுத்தல்.
அயறு - புண்வழலை.
அயாவுயிர்த்தல் - நெட்டுயிர்ப்புக்
அயிரை - ஒரு மீன். [கொள்ளுதல்.
அயினி - உணவு.
அரசு - அரசாட்சி.
அரண் - பாதுகாப்பு, மதில்.
அரந்தை - துன்பம்.
அரலை - குற்றம்.
அரவாய் - அரத்தைப்போன்றவாய்.
அரி - உள்ளிடுபரல், கண்ணிலுள்ள
செவ்வரி.
அரிக்குரல் - அரித்தெழுகின்ற
ஓசை, ஒலிநிரம்பாத ஓசை.
அரிகால் - அரிந்த தாள்.
அரிஞர் - அரிபவர்கள்.
அரித்தல் - வடித்தல்.
அரிநர் - அறுப்பார்.
அரிப்பறை - ஒருவகைப் பறை.
அரிப்பனி - இடைவிட்ட துளி.
அரிமயிர் - மிகவும் மெல்லிய மயிர்.
அரியல் - கள்.
அரில் - தூறுபட்ட காடு.
அருகுதல் - குறைதல்.

அருங்கலவெறுக்கை - பெறுதற்
கரிய ஆபரணமும் செல்வமும்.
அருத்தல் - ஊட்டுதல்.
அருந்தேமாந்த - உண்ண ஆசைப்
அருப்பம் - அரிய அரண். [பட்ட.
அருள் - ஒன்றின் துயர் கண்டாற்
காரணமின்றித் தோன்றும்
இரக்கம்.
அருளன்மாறு - அருளுதலால்.
அரை - இடை, பக்கம், மரத்தின்
அரைசு - அரசு. [அடி.
அரைமண் - அரைத்த மண்.
அரையிரவு - பாதியிரவு.
அல்கலும் - நாடோறும்.
அல்குதல் - தங்குதல்.
அல்குபதம், அல்குமிசைவு - இட்டு
வைத்து உண்ணும் உணவு.
அல்லாகியர் - அல்லவாக.
அல்லி - அகவிதழ்.
அல்லிப்பாவை - அல்லியமென்
னுங் கூத்தையாடும் பாவை.
அல்லை - அல்லாய். [குதல்.
அலங்குதல் - அசைதல், விளங்
அலத்தற்காலை - வறுமைக்காலம்.
அலந்தலை - விரிந்த தலை.
அலம்வருதல் - சுழலுதல்.
அலமரல் - சுழற்சி.
அலர் - மலர்.
அலறல் - அழுதல்.
அலைத்தல் - உருட்டுதல், வருத்து
அவ்வே - அவையே. [தல்.
அவரை - மொச்சை.
அவல் - பள்ளம், விளைநிலம்.
அவலம் - இன்னுமை, துன்பம்,
வருத்தம்.
அவிதல் - அடங்குதல், பணிதல்.
அவியன் : ஒருபகாரி.
அவியுணவினோர் - தேவர்.
அவிர்தல் - விளங்குதல்.
அவிழ் - சோற்றுப்பருக்கை,
அவிழ்தல் - மலர்தல். [சோறு.
அவுணர் - அசுரர்.
அவைப்பு - குற்றுதல். [கூறவையம்.
அவையம் - அவைக்களம், அறங்

அழல் - தழல்.
அழற்குட்டம் - கார்த்திகை நாள்.
அழாஅல் - அழுகை.
அழி - வைக்கோல்.
அழித்து - மீட்டும்.
அழிதல் - இரங்குதல், வருந்துதல்.
அழிவருதல் - இரக்கம் வருதல்.
அழுக்கு - மாசு.
அழுங்கல் - அழிதல், இரங்குதல்.
அழுந்தல் - இறுகுதல், வடுப்படல்.
அழுவம் - பரப்பு.
அள்ளல் - சேறு.
அள்ளிலை - செறிந்த இலை.
அளக்கர்த்திணை - கடலாற் சூழப் பட்ட பூமி.
அளத்தல் - எண்ணுதல், வரையறுத்தல்.
அளவு - எல்லை.
அளவுபு - கலந்து.
அளவை - அளவு, எல்லை, மாத்திரை.
அளி - அருள், வண்மை.
அளித்தல் - அருள்செய்தல்.
அளிது - அளிக்கத்தக்கது.
அளியர் - இரங்கத்தக்கவர்.
அளை - குகை, மோர்.
அளைஇ - கலந்து.
அற்றம் - துன்பம்.
அற்று - அத்தன்மைத்து, ஒத்தது.
அறத்துறை அம்பி - தரும ஓடம்.
அறம்(ன்) - அறக்கடவுள், அறநூல், தருமம்.
அறல் - கருமணல்.
அறவர் - அறம்புரிவோர்.
அறவு - அறுதல், தொலைதல்.
அறவை - அறத்தையுடையை, அறம்.
அறவோன் - அறம்செய்தோன்.
அறாஅயாணர் - இடையறாத செல்வவருவாய்.
அறிநை - அறிவாய்.
அறியுநம் - அறிவேம்.
அறியுநர் - அறிவார்.
அறியுமோன் - அறியுமவன்.
அறிவாரா - அறியவாரா.
அறீஇ - அறிந்து.
அறுகாற்பறவை - வண்டு.
அறுகுளம் - வற்றியகுளம்.
அறுத்தல் - கெடுத்தல்.
அறுதொழில் - அந்தணர்க்குரிய ஆறு தொழில்கள்.
அறுமார் - நீக்கவேண்டி.
அறுவை - ஆடை.
அறை - துணி, பாறை.
அறைதல் - அடித்தல்.
அறைவாய் - அற்றவாய்.
அன்பு - தன்னாற் புரக்கப்படுவார் மேல் உளதாகிய காதல்.
அன்மை - அல்லாமை.
அன்னச்சேவல் - ஆண் அன்னம்.
அன்னோ - ஐயோ.
அனந்தர் - மயக்கம்.
அனந்தல் - மந்தமான ஓசை.
அனையை - அத்தன்மையையுடையாய்.
ஆ - பசு.
ஆஅய் : ஆயென்னும் வள்ளல்.
ஆகம் - மார்பு.
ஆகன்மாறு - ஆதலால்.
ஆகியர் - ஆகுக.
ஆகிலியர் - ஆகாதொழிக.
ஆகின்று - ஆயிற்று.
ஆகுளி - சிறுபறை.
ஆங்க : அசை.
ஆங்கு - அப்படி, உவமவுருபு.
ஆசாகு : இரங்கற்குறிப்புமொழி.
ஆசினி - ஈரப்பலா, ஒரு மரம்.
ஆசு - பற்றுக்கோடு.
ஆடவர் - ஆண்மக்கள், மறவர், வீரர்.
ஆடு - கொல்லுதல், சமைத்தல், மேடராசி, வெற்றி.
ஆடுகளம் - கூத்தாடுதற்குரியஇடம்.
ஆடுதல் - உரைத்தல், கொண்டாடுதல், பறத்தல், விளையாடுதல்.
ஆடுநடை - தாளத்திற்கேற்ப நடக்கும் அசைந்த நடை.
ஆடுநர் - கூத்தர்.
ஆடுமகள் - விறலி.
ஆண்டகை - ஆண்மைக்கூறுபாடு.
ஆண்டிசினோர் - ஆண்டோர்.
ஆண்மை - வீரம்.
ஆதல் - பேறு.

ஆதன் : ஒரு தலைவன்.
ஆதன் அழிசி : ஒரு தலைவன்.
ஆதன் ஓரி : ஒரு தலைவன்.
ஆதன் நுங்கன் : ஒரு தலைவன்.
ஆந்தை : ஒருபுலவர், ஒருபகாரி.
ஆப்பி - சாணகம்.
ஆம் - நீர்.
ஆம்பல் - ஆம்பற்பண், ஒருவகை நீர்ப்பூ.
ஆம்பல் அல்லி - ஆம்பலாகிய அல்லிக்காயரிசி.
ஆம்பல்வள்ளித்தொடி - ஆம்பற்றண்டாற் செய்தவளை.
ஆம்பி - காளாம்பி.
ஆமா - காட்டுப்பசு.
ஆமான் குழவி - ஆமாவின் கன்று.
ஆமூர் : ஓரூர்.
ஆய் - நுண்ணிய.
ஆய் அண்டிரன் : ஒரு தலைவன்.
ஆய்கரும்பு - மெல்லிய கரும்பு.
ஆய்தல் - ஆராய்தல்.
ஆய்நுதல் - சிறிய நுதல்.
ஆய்மகள் - இடைச்சி.
ஆயம் - ஆனிரை, இனம், திரட்சி.
ஆயர் - தாயர்.
ஆயிடை - அவ்விடத்து.
ஆர் - ஆத்தி, ஆரக்கால்.
ஆர்கலி - ஆரவாரம்.
ஆர்குவை - உண்டு நிறைவை.
ஆர்த்தல் - ஒலித்தல், நிறைத்தல், நிறைய உண்பித்தல்.
ஆர்தல் - உண்ணுதல், நிறைதல்.
ஆர்ப்பு - ஒலி.
ஆர்பதம் - உண்ணும் உணவு.
ஆர்வம் - ஆசை.
ஆர்வலர் - பரிசிலர்.
ஆர்வு - ஆசை.
ஆர - நிரம்ப, மிகவும்.
ஆரம் - ஆரக்கால், சந்தனம், முத்துமாலை, வடம்.
ஆரமர் - பொருதற்கரிய போர்.
ஆரல் - ஒருவகை மீன்.
ஆரா - தெவிட்டாத.
ஆருந்து - ஆரும்.
ஆரை - ஆரக்கால்.
ஆல் : அசைநிலை.
ஆலங்கானம் - தலையாலங்காடு.
ஆலம் - ஆலமரம்.
ஆலுதல் - ஆடுதல், ஒலித்தல்.
ஆலை - கூடம்.
ஆவம் - அம்பறாத்தூணி.
ஆவியர் - ஒரு குலத்தார்.
ஆவுதி - ஆகுதி.
ஆழ்ச்சி - குழிப்பாய்தல்.
ஆழல் - ஆழ்தல்.
ஆழி - கடல், கடற்கரை, சக்கரம்.
ஆள் - மனிதர், வீரர்.
ஆள்வினை - முயற்சி.
ஆளன் - ஆண்மையை உடையோன்.
ஆற்ற - மிக.
ஆற்றல் - செய்தல், வலி.
ஆற்றாது - சீர்நில்லாது.
ஆற்றார் - பகைவர், மாட்டார்.
ஆற்றீர் - மாட்டீர்.
ஆற்றுதல் - உதவுதல்.
ஆறு - ஆறு அங்கம், வழி.
ஆன் - பசு, பெற்றம்.
ஆன்பயம் - பசுப்பால்.
ஆன்பொருநை : ஓராறு.
ஆன்ற - அமைந்த.
ஆன்றிசின் - அமைந்தேன்.
ஆன்று - அமைந்து, நிறைந்து.
ஆனா - அமையாத.
ஆனாது - அமையாமல், தவிராது.
ஆனிலையுலகம் - கோலோகம்.
ஆனுருக்கு - பசுவின் நெய்.

இகத்தல் - நீங்குதல்.
இகல் - மாறுபாடு.
இகழ்பாடுவோர் - இழித்துரைப்போர்.
இகழுநர் - பகைவர்.
இகுத்தல் - அடித்தல், சொரிதல்.
இங்கல் - தங்கல்.
இசின் : ஓர் இடைச்சொல்.
இசை - ஒலி, புகழ்.
இசைஇ - இசைத்து.
இஞ்சி - மதில்.
இடன் - இடம்.
இடாஅ - குத்தி.

இடுக்கண் - துன்பம்.
இடுதல் - போகடுதல்.
இடும்பை - துன்பம், வறுமை.
இடை - இடம், சமயம், நடு, வழி.
இடையிடுபு - இடையிட்டு.
இடை வழங்குதல் - ஊடுபோதல்.
இணர் - பூங்கொத்து.
இதல் - ஒருவகைப் பறவை.
இதழ் - மலரிதழ்.
இப்பி - சிப்பி.
இம்பர் - இவ்வுலகம்.
இம்மை - இப்பிறப்பு.
இமயம் - இமயமலை.
இமிர்தல் - ஊதுதல்.
இமிழ்தல் - முழங்குதல்.
இமைத்தல் - விளங்குதல்.
இமைத்தோர் - இமை கொட்டுவோர்.
இயக்கல் - ஒலிக்கச் செய்தல், வாசித்தல்.
இயக்கன் : ஒருபகாரி.
இயக்குதல் - கொட்டுதல்.
இயங்குதல் - செல்லுதல்.
இயம் - இசைக்கருவி.
இயம்புதல் - ஒலித்தல்.
இயல் - இயல்பு, தன்மை.
இயலல் - நடத்தல்.
இயவர் - வாச்சியக்காரர்.
இயறேர் - இயற்றப்பட்ட தேர்.
இரங்குதல் - ஒலித்தல், முழங்குதல், வருந்துதல்.
இரங்குரல் - இரங்கு குரல்.
இரங்காழ் - இராமரத்தின் விதை.
இரட்டல் - ஒலித்தல், மாறியொலித்தல்.
இரத்தி - இத்திமரம், இலந்தைமரம்.
இரவம் - இராமரம்.
இரவன்மாக்கள் - இரவலர்.
இரிந்தான் - தோற்றோடியவன்.
இரியல்போக்குதல் - அணி அணியாகச் சாய்த்துக் கொடுத்தல்.
இரியல் போதல் - கெடுதல்.
இரியுந்து - இரியும்.
இரீஇ - இருத்தி.
இரீஇய - இருத்திய.
இரீஇயுந்து - கெட்டு ஓடும்.
இருக்கை - இருத்தல், இருப்பிடம், ஓலக்கம்.
இருசுடர் - சூரிய சந்திரர்.
இருந்தீமோ - இரு.
இருபிறப்பாளர் - அந்தணர்.
இரும் - இருமல்.
இரும்பு - ஓர் உலோகம், படைக்கலம், யானைத்தந்தப்பூண்.
இருமருந்து - சோறும்தண்ணீரும்.
இருமை - கருமை, பெருமை.
இருள் - இரவு, துன்பம், மாலைக்காலம்.
இரை - உணவு.
இல்லாகியர் - இல்லையாகுக.
இல்லி - துளை.
இல்லோர் - வறியோர்.
இலக்கம் - குறி, குறிபார்த்து எய்யப்படும் பொருள்.
இலஞ்சி - மடு.
இலம் - வறுமை.
இலம்பாடு - வறுமை.
இலிற்றுதல் - சுரத்தல்.
இவ்வே - இவையே.
இவண் - இவ்வுலகத்தில்.
இவணை - இவ்விடத்திலுள்ளாய்.
இவர்தல் - படருதல், பரத்தல்.
இவுளி - குதிரை.
இழிசினன் - புலைமகன்.
இழிதல் - இறங்குதல்.
இழிந்தன்று - இழிந்தது.
இழுக்கியான் - தப்பியவன்.
இழுது - நிணம், நெய்.
இழுமென - இழுமென்னும் ஓசை சை உடைத்தாய்.
இழை - ஆபரணம், தேர்க்குரிய படை, நூல், மணிக்கோவை.
இளையர் - இளையோர், எவல் செய்வார், வீரர்.
இற்றைநாள் - இன்று.
இறங்குதல் - வளைதல்.
இறத்தல் - கடத்தல், போதல், மிகுதல்.
இறந்தென - போக.
இறந்தோர் - பிரிந்தோர்.
இறவு - இறாமீன்.
இறுக்கல் - கொடுத்தல்.

இறுத்தல் - உதைத்தல், கொடுத்தல், தங்குதல், பண்ணுதல், வீழ்தல்.
இறுதி - ஊழிக்காலம்.
இறுபு - ஒடிந்து.
இறும்பு - சிறுகாடு.
இறும்பூது - வியப்பு.
இறுமார் - இறுத்தற்கு.
இறை - அரசன், உயர்ச்சி, கப்பம், சந்து, தங்குதல், தலைவன், முன்கை, வீட்டின் இறப்பு.
இறை கூர்தல் - தங்குதல்.
இறைஞ்சுதல் - தாழ்தல், வணங்குதல்.
இறைவன் - தலைவன்.
இன் : அசைநிலை, சாரியை.
இன்மை - வறுமை.
இன்ன - இத்தன்மையன.
இன்னன் - கொடியோன்.
இன்னீர் - இத்தன்மையீர்.
இன்னே - இப்பொழுதே.
இன்னேம் - இத்தன்மையேம்.
இனன் - இனம், கூட்டம்.
இனி - இப்பொழுது.
இனைத்து - இவ்வளவினது.
இனைதல் - இரங்கி ஒலித்தல், வருந்துதல்.

ஈகை - கொடை, பொன், வண்மை.
ஈங்கனம் - இவ்வாறு.
ஈண்டுதல் - செறிதல், திரளுதல், நெருங்குதல், விரைதல்.
ஈத்தல் - கொடுத்தல்.
ஈத்திலை - ஈந்தினது இலை.
ஈமம் - பிணம் சுடும் விறகடுக்கு.
ஈயல் - ஈசல்.
ஈர் - ஈரம், பேனின் முட்டை.
ஈர்ங்கை - ஈரமுள்ள கை, உண்டு பூசிய கை.
ஈர்ப்பு - இழுத்தல்.
ஈரம் - அன்பு.
ஈவு - உதவுதல்.
ஈற்று - பிள்ளை பெறுதல்.
ஈன்மர் - பெறுவார்.
ஈனுதல் - முட்டையிடுதல்.

உக்கரை - அக்கரை, வீட்டுலகம்.
உகத்தல் - உயரப்பறத்தல், உவத்தல்.
உகவை - உகத்தல்.
உகளல் - துள்ளுதல்.
உகளுந்து - உகளும்.
உகுத்தல் - உதிர்த்தல், தூவுதல்.
உகுதல் - சிந்துதல்.
உட்கல் - அஞ்சுதல்.
உடங்கியைதல் - ஒப்பக்கூடுதல்.
உடலுதல் - சினத்தல், சீறுதல், பகைத்தல், மாறுபடுதல்.
உடலுநர் - பகைவர், மாறுபடுவோர்.
உடற்றல் - எய்தல்.
உடற்றியோர் - சினப்பித்தவர்.
உடன் - ஒருங்கு, முழுவதும்.
உடன்றவர் - பகைத்தவர்.
உடனிலை - கூடியிருக்கின்ற நிலை.
உடீஇ - உடுக்கச் செய்து, உடுத்து.
உடுக்கை - உடை.
உடுத்தல் - சூழ்தல்.
உடும்பு - ஊர்வனவற்றில் ஒருவகை.
உடை - ஒருவகை மரம்.
உடைத்தல் - அழித்தல், இடித்தல்.
உடைதல் - தோற்றோடுதல், முறிதல்.
உடைமை - செல்வம்.
உடையோர் - செல்வர்.
உண்கண் - மையுண்ட கண்.
உண்டுறை - உண்ணு நீரெடுக்குந் துறை.
உண்மார் - உண்பவர்.
உணங்குதல் - உலர்தல், மாய்தல்.
உணர்த்தல் - துயிலெழுப்பல்.
உணர்த்திய - எழுப்ப.
உணர்ந்திசினோர் - உணர்ந்தோர்.
உணவின் பிண்டம் - உணவாலுளதாகிய உடம்பு.
உணீஇயர் - உண்ண வேண்டி.
உத்தி - படப்பொறி.
உதவல் - பயன்படல்.
உந்தி - கொப்பூழ்.
உம் : அசைநிலை.
உம்பல் - வழித்தோன்றல்.
உம்மை - மறுபிறப்பு.
உமணர் - உப்புவாணிகர்.
உய்த்தல் - கொண்டுபோதல், செலுத்தல்.
உய்தல் - பிழைத்தல்.
உய்தி - நீங்குதல்.

உய்வு - பிழைத்தல்.
உயக்கம் - வருத்தம்.
உயங்குதல் - ஒய்தல்.
உயர்ந்திசினோர் - உயர்ந்தோர்.
உயர்நிலையுலகம் - விண்ணுலகம்.
உயர்பு - உயர்த்து.
உயரிய - உயர்த்த.
உயவு - உயங்குதல், கவலை, வருத் [தம்.
உயவுதல் - வருந்துதல்.
உயிர் - ஓசை.
உயிர்த்தல் - உயிர்ப்பு, மூச்சுவிடு [தல்.
உரம் - அறிவு.
உரவு - வலி.
உரவோன் - அறிவுடையோன், பெரியோன், வலியோன்.
உரற்று - முழங்குதல்.
உராறுதல் - இடித்தல், முழங்குதல்.
உரன் - வலி.
உராஅய் - உலாவி.
உரி - தோல்.
உரீஇ - உருவி.
உரீஇய - உரிஞ்சிய.
உரு - அச்சம், நிறம், வடிவு.
உருக்கு - நெய்.
உருட்டுதல் - செலுத்துதல். [தல்.
உருத்தல் - அழலுதல், தோன்று
உருப்ப - சூடுபிறக்க, வெய்தாக.
உரும் - இடி.
உரை - சொல், புகழ்.
உரைஇ - உலாவி.
உலந்தன்று - அழிந்தது.
உலந்துழி - இறந்தவிடத்து.
உலமருவோர் - உழல்வோர்.
உலர்தல் - உலருதல், வாடுதல்.
உலரி - வாடி.
உலை - கொதிக்கின்ற நீர், சமையலுக்குரிய உலை.
உலைக்கல் - அடைகல்.
உலைதல் - துன்புறுதல், தோல்வி
உலைவு - வறுமை. [யுறல்.
உவத்தல் - காதலித்தல், மகிழ்தல், விரும்புதல்.
உவர்நிலம் - களர்நிலம். [கொடை.
உவரா ஈகை - வெறுப்பில்லாத

உவல், உவலை - தழை.
உவவு - உவாநாள்.
உவித்தல் - அவித்தல்.
உவியல் - அவியல்.
உழக்கல் - கலக்குதல்.
உழத்தல் - நடத்தல், பொருதல், வருந்துதல்.
உழாஅ நாஞ்சில் - நாஞ்சில் மலை.
உழிஞ்சில் - ஒருவகை மரம்.
உழிஞை - கொற்றான் வாகை.
உழுத்ததர் - உழுந்தின் சக்கை.
உழுபடை - கலப்பை.
உழுவை - புலி.
உழை - இடம்.
உழையோர் - பக்கத்தே வருவோர்.
உள் - ஊக்கம். [கோள்.
உள்ளம் - சூழ்ச்சி, நினைவு, மேற்
உள்ளாற்றுக் கவலை - ஆற்றிடைக்
உளப்படல் - அகப்படல். [குறை.
உளர்தல் - அசைத்தல், விரித்தல்.
உளை - தலையாட்டம், பிடரி மயிர்.
உளைய - வெறுப்ப.
உற்க - வீழ.
உற்கம் - எரிகொள்ளி.
உறந்தை - உறையூர்.
உறழ்தல் - ஒத்தல், மாறுபடுதல்.
உறற்க - உறுதொழியல்வேண்டும்.
உறீஇ - உறுவித்து.
உறு - மிக்க.
உறுதி - காரியம்.
உறுதுணை - மேவப்பட்ட துணை.
உறுப்பு - வடிவு.
உறுவர் - எதிர்ந்தவர், பெரியோர்.
உறை - ஆயுதங்களுக்குப் போடும் உறை, ஓளவு, பிரை, மழைத்
உறைநர் - தங்குவோர். [துளி.
உறைப்புழி - மழை பெய்யும் இட
உறையுள் - உறைதல், ஊர். [த்து.
உறைவி - உறைகின்றவள்.
உறைவு - உறைதல், வாழ்தல்.
உன்னம் - ஒரு மரம்.
ஊக்கம் - மேற்கோள்.
ஊக்குதல் - மேற்கொள்ளுதல்.

ஊக நுண்கோல் - ஊகம் புல்லின் ஈர்க்கு.
ஊகம் - ஒருவகைக் குரங்கு.
ஊகு - ஊகம்புல்.
ஊங்கணோர் - முன்னோர்.
ஊங்கு - முன்பு.
ஊசி - தைக்கும் கருவி, வடதிசை.
ஊட்டுதல் - நிறைத்தல்.
ஊணூர் : தழும்பனென்னும் உபகாரியின் ஊர்.
ஊதியம் - பயன், பொருள்.
ஊம் - ஊமன், ஊமை.
ஊர்தல் - ஏறுதல், செலுத்தல்.
ஊர்தி - நடை, வாகனம்.
ஊரன் - மருதநிலத் தலைவன்.
ஊராக்குதிரை - குதிரைமலை.
ஊழ் - முறை.
ஊழ்கோடு - செவ்வியழிந்தகொம்பு.
ஊழ்த்தல் - முதிர்ந்து சொரிதல்.
ஊழி - வாழ்நாள்.
ஊற்றம் - வலி.
ஊறு - புண்.
ஊன் - இறைச்சி, உடம்பு.
ஊன்றடி - தசைத்தடியாகிய மணை.
ஊன்றுதல் - தங்குதல்.
எஃகம் (எஃகு) - வேல்.
எஃகுதல் - குறைதல்.
எக்கர் - மணல் மேடு.
எச்சம் - உறுப்புக்குறைந்து பிறப்பது, சந்ததி.
எஞ்சுதல் - ஒழிவுபடுதல்.
எடுத்தல் - எழச்செய்தல்.
எடுப்புதல் - எழுப்புதல்.
எண் - எண்ணம், எண்ணிக்கை, சூழ்ச்சி.
எண்மை - எளிமை.
எதிர்தல் - ஏற்றல், பகைத்தல், மாறுபடுதல்.
எதிர்ந்தோர் - மாறுபட்டோர்.
எதிர்பு - பிதிர்ந்து.
எதிரே - முன்னே.
எந்திரம் - பொறி.
எந்தை - என்னுடைய இறைவன்.
எம்மனோர் - யாங்கள்.
எறித்தல் - உறைத்தல்.
எம்மோர் - எம்மவர்.
எம்மோன் - எம்முடைய தலைவன்.
எமர் - எம் சாதியார்.
எய்த வருதல் - அணுக வருதல்.
எய்துதல் - பொருந்துதல்.
எய்மான் - எய்ப்பன்றி.
எய்யாதாகின்று - அறியாததாயிற்று.
எயில் - அரண், ஓரூர், மதில்.
எயிற்றி - மறத்தி.
எயிறு - பல், யானைக்கொம்பு.
எயினர் - மறவர்.
எயினன் : ஒருபகாரி.
எரி - தீ, வான்மீன் விசேடம்.
எரு - சாணம்.
எருக்கம் - எருக்கு.
எருக்கிய - அறைந்துகொண்ட.
எருத்து - கழுத்து.
எருவை - பருந்து வகையுள் ஒன்று.
எல் - இரவு, சூரியன், பகற்பொழுது, விளக்கம்.
எல்லி - இரவு, சல்லரியென்னும் வாத்தியம்.
எல்லின்று - ஒளி மழுங்கியது.
எல்லை - பகல், வரம்பு.
எவ்வி : ஒரு தலைவன்.
எவ்வம் - துன்பம், வருத்தம்.
எழில் - அழகு, உயர்வு, எழுச்சி, பெருமை.
எழிலி - மேகம்.
எழிலிய - அழகுபெற்ற.
எழினி - அதியமான், அதியமான் மகன்.
எழினியாதன் : ஒருபகாரி.
எழு - கணைய மரம்.
எழுதரூஉ - எழுந்து.
எழூஉ - கணையமரம்.
எள் - இகழ்தல், ஒரு தானியம்.
எள்ளுதல் (எள்ளுறுதல்) - இகழ்தல்.
எற்படு பொழுது - அத்தமிக்குங் காலம்.
எற்று - எத்தன்மைத்து.
எற்றுதல் - மோதுதல்.
எறி - வீசுதல்.
எறிகோல் - பறையை அடிக்குங் குறுந்தடி.
எறித்தல் - உறைத்தல்.
எறிதல் - அடித்தல், அழித்தல், அறைதல், ஒத்துதல், கொட்டு

தல், முறித்தல், வீசுதல், வெட்டு
தல்.
எறிபுனம் - வெட்டிச் சுட்ட கொல்
எறுழ் - வலி. [லைநிலம்.
என்ப - அசைநிலை, என்று சொல்
என்பு - எலும்பு. லுவர்.
என்றூழ் - கோடைக் காலம்.
என்னதூஉம் - சிறிதும். [கணவன்.
என்னை - என் இறைவன், என்
எனப்படுவது - என்று சிறப்பிக்கப்
எனவ - என்னுடையன. [படுவது.
எனைத்து - எவ்வளவினது.
எனைத்தும் - சிறிதும்.
எனைப்பகை - எல்லாப் பகை.
எனைப்பல் - எத்துணையும் பல.

ஏ : அசைநிலை.
ஏஎய் - ஏவி. [யேறுங் கருவி.
ஏணி - எல்லை, மதிலிற் சாத்தி
ஏத்துதல் - புகழ்தல்.
ஏதின்மாக்கள் - அயலோர்.
ஏந்துதல் - எடுத்தல், ஓங்கல், மேம்
ஏந்தெழில் - மிக்க அழகு. [படுதல்.
ஏமம் - அரண், இன்பம், காவல்.
ஏமாந்த - ஆசைப்பட்ட.
ஏமாந்து - இன்புற்று.
ஏமுறுதல் - இன்பமுறுதல்.
ஏய்த்தல் - ஒத்தல். [பொலிவு.
ஏர் - எழுச்சி, ஒப்பு, தோற்றப்
ஏரின் வாழ்நர் - உழவர்.
ஏவல் - பணிவிடை.
ஏவுதல் - செலுத்தல்.
ஏழ் - எழுச்சி.
ஏற்றை - ஆண். [யேறு, எறிதல்.
ஏறு - ஆண்விலங்கு, இடபம், இடி
ஏறை - ஏறைக்கோன்.
ஏனல் - தினை.

ஐ - சாரியை, தலைவன், முன்னிலை
யை விளக்கும் விகுதி.
ஐது - மெல்லிது.
ஐயவி - வெண்சிறு கடுகு.
ஐவர் - பாண்டவர் ஐவர்.
ஐவனம் - ஒருவகை நெல்.
ஒக்கல் - சுற்றம்.

ஒசிதல் - முறிதல்.
ஒட்பம் - விளக்கம்.
ஒடிதல் - இடையறுதல்.
ஒடியாது - ஒழியாது.
ஒடுக்கம் - ஒடுங்கிய நிலை.
ஒடுக்குதல் - அடக்குதல்.
ஒடுங்காழ்ப் படலை - ஒடு மரத்தின்
கழிகளாலாகிய கட்டுக் கதவு
(படல்.) [தல், சோம்புதல்.
ஒடுங்குதல் - ஒதுங்குதல், ஒளித்
ஒண்மை - விளக்கம்.
ஒதுக்கு - இயங்குதல், நடை.
ஒதுங்குதல் - நடத்தல், வளைத்து
ஒப்ப - தக. [வைத்தல்.
ஒய்தல் - செலுத்துதல்.
ஒய்யும் - கொண்டுசெல்லும்.
ஒய்யென - விரைவில்.
ஒய்வல் - செலுத்துவேன்.
ஒராஅ - தப்பாத. [பெற்றிப்பட.
ஒராங்கு - ஒருபடியாக, ஒரு
ஒரீஇ - நீங்கி. [யுடைய பறை.
ஒருகண்மாக்கிணை - ஒருபக்கத்தை
ஒருத்தல் - ஏறு.
ஒருதலை - துணிவு.
ஒல்கல் - தளர்தல்.
ஒல்லா - பொருந்தாத.
ஒல்லாய் - உடம்படாய்.
ஒல்லார் - மாட்டாதார்.
ஒல்லுவது - இயலும் பொருள்.
ஒல்லையூர்நாடு : ஒரு நாடு.
ஒல்வான் - உடம்படுவான்.
ஒலிக்குந்து - ஒலிக்கும், தழைக்
ஒலிதல் - தழைத்தல். [கும்.
ஒலியற்கண்ணி - தளிர்மாலை.
ஒலியன்மாலை - வளையமாலை.
ஒழிதல் - படுதல், வீழ்தல்.
ஒழுகுதல் - ஓடுதல், நடத்தல்.
ஒழுகை - சகடம்.
ஒளி - பிறர்க்கு அச்சமுண்டாதற்
குக் காரணமான நன்மதிப்பு,
விளக்கம்.
ஒளித்தல் - மறைத்தல்.
ஒளிர்வரூஉம் - விளங்கும். [தல்.
ஒளிறுதல் - ஒளிசெய்தல், விளங்கு

ஒற்கம் - வறுமை.
ஒற்றல் - அடித்தல், சாய்த்தல், வீழ்த்தல்.
ஒறுத்தல் - தண்டித்தல்.
ஒறுவாய் - மூளிவாய்.
ஒன்று - அறம், ஒரு காரியம்.
ஒன்றுபடுதல் - ஒருபெற்றிப்படுதல்.
ஒன்றுமொழி - வஞ்சினம்.
ஒன்றோ : எண்ணிடைச் சொல்.
ஒன்னார் - பகைவர்.
ஓ : அசைநிலை.
ஓக்கிய - எடுக்கப்பட்ட.
ஓங்கல் - உயர்ச்சி.
ஓச்சல் - உயர்த்தல், எற்றுதல்.
ஓடுதல் - புறங்கொடுத்தல்.
ஓடை - நெற்றிப்பட்டம்.
ஓதநீர் - ஒலியையுடைய கடல்.
ஓதி - கூந்தல், பனிச்சை.
ஓதை - ஓசை.
ஓப்புந்து - ஓட்டும்.
ஓப்புநர் - ஓட்டுவார்.
ஓம்பல் - மறைத்தல்.
ஓம்புமதி - பாதுகாப்பாயாக.
ஓர் : அசைநிலை.
ஓர்த்தல் - செவிதாழ்த்துக்கேட்டல்.
ஓராற்று - ஒருதன்மைத்து.
ஓரன்ன - ஒத்த.
ஓரி - ஒரு வள்ளல், தேன் முதிர்ந்தாற் பாக்கும் நீலநிறம், மூசுக்கலை.
ஓரும் : அசைச்சொல்.
ஓரை - விளையாட்டு.
ஓலை - குடை.
ஓவம் - சித்திரம்.

கங்குல் - இரவு.
கச்சை - ஒருவகை உடை.
கசடு - அழுக்கு.
கசிதல் - இரங்குதல்.
கசிவு - இரக்கம், வியர்ப்பு.
கஞலுதல் - நெருங்குதல்.
கட்கும் - களையும்.
கட்சி - காடு, சேக்கை, புகலிடம்.
கட்டு - தழைச்செறிவு, தளம்.
கட்டூர் - பாசறை.
கட்டேறல் - கள்ளாகிய தெளிவு.
கடகம் - வளை.
கடத்தல் - அழித்தல், எதிர்நின்று கொல்லல், வெல்லுதல்.
கடந்தடுதல் - வஞ்சியாது எதிர்நின்று கொல்லுதல்.
கடப்பு - வெற்றி.
கடம் - காடு.
கடம்பன் : ஒருசாதியினன்.
கடவ - செய்தற்குரியன.
கடவர் - கடன்காரர், படைவீரர்.
கடவன் - கடப்பாடாகவுடையவன்.
கடவுதல் - விரையச் செலுத்துதல்.
கடறு - சுரம், மலைச்சாரல்.
கடன் - இலக்கண முறைமை, கடமை, கிரியை, செய்தற்குரிய செயல், முறைமை.
கடாஅயானை - மதயானை.
கடாவழித்தல் - கடாவிடல்.
கடி - காவல், மிகுதி, விரைவு, விளக்கம்.
கடிகா - காவலையுடைய இளமரக்கா.
கடிதல் - நீக்குதல், போக்கல்.
கடிப்பு - குறுந்தடி.
கடிமரம் - காவல்மரம்.
கடு - நஞ்சு.
கடுகுதல் - வெம்மையுறுதல்.
கடுங்கண் - தறுகண்மை, வன்கண்மை.
கடுத்தல், கடுப்பு - ஒத்தல்.
கடும்பு - சுற்றம்.
கடுமா - யானை, விரைந்த செலவையுடைய மிருகம்.
கடுமை - மிகுதி, விரைவு, வெப்பம்.
கடுவளி - பெருங்காற்று.
கடுவன் - ஆண்குரங்கு.
கடை - வாயில்.
கடைஇ - முடுகி.
கடைஇய - செலுத்திய.
கடைக்கொள்ளி - கொள்ளிக்கட்டை.
கடைசியர் - உழத்தியர்.
கடைமுகம் - வாயில்.
கடையூஉ - செலுத்தி.
கண் - அசைநிலை, அழகு, இடம், உடலிடம், கண்ணோட்டம், கணு,

துளை, வாத்தியத்தில் அடிக்கும்
கண்டிகும் - கண்டேம். [பக்கம்.
கண்டிசின் - கண்டேன்.
கண்டீரக்கோன் : ஒரு தலைவன்
கண்ணி - தலையிற் சூடுதற்குரிய
கண்ணியது - கருதியது. [மாலை.
கண்ணிலி - கண்ணோட்ட மில்லா
தவன்.
கண்ணுதல் - கருதுதல்.
கண்ணுளர் - கூத்தர்.
கண்ணுறை - மேலீடு.
கண்ணென - விரைய.
கண்ணோடல் - இரங்குதல்.
கண்படை - தூங்குதல்.
கண்பு - ஒருவகைக்கோரை.
கண்பொருதல் - கண்ணொளியோடு
மாறுபடுதல்.
கண்மாறல் - இடம் மாறுதல்.
கண்விழித்தல் - மலர்தல்.
கணம் (ன்) - இனம், கூட்டம்.
கணிச்சி - குந்தாலி, மழு.
கணையம் - கணையமரமென்னும் ஆயு
கதம் - சினம். [தம்.
கதவம் - கதவு,
கதழ்தல் - ஓடுதல், விரைதல்.
கதி - நடை.
கதிர் - ஒளி, சுடர், சூரியகிரணம்,
தானியக்கதிர், நூல் நூற்கும்
கதுப்பு - கூந்தல். [கருவி.
கதுவாய் - வடு.
கதுவுதல் - கவர்தல்.
கந்தம் - தூண்.
கந்தன் : ஒரு தலைவன். [யர்.
கந்தாரம் - ஒருவகை மதுவின் பெ
கந்து - கம்பம், தறி, பற்றுக்கோடு.
கபிலநெடுநகர் : ஒரு நகர்.
கபிலர் : ஒரு நல்லிசைப் புலவர்.
கம்பம் - தூணம், நடுக்கம்.
கம்பலை - ஆரவாரம்.
கம்புள் - நீர்வாழ் பறவையுள்ஒன்று.
கம்மியன் - பொற்கொல்லன்.
கம்மென - விரைய.
கமழ்தல் - நாறுதல், பரத்தல்.
கயந்தலை - மெல்லிய தலை.

கயம் - ஆழ்ந்த நீர்நிலை, குளம், குள
வடிவுபோலும் புனர்பூசம், நீர்
நிலை, பள்ளம், வாவி.
கரக்கல் - மறைத்தல்.
கரகம் - குண்டிகை.
கரந்தை - ஒருவகைப் பூடு.
கரம்பை - தரிசுநிலம்.
கரவு - மறைத்தல், வஞ்சனை.
கராஅம் - முதலை.
கரிகால்வளவன் : ஒரு சோழன்.
கரு - கருப்பம், முட்டை.
கருங்கலன் - மண்ணாற் செய்த
கருப்பை - எலி. [பாண்டம்.
கரும்பனூரன் - கரும்பனூர்கிழான்.
கரும்பினெந்திரம் - கரும்பாலை.
கருமை - பெருமை, வலிமை.
கருவி - தொகுதி.
கருனை - பொரிக்கறி.
கல் - பாறை, மலை.
கல்லா வல்வில் - கற்கவேண்டாத
வலிய விற்படை.
கல்லென்றல் - முழக்கமுண்டாதல்.
கலக்குறுந்து - கலக்கும்.
கலங்கல் - சரிதல்.
கலங்கள் - கலங்கிய கள்.
கலஞ்செய்கோ - வேட்கோ.
கலப்பை - சமைத்தற்குரிய கருவி
களை யடக்கிய பை, மூட்டைக்கள்.
கலம் - அணிகலம், குப்பி, சமைத்
தற்குரிய பாத்திரம், பாத்திரம்,
கலவம் - மயிற்பீலி. [மரக்கலம்.
கலன் - கப்பல், யாழ்.
கலாத்தானை - போர் செய்யும்
கலாவல் - கலத்தல். [படை.
கலி - ஆரவாரம், ஒலி, செருக்கு,
கலிங்கம் - ஆடை. [புகழ்.
கலித்தல் - தழைத்தல், மிகுதல்.
கலுழ் கண்ணூறல் - கலங்கிய
ஊறல்நீர்.
கலுழ்தல் - அழுதல், கலங்குதல்.
கலை - ஆண்குரங்கு, ஆண்மான்,
முசுக்கலை.
கவ்வை - எள்ளிளங்காய்.
கவசம் - மெய்புகு கருவி.

கவடு - கிளை.
கவர்தல் - கொள்ளையடித்தல், விரும்புதல்.
கவர்பரி - பகுந்து விரையும் செலவு.
கவர்பூட்டல் - கொள்ளை யூட்டல், பலகாலாய் ஓடி ஊட்டுதல்.
கவரி - கவரிமான்.
கவலை - கவர்த்த வழி.
கவளம் - யானையின் உணவு.
கவாஅன் - பக்கம்.
கவை - பிளப்பு.
கவைஇய - அகத்திட்ட.
கவிகை - இடக்கவிந்த கை.
கவிதல் - கீழ்நோக்கல்.
கவிர் - முள்ளுமுருங்கை.
கவிழ்தல் - மறிதல்.
கவின் - அழகு, ஒளி.
கவினல் - அழகு பெறல்.
கவினை - ஒளியையுடையை.
கவுரியர் - பாண்டியர்.
கவுள் - கன்னம்.
கழங்கு - கழலென்னும் மகளிர் விளையாட்டுப்பொருள்.
கழஞ்சு - பொன்னை நிறுக்கும் அளவையுள் ஒன்று.
கழல் - கழற்சிக்காய், வீரக்கழல்.
கழலுதல் - நழுவுதல்.
கழனி - வயல்.
கழால் - கழுவுதல், களைதல்.
கழி - உப்பங்கழி, காம்பு, குச்சி.
கழிகல மகடூஉ - ஒழிக்கப் பட்ட அணிகலத்தையுடைய பெண்.
கழிகலமகளிர் - விதவைகள்.
கழிதல் - இறத்தல்.
கழிப்பி - முடித்து.
கழிப்பு - கழித்தல்.
கழை - கோல், மூங்கில்.
கழுமல் - கலத்தல்.
கழுவாய் - தீர்திறம்.
கழூஉ - கழுவி.
கள் - தேன், மது.
கள்ளி - ஒரு முட்புதல்.
களங்கனி - களாப்பழம்.
களம் - இடம், நெற்களம், போர்க்களம், வேள்விச்சாலை.
களம்வேட்டல் - களவேள்வி செய்தல்.
களமர் - களத்திற் பணி புரிவோர்.
களர் - உவர்நிலம்.
களரி - உவர்நிலம், காடு.
களரியம் பறந்தலை - புறங்காடு.
களவுப்புளி - களாப்பழத்தின் புளிப்பு.
களன் - தொழுவம், போர்க்களம்.
களி - செருக்கு, மதம்.
களியும் - நீர்வற்றிக் களிமயமாகும்.
களிற்றுயிர் - பெருவங்கியம்.
களிற்றொருத்தல் - ஆண்யானை.
களிறு - பன்றி யேறு.
களைஇயர் - நீக்குதற்கு.
களைமே - தீர்ப்பாயாக.
களையுநர் - தீர்ப்பார்.
கறக்குந்து - கறக்கும்.
கறங்கல் - ஒலித்தல்.
கறவை - பசு.
கறி - மிளகு.
கறித்தல் - தின்னுதல்.
கறுழ் - கடிவாளம்.
கறை - உரல், கறுப்பு.
கறையடி - இரத்தத்தாற் சிவந்த அடி.
கறையணல் - கறுப்பை யுடைய கழுத்து.
கன்று - ஆனைக்கன்று.
கனலி - சூரியன்.
கனிதல் - நெகிழ்தல்.
கனை - செறிவு, திரட்சி, மிகுதி.
கா (காஅ) - சோலை.
காஞ்சி - ஒரு பண், ஒரு மரம், நிலையின்மை.
காட்சி - நூல், பார்வை.
காட்டல் - அறிவித்தல்.
காட்டு - செத்தை.
காடி - புளிங்காடி.
காடு - மயானம்.
காண் - காட்சி.
காண்கு - காண்பேன்.
காண்டக - காட்சிதக.
காண்டல் - கருதுதல், பார்த்தல்.
காண்பு - காட்சி.
காண்வர - அழகுபொருந்த.
காணுதல் - ஆராய்தல்.

காதல் - அன்பு, ஆசைத்தன்மை.
காதலர் - விருப்பமுடையோர்.
காந்தள் - ஒரு பூ.
காப்பனர் - காப்பவர்.
காப்பாளன் - காவலாளன்.
காம்பு - மூங்கில்.
காமம் - அன்பு, வேட்கை.
காமர் - அழகு.
காமரு - விரும்பத்தக்க.
காமுறுநன் - காமுறுவான்.
காய்தல் - சுடுதல், விடாய்த்தல்.
காய - சுமந்த.
காயம் - ஆகாயம்.
கார் - கார்காலம், மழை.
காரி : ஒரு குதிரையின் பெயர், மலையமான் திருமுடிக்காரி.
காரென் - புல்லென்ற.
காரை - ஒரு முட்செடி.
கால் - அடி, உருளை, காம்பு, கால்வாய், காலம், காற்று, மரத்தின் அடி.
கால்கழி கட்டில் - பாடை.
கால்வழி - காற்சுவடு.
காலம் - முடிவுகாலம்.
காலன் - யமன்.
காலை - காலம், வாழ்நாள்.
காவல் - காக்கப்படும் தேயம்.
காவலன் - காத்தவன்.
காவினெம் - சுமந்தேம்.
காவு - சோலை.
காழ் - கட்டை, காம்பு, நாராசம், முத்து, வடம், வயிரம், விதை.
காழகம் - ஆடை.
காளை - இளையோன், வீரன்.
கானக்கோழி - காட்டுக்கோழி.
கானப்பேர் : திருக்கானப்பேர் என்னும் ஊர்.
கானம் - காடு.
கானல் - கடற்கரை, மலைப்பக்கம்.
கானவாரணம் - காட்டுக்கோழி.

கிடக்கை - இடம், உலகம்.
கிடங்கில் - அகழி.
கிடப்பி - கிடத்தி.
கிடை - நெட்டி.
கிண்கிணி - சதங்கை.
கிண்டுதல் - கிளறுதல்.
கிணை - உடுக்கை, பறை, போர்ப்பறை.
கிணைமகள் - விறலி.
கிணைமகன் - கிணையன்.
கிழமை - உரிமை.
கிழமையோன் - உறவினோன்.
கிழவன் - கணவன், தலைவன்.
கிழவோய்-உடையோய், உரியோய்.
கிழித்தல் - போழ்தல்.
கிள்ளி - நலங்கிள்ளி.
கிள்ளிவளவன் : ஒரு சோழன்.
கிளத்தல் - சொல்லுதல்.
கிளர்தல் - மிகுதல்.
கிளை - சுற்றம்.
கிளைத்தல் - கிளறுதல்.

கீழ்மடை - கடைமடை.
கீழ்மரம் - அச்சுமரம்.
கீள்வது - உடைவது.

குச்சு - குச்சுப்புல்.
குட்டம் - ஆழம், மடு.
குட்டுவன் - குட்ட நாட்டையுடையவன்.
குடக்கு - மேற்கு.
குடகடல் - மேல்கடல்.
குடதிசை - மேற்கு.
குடந்தை - வளைவு.
குடபுலம் - குடநாடு.
குடம்பை - கூடு.
குடர் - குடல்.
குடவர் - குடநாட்டார்.
குடாஅது - மேற்கின்கண்ணது.
குடி - குடிமக்கள், குலம், ஜனம்.
குடிஞை - பேராந்தை.
குடிப்பாடு – குலத்திற்குப் பொருந்திய வழக்கம்.
குடுமி - சிகரம், தலைமயிர், முடிபு, முதுகுடுமிப் பெருவழுதி.
குடை - பனமட்டையாற் செய்யப்பட்ட ஒரு கருவி.
குண்டு - ஆழம், குழி.
குணக்கு - கிழக்கு.
குணகடல் - கீழ்கடல்.
குணதிசை - கீழ்த்திசை.
குணாஅது (குணாது) - கிழக்கின் கண்ணது.
குணில் - குறுந்தடி.

குதிரை : ஒரு மலை
குப்பை - குவியல், திரட்சி, நெற்பொதி.
குமணன் : ஒரு கொடையாளி.
குமரி-கன்னியாகுமரி, கன்னியாறு.
குமரிப்படை - அழியாப்படை.
குமரிமகளிர் - கன்னியர்.
குமிழ் - குமிழம்பழம்.
குய் - தாளிப்பு.
குயிலுதல் - செய்தல்.
குரம்பை - சிறிய மனை, சிறு குடில்.
குரல் - ஓசை, கதிர், குரலென்னும் தாளம், கொத்து, தோகை. வார்த்தை.
குரவை - குரவைக் கூத்து.
குரால் - ஒருவகைப் பசு, கூகைப் பெடை, கோட்டான்.
குரிசில் (குருசில்) - தலைவன்.
குரீஇ - குருவி.
குருதி - இரத்தம்.
குருந்து - குருந்தமரம்.
குரும்பை - நுங்கு.
குருளை - குட்டி.
குரூஉ - கனம், நிறம்.
குரை : அசைநிலை.
குலவு, குலா - வளைவு.
குவளை - செங்கழுநீர், நீலமலர்.
குவவு - திரட்சி.
குவிதல் - கூம்புதல்.
குவை - குவிதல், திரள்.
குவைஇ - குவித்து.
குழிசி - பானை.
குழிதல் - குழியாதல்.
குழீஇய - திரண்ட.
குழூஉ - திரட்சி.
குழை - தளிர்.
குழைந்த - தழைத்த.
குளமீன் - ஒரு நட்சத்திரம்.
குளவி - காட்டுமல்லிகை, மலை மல்லிகை.
குளித்தல் - உள்புகல், மூழ்குதல்.
குற்ற - பறித்த.
குற்றில் - குறியகொட்டில்.
குறடு - வண்டியுருளையின் குடம்.
குறள் - குறுகிய உருவம்.
குறித்தல் - கருதுதல்.
குறித்துமாறெதிர்ப்பை, குறியெதிர்ப்பை - குறித்த பிரதியுபகாரம்.
குறுகல் - அணுகல், தேய்ந்து குறைதல்.
குறுதல் - இடித்தல், பறித்தல்.
குறும்பர் - சிற்றரசர்.
குறும்பறை - பேடை.
குறும்பு - அரண், குறும்பர், சிற்றரண்.
குறும்பூழ் - காடை.
குறுமாக்கள் - சிறுபிள்ளைகள், பிள்ளைகள்.
குறூஉந்து - பறிக்கும்.
குறை - குறைக்கப்பட்ட இறைச்சி, தறிக்கப்பட்ட துண்டம், துண்டு, முடிக்கப்படும்பொருள்.
குன்றி - குன்றிமணி.
குன்று - சிறுமலை, மலை.
கூஉ - கூப்பீடு.
கூஉம் - கூப்பிடும்.
கூகை - கோட்டான், பேராந்தை.
கூடம் - சம்மட்டி.
கூடல் - சங்கமுகம், மதுரை.
கூடு - தானியங்கள் வைத்துள்ள சேர், தொகுதி, நெற்கூடு.
கூத்தர் - கூத்தாடுபவர்.
கூதிர் - கூதிர்க்காலம்.
கூந்தல் - பெண்மயிர்.
கூந்தற்கிழவர் - கூந்தலைத் தீண்டுதற்குரியவர்.
கூம்பல் - குவிதல்.
கூம்பு - பாய்மரம், முகை.
கூர்தல், கூரல் - மிகுதல்.
கூலம் - பலபண்டம்.
கூவல் - கிணறு.
கூவிளம் - வில்வம்.
கூவை - ஒருவகைக் கிழங்கு.
கூழ் - ஒருவகை உணவு, சோறு, பயிர், பொருள்.
கூழ் அள்ளல் - செறிந்த சேறு.
கூழை - போர், மயிர்.
கூளியர் - ஆறலைகள்வர், மறவர்.
கூற்றம் - யமன்.
கூற்று - சிவபெருமான், யமன்.

கூன் - வளைந்த வுருவம்.
கெடிறு - கெளிற்று மீன்.
கெடு - அழிதல், கேடு.
கெண்டுதல் - கிண்டுதல்.
கெண்டை - கயல்.
கெழீஇ - பொருத்தி.
கெழு - பொருந்திய.
கேட்டமாறு - கேட்டபரிசு.
கேட்டிசின் - கேட்டேன்.
கேணி - கிணறு.
கேழ் - நிறம்.
கேழல் - பன்றி.
கேள் - உறவு, நட்பு, நண்பர்.
கேள்வன் - கணவன்.
கேள்வி - கேட்டல், யாழ்.
கேளன்மார் - கேளாதொழிவாராக.
கேளியர் - கேட்க.
கேளிர் - சுற்றத்தார், நண்பர்.
கை - கைப்பிடி, செயல்.
கைகவரிரும்பு - உலைத்துருத்தியின் வாயிரும்பு.
கைதூவுதல் - கையொழிதல்.
கைப்போன் - செலுத்துவோன்.
கைபிணைதல் - கைகோத்தல்.
கைம்மா, கைம்மான், கைமான் - யானை.
கைம்முற்றல - முடியா.
கையறல் - இல்லையாதல்.
கையறவு - செயலறவு, மிடிமை.
கைவழி - யாழ்; ஆகுபெயர்.
கொங்கர் - ஒருவகை வீரர்.
கொங்கு - கொங்குநாட்டார்.
கொட்குவர் - திரிவர்.
கொட்பு (கொட்குதல்) - சுழற்சி.
கொடி - ஒழுங்கு, துவசம்.
கொடிது - தீத்தொழில்.
கொடுஞ்சி - தேர் உறுப்புக்களுள் ஒன்று.
கொடு மரம் - வளைந்தவில்.
கொடுமை-கொடுந்தொழில், வளைவு.
கொடுவரி - புலி.
கொண்டல் - கீழ்காற்று, மேகம்.
கொண்டன்று - கொண்டது.
கொண்டி - கொள்ளை, திறை, பொருளின் மிகுதி.
கொண்டை - மயிர் முடிவகையுள் ஒன்று.
கொண்பெருங்கானம் : கொண்கான மென்னும் ஊர்.
கொண்ம் - கொள்ளுங்கள்.
கொண்மார் - கொள்ள.
கொண்மூ - மேகம்.
கொய்சுவல் - கத்தரிக்கப்பட்ட பிடரிமயிர்.
கொய்தல் - அறுத்தல், கத்தரித்தல், பறித்தல்.
கொல் : அசைநிலை, ஐயப்பொருளிலும் வியப்புப்பொருளிலும் வருமிடைச் சொல்.
கொல்லல் - தூர்த்தல்.
கொல்லன் - கொற்றொழில் புரிவோன்.
கொல்லி : ஒரு மலை.
கொல்லுதல் - சாய்த்தல், தீர்த்தல்.
கொலைவன் - கொல்லுபவன்.
கொழுமீன் - ஒருவகை மீன்.
கொள் - குடைவேல்.
கொள்கை - கோட்பாடு, விரதம்.
கொள்ளார் - பகைவர்.
கொள்ளை - கைக்கொள்ளும் பொருள்கள், மிகுதி.
கொளீஇ - கொண்டு, கொள்ளுவித்து, கொளுத்தி.
கொளீஇய - கொளுத்திய, சேர்த்திய.
கொளை - பாட்டு.
கொற்றம் - வெற்றி.
கொற்றுறை - கொல்லனது பணிக்களரி.
கொன் - பயனின்மை.
கொன்றோர் - சிதைத்தோர்.
கொன்னும் - ஒருபயனில்லாமலும்.
கொன்னே - பயனின்றி.
கோ - அரசன், அரசாட்சி, வேட்கோ.
கோசர் - ஒருவகை வீரர்.
கோட்டங்கண்ணி - வளைந்த கண்ணி.
கோட்டம் - கோயில்.
கோட்டுமா - யானை.
கோட்டுமீன் - சுறுமீன்.
கோடல் - காந்தள்.
கோடியர் - கூத்தர்.
கோடை - கோடைக்காலம்.
கோடு - சிகரம், பக்கம், மாக்கொம்பு, முருடு, யாழ்த்தண்டு.

கோடுதல் - வளைதல்.
கோண்மா - புலி.
கோண்மீன் - கிரகம்.
கோது - சக்கை.
கோதை - சேரன், மகளிர்அணியும் மாலை, மார்பின் மாலை, மாலை.
கோமான் - தலைவன்.
கோய் - கள்முகக்கும் பாத்திரம்.
கோயில் - அரண்மனை.
கோல் - அம்பு, கோற்றொழில், தடி, தண்டு, துலாக்கோல்.
கோலணை - வளைந்த படுக்கை.
கோலி - வளைத்து.
கோவலூர் - திருக்கோவலூர்.
கோழி - உறையூர்.
கோள் - அறுத்தல், உள்ளீடு, குலை, கொள்ளப்பட்டவை, கொள்ளுதல், முகம்.
கோளி - பூவாதுகாய்க்கும் மரம்.
கோன் - வேந்தன்.

சகடம் - வண்டி.
சடை - ஜடை.
சமம் - போர்.
சாஅய் - மெலிந்து.
சாகாடு - உருளை, சகடம்.
சாடி - ஒருவகைப்பானை, கட்சாடி.
சாத்தன் : ஒல்லையூர் கிழான் மகன் பெருஞ்சாத்தன், ஒருபகாரி.
சாந்தம் - சந்தனம்.
சாந்து - அரைத்த விழுது, சந்தனம்.
சாபம் - வில்.
சாய்த்தல் - தொலைத்தல்.
சாய்தல் - இளைத்தல்.
சாய்மார் - சாய்க்க வேண்டி.
சாயல் - மென்மை, விடாயாலுண்டான மென்மை.
சாயின்று - சாய்ந்தது.
சார் - பக்கம்.
சார்தல் - கிட்டுதல்.
சாரல் - மலைச்சாரல்.
சால் - படைச்சால்.
சாலும் - அமையும்.
சாபம் - வில்.
சாற்றல் - விற்றல்.
சாறு - ரஸம், விழா.
சான்ற - அமைந்த.
சான்றோர் - அமைந்தோர், போர்வீரர்.
சிதடன் - குருடன்.
சிதடி - குருடு.
சிதர் - துளி.
சிதலை - கறையான்.
சிதறல் - சிதறியவை, சொரிதல்.
சிதார் - கந்தை.
சிதாஅர்வள்பு - சிதைந்த வார்க்கட்டு.
சிதைத்தல் - அழித்தல்.
சிதைதல் - அழிதல், அறுதல், சிதறல், மூரிதல்.
சிந்தியேன் - நினையேன்.
சிந்தை - எண்ணம்.
சிமை - உச்சி, சிகரம்.
சிமையம் - உச்சி.
சில்விளை வரகு - சிலவாக விளைந்த வரகு.
சிலசொல் - மெத்தென்ற சொல்.
சிலம்பு - ஒருவகைக்காலணி, மலை.
சிலை - இந்திரவில், வில்.
சிலைத்தல் - முழங்குதல்.
சிவணிய - பொருந்திய.
சிவத்தல் - வெகுளல்.
சிவப்பு - கோபம், செம்மை.
சிற்றில் - சிறுவீடு.
சிறத்தல் - மிகுதல்.
சிறந்தன்று - கனத்தது.
சிறப்பு - செல்வம், தலைமை.
சிறாஅர் - சிறு பிள்ளைகள்.
சிறிது - மெல்ல.
சிறியிலை - சிறிய இலை,
சிறுகுடி : ஒரூர்.
சிறுபதம் - தண்ணீர்.
சிறுமுழா - ஓர் இசைக்கருவி.
சிறுமை - நோய், புன்மை.
சிறுவரை - சிறிது நாள்.
சிறுவழி - சிறிய இடம்.
சிறுவன் - புதல்வன்.
சிறை - அணை, அரண், காவல், சிறகு, பக்கம், வேலி.
சினம் (ன்) - கோபம், வெம்மை.
சினவின் - கொதித்தெழுந்தால்.
சினை - மரக்கொம்பு.

சினைஇ - கோபித்து.
சினைஇயோர் - சினப்பித்தோர்.
சினைப்பூ - கோட்டுப்பூ.
சீ - பெருக்குதல். [தாழ்.
சீப்பு - மதிலிலுள்ள ஒருவகைத்
சீர் - அளவு, சீர்மை, தலைமை, தா
ளம், நன்மை, பெருமை.
சீர்த்தி - புகழ்.
சீரை - துலாக்கோற்றட்டு.
சீற்றம் - வெகுளி.
சீறிடம் - சிறிய இடம்.
சீறியாழ் - சிறிய யாழ்.
சீறூர் - சிறிய ஊர்.
சுகிர்தல் - பிளத்தல், வடித்தல்.
சுட்டிய - நன்கு மதிக்கப்பெற்ற.
சுட்டுதல் - காரணமாதல், குறித்தல்.
சுடர் - ஒளி, கதிர், சந்திரன், சூரி
யன், விளக்கம், விளக்கு.
சுதை - சுண்ணச்சாந்து.
சும்மை - ஆரவாரம்.
சுரத்தல் - மிக்குச் சொரிதல்.
சுரிதல் - சுருளுதல்.
சுருக்கல் - கட்டுதல்.
சுரும்பு - ஒருவகை வண்டு. [சுரை.
சுரை - உட்டுளை, ஒருகொடி, திருகு
சுவல் - தோள், பிடர், மேட்டுநிலம்.
சுவை - நுகர்தல்; ஆகுபெயர்.
சுளகு - ஒருவகை முறம்.
சுளை - பலாச்சுளை.
சுற்றம் - இனம், கிளை, மந்திரச்
சுறவு - சுறுமீன். [சுற்றத்தார்.
சுனை - மலையிலுள்ள நீர்நிலை.
சூட்டுதல் - நடாத்துதல்.
சூடு - இறைச்சி, சூட்டிறைச்சி,
நெற்கதிர்.
சூடுதல் - தலையில் அணிதல்.
சூர்ப்பு - வளைவு.
சூல் - கருப்பம்.
சூழ்ச்சி - ஆராய்தல்.
சூழ்தல் - உசாவுதல்.
சூழி - ஒருவகை நீர்நிலை.
சூளை - குயவன் கலஞ்சுடும் இடம்.

செக்கர் - செந்நிறம். [தல்.
செகுத்தல் - அழித்தல், போக்கு
செங்குரலி - ஒருவகைக் கொடி.
செங்கோல் - செவ்விய ஆட்சி.
செத்து - நினைந்து.
செதுக்கண் - ஒளி மழுங்கின கண்,
செதுக்கின குடர்.
செந்தில் : முருகவேள் தலங்களுள்
செம்பியர் - சோழர். [ஒன்று.
செம்மல் - தலைமை, தலைவன்.
செம்மாத்தல் - தலைமை தோன்றி
யிருத்தல்.
செம்மீன் - செவ்வாய் மீன்.
செய் - செய்கை, தொழில்.
செய்தி - செய்கை, நன்றி.
செய்ப - செய்யத்தகுவன.
செய்ம்மே - செய்வாயாக.
செய்யலர் - செய்யார்.
செய்யோன் - முருகன்.
செய்வினை - போர்.
செய்வு - செய்தல்.
செயற்கை - தொழில்.
செயிர் - குற்றம்.
செயிர்த்தன்று - வெகுண்டது.
செரீஇ - செருகி.
செரு - போர்.
செருக்குதல் - பெருகுதல்.
செருந்தி - ஒரு மலர்மரம்.
செருப்பறை - போர்ப்பறை.
செருவம் - போர்.
செல் சார்வு - புகலிடம்.
செல்லலம் - செல்லேம். [விடுதல்.
செல்லுதல் - ஒழுகுதல், தோற்றல்,
செல்வக் கடுங்கோவாழியாதன்:
ஒரு சேரவரசன்.
செல்வு - செல்வம்.
செல்வுழி - செல்லும் உலகம்.
செலல் - செல்லுதல், பரத்தல்.
செலவு - கதி, செல்லுதல்.
செலியர் - தணிக, போவதாக.
செவ்வழி - மாலைக்குரிய பண்.
செவ்வானம் - செக்கர் வானம்.
செவ்வி - சமயம்.
செவ்விதின் - நேரே.

செவ்வியோர்-நடுவுநிலையுடையோர்.
செழியன் - நெடுஞ்செழியன், பாண்டியன்.
செற்றன்று - கறுவு கொண்டது.
செற்றும் - செறியும்.
செற்றை - சிறுதூறு.
செற்ருேர் - பகைவர்.
செறல் - சினம்.
செறிப்பு - செறித்தல்.
செறிதல் - பயிலுதல்.
செறிவு - அடக்கம்.
செறு - வயல்.
செறுத்தல் - அடக்கல், அடைத்தல்.
செறுவர் - பகைவர்.
சென்னி - உச்சி, சோழன், தலை, முடி.
சேஎய் - முருகக் கடவுள்.
சேஎய்நாடு - தூரிய நாடு.
சேக்கை - கட்டில்.
சேட் சென்னி : ஓரரசன்.
சேட்புலம் - தூரமாகிய இடம்.
சேடு - பெருமை.
சேண் - உயர்வு, சேய்மை, நெடுங்காலம்.
சேணேன் - நெடுந்தூரத்திலுள்ளவன்.
சேத்தல் - உறங்குதல், தங்குதல்.
சேப்ப - சிவப்ப.
சேமம் - பாதுகாப்பு.
சேமவச்சு- அச்சு முறிந்தபொழுது உதவும் அச்சு.
சேய் - முருகக்கடவுள்.
சேய்த்து - தூரமான இடத்திலுள்ளது.
சேயிழை - சிவந்த ஆபரணம்.
சேர்க்குந்து - சேர்க்கும்.
சேர்ப்பன் - நெய்தனிலத்தலைவன்.
சேர்ப்பு - கடற்கரை.
சேரலாதன் - சேரமான் கடுங்கோவாழியாதன்.
சேரி - தெரு.
சேவல் - ஆண்பறவை.
சேறி - போகின்ருய்.
சேறும் - செல்லுவோம்.
சொரிதல் - பொழிதல்.
சொல் - புகழ்மாலை.
சொல்லிய - போக்குதற்கு.
சொன்றி - சோறு.
சோணுடு - சோழநாடு.
சோர்தல் - வடிதல், வாடுதல்.
சோழர் - முடியுடைவேந்தர் மூவருள் ஒருவர்.
ஞமலி - நாய்.
ஞமன் - துலாக்கோலின்நடு, யமன்.
ஞாங்கர் - பக்கம்,மீது, முன்னே, மேலுலகம்.
ஞாட்பு - போர்க்களம்.
ஞாண் - கயிறு, வில்நாண்.
ஞாயில் - ஏப்புழைக்கு நடுவாய் எய்து மறையும் சூட்டு.
ஞாயிற்றெல்லை - பகற்காலம்.
ஞாயிறு - சூரியன்.
ஞாலம் - உலகம்.
ஞான்ற - வீழ்ந்த.
ஞான்று - நாள்.
ஞான்றை - சமயம், நாள்.
ஞிமிறு - தேனீ.
ஞெமர்தல் - பரத்தல்.
ஞெமுக்குதல் - அமுத்துதல்.
ஞெரேரென - விரைய.
ஞெலிகோல் - தீக்கடைகோல்.
ஞெலிதல் - கடைதல்.
ஞெள்ளல் - தெரு.
தகடு - பூவின் புறவிதழ்.
தகரம் - ஒரு மரம்.
தகவு - தகுதி.
தகாஅர் - தகுதியில்லாதோர்.
தகுந - தக்கவை.
தகை - அழகு, கூறுபாடு, தகுதி, தன்மை, பயில அடியிட்டு நடத்தல், யேம்பாடு.
தகைதல் - சுற்றுதல், பிணித்தல்.
தசும்பு - குடம், மிடா.
தசை - ஊன்.
தஞ்சம் - எளிமை.
தட்கும் - தளையாநிற்கும்.
தட்ப - தடுக்க.
தட்டை - கிளிகடிகருவி.
தட்டோர் - தடுத்தோர்.
தட - பெருமை.

தடவரல் - வளைதல்.
தடவு - ஓமகுண்டம், சுனை (ஆகு பெயர்), பெருமை.
தடவுச்சினை - பெரிய கொம்பு.
தடாரி - கிணைப்பறை.
தடி - ஊன், ஊன் துண்டம்.
தடிதல் - கொல்லுதல், வெட்டுதல்.
தடிவு - தடிதல்.
தடுத்தல் - தகைதல், மாற்றுதல்.
தண்டம் - அபராதம்.
தண்டல் - அமைதல், தணிதல், நீங்கல்.
தண்ணடை - மருதநிலத்து ஊர்.
தண்ணுமை - மத்தளம்.
தண்பணை - மருதநிலத்தூர், மருதநிலம்.
தண்மை - மென்மை.
தணிதல் - ஆறுதல், நீங்குதல்.
ததும்பல் - ஒலித்தல், நிறைதல்.
ததைதல் - சிதறல், சிதைதல்.
தப்பியோன் - கொன்றவன்.
தப்புதல் - கொல்லுதல், பிழைத்தல்.
தப்புந - தவறுவன.
தப - கெட.
தபுத்தல் - கெடுத்தல்.
தபுதல் - தீர்தல்.
தபுதி - அழிவு.
தம - தம்முடையன.
தமது - தம்முடைய பொருள்.
தமிழகம் - தமிழ்நாடு.
தமியர் - தனியர்.
தமியள் - தனியள்.
தமின் - தாருங்கோள்.
தயங்குதல் - அசைதல், விளங்குதல்.
தரீஇய - தரவேண்டி.
தருதல்-கைக்கொள்ளுதல், கொண்டுவரல்.
தரூஉந்து - தரும்.
தலை - அசைநிலை, இடம், ஏழாம் வேற்றுமை உருபு, தலைமை, பக்கம்.
தலைஇ - தலைப்பட்டு, துளியைப் பெய்து.
தலைஇய - சேர்ந்த, பெய்துமாறிய.
தலைக்கூடல் - சென்று பொருந்தல்.
தலைக்கை - முதற்கை.
தலைக்கொண்மார் - சேர.
தலைக்கொள்ளல் - தொடங்குதல்.
தலைச் செல்லல் - மேற்செல்லல்.
தலைத்தலை - இடந்தோறும், மேலும் மேலும்.
தலைநாண்மீன் - உச்சமான நட்சத்திரம்.
தலைநாள் - முதல்நாள்.
தலைப்பாடு - நேர்பாடு.
தலைப்பெய்தல் - கலத்தல்.
தலைப் பெயர்தல் - இடத்தினின்றும் நீங்கல், கழிதல்.
தலைமயங்கல் - கைகலத்தல்.
தலையளித்தல் - தலையளி செய்தல்.
தலையாலங்கானம் : ஓரூர்.
தலைவருதல் - கூடுதல், முடிதல்.
தவ - மிக.
தவல் - இறந்துபடுதல்.
தவழ்தல் - பரத்தல்.
தவிர்த்தல் - தடுத்தல்.
தவிர்தல் - ஒழிதல்.
தழீஇ - அணைத்து.
தழும்பன் : ஒருபகாரி.
தழுவுவழி - தழுவின இடம்.
தழை - தழை முதலியவற்றால் அமைந்த ஆடை.
தள்ளாதோர் - தடுத்தலைச் செய்யாதவர்.
தள்ளுதல் - தவிர்தல்.
தளம்பு - சேறுகுத்தி யென்னும் மீன்பிடிக்கும் கருவி.
தளவு - செம்முல்லை.
தன்னை - தமையன்.

தா - கேடு, வலி.
தாக்கல் - பொருதல், வெட்டல்.
தாங்கல் - சுமத்தல், தடுத்தல், பொறுத்தல், விலங்கல், வேண்டுமளவிலே பிடித்தல்.
தாங்குந்து - தாங்கும்.
தாது - சாணம்.
தாதெரு - எருப்பொடி.
தாய - பரந்த.
தாயம் - அரசுரிமை, உரிமை.
தார் - உபாயம், கிண்கிணி மாலை, தூசிப்படை, மார்பில் அணியு மாலை.
தாரம் - பலபண்டம்.
தாலம் - உண்கலம்.
தாலி - ஐம்படைத்தாலி.

தாழ் - வணங்குதல்.
தாழி - பானை, பிணங்களைக் கவிக்கும் தாழி, முதுமக்கட் சாடி.
தாழை - தென்னை.
தாள் - அடி, ஒரு நட்சத்திரம், கால், தண்டு, முயற்சி.
தாளி - ஒரு புதல், ஒருவகைக் கொடி.
தான் : அசைநிலை.
தானை - சேனை.
திகிரி - உருளி, சக்கரம்.
திங்கள் - சந்திரன், மாதம்.
திணி - செறிவு.
திணை - குடி, குலம்.
தித்தன் : ஒரு சோழன், ஓருபகாரி.
திமிரி - திமிர்ந்து.
திமில் - தோணி, மீன்படகு.
திரங்குதல் - உலர்தல், சுருங்குதல், வருத்தமுறுதல்.
திரிதரல் - இயங்குதல்.
திரிதல் - வேறுபடுதல்.
திரு - அழகு, செல்வம், திருமகள்.
திருகல் - முறுகல்.
திருத்தல் - அழகுபடச்செய்தல், செவ்விதாக்கல்.
திருந்தடி - இலக்கணத்தாற் றிருந்திய அடி, பிறக்கிடாத அடி.
திருவில் - இந்திரவில்.
திரை - அலை, கடல் (ஆகுபெயர்.)
திரைத்தல் - அடக்குதல்.
தில் : விழைவின்கண் வரும் இடைச்சொல்.
தில்லை - ஒரு மரம்.
திளைத்தல் - உறுதல், விளையாடுதல்.
திறம்(ன்) - கூறு, தன்மை, திறப்பாடு, பக்கம், பாகுபாடு.
திறல் - வலி.
திறை - கப்பம்.
தின்ம் - தின்னுங்கள்.
தினை உணங்கல் - உலர்ந்த தினை.
தீஞ்செறிதசும்பு - இனியசெறிவையுடைத்தாகிய மதுக்குடம்.
தீஞ்சேறு - இனிய செறிவு.
தீட்டல் - கோதுதல்.
தீது - குற்றம், கேடு, கொடுமை.
தீநீர் - இளநீர்.
தீமை - இனிமை, கொடுமை.
தீயது - தீவினை.
தீர்தல் - போதல்.
தீர்ந்தன்று - தீர்ந்தது.
தீரிய - தீர்க்கவேண்டி.
தீற்றல் - உண்பித்தல்.
துகள் - குற்றம், புழுதி.
துகிர் - பவழம்.
துகில் - உயர்ந்த ஆடை.
துஞ்சுதல் - தங்குதல், தூங்குதல், நிலைபெறுதல், மடிந்திருத்தல்.
துடி - உடுக்கை.
துடியன் - உடுக்கையடிப்பவன், ஒரு சாதியினன்.
துடுப்பு - துழாவும் கருவி.
துடைத்தல் - தடவுதல்.
துணர்ந்தன்ன - பூத்தாற் போன்ற.
துணரியது - குலைகொண்டது.
துணி - துண்டம்.
துணிபு, துணிவு - தெளிவு.
துணியல் - துண்டு.
துணை - அளவு, இனம், துணைப்படை, மனைவி.
துணைவி - மனைவி.
துதி - நுனி.
துப்பு - வலி.
தும்பி - ஒருவகை வண்டு.
தும்பை - தும்பைச்செடி, அதன்பூ.
துமிதல் - துணிதல்.
துய் - பஞ்சு, பஞ்சுபோல்வது.
துய்ப்பேம் - நுகர்வேம்.
துயின்மடிதல் - உறங்குதல்.
துரக்குவன் - செலுத்துவன்.
துரத்தல் - செலுத்தல்.
துலாஅம் - துலாக்கோல்.
துவ்வாள் - உண்ணாள்.
துவா - முற்ற.
துவன்றுதல் - கூடுதல், நிறைதல், நெருங்குதல்.
துவை - துவையல்.
துவைத்தல் - தைத்தல், முழங்கல்.
துழந்து - துழாவி.
துழவுவோள் - சூழ்பவள், தடவுபவள்.
துழைஇ - துழாவி, தேடி.
துளங்கல் - கலங்கல், தளர்தல், நடுக்கம்.
துளிநசைப்புள் - வானம்பாடி.

துற்ற - செறிந்த, வேயப்பட்ட.
துறத்தல் - கைவிடுதல்.
துறுகல் - குண்டுக்கல், பொற்றைக்கல்.
துறுதல் - செறிதல்.
துறை - நீர்த்துறை.
துறையூர் : ஓரூர்.
துன்பு - துன்பம், வறுமை.
துன்னம் - தையல்.
துன்னுதல் - அணுகுதல், அணைதல்.
துனித்தல் - ஊடுதல்.
தூஉய் - தூவி.
தூக்குதல் - ஆராய்தல், சீர்தூக்குதல்.
தூங்குதல் - அசைதல், ஆடுதல், செறிதல், தொங்குதல்.
தூங்குந்து - ஆடும், தூங்கும்.
தூங்குவழி - அசைந்த இடம்.
தூண் (தூணம்) - கம்பம்.
தூண்டுதல் - செலுத்துதல்.
தூம்பு - களிற்றின் கை (ஆகு பெயர்), துளை.
தூமம் - புகை.
தூர்தல் - அடைந்து போதல், குழிநிரம்பல்.
தூவல் - துவலை.
தூவா - உண்ணாத.
தூவியல் = தூஇயல் - தூய இயல்பு.
தூற்றுதல் - பழிகூறுதல்.
தெடாரி - தடாரிப்பறை.
தெய்வம் - கடவுள்.
தெரிதல் - ஆராய்தல்.
தெரியல் - கண்ணி, தார், மாலை.
தெருமருதல் - சுழலுதல்.
தெருவு - வீதி.
தெவ்வர் - பகைவர்.
தெவ்விர் - பகைவிர்.
தெவிட்டுதல் - அசையிடுதல்.
தெள்ளிதின் - விளங்க.
தெளிர்ப்ப - ஒலிப்ப.
தெற்றி - குரவை, திண்ணை, வேதிகை.
தெற்றுதல் - நெருங்குதல்.
தெற்றென - தெளிய.
தெறல் - அழித்தல், வெம்மை.
தெறித்தல் - தள்ளுதல்.
தெறிப்ப - முற்ற.
தெறு - அச்சம், வெகுட்சி.
தெறுதல் - சுடுதல், தண்டஞ்செய்தல்.
தெறுவர் - பகைவர்.
தெறுழ் - ஒரு காட்டுக்கொடி, புளிமா.
தென்பரதவர் - தென்றிசைக்கண் உள்ள குறுநிலமன்னர்.
தென்புலம் - பாண்டிநாடு.
தென்புல வாழ்நர் - இறந்தோர், பிதிரர்.
தென்னம்பொருப்பு - பொதியின்மலை.
தென்னவர் - பாண்டியர்.
தெனுஅது - தெற்கின்கண்ணது.
தேஎம் - கள், தேயம், தேன்.
தேம் - தேன்.
தேம்புதல் - மெலிதல்.
தேய்தல் - குறைதல், மாய்தல்.
தேய்வை - தேய்தல்.
தேர்க்கால் - திகிரி.
தேர்ச்சி - ஆராய்ச்சி.
தேற்று - தெளியாத.
தேறல் - கள்ளின் தெளிவு, மது.
தேறலை - தெளியாய்.
தேறுதல் - தெளிதல்.
தேன் - பூவிலிருந்துண்டாகும் தேன், வண்டின் ஒரு சாதி.
தைஇ - அணிந்து, சூடி, செய்து.
தைஇத்திங்கள் - தைமாதம்.
தைஇய - செய்த, புனைந்து செய்யப்பட்ட.
தைவருதல் - தடவல்.
தொகுத்தல் - திரட்டுதல்.
தொட்டு - பிசைந்து, வாரிப்பிடித்து.
தொடர் - சங்கிலி.
தொடர்பு - தொடர்ந்துபோதல்.
தொடலை - தொடுக்கப்பட்டது, தொடுக்கப்பட்ட மேகலை, மாலை.
தொடால் - தொடுதல்.
தொடி - பூண், யானையின் தந்தப் பூண், வளை, வீரவளை.
தொடுகடல் - தோண்டப்பட்ட கீழ்கடல்.
தொடுதல் - கட்டுதல், கைப்பற்றல், செறித்தல், தோண்டுதல், யாழ்நரம்பை எறிதல், வளைத்தல்.
தொடுமின் - இசையுங்கோள்.

தொடை - அம்புதொடுத்தல், கட்டுதல், கோவை, சந்து, தொடுத்தல், நரப்புத்தொடை.
தொண்டி : ஓரூர்.
தொய்யா வுலகம் - தேவருலகம்.
தொல்லது - முற்காலம்.
தொல்லோர் - பழையோர். [தோன்.
தொலைஇயோன் - தொலைவித்
தொலைச்சுதல்-கொல்லுதல், தொலைத்தல். [தோல்வியுறல், மாளுதல்.
தொலைதல் - அழிதல், கெடுதல்,
தொழில் - ஏவற்றொழில்.
தொழுதி - தொகுதி.
தொழுவர் - உழவர்.
தொள்ளை - துவாரம்.
தொன்று - பழமை.
தோட்டி - அங்குசம், ஒரு மலை.
தோடு - இலை, சிறகு, தொகுதி, நெற்கதிரின் புறமடல், பூவிதழ், மடல்.
தோணி - ஓடம், படகு. [யானை.
தோல் - உறை, கேடகம், பரிசை,
தோலா - தோல்வியில்லாத.
தோற்றம் - காட்சி, விளக்கம்,
தோற்றல் - தோல்வியுறல். [விளைவு.
தோன்றல் - தலைவன், தோற்றம்.
தோன்றல் செல்லாது-தோன்றாது.
தோன்றிக்கோ : தோன்றி யென்னும் மலைக்குத் தலைவன்.
நகர் - கோயில்.
நகாஅல் - நகுகின்றிலேன்.
நகுதக்கனர் - சிரிக்கத்தக்கார்.
நகை - புன்சிரிப்பு, மகிழ்ச்சி.
நகைப்புறன் - மகிழ்ச்சியிடம்.
நகைவர் - நட்பினர்.
நச்சுவர் - இரப்போர்.
நசை - ஆசை, இன்பம், நச்சுதல்.
நசைஇ - விரும்பி.
நசைதல் - விரும்புதல்.
நசைவர் - நச்சியோர்.
நஞ்சு - விடம்.
நட்டல் - நண்பு செய்தல்.
நடுக்கு - தடுமாற்றம், நடுக்கம்.
நடுங்கல் - அசைதல், தளர்தல்.
நண்ணார் - பகைவர்.
நண்பகல் - நடுப்பகல்.
நண்பு - நட்பு.
நண்மை - அணிமை.
நணி - அணிமை.
நந்து - நத்தை. [பெருகுதல்.
நந்துதல் - கெடுதல், தழைத்தல்,
நம்புதல் - விரும்புதல்.
நமர் - நம்மவர்.
நயத்தக்க - விரும்பத்தக்க.
நயத்தல் - அருளுதல், அன்புசெய்தல், காதலித்தல், விரும்புதல்.
நயம் - இன்பம், இனிமை.
நயவ - நியாயத்தை யுடையன.
நயன் - ஈரம், நியாயம்.
நரந்தம் - நாரந்தப்பூ.
நரந்தை - ஒருவகைப் புல்.
நரலுதல் - ஒலித்தல்.
நரை - வெண்மை, வெளுத்த மயிர்.
நல் - நல்குரவு.
நல்குதல் - உவத்தல்.
நல்கூர்மை - வறுமை.
நல்லது - நல்வினை.
நல்லரா - நல்ல பாம்பு.
நல்லூர் : ஓரூர்.
நல்லை - நலமுடையை.
நல்வினை - புண்ணியம்.
நலங்கிள்ளி : சோழன் நலங்கிள்ளி.
நலன் - அழகு, நன்மை.
நவ்வி - மான் மறி.
நவி (நவியம்) - கோடாலி.
நவிலுதல் - பயிலுதல்.
நள்ளாதார் - பகைவர்.
நள்ளி : ஒரு வள்ளல்.
நள்ளென் மாலை - நள்ளென்னும் ஓசையையுடைய மாலைப்பொழுது.
நளி - குளிர்ச்சி, செறிவு, பெருமை.
நற்கு - நன்றாக.
நறவு (நறவம்) - மது. [தல்.
நறவு தொடுதல் - மதுவைப் பிழி
நறுந்தெரியல் - நல்லமாலை.

நறை - தூபம், தேன், நறுநாற்ற முள்ள பொருள்கள், பச்சிலைக் கொடி.
நன்கு - நன்மை.
நன்பு - விருப்பம்.
நன்று - ஆக்கம், நல்வினை, நற் குணம்.
நன்றும் - பெரிதும்.
நன்னன் : ஒரு தலைவன்.
நணந்தலை - அகன்ற இடம்.
நனவு - சாக்கிரம்.
நனி - மிக.
நனை - கள்.
நாகம் - தேவலோகம், நாகலோ கம், பாம்பு.
நாகு - இளமை, பெண்விலங்கு.
நாஞ்சில் - ஒரு மலை, கலப்பை.
நாட்கொடி - நல்ல நாளிலே கட் டின கொடி.
நாட்டம் - ஆராய்ச்சி, கண்.
நாட்படுதல் - பலநாள் செல்லல்.
நாட்பலி - விடியற்காலப் பலி.
நாடல் - ஆராய்தல்.
நாடன் - குறிஞ்சி நிலத்தலைவன், முல்லை நிலத்தலைவன்.
நாண் - மானம்.
நாண்மகிழ் - நாளோலக்கத்து மகிழ்ச்சி.
நாண்மகிழிருக்கை - நாளோலக் கம்.
நாண்மீன் - நட்சத்திரம், சன்மநட் சத்திரம்.
நாணுத்தகவு - நாணும் தகுதி.
நாணுதல் - பொருதிருத்தல்.
நாம் - அச்சம்.
நாய் - சூதாடுங் காய்.
நார் - நூல், பன்னாடை, பூத் தொடுக்கும் நார்.
நாரரி - நாரால் அரிக்கப்பட்ட தேறல்.
நால்வயின் - நான்கு திசை.
நாவாய்-மரக்கலம்.
நாள் - ஆயுட்காலம், காலை, நாட் காலம், பட்சம்.
நாளவை - நாளோலக்கம்.
நாளிரை - காலை உணவு.
நாற்பால் - நாற்குலம்.
நாற்றம் - மணம்.
நாற்றவுணவு - அவியுணவு.
நாற்றுதல் - தொங்கவிடுதல்.
நாறுதல் - முளைத்தல்.

நிச்சம் - நித்தம்.
நிணத்தல் - பிணித்தல்.
நிமிர்தல் - உயர்தல், மிகைத்தல்.
நிமிரல் - சோற்றுப்பருக்கை.
நிரப்பு - வறுமை.
நிரயம் - நரகம்.
நிரல் - வரிசை.
நிரை - பசுக்கூட்டம், மிருகவரிசை.
நிரைத்தார் - இணைந்த மாலை.
நிலம் - உலகம், மண்.
நிலவன்மார் - நிலவாதொழிக.
நிலவு - திங்களின் ஒளி, நிலா, நிலைபேறு.
நிலியர், நிலீஇயர் - நிலை பெறுவா யாக.
நிலைஇ - நின்று.
நிலைஇய - நிலைபெற்ற.
நிலைஇயர் - நிலைப்பதாக.
நிலைக்குந்து - நிலைக்கும்.
நிலையிற்று - நிலைபெற்றது.
நிவத்தல் - ஓங்குதல்.
நிவப்பு - உயர்ச்சி, ஓங்குதல்.
நிழல் - குடைநிழல்.
நிழற்றல் - நிழல்செய்தல்.
நிறம் - மார்பு.
நிறீஇ - நிறுத்தி.
நிறுத்தல் - நிலை பெறுவித்தல், நிற் கச் செய்தல்.
நிறுமின் - நிறுத்துமின்.
நிறை - நிறுக்கப்படுதல், நிறுத்தல், நிறைதல்.
நின்று - கழித்து.
நினவ - நின்னுடையன.
நீடு - நெடுங்காலம்.
நீடுதல் - உயர்தல், ஓங்குதல்.
நீண்மொழி - சபதம்.
நீத்தம் - வெள்ளம்.
நீர் - நீர்மை, புனல்.
நீர்க்கோழி - நீரிலுள்ள ஒரு பற வை.
நீர்த்து - நீர்மையையுடைத்து.
நீரகவிருக்கை - பூவுலகம்.
நீல் - நீலநிறம்.
நீலமணி மிடற்றொருவன் - நீல கண்டப் பெருமான்.
நீவுதல் - பூசுதல்.
நீளுதல் - மேம்படல்.

நீறு - சாம்பல், புழுதி.
நுகம் - நுகத்தடி, பாரம்.
நுகர்ச்சி - போகம்.
நுகும்பு - பனையோலை.
நுங்கு - பனநுங்கு.
நுடக்கல் - கழுவல்.
நுடங்குதல் - அசைதல்.
நுணுகல் - மெலிதல்.
நுதல் - தலை, நெற்றி, மத்தகம்.
நுதி - நுனி.
நுந்தை - நின்தந்தை.
நும்மோர் - நும்மால் மதிக்கப்படுவோர்.
நுவலல் (நுவலுதல்) - சொல்லுதல், புகழல்.
நுவலுநர் - சொல்வார்.
நுழைமீன் - ஒருவகை மீன்.
நுனை - முனை.
நூலரிமாலை - நூலை அரிந்து கட்டிய மாலை.
நூறல் - அறைதல், வெட்டுதல்.
நெடிது - நெடும்பொழுது.
நெடிய - தன்மேம்பாட்டையுணர்த்தும் சொற்கள்.
நெடியோன் : வடிம்பலம்பநின்ற பாண்டியன்.
நெடுங்கைவேண்மான் : ஒருபகாரி.
நெடுமானஞ்சி : அதியமான் நெடுமானஞ்சி.
நெடுமை - உயர்ச்சி.
நெடுமொழி - மேம்பட்ட வார்த்தை, வஞ்சினம், வீரம்.
நெய் - எண்ணெய்.
நெய்தல் - சாக்காட்டுப்பறை, நெய்தற்பூ.
நெய்தலங்கானல் : ஓரூர்.
நெய்ம்மிதி - நெய்யிட்டு மிதிக்கப்பட்ட கவளம்.
நெரித்து - நெருங்கி.
நெரிதர - நெரிய.
நெருஞ்சி - ஒரு முட்பூடு.
நெருநல், நெருநை - நேற்று.
நெளிதல் - அசைதல், குழிதல், வளைதல், வருந்துதல்.
நெறி - ஒழுங்கு, முடக்கம், வழி.
நேள - அன்பு.
நேமி - ஆஞ்ஞாசக்கரம், சக்கரம்.
நேமியோன் - திருமால்.
நேரார் - பகைவர்.
நைத்தல் - அழித்தல், சுடுதல்.
நைவரல் - இரங்குதல்.
நொச்சி - ஒரு மரம்.
நொடுத்தல் - விற்றல்.
நொடை - விலை.
நொதுமலாளர் - குறளை கூறுவார்.
நொந்த - வெறுத்த.
நொய்து - கனமற்றது.
நோக்கு - பார்வை.
நோகு - வருந்துவேன்.
நோகோ - நோவேனோ.
நோவன - வெறுக்கத்தகுவன.
நோவாதோன் - இரங்காதவன்.
நோற்றிசின் - பொறுப்பாயாக.
நோற்றோர் - தவஞ்செய்தோர்.
நோன்மை - பொறை, வலிமை.
நோன்றல் - பொறுத்தல்.
பஃறுளி : ஓராறு.
பகடு - எருது, ஏர், கடா, களிறு, பரப்பு, பெருமை, வலி.
பகர்தல், பகர்வு - கொடுத்தல்.
பகல் - ஒரு மாத்திரை நேரம், ஒரு முகூர்த்தம், ஞாயிறு, நடுவுநிலை, நாள், பகற்பொழுது, பகுத்தல், பிளத்தல்.
பகழி - அம்பு.
பகன்றை - ஒரு கொடி.
பகைப்புலம் - மாற்றார் தேயம்.
பச்சிலை - பசுமையாகிய இலை.
பச்சூன் - செவ்வித்தசை.
பச்சை - தோல்.
பசத்தல் - பசப்புறுதல்.
பசலை - இளமை, பொன்னிறம்.
பசுங்கதிர் - குளிர்ந்த சுடர்.
பசும் புல் - தருப்பைப் புல்.
பசும்பூண் - பசும்பொன்னாற் செய்த பூண்.
பசும்பொன் - ஓட்டற்ற பொன்.
பஞ்சவர் - பாண்டியர்.
பஞ்சி - துகில், பஞ்சு.
பட்டமாறு - பட்டபடியால்.
பட்டன்று - பட்டது.
படஞ்செய் பந்தர் - கூடாரம்.

படப்பு - வைக்கோற் போர்.
படப்பை - தோட்டம், பக்கம், மனைப்பக்கம்.
படம் - ஆடை.
படர்தல் - நினைத்தல், நினைத்துச் செல்லுதல், போதல்.
படர்பு - செல்லுதல்.
படரெவ்வம் - நினைவால் உண்டாகும் நோயின் வருத்தம்.
படலை - தழை, படல்.
படாஅம் - போர்வை.
படிதல் - குடைதல்.
படிவம் - விரதம்.
படீஇ - படிவித்து.
படீஇயர் - படிவார்களாக.
படு - மடு.
படுத்தல் - உண்டாக்குதல், வீழ்த்துதல்.
படுதல் - அகப்படுதல், இருத்தல், உண்டாதல், ஒலித்தல், தங்குதல், தலைப்படுதல், பெய்தல், பொருந்துதல், மொய்த்தல்.
படுபு - தோன்றுதல்.
படுபுழை - இட்டிய வாயில்.
படுமலை - படுமலைப்பாலை என்னும் பண்.
படை - கலனை, சேனை, படைக்கலம், படைவாள்.
படைத்திசினோர் - படைத்தவர்.
படைப்பு - செல்வம், படைக்கப்படுஞ் செல்வம்.
படைமடம் - வீரரல்லாதார் முதலியோர்மேற் செல்லுதல்.
பண் - இராகம், பண்ணுதல்.
பண்டம் - பொருள்.
பண்டை - முன்.
பண்ணன் - சிறுகுடிகிழான் பண்ணன்.
பண்ணுதல் - அமைத்தல், உண்டாக்குதல், செப்பஞ்செய்தல், திருத்திவாசித்தல்.
பண்பு - இயற்கை, தன்மை.
பணி - ஏவல்.
பணித்தல் - தாழ்த்தல்.
பணியியர் - தாழ்க.
பணை - ஒருவகைப் பறை, கம்பம், பந்தி, பருமை, முரசு, மூங்கில்.
பணையம் - ஈடு.
பத்தர் - யாழின் அடியிலுள்ள உறுப்பு.
பதத்தை - செவ்வியை.
பதம் - உணவு, கால், காலம், தரம், பரிசில்.
பதலை - ஒருமுகத்தையுடைய பறை.
பதன் - காலம்.
பதுக்கை - கற்குவை, திட்டை.
பம்புதல் - பரவுதல்.
பயத்தல் - பூத்தல்.
பயந்திசினோர் - பெற்றோர்.
பயம் - பழம், பிரயோசனம்.
பயம்பு - குழி.
பயலை - இளம்பருவம்.
பயிர், பயிர்தல் - அழைத்தல்.
பயிற்றல் - பலகாலுங்கூறல்.
பாத்தல் - மிகுதல்.
பாதவர் - நுளையர்.
பாரம் - பாரம்.
பரல் - பருக்கைக்கல், விதை.
பராரை - பருத்த அடி.
பரி - குதிரை, நடை.
பரிகு - வருந்துவேன்.
பரிசம் - பரியம்.
பரிசிலர் - கூத்தர்.
பரிசின்மாக்கள் - பரிசிலர்.
பரித்தல் - பொறுத்தல்.
பரிதல் - ஓடுதல், துணிதல்.
பரிப்பு - இயக்கம்.
பரியல் - இரங்குதல்.
பரிவு - அன்பு, இரக்கம்.
பரீஇ - கதி.
பருத்திப்பெண்டு - பருத்தி நூற்கும் மகள்.
பருத்திவீடு - பருத்தியின் சுகிர்ந்த பஞ்சு.
பருதி - சூரியன், வட்டம்.
பரூஉக்கண் - பெரிய உடல்.
பரூஉப்புகை - மிக்கபுகை.
பல்கதிர்ச் செல்வன் - சூரியன்.
பல்காழ் மாலை - பலவடமான மாலை.
பல்குதல் - பலவாதல்.
பல்பாடு - பலபடி.
பல்லி - உழுதற்குரிய கருவிகளுள் ஒன்று, வண்டியின் உறுப்பு.
பலகை - கேடகம்.

பலகோள் - பலவகை.
பலம் - பலராக உள்ளேம்.
பலவு - பலாமரம். [ருள்கள்.
பலி - கடவுட்பூசைக்குரிய பொ
பவ்வம் - கடல்.
பவர் - கொடி.
பழங்கண் - துன்பம்.
பழன் - பழம்.
பழனம் - பொய்கை, வயல்.
பழிச்சுதல் - வழிபடுதல்.
பழித்தல் - இழித்துக்கூறுதல்.
பழுமரம் - பழுத்தமரம்.
பழுனல் - பழுத்தல், முதிர்தல்.
பழுனிய - முதிர்ந்த.
பள்ளி - சாலை, படுக்கை.
பளிங்கு - கண்ணாடி, பளிக்குக்கல்.
பற்றலிலியர் - கோடாதொழிக.
பற்று மாக்கள் - பகைவர்.
பறந்தலை - பாசறை, பாழிடம், போர்க்களம்.
பறம்பு - பாரியினது மலை.
பறம்பு நாடு - பாரிக்குரிய நாடு.
பறிக்குந்து - பறிக்கும்.
பறைதல் - தேய்தல்.
பன்மாண் - பல மாட்சிமைப்பட்ட.
பன்னல் - பருத்தி.
பனம்புடையல் - பனந்தோடு.
பனி - குளிர்ச்சி, துளி.
பனித்தல் - நடுங்குதல்.
பனிபடு நெடுவரை - இமயமலை.
பனுவல்-அறநூல், கேள்வி, சுகிர்ந்த பஞ்சு, பாட்டு.
பனை - அனுடநாள், ஒரு மரம்.
பனைக்கொடியோன் - பலராமன்.
பனைப்போழ் - பனந்தோடு.
பாகல் - ஒரு கொடி, பலா.
பாகு - பகுதி, வெல்லப்பாகு.
பாங்கன் - தோழன். [விளைநிலம்.
பாசவல் - செவ்வி அவல், பசிய
பாசறை - படைவீடு. [பாசம்.
பாசி - கிழக்கு, நீருட் படர்ந்துள்ள
பாசுவல் - பசிய தழை.
பாடன்மார் - பாடுதலைத்தவிர்வா
பாடிற்று - சொல்லியது. [ராக.
பாடினி - விறலி.
பாடு - அழிதல், ஒலி, செவ்வி, பெருமை, முறைமை.
பாடுகம் - பாடுவேம்.
பாடுநர் - பாடுவார், புலவர்.
பாண் - பாணச்சாதி, பாணர்.
பாண்சேரி - பாணர்தெரு.
பாண்டில் - கிண்ணி.
பாண்மகன் - பாணன்.
பாணர் - ஒரு சாதியார்.
பாணி - ஓசை, காலம், கைச்சரடு, தாளம், பாட்டு.
பாத்தி - வகுத்த நிலம்.
பாதிரி - ஒரு மரம்.
பாம்புரி - பாம்பின் தோல்.
பாய் - கப்பற்பாய்.
பாய்தல் - அறைதல், குத்தல்.
பாயிருள் - பரந்த இருள்.
பாயுந்து - பாயும்.
பார் - முரம்பு நிலம், வண்டியின் ஒருறுப்பு, வலிய நிலம்.
பார்நடை வெருகு - இரையைப் பார்த்து நடத்தலையுடைய காட்டுப்பூனை.
பார்வல் - பார்வை.
பார்வை - பார்வைமிருகம்.
பாரம் - குடி, தாங்கப்படும் சுற்றம்.
பாரி, பாரிவேள் : ஒரு வள்ளல்.
பால் - கூறு, பக்கம், விதி.
பாவடி - பரந்த அடி.
பாவல் - பரவல். [மை.
பாவை - கொல்லிப்பாவை, பிரதி
பாறு - பருந்து.
பாறுதல் - துணிபடல், நீங்குதல்.
பாறுபடுதல் - கெடுதல்.
பாறு மயிர் - விரிந்த மயிர்.
பிசிர் : ஓரூர்.
பிடர் - கழுத்து.
பிடவூர் : ஓரூர்.
பிடி - கைப்பிடி, பெண்யானை.
பிண்டம்-சோற்றுத்திரள், தசைத் திரள், பொருட்டொகுதி.
பிணர் - சுரசுரப்பு.
பிணன் - பிணம்.

பிணி - கட்டு, நோய், பின்னுதல்.
பிணிக்கொண்ட - பிணித்தலைச்
பிணித்தல் - அகப்படுத்தல். [செய்த.
பிணித்தன்று - பிணித்தது.
பிணிமுகம் - மயில், முருகக்கடவு
பிணை - பெண்மான். [ளது யானை.
பித்தை - மயிர்.
பிதிர - திவலை எழ.
பிரசம் - தேன்கூடு.
பிழிமகிழ் வல்சி - பிழிந்தெடுத்த மதுவாகிய உணவு.
பிழைத்தல் - தவறுசெய்தல்.
பிழைப்பு - தவிர்தல்.
பிள்ளை - பறவைக் குஞ்சு.
பிற்றைநிலை - வழிபாட்டு நிலைமை.
பிற : அசைநிலை.
பிறக்கு - பிறப்பேன், பின்.
பிறங்கடை - வழித்தோன்றல்.
பிறங்கல் - மலை. [மிகுதல்.
பிறங்குதல் - உயர்தல், செறிதல்,
பிறழ்தல் - கீழ்மேலாதல்.
பிறழிய - பிறழ்ந்த.
பின் - முதுகு.
பின்றை - பிறகு.
பின்னள் - பின்னுள்ளாள்.
பீடு - பெருமை, வலி.
பீரை - பீர்க்கு.
பீலிக்கண்ணி - மயிலிறகாற் செய்யப்பட்ட தலைமாலை.
பீள் - சூல், தானியக்கரு.
புக்கில் - எப்பொழுதும் புக்கிருத்தற்குரிய வீடு, புகலிடம்.
புகர் - புகர்நிறம், புள்ளி.
புகர்முகம் - யானை.
புகலுதல் - விரும்புதல்.
புகவு - உணவு. [போர்.
புகழ்பாடுவோர் - புகழ்ந்துரைப்
புகா - உணவு.
புகாஅ - புகுந்து.
புகாஅர் - ஆற்றுமுகம்.
புகுவு - புகுதல்.
புகைஇ - புகைத்து.
புடைத்தல் - அடித்தல், தட்டுதல்.
புடைபெயர்தல் - கீழ்மேலாதல்.
புடையுநள் - தூத்தலை யுடையள்.
புணர் - புணர்ச்சி.
புணரி - அலை.
புணரியோர் - கூட்டினவர்.
புணை - தெப்பம்.
புத்தகல் - புதிய அகல்.
புத்தேள் - தெய்வம், தேவர்.
புதல் - புதர்.
புதவு - வாய்த்தலை.
புதாஅம் - புதாவென்னும் நாரை.
புதுவது - புதிது.
புதுவோர் - புதியர்.
புதைத்தல் - மூடுதல்.
புய்த்தல் - பிடுங்குதல்.
புயல், புயலேறு - இடியேறு.
புரப்போர் - புரக்கப்படும் கேளிர்.
புரவலர் - ஈத்தளிப்போர், பாது காப்போர்.
புரவு - காத்தல், தருமமாக விட்ட
புரி - முறுக்கு. [நிலம், வரி.
புரிசை - மதில்.
புரிதல் - ஆக்குதல், பொருந்துதல், முறுக்குதல், மேவி ஆராய்தல், விரும்புதல்.
புரை - உயர்ச்சி, குற்றம், துவாரம்.
புரைதல் - ஒத்தல்.
புரைமை - உயர்ச்சி.
புரையர் - ஒத்தவர்.
புரையோன் - உயர்ந்தோன்.
புல் - தருப்பை, நெல்லலாவுணவு,
புல்லார் - பகைவர். [புல்லரிசி.
புல்லியேம் - வறியேம்.
புல்லுதல் - பொருந்துதல்.
புல்லென்றனை - பொலிவழிந்தாய்.
புல்வாய் - மான்.
புல்வாயிரலை - ஆண்மான்.
புலத்தல் - வெறுத்தல்.
புலம் - அறிவு, இடம், காட்டுநிலம், திசை, நாடு, நிலம், மேய்தற்குரிய நிலம், வயல்.
புலம்பு - தனிமை, வறுமை.
புலம்புதல் - தனித்தல், தனித்து
புலர் - புலர்ச்சி. [வருந்துதல்.
புலர்தல் - உலர்தல்.

புலரிவிடியல் - புலர்தலையுடைய விடியற்காலம்.
புலவர் - அறிவுடையோர், புலமை [யுடையோர்.
புலவு - புலால், புலால் நாற்றம்.
புலவுதல் - புலால் நாறுதல்.
புலவுதி - வெறுக்கின்றாய்.
புலவேன் - வெறேன்.
புலன் - அறிவு.
புலனுழுதுண்மார் - கற்றோர்.
புலா - புலால்.
புலாஅ வம்பு - புலால்நாறும் அம்பு.
புலைத்தி - புலைமகள், வண்ணாத்தி.
புழல் - துளை.
புழுக்கு - புழுக்கிய உணவு.
புழை - வாயில்.
புள் - நிமித்தம், பறவை.
புளி - புளிங்கறி.
புளிங்கூழ் - புளித்தகூழ்.
புளிமிதவை - புளிங்கூழ்.
புற்கை - கூழ்.
புற்றம் - புற்று.
புறக்கொடுத்தல் - முதுகிடுதல்.
புறஞ்சிறை - வேலிப்புறம்.
புறத்தை - முதுகையுடையை.
புறந்தருதல் - பாதுகாத்தல்.
புறப்புண் - முதுகிற்பட்டபுண்.
புறம் - இடம், புறக்கொடை, முதுகு, வெளி.
புறவு - புறா, முல்லைநிலம்.
புறன் - இடம், பிற்காலம்.
புன்கண் - துன்பம், புல்லியகண், வருத்தம், வறுமை.
புன்கம் - சோறு.
புன்புலம் - புன்செய்.
புன்றலை - சிவந்ததலை, புல்லியதலை.
புன்னை - ஒரு மரம்.
புனம் - காடு.
புனல்வாயில் - வாய்த்தலை.
புனவர் - புனங்காப்போர்.
புனற்சிறை - புனலின்கண்ணுள்ள
புனற்புதவு - வாய்த்தலை. [அணை.
புனிறு - ஈன்றணிமை, புதிய ஈரம்.
புனைதல் - அணிதல், அழகுசெய்தல், செய்தல்.

பூ - பட்டம், புகர், பொலிவு.
பூக்குந்து - மலரும்.
பூக்கோள் - பூவைக் கொள்ளுதல்.
பூசல் - ஆரவாரம்.
பூசுதல் - தேய்த்தல்.
பூட்கை - மேற்கோள்.
பூட்டு - பிணிப்பு.
பூண்ஞாண் - பூணூல்.
பூணல் - தாங்கல்.
பூத்தல் - பொலிதல்.
பூவல் - செம்மண்.
பூவாவஞ்சி - வஞ்சியென்னுமூர்.
பூவிலை - போகத்துக்குரிய விலை.
பூழ் - குறும்பூழ்ப்பறவை.
பூழி - புழுதி.
பூழியர் பெருமகன் - சேரமான்.
பூளை - ஒரு புதல்.
பெட்டல் - விரும்புதல்.
பெட்டாங்கு - விரும்பியபடியே.
பெட்பு - பேணுதல்.
பெடை - பேடை.
பெண் - மனைவி.
பெண்டு - பெண்.
பெண்ணை : ஓராறு.
பெண்மை - அமைதித்தன்மை.
பெய்தல் - இடுதல்.
பெய்ம்மார் - பெய்ய.
பெயர் - புகழ்.
பெயர்க்குந்து - பெயர்க்கும்.
பெயர்தல் - கிளர்தல், படுதல், பிறழ்தல், போதல், மீளுதல், [மாறுதல்.
பெயரல் - பிறழாதே.
பெயரி - பெயர்த்து.
பெயரிய - பெயர்கூறிய, பெயர்த்த.
பெயல் - மழை.
பெருங்காடு - மயானம். [சோழன்.
பெருங்கோக்கிள்ளி - கோப்பெருஞ்
பெருப்ப - மிக. [யையுடைய ஈரம்.
பெரும்பாட்டீரம் - பெரிய செவ்வி
பெரும்பிறிது - மரணம்.
பெரும்பூண் - பேரணிகலம்.
பெரும்பேது - இறந்துபாடு.
பெருமகன், பெருமான் - தலைவன்.

பெருமிதம் - செருக்கு.
பெருவிறல் - தலைவன்.
பெற்றிசும் - பெற்றோம்.
பெற்றிசின் - பெற்றாள்.
பெற்றிசினோர் - பெற்றோர்.
பேஎன் - பேன்.
பேகன் : ஒரு வள்ளல்.
பேடை - பெண்பறவை.
பேணுதல் - பாதுகாத்தல், போற்றி வழிபடுதல், விரும்புதல்.
பேது - இறந்துபாடு.
பேதுறுதல் - மயக்கமுறுதல்.
பேதை - பேதைமை.
பேழ் - பெருமை.
பை - உறை.
பைங்கனி - செவ்விக்கனி.
பைஞ்ஞிணம் - செவ்விநிணம்.
பைஞ்ஞிலம் - படைத்தொகுதி.
பைதல் - துன்பம்.
பைது - பசுமை.
பைபய - மெல்ல மெல்ல.
பையென்றன - ஒளிமழுங்கின.
பையென - மெல்ல.
பொகுட்டு - கொட்டை.
பொகுவல் - ஒரு பறவை.
பொடித்தல் - வெறுத்தல்.
பொத்திய - மூட்டிய.
பொத்து - புரை.
பொத்துதல் - மூட்டுதல்.
பொதி - பட்டை.
பொதியம் - பொதியின்மலை.
பொதியில் - அம்பலம், ஒரு மலை.
பொது - மன்று. [மன்றம்.
பொதுச்சொல் - பிறர்க்கும் பொது வென்னும் சொல். [தல்.
பொதுநோக்கு - ஒருதரமாகப்பார்த்
பொதுமீக்கூற்றம் - பொதியில்.
பொதுமை - பொதுவாயிருத்தல்.
பொதுமொழி - உறுதியில்லாத வார்த்தை, சிறப்பில்லாதமொழி.
பொருதல் - அலைத்தல், மருவல், முட்டுதல்.
பொருநர் - பகைவர், போர் செய் வார். [படுவான், தலைவன், வீரன்.
பொருநன் - அரசன், உவமிக்கப்
பொருநை : ஒரு நதி.
பொரூஉம் - மாறுபடும்.
பொலம்பூ - பொற்பூ.
பொலம்பூங்கா - கற்பகக்கா.
பொலிதல் - சிறத்தல்.
பொலிவு - விளக்கம்.
பொழிந்து - பெய்தேன்.
பொழில் - பூமி.
பொழுதுமறுத்துண்ணுதல் - அகாலத்திலுண்ணுதல்.
பொறி - அடையாளம், இலக்கணம், இலாஞ்சனை, ஐம்பொறி, ஒளி, புள்ளி, பொருத்துவாய்,மார்பின் மறு, யந்திரம்.
பொறுக்குநர் - சுமப்பவர்.
பொறுத்தல் - தாங்குதல். [ன பா.
பொறை - சிறுகுவடு, பாரம், பாவி
பொறையன் - சேரன்.
பொன் - இரும்பு, கண்ணடி, தங்கம், திருமகள், விழுப்பொருள்.
பொன்னிறம் - பசலை நிறம்.
போகம் - இன்பம்.
போகி - சென்று, மீண்டு,வளர்ந்து.
போகிய - இறந்த, ஒழிந்த, ஓங்கிய,
போகுதல் - வளர்தல். [தொலைந்த.
போத்து - ஆண்விலங்கு.
போது - பூ.
போந்தை - ஓரூர், பனைமரம்.
போர்ப்பு - போர்த்தல்.
போர்பு, போர்வு - போர்.
போரா - போர்த்தலைச் செய்யா.
போழ் - தோடு, பனங்குருத்து, வார்.
போழ்வாய் - பிளந்தாற் போலும்
போழ்தல் - பிளத்தல். [வாயலகு.
போற்றார் - பகைவர்.
போற்றுதல் - பாதுகாத்தல்.
பௌவம் - கடல்.
மக - பிள்ளை.
மகடூஉ - மனைவி.

மகவு - குழந்தை.
மகார் (மகா அர்) - பிள்ளைகள்.
மகிழ் - கள்ளுண்டலால் உண்டாகும் களிப்பு, மகிழ்ச்சி.
மகிழிருக்கை - மகிழ்ச்சியையுடைய நாளோலக்கம்.
மங்குல் - இருட்டு, மேகம்.
மஞ்சு - முகில்.
மட்டு - கள், மது.
மடங்கல் - சிங்கம், யமன்.
மடங்குதல் - மீளுதல். [மை.
மடம் - அறியாமை, மடப்பம், மென்
மடமை - மென்மை.
மடல் - பனங்கருக்கு.
மடவர் - அறிவில்லார்.
மடவரல் - மடப்பம்.
மடவன் - மெல்லியன்.
மடவோன் - அறிவில்லாதோன்.
மடி - ஆடை.
மடிதல் - தங்குதல்.
மடியாவிழவு - நீங்காத விழவு.
மடியுளம் - சோம்பியவுள்ளம்.
மடிவாய்த்தண்ணுமை - தோலை மடித்துப் போர்த்த மத்தளம்.
மடிவு - சோம்புதல்.
மடுத்தல் - ஊட்டுதல், ஊற்றுதல், நோக்கிச்செல்லுதல்.
மடை - ஆணி, உணவு, நீர்பாயும் சிறுவாய், மூட்டுவாய். [சனை.
மண் - நிலம், மண்அணு, மார்ச்
மண்டல் - மடுத்தல், மிக்குச் செல்லல். [பார்வட்டம்.
மண்டிலம் - சூரியன், திங்கள், நாடு,
மண்டுதல் - அடர்த்தல், அடுத்துச் செல்லுதல். [பாத்திரம்.
மண்டை - வாயகன்ற ஒருவகைப்
மண்ணுதல் - கழுவுதல், மூழ்குதல்.
மண்ணுறுத்தல் - அலங்கரித்தல்.
மணத்தல் - கூடுதல், மயங்குதல்.
மணி - அழகு, ஒலிக்கும்மணி, நீலமணி, பவழமணி, மாணிக்கம்.
மத - வலி.
மதரணி - கதிர்த்த ஆபரணங்கள்.
மதலை - பிறப்பு.
மதவலி - மிக்கவலி, மிக்கவன்மையுள்ள தலைவன்.
மதன் - மனவெழுச்சி, மிகுதி, வலி.
மதி - அறிவு, இளம்பிறை, சந்திரன், முன்னிலையசைச்சொல்.
மதியம் - திங்கள்.
மதுகை - மனவலி, வன்மை.
மந்தி - பெண்குரங்கு.
மம்மர் - மயக்கம்.
மயக்கல் - கலத்தல், மயங்கவுழுதல்.
மயங்குதல் - கலங்குதல், கலத்தல்.
மயிலை - இருவாட்சி.
மாந்தலை - மரம்.
மரபு - தன்மை, முறைமை, மேம்
மரம் - மரக்கலம், வில். [பாடு.
மரன் - மரம்.
மரீஇயோர் - மருவியவர்.
மருகன் - வழித்தோன்றல்.
மருங்கு - இடம், இடை, சுற்றம், பக்கம், விலாப்புடை.
மருங்குல் - இடை, பக்கம், வயிறு.
மருட்கை - வியப்பு.
மருதம் - காலைப்பண்.
மருது - மருதமரம்.
மருந்து - பரிகாரம்.
மருப்பு - கொம்பு, யாழின் கோடு.
மருவுதல் - கலத்தல்.
மருள் : உவமவுருபு, மயங்கிப் பிறப்பது. [வியத்தல்.
மருளுதல் - அஞ்சுதல், மயங்குதல்,
மரை - தாமரை.
மல்குதல் - தழைத்தல், நிறைதல்.
மல்லல் - வளப்பம், வளம்.
மல்லன் : ஓர் உபகாரி.
மலங்கு - ஒருவகை மீன்.
மலர்க்குநர் - மலர்த்துபவர்.
மலர்த்தல் - நிமிரச் செய்தல்.
மலர்தல் - பரத்தல்.
மலர்தலை - பரந்த இடம்.
மலர்வாய் மண்டிலம் - ஆதித்தமண்
மலிதல் - மிகுதல். [டிலம்.
மலிந்தன்று - மிகுத்தது.
மலிநீர் - வெள்ளம்.
மலிர் - நீரூற்று.

மலைக்குநர் - மாறுபடுவோர்.
மலைத்தல் - பொருதல், மாறு படுத்தல், மாறுபடுதல்.
மலைதல் - சூடுதல், போர்செய்தல்.
மலைந்தோர் - மாறுபட்டோர்.
மலையன் - மலையமான் திருமுடிக்காரி.
மழ - இளமை.
மழலை - இளஞ்சொல்.
மழவர் - இளையோர், வீரர்.
மழித்தலை - மொட்டையாகிய தலை.
மழு - வாய்ச்சி, தறிகை.
மழுகிய - ஒளி குறைந்த.
மழுங்கல் - தேய்தல்.
மழை - குளிர்ச்சி, மேகம்.
மள்ளர் - வீரர்.
மற்று : அசைநிலை.
மறத்தல் - ஒழிதல்.
மறப்புகழ்-வீரத்தால் வருங் கீர்த்தி.
மறம் - இகல், கொடுமை, வீரர்வலி.
மறலி - யமன்.
மறவர் - வீரர்.
மறவை - மறம், மறத்தையுடையை.
மறி - ஆட்டுக்குட்டி, மான்குட்டி.
மறு - அடையாளம், கறை.
மறுக்குந்து - மறுகச்செய்யும்.
மறுகல் - உலாவுதல்.
மறுகு - வீதி.
மறை - மறைத்தல், வேதம்.
மறைமுதல்வர் - அந்தணர்.
மன் : அசைநிலை, ஒழியிசை, ஆக்கத்தின்கண்ணும், கழிவின்கண்ணும் வரும் இடைச்சொல்.
மன்பதை - உயிர்ப்பன்மை, மக்கட்டொகுதி.
மன்ற - நிச்சயமாக.
மன்றம் - ஊர்ப்பொது, செண்டுவெளி, பசுக்கள்தங்கும் இடம், பொதுவாகிய இடம், பொதுவிடமாகிய மாத்தடி.
மன்று - பசுநிற்கும் இடம், மன்றம்.
மன்னிய - நிலைபெறுவாயாக.
மன்னுதல் - நிலைபெறுதல்.
மனை - அரண்மனை, வீடு.
மனைக்கோழி - வீட்டில் வளருங்கோழி.
மனையோள் - தலைவி, மனைவி.

மா - உயர்வு, கடுமை, குதிரை, திருமகள், நூறுகுழி கொண்ட நன்செய் நிலம், பெருமை, மாமை நிறம், யானை, விலங்குவடிவாகப் பிறப்பது.
மாஅயோள் - மாமை நிறத்தினையுடையவள்.
மாக்கள் - ஐயறிவையே உடைய மனிதர்கள்.
மாகம் - வானம்.
மாங்குடிமருதனார் : ஒரு புலவர்.
மாட்சி - நன்மை.
மாட்டல் - பொருத்தல்.
மாட்டுதல் - விறகை நெருப்பிற் சேர்த்தல்.
மாடம் - மாளிகை.
மாடு - பக்கம்.
மாண்டது - மாட்சிமைப்பட்டது.
மாணுதல் - மாட்சிமைப்படுதல்.
மாத்திரை - அளவு.
மாதிரம் - திசை.
மாதோ : அசைச்சொல்.
மாந்தரஞ்சேரலிரும்பொறை : ஒரு சேரவரசன்.
மாந்துதல் - உண்ணுதல்.
மாப்பிணை - மான்பிணை.
மாய்தல் - இறத்தல், பொலிதல், மறைத்தல்.
மாய்ந்திசினோர் - மாய்ந்தோர்.
மாயோன் - கரியநிறமுடையவன், திருமால்.
மால் - உயர்ச்சி.
மால்பு - கண்ணேணி.
மாலை - மாலைப்பொழுது.
மாவன் : ஓர் உபகாரி.
மாற்றம் - மாறுபட்டுச்சொல்லுஞ்சொல்.
மாறன் - பாண்டியன்.
மாறு - பகை, மறுதலை.
மாறுதல் - ஒத்தல், நீங்குதல்.
மான் - குதிரை.
மான - ஒப்ப.

மிகுதியாளன் - பெரியோன்.
மிச்சில் - ஒழிபொருள், மிஞ்சியது.
மிசை - உச்சி, மேடு, மேல்.
மிசைதல்-உண்ணுதல், தின்னுதல்.
மிஞிற்றுக்குரல் - வண்டுபோன்ற குரல்.
மிஞிறு - தேனீ.

மிடல் - வலி.
மிடறு - கழுத்து.
மிடைதல் - நெருங்குதல், விரவுதல்.
மிடைந்தது - செறியக் கட்டப்பட்டது.
மிலைதல் - சூடுதல்.
மிழலை - மிழலைக்கூற்றம்.
மிளிர்தல் - பிறழ்தல்.
மிளிர்ந்திட்ட - மறிக்கப்பட்ட.
மிளை - காவற்காடு.
மிறை - வளைவு.
மின் - மின்னல்.
மீ - மேல்.
மீக்கூற்றம் - புகழ்.
மீக்கூறுதல் - ஆணைகூறுதல், புகழ்தல், மிகுத்துச் சொல்லுதல்.
மீநீர் - நீரின்மேல்.
மீப்பு - மிகுதி.
மீமிசை - மேலே.
மீளி - மறம்.
மீன் - கிரகம், நட்சத்திரம்.
முக்கட்செல்வர் - சிவபிரான்.
முக்கி - தின்று.
முகடு - உச்சி.
முகத்தல் - கைக்கொள்ளுதல்.
முகவை - கைக்கொள்ளும்பரிசில்.
முகன் - முகம்.
முகிழ் - அரும்பு.
முகை - அரும்பு, மொட்டு.
முகைத்தல் - அரும்புதல்.
முசுண்டை - முசுட்டைக்கொடி.
முசுறி : சோணாட்டிலுள்ளதோரூர்.
முஞ்ஞை - முன்னைக்கொடி.
முட்டு - குறைபாடு.
முடி - மகுடம்.
முடியர் - முடிப்பாணை.
முண்டகம் - முள்ளி.
முணங்கு நிமிர்தல் - சோம்புமுறித்தல்.
முத்தம் - முத்து.
முத்தி - முத்தங்கொண்டு.
முத்தீ - ஆகவனீயம் காருகபத்தியம் தக்ஷிணாக்கினி.
முத்தூறு - முத்தூற்றுக் கூற்றம்.
முதல் - அடி, இடம்.
முதற்று - முதலாக வுடையது.
முதாஅரி - முதுமை.
முதிர்வு - மூப்பு.
முதிரம் : ஒரு மலை.
முதுகாடு - மயானம்.
முதுநூல் - வேதம்.
முதுமுதல்வன் - இறைவன், சிவபெருமான்.
முதுவாய் - முதியவாக்கு.
முந்துறுத்தல் - முன்னிடுதல்.
முந்தை - முன்னே.
முந்நீர் - கடல்.
முயக்கு - தழுவுதல், புணர்ச்சி.
முயங்குதல் - புல்லுதல்.
முரசம் - முரசு.
முரணுதல் - மாறுபடுதல்.
முரவு - சிதைவு.
முரற்கை - தாளம்.
முரிவாய் முற்றம் - முரிந்த குறட்டையுடைய முற்றம்.
முருக்கல் - கெடுத்தல், முறித்தல்.
முருகன் - முருகக்கடவுள்.
முருகு - தெய்வம், முருகன்.
முருங்கல் - கலங்கல்.
முரைசு - முரசு.
முல்லை - ஒரு பூ.
முழங்குதல் - ஒலித்தல்.
முழவு - ஒரு தோற்கருவி, தண்ணுமை, மத்தளம், முழா.
முழுநெறி - புறவிதழ் ஒடித்த முழுப்பூ.
முழுமுதல் - பரியஅடி.
முழூஉவள்ளூரம் - முழுத்தசை.
முள்கல் - குளித்தல்.
முள்ளூர் : மலையனுக்குரிய ஊர்.
முள்ளெயிறு - கூரிய பல்.
முளரி - விறகு.
முளவுமா - முள்ளம்பன்றி.
முளிதல் - உலர்தல்.
முளை - அங்குரம், மூங்கிலின்முளை.
முற்றம் - கோயில் முற்றம்.
முற்றுதல் - சூழ்தல்.
முறி - தளிர்.
முறை - ஊழ், நீதி, முறைமை, வரிசை.
முறைமை - முறைசெய்தல்.
முறையுளி - முறையாக.

முன்பு - முன்னே, வலி.
முன்றில் - முற்றம், முன்வாயில்.
முன்றுறை-துறையின் முன்னிடம்.
முன்னம் - குறிப்பு.
முன்னலை - முன்னே நிற்பை.
முன்னுதல் - அடைதல், கருதுதல், தலைப்படுதல்.
முன்னூர் - ஊர்முன்னர்.
முனி - வெறுப்பு.
முனித்தலை - குடுமித்தலை.
முனிவர் - அந்தணர், அருந்தவர்.
முனிவு - வெறுப்பு.
முனை - போர், போர்முனை, முந்துற்றுச் செல்லும் படை.
முனைதல் - வெறுத்தல்.
மூக்கு - நுனை.
மூசுதல் - மொய்த்தல்.
மூடை - குதிர், தானியக் கோட்டை, பொதி.
மூத்தல் - முதிர்தல்.
மூதா - முதிய பசு.
மூதாளர் - முதியோர்.
மூதில் மகளிர், மூதிற் பெண்டிர் - முதிய மறக்குடியிற் பிறந்த மகளிர்.
மூதூர் - பழைய ஊர்.
மூரி - துண்டம்.
மூவருலகம் - சேரசோழபாண்டியருடைய நாடுகள்.
மூவேழ்துறை - இருபத்தொரு கூறுபட்ட தருக்கநூல் அல்லது அருத்தநூல், இருபத்தொருபண் வகை, இருபத்தொருவேள்வித்துறை.
மூழ்த்தல் - மூடுதல்.
மெய் - அறிவு, உடம்பு, உண்மை.
மெய்யாக்கை - உடம்பாகிய வடிவு.
மெல்லியர் - புல்லிய குணங்களையுடையார், வறுமையுற்றார்.
மெலிகோல் - கொடுங்கோல்.
மெலியர் - எளியர்.
மெலிவு - குறைவு.
மெழுகு - தேன்மெழுகு.
மெழுகுதல் - துடைத்தல்.
மென்பறை - மெல்லிதாகப் பறத்தலையுடைய குஞ்சு.
மென்பால் - மருதநிலம்.
மென்புலம் - மருதநிலம், மருதமும் நெய்தலும்.
மென்மெல - மெல்லமெல்ல.
மேக்கு - மேலே.
மேந்தோல் - மேலேயுள்ள தோல்.
மேந்தோன்றல் - உயர்தல்.
மேம்படுதல் - சிறத்தல்.
மேயினேன் - பொருந்தினேன்.
மேல்கொள்ளல் - ஏறுதல்.
மேலோர் - தேவர்.
மேவரல் - பொருந்தல்.
மேவல்-பொருந்துதல், விரும்புதல்.
மேழி - ஏர்.
மை - அஞ்சனம், ஆடு, இருட்சி, கருமை, குற்றம், செம்மறியாடு, பிறப்பு, மேகம்.
மைந்தர் - ஆடவர், வீரர்.
மைந்து - மதம், வன்மை.
மைமீன் - சனிமீன்.
மையல் - ஓரூர், மயக்கம்.
மையிழுது - மையாகிய விழுது.
மொக்குள் - கொப்புளம்.
மொசித்தல் - உண்ணுதல், மொய்த்தல்.
மொய்த்தல் - சூழ்தல்.
மொய்ம்பு - தோள், வலி.
மோ : முன்னிலையசைச்சொல்.
மோசி : ஒரு நல்லிசைப்புலவர்.
மோரியர் : ஓர் அரசகுலத்தார்.
மோவாய் - தாடி.
யவனர் - ஒரு சாதியார்.
யா - யாவை.
யாக்குநர் - கட்டுகின்றவர்.
யாங்கனம் - எப்பரிசு.
யாங்கு - எப்படி.
யாட்டுச்செச்சை - ஆட்டுக்கிடாய்.
யாண்டு - ஆண்டு, எவ்விடத்து.
யாணர் - செல்வம், புதுவருவாய்.
யாத்தல் - ஈட்டிக் கொடுத்தல், கட்டுதல்.
யாது - சிறிது.
யாமங்கொள்பவர் - இராக்காவலாளர்.
யாமம் - இரவு.

யாமை - ஆமை.
யாய் - தாய்.
யாரீர் - யாவிர்.
யாவணது - எவ்விடத்துள்ளது.
யாவது - எங்கே உள்ளது, எங்ஙன மாவது.
யாழ் - இசைக்கருவியுள் ஒன்று.
யாழ்மருப்பு - யாழ்க்கோடு.
யாழ : அசைநிலை.
யாறு - ஆறு, வழி.
யூபம் - வேள்வித்தூண்.
வகுத்தல் - கூறுபடுத்தல்.
வகுந்து - கீறி.
வகை - கூறுபாடு.
வங்கம் - கப்பல். [திரன்.
வச்சிரத்தடக்கைநெடியோன் - இந்
வச்சிரம் - வச்சிராயுதம்.
வசிந்து - வயமாக்கி.
வசை - பழி.
வஞ்சன் : ஒருபகாரி.
வஞ்சி - ஒருவகைமரம், சேரர் தலைநகர், மேற்செலவு.
வட்கர் - குற்றம், பகைவர்.
வட்டி - கடகப்பெட்டி.
வட்டித்தல் - சுழற்றல்.
வடக்கிருத்தல் : ஒரு விரதம்.
வடகுன்றம் - இமயம். [மலை.
வடபெருங்கல், வடமலை - இமய
வடமீன் - அருந்ததி. [வீரர்.
வடவடுகர் - வடக்கேயுள்ள வடுக
வடாஅது - வடக்கின்கண்ணது.
வடி, வடித்தல் - கூரிதாக்கல், திருத்தமாகச் செய்துகொடுத்தல்.
வடித்திசின் - வடிப்பாய்.
வடிந்த - அழகுபெற்ற.
வடிம்பு - விளிம்பு.
வடு - அடையாளம், தழும்பு.
வண்டு - மறவருள் ஒரு சாதி.
வண்ணம் - அழகு, நிறம்.
வண்மை - ஈகை.
வணங்கார் - பகைவர்.
வணங்குதல் - தாழ்தல், வளைதல்.
வணர் - வளைவு.
வணர்தல் - வளைதல்.
வதிதல் - கிடத்தல், தங்குதல்.
வதுவை - கலியாணம்.
வந்திசின் - வந்தேன்.
வம் - வா, வாரீர்.
வம்பப்பெரும்பெயல் - புதிய மழை.
வம்பமள்ளர் - நிலையில்லாத வீரர், புதிய வீரர்.
வம்பலர் - வழிப்போவார்.
வம்பலன் - அயலான்.
வம்பவேந்தன் - புதியவேந்தன்.
வம்பு-கச்சு, நிலையின்மை, புதுமை.
வம்மின் - வாரும்.
வம்மோ - வாராய்.
வய - வலி.
வயங்குதல் - விளங்குதல்.
வயமான் - சிங்கம், புலி.
வயலைக்கொடி - பசலைக்கொடி.
வயவர் - வீரர்.
வயவு - வேட்கைநோய்.
வயிரியர் - கூத்தர்.
வயிற்றுத்தீ - பசி.
வயின் - இடம், முறை.
வரகு - ஒரு தானியம்.
வரம்பு - எல்லை, வரப்பு.
வரவு - வரலாற்று முறைமை.
வரால் - ஒருவகை மீன்.
வரி - எழுத்து, ஒருவகைப் பாட்டு, கோடு, புகர். [மேம்பாடு.
வரிசை - சிறப்பு, தகுதி, தரம்,
வரிந்த - வரிபட்ட. [சிற்றில்.
வரிமணல் - வண்டலிழைத்த
வரிவயம் - புலி.
வருநர் - விருந்தினர்.
வரை - எல்லை, மலை.
வரைக - நீங்குக.
வரைதல் - கூறுபடுத்தல், தனக்கென்று பாதுகாத்துவைத்தல், நீக்குதல்.
வரைப்பு - இடம், இல், எல்லை.
வரையலள்-மணஞ்செய்யப்படாள்.
வரையா - அளவற்ற. [தல்.
வரையாமை-குறைபடாமல் வழங்கு
வல் - சூதுபலகை, விரைவாக.

வல்சி - உணவு. [வாறு.
வல்லாங்கு - சதுரப்பட, வல்ல
வல்லார் - மாட்டார். [யுடையவன்.
வல்லாளன் - வலிய ஆண்மையை
வல்லினும் - அறியினும்.
வல்லுநர் - வல்லவர்.
வல்லே - விரைவாக.
வல்லை - வன்மையுடையாய்.
வல்விரைதல் - மிக விரைதல்.
வலத்தல் - சூழ்தல். [வெற்றி.
வலம் : ஏழனுருபு, பிரதக்ஷிணம்,
வலவன் - தேர்ப்பாகன்.
வலன் - வென்றி.
வலாஅர் - வளார். [வற்றல்.
வலித்தல்-கருதிச்செய்தல், நீரின்றி
வலியுறுக்கும் - இறுகப்பிடிக்கும்.
வலை - சாலகம்.
வலைஞர் - வலைவீசுவார்.
வவ்வு - சுற்றுதல்.
வவ்வுதல் - கவ்வுதல்.
வழக்கு - ஓட்டம்.
வழங்கு - கொடுத்தல்.
வழங்குதல் - அசைதல், இயக்கு
தல், இயங்குதல், செலுத்துதல்.
வழங்குந்து - செல்லும். [யாமல்.
வழாது - இடைவிடாமல், பிழை
வழி - இடம், கிளை, மரபு. [தல்.
வழிதபுத்தல் - கிளையொடுங்கெடுத்
வழிநாள் - பின்னாள்.
வழிப்படுதல் - பின்தோன்றுதல்.
வழிமொழிதல் - வழிபாடுகூறல்.
வழு - தப்பு, பாதகம்.
வழுதி - பாண்டியன்.
வழை - சுரபுன்னை.
வள் - கூர்மை.
வள்பு - வார். [ளிக்கிழங்கு, வளை.
வள்ளி - தண்டு, பூங்கொடி, வள்
வள்ளியோர் - வண்மையையுடை
வள்ளை - ஒருகொடி. [யோர்.
வளம் - செல்வம்.
வளவன் - சோழன்.
வளாகம் - பரப்பு.
வளி - காற்று.
வளை - கைவளை, சங்கு.
வளைஇ - சூழ்ந்து.
வளையோர் - வளையணிந்த மகளிர்.
வற்புலம் - மேட்டுநிலம்.
வற்றல் - பசுமையறுதல்.
வறநிலையாறு - கொடியவழி.
வறம் - நீரின்மை, வற்கடம்.
வறல் - உலர்ந்த சுள்ளி, வற்றுதல்.
வறன் - வறுமை. [விதாக.
வறிது-ஆதாரமின்றி, சும்மா, வெறு
வறுந்தலை - வறிய இடம்.
வறுவிது - வறுமையையுடையது.
வறை - வறுவல்.
வன்கண் - தறுகண்மை.
வன்பால் - முல்லைநிலம்.
வன்புலம் - குறிஞ்சியும் முல்லையும்.
வன்புலநாடு - மலைநாடு.
வனைதல் - செய்தல்.
வாக்கல் - வடிக்கப்பட்டசோறு.
வாக்குதல் - வார்த்தல்.
வாகை : எயினனென்பவனது ஊர்.
வாங்குதல் - வளைத்தல், வளைதல்.
வாச்செலல் - தாவுதல்.
வாட்டுதல் - அழித்தல்.
வாட்டாறு : ஓரூர்.
வாடாப்பூ - கற்பகப்பூ.
வாடாமாலை - பொன்னரிமாலை.
வாடாவஞ்சி - பகைமேற்செல்லு
தல், வஞ்சியென்னும் நகரம்.
வாய் - இடம், படைக்கலத்தின்
முகம், மெய்ம்மை, வாக்கு.
வாய்தல் - தப்பாமற் பொருந்தல்.
வாய்ப்படல் - வழிபடல்.
வாய்வாள் - குறிதப்பாத வாள்.
வாயில் - வழி.
வாயில்விடுதல் - வாயில்காவலர்க்கு
உணர்த்திவிடுதல். [வார்.
வார் - ஒழுங்கு, நீட்சி, முழவின்
வார்தல் - ஒழுகுதல், கம்பியாகச்
செய்தல், வடிதல்.
வார்பு - வார்தல்.
வாரணம் - கோழி.
வாராவுலகம் - வீர சுவர்க்கம்.
வாரி - வருவாய், விளைவு.

வாலம் - வால்.
வாலிது - சீரிது.
வாலியோன் - பலராமன்.
வாலிழை - முத்தாரம்.
வாலுவன் - சமையற்காரன்.
வாழி : அசைநிலை.
வாள் - அரிவாள், ஒளி, வாட்படை.
வாளின் வாழ்நர் - வாள்வீரர்.
வாளை - ஒரு மீன்.
வாளோர் - வாள்வீரர்.
வான் - ஆகாயம், மழை, மேகம்.
வான்புகழ் - வாலியபுகழ்.
வான்மை - தூய்மை, வெண்மை.
வானவரம்பன், வானவன் - சேரன்.
வானவூர்தி - விமானம்.
வானூர் - வெள்ளிநார்.
வானேறு - இடி.
விசித்தல் - உகைத்தல், வலித்துக் கட்டுதல், விம்மல்.
விசயம் - வெற்றி.
விசைத்தல் - துள்ளுதல்.
விசைப்பு - வேகம்.
விடடோர் - பற்றுவிட்டோர்.
விடர் - பிளப்பு, முழை. [குகை.
விடர்முகை - வெடிப்பையுடைய
விடாகம் - முழை.
விடலை - வீரன்.
விடுத்தல் - மயக்கந்தீரக் கூறல், விடைகொள்ளல்.
விடுத்தேன் - விடைகொண்டேன்.
விடுத்தோன் - தீர்த்தோன்.
விடுதல் - செலுத்தல்.
விடுநை - விடுவாய்.
விடை - கிடாய்.
விண்டு - திருமால்.
வித்தல் - விதைத்தல்.
விதவை - கூழ்.
விதிர்த்தல் - சிதறுதல்.
விதிர்ப்பு, விதுப்பு - நடுக்கம்.
விதுப்புறுதல், விதும்பு-விரைதல்.
விதை - வித்து.
விம்முதல் - பொருமுதல்.
விம்மென - ஒலிப்ப.
வியத்தொறும் - வியக்குந்தோறும்.
வியர் - வேர்வை.
வியல் - பரப்பு.
வியலுள் - பரந்த இடம்.
விரகறியாளர் - அறிவுடையோர்.
விரகு - உபாயம்.
விராஅய் - கலந்து.
விராய - கலந்த.
விரி - விரித்தது, விரிந்த ஆடை.
விரிச்சி - நற்சொல்.
விருந்தயர்தல் - விருந்தோம்பல்.
விருந்து - புதுமை, விருந்தினர்.
விரை - வாசனை.
விரைஇ - கலந்து.
விரைவனன் - விரைவான்.
விலங்கு - குறுக்கு.
விலங்குதல் - தடுத்தல்.
விலா - வயிற்றுப்பக்கம்.
விலைநலப்பெண்டிர் - பரத்தையர்.
விலைவன் - விற்பவன். [வேள்வி.
விழவு - சிறுசோற்றுவிழவு, விழா,
விழுக்கலன்-மேம்பட்ட அணிகலம்.
விழுக்கழஞ்சு - சிறந்த கழஞ்சு.
விழுக்குநிணம் - விழுங்குதற்குரிய நிணம், விழுக்காகிய நிணம்.
விழுக்கூழ் - சிறந்தபொருள்.
விழுத்தண்டு - பரியதண்டுக்கோல்.
விழுத்திணை - சிறந்த குடி.
விழுத்தூது - சிறந்த தூது.
விழுநீர் - மிக்க நீர்.
விழுப்புண் - சீரிய புண்.
விழுமம் - இடும்பை, துன்பம்.
விழுமியம் - சிறப்புடையேம்.
விழுமியோர் - பெரியோர்.
விழுமுறின் - துன்பமுற்றால்.
விளக்கம் - ஒளி, தீ, விளக்கு.
விளங்கில் : ஓரூர்.
விளர் - வெண்மை.
விளர்க்காய் - வெள்ளைக்காய்.
விளரி - இரங்கற்பண்.
விளாவல் - கலத்தல்.
விளி - கூவுதல்.
விளிதல் - இறத்தல், கெடுதல்.
விளிந்தோர் - மாய்ந்தோர்.
விளைந்து - விளைந்தேன்.

விளையல் - முதிர்தல்.
விளையுள் - விளைதல். [ளம்.
விற்பொறி - வில்லாகிய அடையா
விறல் - சிறப்பு, விசேடம், வீரம்,
விறலி - பாடினி. [வென்றி.
வினை - கருமச் சூழ்ச்சி, கைத்தொ
ழில், தொழில், நல்வினை, போர்.
வினைஞர் - உழவர்.
வீ - மலர்.
வீங்குதல் - பூரித்தல், மிகுதல்.
வீசுதல் - வழங்கல், விசிறுதல்.
வீதல் - இறத்தல், கெடுதல்.
வீயாது - கெடாமல்.
வீயும் - மாயும்.
வீழ் - விழுது.
வீழ்குடி - தளர்ந்த குடி.
வீழ்த்தல் - கொல்லுதல், கொன்று
வீழ்த்தல், தாழ இருத்தல்.
வீழ்ந்தன்று - மடிந்தது.
வீழ்ந்தோர் - பட்டோர். [தல்.
வீற்றிருத்தல் - கவலையின்றி யிருத்
வீறு - பெருமை.
வீறு வீறு - வேறு வேறு.
வெங்கதிர்ச்செல்வன் - சூரியன்.
வெட்சி - ஒரு மலர்.
வெடிகொள்ளல் - மேலெழுதல்.
வெடிபடல் - சிதறுதல்.
வெண்காழ் - வெள்ளிய விதை.
வெண்ணி : ஓரூர்.
வெண்ணெல் - ஒருவகை நெல்.
வெண்பொன் - வெள்ளிக்கோள்.
வெதிர் - மூங்கில்.
வெதிரம் : ஒரு மலை.
வெந்தை - வெந்த உணவு.
வெப்பர் - சூடான உணவு.
வெப்பு, வெப்புள் - வெம்மை.
வெய்து - வெம்மையான உணவு.
வெய்துயிர்த்தல் - வெய்தாக மூச்சு
விடுதல்.
வெய்யோய் - விரும்புவோய்.
வெய்யோள் - விரும்பத்தக்கவள்.
வெய்யோன் - விரும்புவோன்.
வெயில் - ஒளி, சூரியன், வெம்மை.
வெயின்மறை - வெயிலை மறைத்தல்.
வெரீஇ - வெருவி.
வெரீஇய - அஞ்சிய. [யின் ஆண்.
வெருக்கு விடை - காட்டுப்பூனை
வெருகு - காட்டுப்பூனை.
வெருவுதல் - அஞ்சுதல்.
வெரூஉம் - அஞ்சும்.
வெலீஇயோன் - வெல்வித்தோன்.
வெள்ளி - சுக்கிரன், வெண்மை.
வெள்ளில் - பாடை, விளாம்பழம்.
வெள்ளை - வெள்ளாடு.
வெள்ளைவரகு - கவடி.
வெள்ளென்றல் - வெண்மையைச்
செய்தல். [குந் தெரிய.
வெள்ளென - தெளிவாக, யாவர்க்
வெளிது, வெளியது - வெள்ளிய
வெளில் - கம்பம், தறி. [ஆடை.
வெளிறு - இளமை, வெண்மை.
வெளிறுபோதல் - ஒளிகெடுதல்.
வெறி - வெறியாட்டு. [குவியல்.
வெறுக்கை - செல்வம், பொற்
வெறுத்த - மிக்க.
வெறுப்ப - மிக.
வென், வென்றி - வெற்றி.
வேகம் - சினம்.
வேங்கடம் : திருவேங்கடமலை.
வேங்கை - ஒரு மரம்.
வேங்கைமார்பன் : ஒரு வீரன்.
வேட்கை - விருப்பம்.
வேட்கோ - குயவர்.
வேட்டக்குடி - வேட்டுவர் வீடு.
வேட்டம் - விருப்பம், வேட்டை.
வேட்டல் - மணஞ்செய்ய விரும்
பல், விரும்புதல், வேள்விபுரிதல்.
வேட்டுவன் - வேடன்.
வேண்டார் - பகைவர்.
வேத்தவை - அரசவை.
வேம்பு - ஒரு மரம்.
வேய்தல் - மேலே மூடுதல்.
வேய்வை - குற்றம்.
வேர் - வேர்வை.
வேரி - மது.
வேலி - எல்லை, ஒரு நில அளவு.

வேழமுகவை - யானையாகிய பரிசு.
வேள் - குறுநிலமன்னன், முருகக் கடவுள்.
வேள்வித்தூணம் - யூபத்தம்பம்.
வேளா - மணஞ்செய்யப்படாத.
வேளாண்மை - உபகாரம்.
வேளார் - விரும்பார்.
வேளிர் - குறுநிலமன்னர்.
வேளை - ஒரு கீரை.
வேற்றுப்புலம் - பகைப்புலம்.
வேற்றுமை - ஏற்றத்தாழ்வு.
வேறல் - வெல்லுதல்.
வேனில் - கோடைக்காலம்.

வை - கூர்மை.
வைகம் - வைவோம்.
வைகல் - காலம், நாள், வைகும் பொழுது.
வைகலும் - நாள்தோறும்.
வைகறை - விடியற்காலம்.
வைகியாங்கு - கழிந்தாற்போல.
வைகுந்து - வைகும்.
வைகுறுவிடியல் - வைகுதலுற்ற விடியற்காலம்.
வைப்பு - ஊர், நிலம்.
வையம் - உலகம்.
வையை : ஓராறு.

வெளவுதல் - உள்வாங்குதல், கைக்கொள்ளல்.

திணைகளும் துறைகளும்

திணைகள்:—கரந்தை, காஞ்சி, கைக்கிளை, தும்பை, நொச்சி, பாடாண், பெருந்திணை, பொதுவியல், வஞ்சி, வாகை, வெட்சி.

திணையிறந்துபோனபாட்டுக்கள்:—௨௪௪ - ௫௦, ௨௬௭ - ௮, ௨௮௨, ௨௮௯, ௩௨௩ - ௫, ௩௫௫ - ௬௧.

துறைகள்:—அரசவாகை, ஆனந்தப்பையுள், இயன்மொழி, உடனிலை, உண்டாட்டு, உவகைக்கலுழ்ச்சி, எருமைமறம், ஏர்க்களவுருவகம், ஏறுண்முல்லை, கடவுள்வாழ்த்து, கடைநிலை, கடைநிலைவிடை, களிற்றுடனிலை, குடிநிலையுரைத்தல், குடைமங்கலம், குதிரைமறம், குறுங்கலி, கையறுநிலை, கொற்றவள்ளை, செருமலைதல், செருவிடைவீழ்தல், செவியறிவுறூஉ, தலைத்தோற்றம், தாபதநிலை, தாபதவாகை, தானைநிலை, தானைமறம், துணைவஞ்சி, தொகைநிலை, நல்லிசைவஞ்சி, நீண்மொழி, நூழிலாட்டு, நெடுமொழி, பரிசில்கடாநிலை, பரிசில்விடை, பரிசிற்றுறை, பழிச்சுதல், பாண்பாட்டு, பாணாற்றுப்படை, பார்ப்பனவாகை, பிள்ளைப்பெயர்ச்சி, புலவராற்றுப்படை, பூக்கோட்காஞ்சி, பூவைநிலை, பெருங்காஞ்சி, பெருஞ்சோற்றுநிலை, பேய்க்காஞ்சி, பொருண்மொழிக்காஞ்சி, மகட்பாற்காஞ்சி, மகண்மறுத்தல், மழபுலவஞ்சி, மறக்களவழி, மறக்களவேள்வி, மனையறந்துறவறம், முதல்வஞ்சி, முதுபாலை, முதுமொழிக்காஞ்சி, மூதின்முல்லை, வஞ்சினக்காஞ்சி, வல்லாண்முல்லை, வாண்மங்கலம், வாழ்த்தியல், வாழ்த்து, விறலியாற்றுப்படை, வேத்தியல்.

துறையிறந்துபோன பாட்டுக்கள்:—௨௪௪ - ௫, ௨௬௭ - ௮, ௨௮௨, ௨௮௫, ௩௨௩ - ௫, ௩௫௫ - ௭, ௨௬௧.

திணை துறையில்லாதபாட்டு:—௩௮௯.

பிழையுந் திருத்தமும்

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
௧௮	26	நாடு	ஆடு
௬௫	19	மருங்சின்	மருங்கின்
௭௪	12	மறியுனனைய்	மறியுநனைய்
௧௬௯	28	களிறு	களிறுங்
௧௭௯	21	லா.னை	லானைன்
௨௧௯	7	௯௫௨, ௯௫௨	௯௫௨